வெளியீடு 10-12-1980] [Issued 10-12-1980

32/87
1981
1527

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1980 ஜூலை 25

FRIDAY 25TH JULY 1980

தொகுதி V—எண் 5—VOL. V—No. 5 6

©
தமிழ்நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத்துறை, சென்னை-600 009
Assembly Department, Fort. St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price Rs. 3.15 Paise

V241.31 N80
N81. 5-5-31
123064

## உள்ளடக்கம்

**1980 ஜூலை 25.**


| | பக்கங்கள். |
|---|---|
| வரவு-செலவுத் திட்டம் 1980-81 வாக்கெடுப்பு (தொடர்ச்சி). | 901 |
| (அ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 902 |
| (ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் | 903 |
| (இ) கோரிக்கை எண் 15—காவல் துறை. | 904 |
| (ஈ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள். | 905 |
| (உ) கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள், கட்டிடங்கள். | 906 |
| (ஊ) கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திரச் சாதனங்களும். | 906 |
| (எ) கோரிக்கை எண் 51—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | 907 |
| மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் | 907 |
| திரு. ஜே.எஸ். இராசு .. .. .. | 909–912 |
| டாக்டர் கே. சமரசம் .. .. .. | 912–915 |
| திரு. வே. இராஜசேகரன் .. .. | 916–923 |
| திரு. ஆ. வெள்[illegible]மி .. .. | 924–927 |
| திரு. ரா. [illegible] .. .. .. | 928–943 |
| திரு. எம். சின்னராஜ் .. .. .. | 943–946 |
| திரு. என். ஏ. பூங்காவனம் .. .. | 946–953 |
| திரு. எஸ். ஆண்டித்தேவர் .. .. | 953–957 |

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வரவு-செலவுத் திட்டம், 1980–81—வாக்கெடுப்பு—தொடர்ச்சி. | |
| திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் .. | 957–960 |
| திரு. ப. நெடுமாறன் .. .. | 960–970 |
| திரு. சா. கிருட்டிணமூர்த்தி .. .. | 970–973 |
| திரு. பம்மல் நல்லதம்பி .. .. | 974–981 |
| திரு. ஆர். மணிமாறன் .. .. | 981–992 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. | 992–996 |
| திருமதி டி. யசோதா .. .. .. | 996–1000 |
| திரு. இரா. முத்தையா .. .. | 1000–1007 |
| திரு. கே. எம். அப்துல் ரசாக் .. | 1007–1008 |
| 2. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 1009–1010 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வெள்ளிக்கிழமை, 1980 ஜூலை, 25

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்'.

தகுந்தவர்கள் என்று தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் துணையோடு ஆராய்ந்து எந்த அலுவலையும் செய்பவர்களுக்கு அரிதாவது என்று உலகில் எதுவும் இல்லை.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].—

## வரவு - செலவுத் திட்டம், 1980-81—வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 9—

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

(ஆ) கோரிக்கை எண் 11—

மாவட்ட நிர்வாகம்.

(இ) கோரிக்கை எண் 15—

காவல் துறை.

(ஈ) கோரிக்கை எண் 16—

தீயணைப்புப் பணிகள்.

(உ) கோரிக்கை எண் 37—

பொதுப் பணிகள்— கட்டடங்கள்.

(ஊ) கோரிக்கை எண் 38—

பொதுப் பணிகள்— பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்.

(எ) கோரிக்கை எண் 51—

பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

கோரிக்கை எண் 9.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 17,25,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பணியாட்களுக்கு தனியாக சிறப்பூதியம் அளிக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,25,00,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

THIRU N. S. V. CHITHAN : To discuss the need to provide a five-year term for the holders of post of Commissioners in the Board of Revenue, I move :

"That the allotment of Rs. 17,25,00,000 under Demand No. 9—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100."

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, அமைச்சர்கள் துறைகளுக்கு சட்டமன்ற பேரவை மேலவை உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,25,00,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



527

கோரிக்கை எண் 11.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 11—மாவட்டம் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,31,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. ஜே. எஸ். இராசு: திருச்சி மாவட்ட அரியலூர் ரெவின்யூ டிவிஷனிலிருந்து பெரம்பலூர் வட்டத்தைப் பிரித்து, பெரம்பலூர் வட்டம், துறையூர் வட்டம் ஆகிய இரண்டையும் இணைத்து பெரம்பலூர் நகரை தலைமையிடமாக்கிக்கொண்டு ஒரு புது ரெவின்யூ டிவிஷன் உருவாக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,31,02,000-இல் ரூ. 101 குறைக்க வேண்டும்.''

Thiru N. S. V. CHITHAN : To discuss the failure of the Government to locate the office of the Tahsildars within the reach of the villagers in rural areas, I move :

"That the allotment of Rs. 21,31,02,000 under Demand No. 11—District Administration be reduced by Rs. 100."

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட நிர்வாகம் சிறப்புற நடைபெற பெரிய மாவட்டங்களை பிரித்து சீரமைக்க வேண்டிய அவசியம் குறித்தும், குறிப்பாக மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லை தலைமைப் பீடமாகக்கொண்டு புது மாவட்டம் அமைக்க வேண்டுவது பற்றியும் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 21,31,02,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, பெருந்துறை வட்டமாகப் பிரிக்கப்பட்ட பின்பும், வட்ட ஆட்சியாளர் அலுவலகம் இதுவரை கட்டப்படாமல் இருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 21,31,02,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

### கோரிக்கை எண் 15.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரையின்பேரில் நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 43,81,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

**திரு. சு. பாலன்:** பேரவைத் தலைவரவர்களே, எல்லா ஆய்வாளர்களுக்கும் தனி போன் கொடுக்கப்பட வேண்டும் என்பதை விலக்களிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,81,67,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,81,67,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. கு. ரமணி:** பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில், காவல் துறையினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த 32 பேர்களை திரும்ப வேலைக்கு எடுக்கப்பட்டபின் வேறு மாவட்டங்களுக்கும் வேறு பிரிவுகளுக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள காவலர்களின் கஷ்டங்கள் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,81,67,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. எம். ஆறுமுகம்:** பேரவைத் தலைவரவர்களே, காவல் துறையினருக்கு சம்பளம் உயர்த்த வேண்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,81,67,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

### கோரிக்கை எண் 16.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரையேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,28,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவர் அவர்களே, ''வட ஆற்காடு மாவட்டம், போளூரில் தீயணைப்பு நிலையம் வைக்க நிதி ஒதுக்கீடு செய்ய கோரி விவாதிக்க'' நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 3,28,15,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

**திரு. கே. கல்லன்:** தலைவரவர்களே, ''நீலகிரி மாவட்டத்தில் கடந்த 30 ஆண்டுகளாக தீயணைப்பு நிலையம் திறக்கப்படாதது பற்றியும், மேலும் தீயணைப்பு நிலையங்கள் திறப்பது குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 3,28,15,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

**திரு. என். பழனிவேல்:** தலைவர் அவர்களே, ''எல்லா பேரூராட்சி பகுதிகளிலும் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தி தந்து உடனடியாக விபத்துக்களில் இருந்து பொதுமக்களுக்கு பாதுகாப்பு தர வேண்டியது குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 3,28,15,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்.''

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம் இளையான்குடியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஆரம்பிப்பது சம்பந்தமாக விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 3,28,15,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

கோரிக்கை எண் 37.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,97,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, "பொதுப பணிக்குச் சொந்தமான பல கட்டிடங்கள் பழையதாக ஆகிவிட்டதால் அவைகளை இடித்து புதுப்பித்துக் கட்டித்தருவது குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள், கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 3,97,15,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. கல்லன்: தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் பல நகரங்களில் உள்ள பல அரசு அலுவலர்களை ஒருங்கிணைந்து அரசு கட்டிடங்கள் கட்டி ஒரே இடத்தில் அமைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள், கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 3,97,15,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

கோரிக்கை எண் 38.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:



"மானியக் கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 8,96,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, "பொது பணியில் பணியாளர் பலர் நிரந்தர பணியாளராக செய்யாமல் இருப்பது குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும் இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 8,96,41,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திருமதி தா. இராசாம்பாள்: தலைவர் அவர்களே, "வேலைக்கு உணவுத் திட்டம், சுய வேலைப் பூர்த்தி திட்டம் முதலியவற்றை நிறைவேற்ற கூடுதலான பொறியாளர்களை ஒன்றியந்தோறும் நியமிக்க வேண்டியது பற்றியும், வட்ட மையத்தில் கூடுதலாக ஒரு உதவி கோட்டப் பொறியாளரை நியமிக்கவேண்டியது பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும் இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 8,96,41,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, "பொதுப் பணித் துறை, சாலை பராமரிப்புத் துறைகளில் உள்ள தொழிலாளர்கள் வேலை உத்தரவாதம் செய்யவும் நிரந்தரமாக்குவது சம்பந்தமாக விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 38 பொதுப் பணிகள் பணியாளரும் கருவிகளும் இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 8,96,41,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

கோரிக்கை எண். 51.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 51—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 16,55,07,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"மானியக் கோரிக்கை எண் 51—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 16,55,07,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

1690. திரு. கே. எம். தங்கமணி: தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண்-51—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பில் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 16,55,07,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண்—51—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 16,55,07,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் பற்றிய விளக்கக் குறிப்பேடுகள் அவையில் தரப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் படித்ததாக ஏற்றுக் கொண்டு, அவைக் குறிப்பிலும் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*[1011 1083 பக்கங்களில் இணைப்பு I, II, III, IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]



*திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற மாவட்ட நிர்வாகம், காவல்துறை, பொதுப்பணித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டினுடைய சட்டம், அமைதி ஆகியவற்றைப் பாதுகாக்கின்ற மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற காவல் துறை பற்றி பொது மக்களே ஐயுறத் தக்க அளவிற்கு அசம்பாவிதங்கள், அச்சம் தரத்தக்க செய்திகள், கொலைகள், குழந்தைகள் காணாமல் போகின்றன, நெஞ்சு பதறுகின்ற செய்திகள் ஆகியவற்றை நாளேடுகள் நமக்குத் தெரிவித்த வண்ணம் இருக்கின்றன.

பொதுவாகவே இன்றைக்கு இந்த மன்றத்திலே, அதிலும் குறிப்பாக புதியஆட்சி துவங்கியதற்குப்பிறகு குழந்தைகள் காணாமல் போவது என்பது அன்றாட செய்திகளாக நாட்டிலே நடந்துக் கொண்டிருக்கிறது என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்டு பத்திரிகையிலே வந்த செய்திகளை, நமக்குத் தெரிந்த சில செய்திகளை மட்டும் நான் அவையினுடைய கவனத்திற்கு [illegible]க விரும்புகிறேன்.

விடிந்து எழுந்தால் அல்லது பொழுது போனால் பெற்றோர்கள் குழந்தைகளை வெளியிலே அனுப்பலாமா? பள்ளிக்கூடத்திற்கு அனுப்பலாமா பத்திரமாகத் திரும்பி வருவார்களா என்று பயத்தோடு ஒவ்வொரு நாளையும் கழிக்க வேண்டிய அவசியத்திலே இருக்கிறார்கள் என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சான்றாக பெசன்ட் நகரிலே ரிசர்வ் வங்கி குடியிருப்புக் காலனியிலே இருந்த குமணன் என்ற சிறுவன் காணவில்லை. தண்டையார்பேட்டை பகுதியிலே பி. தமிழ்செல்வன் என்ற சிறுவன் வயது 14 காணவில்லை. ராயபுரம் டுட்டோரியல் கல்லூரியிலே படித்துக்கொண்டிருந்த 14 வயது சிறுவன் பெயர் ஜனார்தனன், அவனும் காணவில்லை.

[முற்பகல் 9-10]

சென்னை ஏழுகிணறு பகுதியைச் சேர்ந்த சந்தான கிருஷ்ணன் வயது 11 காணவில்லை. சென்னை பெருமாள் கோவில்தோட்டம் ஐந்து வயது பையன் அருணா காணவில்லை. தாம்பரம் வால்மீகி தெரு ராஜேந்திரன் காணவில்லை. ஜாம்பஜார் முனுசாமி நாயகர் மகன், நான்கு வயது, காணவில்லை. பொன்னேரி துணை தாசில்தார் மகள், 13 வயது கொலைசெய்யப்பட்டிருக்கிறாள். செங்கல்பட்டில் 13 வயது செல்வி காணவில்லை.

அயோத்தியாகுப்பம் குமரன் என்பவரின் பெண் சரஸ்வதி, வயது 20 சாந்தி 16 வயது இருவரும் இணைந்தாற்போல் காணவில்லை. தென்ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் சித்தான் கிராமத்தில் கண்ணபிரான் கோனூரின் மகன்கள், இளையபெருமாள், சம்பத் ஆகியோர் 10 வயது, 6 வயதுடையோர் மாடு மேய்க்கச் சென்றபோது பத்து வயது மகன் காணவில்லை. அவர்கள் இருவரும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கருதப்படுகிறது. நெய்வேலியில் நான்கு சிறுவர்கள் ஒரே நாளில் காணாமல் போய்விட்டனர். இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததுபோல் பாதுகாப்பாக இருக்க வேண்டிய மருத்துவமனையில் இருந்து மூன்று குழந்தைகள் காணாமல் போய் விட்டன என்பது குறித்து இந்த மன்றம் விவாதித்திருக்கிறது. ஆக, மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ள வேண்டிய காவல்துறையின் கவனக் குறைவு காரணமாக, பொறுப்பற்ற தன்மையின் காரணமாக நாம் பெற்ற மழலைச் செல்வங்களை ஏன் வயது வந்தவர்களைக் கூட இழந்து தவித்துக் கொண்டிருக்கிற ஒரு துர்ப்பாக்கியகரமான நிலைமை தமிழ்நாட்டில் முதன்முதலாக இந்த ஆண்டுதான் துவங்கியிருக்கிறது என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொலைகள் நடப்பது என்பது திட்டமிட்டு நடக்கிறதோ என்று கருதப்படத்தக்க அளவிற்கு, நாட்டின் பல பகுதிகளில் சந்தேகிக்கப்படத்தக்க அளவிற்கு கொலைகள் மிகுதியாக நடைபெறுகின்றன. சென்னையில் ஒரு அதிகாரியின் மகள் ஷண்முகப்பிரியா கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டு கிணற்றில் தள்ளப்பட்டு இருக்கிறாள். இக்கொலைகள் பற்றி இந்த மன்றம் நிச்சயமாக கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். போலீஸ் துறை மீது நாம் எவ்வளவு கவனம் செலுத்தினாலும் இவைகளையெல்லாம் தடுப்பதற்கான ஒரு நல்ல ஏற்பாட்டினை அல்லது நவீன வசதிகளை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் விரைவாக இக்குற்றங்கள் பற்றி துப்பு துலக்கவும் நல்லமுறையில் நீதி மன்றங்களுக்கு வழக்குகளை எடுத்துச் செல்லவும் வாய்ப்பு ஏற்படும். பல்வேறு போலீஸ் நிலையங்களில் ஜீப்கள் இல்லை, வேறு பல வசதிகள் இல்லை. எங்கள் கழக ஆட்சிக் காலத்தில் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டாலும் கூட மீதமுள்ள காவல் நிலையங்களில் நவீன வசதிகளைச் செய்து தந்தால்தான் இத்தகைய கொடுமைகளை ஒழிக்க ஒரளவிற்கு போலீஸ் துறைக்கு உதவிகரமாக இருக்கும் என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இரண்டொரு கருத்துக்களை சொல்லி முடித்துக் கொள்கிறேன். எல்லாக் கட்சிகளுக்கும் இது பொருத்தமான கருத்தாக இருக்கும் என்று கருதுகிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த சில பழக்கவழக்கங்களை இன்னும் நடைமுறையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



அதில் ஒன்று, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அவர்களின்
கீழ் இருக்கிற முக்கியமான அதிகாரிகளை கீழ்மட்டத்தில் இருக்
கும் அலுவலர்கள் ஜனவரி 1-ம் தேதி சென்று பார்ப்பதாகும்.
பார்ப்பது என்பது அவர்கள் விருப்பம். அதில் யாரும் தலையிட
முடியாது. தாலூகா ஆபீஸ், ஆர். டி. ஓ. ஆபீஸ் இவற்றில்உள்ள
குமாஸ்தாக்கள்., ப்யூன்கள் இவர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட
அளவு பணம் வசூலிக்கப்பட்டு அவர்கள் தந்தே தீரவேண்டும்—
அந்தத்தொகை முழுதும் செலவழிக்கப்படுகிறதா இல்லையா
என்பது வேறு விஷயம்—ஒரு கூடை ஆரஞ்சு, ஒரு கூடை ஆப்பிள்,
ஒரு கூடை திராட்சை, நல்லதோ கெட்டதோ, வாங்கிப்போய்
கலெக்டர், ஆர்.டி.ஓ. வைப் பார்க்கிற ஒரு பழக்கம் இன்றும்
இருக்கிறது. அதனால் குறைவான சம்பளம் வாங்கக்கூடிய
க்ளார்க்ஸ், ப்யூன்கள் இவர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்
கள்.

எனக்குத் தெரியும், இச்செலவுகளை சந்திக்க யோதிரத்தை
விற்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர், மனைவியின் நகையை விற்ற
இன்ஸ்பெக்டர்களை நான் அறிவேன். எங்காவது லோகல்
டிரான்ஸ்பர் வாங்கிக் கொடுத்து விடுங்கள் என்று சொல்லக்கூடிய
அதிகாரிகளைப் பார்க்கிறேன். நடைமுறையிலே இன்னும் இத்
தகைய பழக்கங்கள் இருக்கின்றன. இதனால் மிகக்
குறைந்த வருவாய் உள்ளவர்கள் ஹுட் செய்யப்படுகிறார்
கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றிய பிரச்னை பற்றி நான்
கட் மோஷன்கூட கொடுத்திருக்கிறேன். அரியலூர் ஆர்.டி.ஓ.
பகுதியில் மிகப் பெரிய தாலூகா. இந்த தாலூகாவில் பெரம்பலூர்,
வரகூர் ஆகிய 2 அசெம்பிளி தொகுதிகள் இருக்கின்றன; 4 பஞ்
சாயத்து ஒன்றியங்கள் இருக்கின்றன. 117 கிராமங்கள் இருக்
கின்றன. 3½ லட்சம் மக்கள் அங்கே வாழ்கிறார்கள். அந்த
மக்கள் எல்லாம் அரியலூர்க்குத்தான், ஆர்.டி.ஓ. ஆபீசுக்குப்
போகவேண்டுமென்றால் ஒரு விவசாயி அரியலூர் ஆர்.டி.ஓ
ஆபீசுக்கு போக வேண்டுமென்றால், 50 மைல்கள் பயணம் போக
வேண்டியிருக்கிறது. அதனால், நாட்கள் செலவாகிறது
பணமும் செலவாகிறது. எந்த ஒரு காரியத்திற்கும் பெரம்பலூரில்
உள்ளவர்கள் ஆர்.டி.ஓ. ஆபிசுக்குப் போகவேண்டுமென்றால்
அரியலூருக்கு போகவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே
இத்தகைய சிரமத்தைப் போக்குவதற்கு, ஒரு செபரேட் ஆர்டி.ஓ
ஆபீஸ் அமைத்து, அதற்கு ஹெட் குவார்ட்டர்ஸ் பெரம்பலூரில்
ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குத்
தான் நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.
துறையூர் ஒரு புதிய தாலூகாவாக உருவாகியிருக்கிறது.
எனவே, மக்கள் வசதியை மனதில் கொண்டு இந்த இரண்டிற்கும்
மத்தியில் பெரம்பலூர் இருக்கின்ற காரணத்தினால், அதுவும் சரி
யான மையத்தில் இருக்கின்ற காரணத்தினால் பெரம்பலூரில்
இந்த ஆர்.டி. ஓ. ஆபிசின் ஹெட் குவாட்டர்ஸ் வைத்தால்

[திரு. ஜே. எஸ். இராசு] [1980 ஜுலை 25

இரண்டு தாலூக்காக்களுக்கும் இதிலே நன்மை ஏற்படும். விவசாயிகள் அதன் மூலம் தங்களுடைய பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள வசதியாக இருக்கும். எனவே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து பெரம்பலூரில் ஒரு ஆர்.டி.ஓ. ஆபீசை உருவாக்கித் தந்து, அதன்மூலம் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற எனது பகுதி மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்களை செய்யும்படி நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி கேட்க உரிமையிருக்கிறது. 25 ஆண்டு காலமாக நாங்கள் ஒன்றாகப் பழகியவர்கள். எனவே, நிச்சயமாக இந்த வசதியைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த 7 மானியக் கோரிக்கைகளின் மீது, மாண்புமிகு முன்னவர் டாக்டர் நாவலர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த மானிய கோரிக்கைகளின் மீது ஆட்சிக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

இரட்டை ஆட்சியை நாம் ஏற்றுக்கொண்டு, மத்திய அரசு நடத்துகின்ற ஏற்படுத்தியிருக்கின்ற அமைப்புகளை நிர்வகிக்கவும், மாநில அரசே சில அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு நிர்வகிக்கவும், மாநில அரசு உருவாக்கிய பல பிரச்னைகளை மத்திய அரசு ஆக்கிரமிக்கின்ற ஒரு வகையையும் ஏற்று, ஆக ஒன்றுக்குள் ஒன்றாக, வட்டத்திற்குள் சதுரமாக விளங்கக்கூடிய நிர்வாகத்துறையைப் பற்றி நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

பொதுவாகவே, இது அண்ணாவின் அரசு என்று சொல்கிறோம். ஆனால், மற்றவர்களும் அண்ணாவின் அரசு என்று சொல்கிறார்கள். சுருக்கமாக இதைப்பற்றி சொல்ல வேண்டுமானால், ஓடும் வண்டியில் ஏறிக் கொண்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள். ஆக்சிடெண்ட் வண்டியை ஓட்டியவர், ஓட்டிக்கொண்டிருப்பவர் எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஸ்டார்ட் செய்து, ஓட்டிக்கொண்டிருந்த சகலமும் உள்ள வண்டியை கலைஞர் ஜம்பமாக ஓட்டி, விபத்துக்குள்ளாக்கிய வண்டியை, பெல், பிரேக் இல்லாத வண்டியை, பழுதான இயந்திரமாய், பார்வையற்றதால், பலிபிடித்த ஓடாத வண்டியை ஓட்டியவர், ஓட்டிக் காட்டுபவர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆவார்கள்.



1980 ஜுலை 25] [டாக்டர் கே. சமரசம்]

இதை எண்ணித்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், அன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் ஒரு ஸ்பேனரைக் கொடுத்தார்கள். அதைக்கூட இன்றைய தினம் தொழிலாளர் கொடியிலே இணைத்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அட்மினிஸ்ட்டேரேஷன் என்று வருகின்றபோது. பேரறிஞர் புரூக்ஸ் ஆடம்ஸ் ஒரு கருத்தைச் சொன்னார்.

The Administration is the capacity of coordinating money and often conflicting social energies in a single organism.

என்று சொன்னார்.

[முற்பகல் 9-20]

'அப்படிப்பட்ட நிலையில் நேர்மாறான சமுதாய உணர்வுகளை ஒருங்கிணைந்து சமுதாய மறுமலர்ச்சிக்காக இயக்கப்படுவதே நிர்வாகத்தின் திறமையாகும்' என்று சொன்ன கருத்துக்கேற்ப மிகச் சிறப்பான ஒரு ஆட்சி முறையை இன்றையதினம் அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகம் நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் இங்கே பேசிய பலர் பலவிதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அப்பன் பெருமை பேசும் சுப்பன்கள் சில பிரச்சினைகளைச் சொன்னார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன் இரண்யன் மகன் பிரகலாதன், இராவணன் தம்பி விபீஷணன், கட்டபொம்மன் நண்பன் எட்டப்பன் என்பதைக் கலியுலகம் கோடிட்டுக் காட்டியுள்ளது, உள்ள உணர்வுகளை வெளிக் காட்டியிருக்கிறது. எங்களைப் பொறுத்த வரை குலப் பெருமை பேசி வாதாட வரவில்லை, கொள்கைப் போர் முரசு கொட்டி சந்திக்க வருகிறோம். அண்ணாவைக் கொடியில் போட்டுள்ளனர், ஆனால் அண்ணாவின் கொள்கையை மறந்து விட்டனர் என்று குற்றம் சாட்டினார்கள். நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்— மறைந்தவர்க்கே நினைவு மண்டபம், செத்தவர்க்கே சமாதி, சாவதற்கு முன்பே சமாதி எழுப்புவதில்லை. அப்படிப்பட்ட மரபு இல்லை. கழகத்திற்குத் தலைவர் இல்லையென்று சொன்னவர் அண்ணா. அண்ணா தி.மு.க.வும் அப்படியே இருந்தது, இருக்கிறது. பேரறிஞர் அண்ணா இரு மொழிக் கொள்கையை வகுத்தார், அதனை எங்கள் இதயக் கனியாம் புரட்சித் தலைவர் அமலாக்கிக் கொண்டிருக்கிறார். மாநிலத்தில் சுயாட்சித் தன்மை— இது அண்ணா கண்ட கனவு. அதுவே எங்களுடைய லட்சியம். ஹரிஜன மக்கள் தனிமைப்படுத்தப்படக் கூடாது. அந்தத் திருக்குலத்தினர் உயர கூட்டமைப்புத் திட்டத்தை நாம் உருவாக்கிக் காட்டியிருக்கிறோம். ஜாதிகள் கூடாது என்று பேரறிஞர் அண்ணா, பெரியார், காந்தி எல்லாம் சொன்னார்கள். அதனை

நிறைவேற்றுவதற்காகவே, செயலாற்றுவதற்காகவே பொருளாதார அடிப்படையில் ஒதுக்கீடுகள், திட்டங்கள் தேவை என்று புதிய தத்துவத்தைக் கொண்டு வந்து சட்டத்தைக் கொண்டு வந்தோம்.

அது மட்டுமல்ல. இங்கே பேசிய பலர் உணவுப் பிரச்சினை மீது பேசுகிறபோது கூட நிர்வாகத்தைப் பற்றிச் சொன்னார்கள். முப்பத்தி இரண்டு லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி டாக்டர் கலைஞர் ஆட்சியில் 65 லட்சம் டன்னாக உயர்ந்தது. ஆனால் அந்த நேரத்தில் இரண்டு ரூபாய் விற்ற அரிசி 9 ரூபாய் விற்றதன் மர்மமென்ன? மாயமென்ன? நியாயமென்ன? புரட்சித் தலைவர் ஆட்சியில் இயற்கை சீற்றங்களுக்கும் செயற்கைப் போராட்டங்களுக்கும் மத்தியிலும் சீரான உற்பத்தி, இயல்பான விலை. அதில் உள்ள புதிர் ஆண்டவர்களுக்குத் தெரியாது.

திரு. துரைமுருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றைக்கு என்ன மானியம் என்று நாங்களே குழம்பிக் கொண்டிருக்கிறோம். ஏழு மானியக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. உறுப்பினர் இன்று சிவில் சப்ளைஸ் மானியத்தைப் பற்றிப் பேசுகிறார். விவாதம் குறிப்பிட்ட மானியத்தைப் பற்றித்தான் இருக்க வேண்டுமென்பது மரபு. இது பொது விவாதம் இல்லை. உறுப்பினர் பேச ஆரம்பித்ததிலிருந்து மானியத்தைப்பற்றி பேசாமல் வேறு ஒன்றைப் பேசிக் கொண்டிருக்கிறார். தலைவர் அவர்கள் அதை அனுமதிக்கிறார்களா?

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நான் வேறு ஒன்றைப் பற்றியும் பேசவில்லை. இந்த அரசு வந்து செய்த நிர்வாக மாறுதல்களை, அடிப்படையில் செய்திருக்கும் மாறுதல்களை, சாதனைகளை, திட்டங்களை அவை முன் எடுத்து வைக்கிறேன். இப்போது ஏழு மானியங்கள் வந்திருக்கின்றன. அதன்கூர்ந்து திரு. துரைமுருகன் அவர்கள் அந்த ஏழு மானியங்களையும் படித்துவிட்டு அதற்குள் நான் பேசுவது அடங்கியிருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும்.

திரு. துரைமுருகன்: அண்ணா தி.மு.க. கொடி பற்றி மானியத்திலே எங்கே வருகிறது? நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பியிருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்ற ஏழு மானியங்களுக்குள் தம்முடைய கருத்தினை எடுத்துக் கூற வேண்டும்.





டாக்டர் கே. சமரசம்: மாநில அமைச்சர்கள், மாவட்ட நிர்வாகம் என்ற மானியங்கள் வருகின்றன. அமைச்சர்கள் எடுத்த நடவடிக்கையை எடுத்துச் சொல்லும்போது இதெல்லாம் வரும். அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக சீரான விலையில் பொருள்கள் கிடைக்கின்றன என்பதை யாரும் மறந்து விட முடியாது. இது அண்ணாவின் அரசு என்று நாங்கள்சொல்லி அண்ணாவின் கொள்கைகளை நாங்கள் அமலாக்குகிறோம். இது அண்ணா அவர்கள் கொடுத்த நிலந்தான்; அண்ணா அவர்கள் பாய்ச்சிய நீர்தான், அண்ணா அவர்கள் காட்டிய உழவுதான். அண்ணா அவர்கள் தந்த விதைதான், அண்ணா அவர்கள் கொடுத்த எருதான், அண்ணா அவர்கள் கொடுத்த மருந்து தான். எல்லாம் இருந்தும் கதிரும் பதரும் எவ்வாறு வந்தது?

ஆனால் களத்திலே எடுத்து அடித்துப் பார்க்கிறபோது, பிரிக்கின்றபோது பொது மக்கள் மத்தியிலே நாங்கள் கதிராகவும் நீங்கள் பதராகவும் ஆனீர்கள் என்பதை மறந்துவிட முடியாது.

ஆகவே அந்த அடிப்படையிலே இந்த ஆட்சி அண்ணாவின் தொடர் ஆட்சியாக ஆட்சியை நிர்வகித்து வருகிறது என்பதைத் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். நிர்வாகம் சீரழிக்கப்படுகிறது என்றாலும் அல்லது ஒரு ஆட்சி மாற்றப்படுகிறது என்று சொன்னாலும் உலகத்திலே பல அரசுகள் கவிழ்வதற்கு, பலவீனமடைவதற்கு, மாறுவதற்கு பல காரணங்கள் இருந்திருக்கின்றன. அமெரிக்காவில் வாட்டர்கேட், ஜப்பானில் லாக்கீடு, இங்கிலாந்தில் புரபியூமா மந்திரி—கீலர் விவகாரம் காரணமாக ஆனால் இந்தியக் துணைக்கண்டத்திலே பல மாநிலங்களில் பல கமிஷன்கள் காரணமாக இருந்தாலும், புரட்சித் தலைவர் ஆட்சி தான் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் எந்தவிதமான கமிஷனும் இல்லாமல் எந்தவிதமான புகாரும் இல்லாமல் ஆட்சி கலைக்கப்பட்டது.

இன்றைய தினம் இவர் போட்ட கணக்கொன்று,
அவர் போட்ட கணக்கொன்று
இரண்டுமே தவறானது—
மக்கள் போட்ட கணக்கிற்கே
இருவரும் பலியாகி நின்றதே முடிவானது
தமிழ் மண்ணுக்கே பொதுவானது
புரட்சித் தலைவருக்கே முதல்வர் என்றானது.

என்ற முறையிலே இன்றைய தினம் நாம் ஆட்சி செய்து கொண்டிருக்கிறோம். இந்த இரண்டரை ஆண்டுகளிலே புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த நிர்வாக சீரமைப்புகளின் காரணமாக நிர்வாகம் முடுக்கிவிடப்பட்டு போர்க்கால நடவடிக்கைகளில்

ஈடுபட்டு, புயல் வெள்ளக் கொடுமைகளை எதிர்த்து நிவாரண பணியில் ஈடுபட்டு குறைகளைத் தீர்க்கவில்லையா? சென்னையில் பெரு வெள்ளம் ஏற்பட்டபோது நகரமே பாதிக்கப்பட்டபோது திடீரென்று நள்ளிரவில் முதல் அமைச்சர் சென்று பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கவில்லையா? செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பி வழியும்போது உடைந்தால் சென்னைக்கு ஆபத்து என்ற சூழ்நிலையில் தகுந்த ஆலோசனை, அதிகாரிகளே வியக்கும் வண்ணம் எடுத்துச் சொல்லிக் காப்பாற்றவில்லையா? தூண்டி விடப்பட்ட எண்ணற்ற போராட்டங்களைச் சந்தித்து பொது ஜனங்களுக்கு குந்தகம் ஏற்படாமல் குறைகளை நீக்கி சுமூக உறவை ஏற்படுத்தி சாதாரண சுகவாழ்வுக்கு வழிகாணவில்லையா? தொழிலாளர்கள் போராட்டப் பிரச்சினையை லாவகமாக கையாண்டு சிறந்த ராஜதந்திரி என புரட்சித் தலைவர் அவர்கள் பாராட்டப்படவில்லையா? ஒரே ஆண்டில் வருவாய்த் துறையில் மட்டும் 75 கோடி ரூபாய் கூடுதலாக வரக்கூடிய நிலைமையில் நிர்வாகத்தை உருவாக்கவில்லையா? கலைத் துறையிலே 19 கோடி ரூபாய் வருமானமாக இருந்ததை அவர்கள் செய்த சீர்திருத்தத்தின் காரணமாகவே 29 கோடியாக அதை உயர்த்திக் காட்டிய வசூல் மன்னன் இல்லையா புரட்சித் தலைவர். அரசாங்கம் அவர்களிடமிருந்து பணத்தை வசூலித்தாக வேண்டுமென்ற நிலைமை மாறி அவர்களே முடியைப்பிடித்து கள்ளை ஊற்றி, மடியைப் பிடித்து காசை வாங்கும் நிலைமையெல்லாம் கொண்டுவந்து அரசாங்கத்திற்கு கஜானாவிலே கட்டக்கூடிய நிலைமையை ஏற்படுத்தக்கூடிய அளவிலே நிர்வாகத்தை மாற்றியமைத்தவர் புரட்சித் தலைவர் இல்லையா? ஆகவே இந்த ஆட்சி கௌடில்லியரின் அர்த்த சாஸ்திரம் சந்திரகுப்த மௌரியரின் ஆட்சியைப் குப்தர்களின் பொற்காலம் எனக்கூறியது. தமிழகத்தில் புரட்சித் தலைவர் ஆட்சி தமிழர்களின் பொற்காலமாக விளங்கிவருகிறது.

Administration has always been a servant of public policy .

என்று சொல்வார்கள். கொள்கையின் வேலைக்காரனாக நிர்வாகம் இருக்க வேண்டுமென்று சொல்லி அந்த அடிப்படையிலே நிர்வாகத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் முடுக்கிவிட்டார்கள். அது இன்றைக்கு வேகமாக திறமையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது).

*திரு. வே. இராஜசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81-ஆம் ஆண்டின் போலீஸ் மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்கு நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் டி.ஐ.ஜி.க்களை அதிகமாக்கினீர்கள், அதே விகிதத்தில் குற்றங்களும் அதிகமாகின்றன. தலையைத் தேட கூவத்தில் வலையை வீசினீர்கள். தலைக்குப்பதிலாக தகர டின்னை எடுத்தீர்கள். குற்றம்செய்தவனோ காவல் துறையை கிண்டல் செய்கிறான். துப்பறிவதில்



ஸ்காட்லாந்து யார்டுக்கு இணையாக இருந்த தமிழக காவல் துறை இன்று கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஜேப்படி, வழிப்பறி, அரிசனக்கொடுமை, கார் திருட்டு, நரபலி போன்ற குற்றங்களை கண்டுபிடிக்க முடியாமல் திக்கித் திணறி, தட்டுததடுமாறு தமிழக அரசின் தவறான காவல் துறை பொம்மைச் சங்க ஆதரவால் உண்மைச் சங்கத்திற்கும், பொம்மைச் சங்கத்திற்கும் ஏற்பட்ட விபரீத விளைவால் செயல் இழந்து இருக்கும் காவல் துறை கோரிக்கை மீது எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1971ஆம் ஆண்டு காவல் துறை பற்றிய விசாரணைக் குழுவின் அறிக்கையில் காவல் துறையினரின் கடுமையான உழைப்பிற்கும் ஆபத்தான பணிக்கும் ஏற்றவாறு ஊதியம் கொடுக்கப்படவில்லை என்றும் அது கொடுக்கப்படவேண்டும் என்றும் சிபாரிசு செய்துள்ளார்கள். இந்த மானியக் கோரிக்கையில் அதற்கான வழிவகைகள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

ஐ.எல்.ஓ. சம்பிரதாயப்படி தொழிலாளர்கள் எல்லோருக்கும் 8 மணி நேர வேலை என்பது. ஆனால் காவல் துறையின் நிலை அப்படி இல்லை. நாள் முழுவதும் வேலை பார்க்க வேண்டியிருக்கிறது.

[முற்பகல் 9-30]

''ஓவர் டைம்'' என்ற பேச்சுக்கே இடமில்லை. வாரத்திற்கு ஒருநாள் விடுமுறை என்பது பெயருக்குத்தான். அந்த நாளில் வீட்டில் ஓய்வு எடுத்தவர்கள் யார்? உண்மையாகவே காவல்துறையினருக்கு விடுமுறை கொடுக்கவேண்டுமென்று அரசு விரும்பினால் ஆண்டிற்கு ஒருமுறை மொத்தமாக விடுமுறை கொடுக்க முன் வருவீர்களா?

சொந்த மாவட்டங்களில் காவல் துறையினர் வேலை பார்க்க அனுமதி இல்லை. ஆகையால் குடும்பத்தினருடன் வருடத்திற்கு ஒருமுறையாவது சொந்த ஊர்களுக்குப் போய் வர அரசு பஸ்களில் இலவச பாஸ் கொடுக்கத்திட்டம் ஏதேனும் இருக்கிறதா, அதற்கு உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

காவலர் குடியிருப்புகள் மொகஞ்சதாரோ—ஹரப்பாக்களை நினைவுபடுத்துகின்றன. இதுவரை 46 சதவீதத்தினருக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்று கூறி இருக்கின்றீர்கள். 1971ஆம் ஆண்டு கமிஷனில் 80 சதவீத இலக்கினை அடைவதில் புதிய ஊக்கத்தோடு செயலாற்ற வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் கடன் உதவி திட்டத்தின் கீழ் 1978-79 ஆம் ஆண்டிற்கு 34.68 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இன்னும் மத்திய அரசின் ஏழாவது நிதி ஆணைக்குழு 1979-1984ம் ஆண்டிற்கான 675 இலட்சம் ரூபாய் ஒதுக்கி தந்துள்ளது. இவைகளை எந்த

அளவிற்குப் பயன்படுத்தி காவலர் குடியிருப்புகளை சிரமைத்து, நவீன வசதிகளுடன் கட்டித்தரப் போகிறீர்கள் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 24 மணி நேரமும் போட்டிருக்கின்ற காக்கி உடை களுக்கு நீங்கள் கொடுக்கின்ற பணம் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு 100 ரூபாய், இன்ஸ்பெக்டர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு 80 ரூபாய். இந்தத் தொகை எந்தக் காலத் ல் நிர்ணயிக்கப்பட்டது? இன்றைய நிலைக்கும் முன்னால் இருந்த நிலைக்கும் உள்ள வித்தியாசம் குறிப்பிடப்படவில்லை. பானியக் கோரிக்கையிலும் இதற்கான தொகை ஒதுக்கப்படவில்லை. கொஞ் சம் இருக்கின்ற மதிப்பே இந்தக் காக்கி உடையில்தான், அதுவும் இழிந்ததும், அழுக்கானதுமாக இருந்தால் அவர்கள் நிலைமையென்ன வாகும்? 1971 ஆம் ஆண்டு காவல் துறையின் விசாரணைக் குழு அறிக்கையில் செய்திருக்கின்றார்களே? காலத்திற்குத் தகுந்தாற் போல் எடுப்பாக, கௌரவத்தைக் காப்பாற்ற அதற்கு டெரிக்காட் டனும், பருத்தி துணிகளையும் இலவசமாக வழங்கப்பட வேண்டு மென்று. எப்போது கொடுக்கப் போகிறீர்கள்? இங்கே அதற் கான விவரங்கள் இல்லை.

மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் வைத்திருக்கும் எஸ்.ஐ., ஏ.எஸ்.ஐ., இன்ஸ்பெக்டர்களுக்கு பெட்ரோல் படி 64 ரூபாய் மா தம் ஒன்றுக்கு. 20ஆம் நூற்றாண்டில் 1977பே ரிவிஷனில் 65ரூபாய் ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு காவல் நிலையத் திற்கும் ஏரியா எவ்வளவு? அதை அவர்கள் சுற்றி வருவதாக இருந் தாலும், மற்றைய பந்தோபஸ்திற்குப் போய் வருவதாக இருந்தா லும், ஒரு நாளைக்கு 40 கிலோ மீட்டர் ஆகும். நீங்கள் கொடுக் கும் பெட்ரோல் படி பந்து நாட்களுக்குத்தான் வரும்; மீதம் 20 நாட்களுக்கு யாரிடம் வாங்குவார்கள் "படி"? குதிரைப் பந்தயச் சூதாட்டம் நடத்துவோர், கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், பிக் பாக்கெட் அடிப்போர், வழிப்பறி செய்வோரை எப்படிக் கண்டு பிடிப்பது, தடுப்பது, தண்டனை வாங்கித் தருவது? இரவுநேர பந் தோபஸ்து என்பது முறையாக அதிக அளவில் செயல்படாத கார ணத்தால்தான் இந்தக் குற்றங்கள் அதிகமாகின்றன. அரசு பெட் ரோல் படியை உயர்த்திக் கொடுத்துக் குற்றங்களைக் குறைக்க விரும்புகிறதா? அல்லது 20 நாட்களுக்கு வேண்டிய படியை அவர் களிடம் வாங்கிக் கொள்ளட்டும் என்று கருதுகிறதா? இதற்குப் பதில் வேண்டும்.

தமிழ் மாநிலத்திலும், சென்னை நகரிலும் சமீப நாட்களில் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பாளையங்கோட்டையில் பெருமாள்புரம் காலனி யில் வீட்டில் புகுந்து 6.2 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கொள்ளை யடிக்கப்பட்டிருக்கின்றன. கன்னம் வைத்துக் கொள்ளை என்று பார்த்தால், செஞ்சி தாலுக்காவில் ஒரு வீட்டிலே கன்னம் வைத்து 11,000 ரூபாய் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்



கின்றன. பாடியில் சம்பத்ராஜ் ஜெயின் கடை பூட்டை உடைத்து 50,000 ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் கொள்ளையடிக்கப் பட்டிருக்கின்றன. கிழக்கு செங்கல்பட்டு பகுதியிலே கொள்ளை, 35,000 ரூபாய்க்குத் திருட்டு, புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். காஞ்சிபுரம் சேத்துப் பட்டை,முதலியார் தெருவைச் சார்ந்த ஒருவரது வீட்டில், அவர் இல்லாதபொழுது பெண்ணிடம் பகல் பத்து மணிக்கு விரட்டி 60 பவுன் கொள்ளையடிக்கப்பட்டது. சிறுவர்கள் நரபலி, தினசரி பத்திரிகையில் வந்து கொண்டிருக்கிறது. நேற்றையதினம் பெசன்ட் நகர் சிறுவன், 14 வயது சிறுவன் காணவில்லை என்று செய்தி வந்து, அவன் நரபலிக்கு ஆட்படுத்தப்பட்டான் என்ற செய்தி யும் வருகிறது. தியாகதுர்க்கம், விருத்தாசலம், ஒரே குடும்பத் தைச் சேர்ந்த சிறுவர்கள் இருவர் மர்ம மரணம். அதைப்பற்றிப் போலீசார் புலன் விசாரணை செய்கிறார்கள். சென்னை நாக மணி தோட்டத்திலுள்ள வெங்கடேசன் என்ற பையனைக் காண வில்லை என்ற செய்தி வருகிறது. சிறுவர் கள் நரபலி, வேப்பந் தட்டை கிராமத்தில் இரண்டு சிறுவர்கள் நரபலி, போலீஸ் புலன் விசாரணையில் இருக்கிறது. சிட்டிபாபு, சென்னை, காண வில்லை என்று 8—7—1970-ல் செய்தி வருகிறது. சிவா, 5 வயது, செல்வி 13 வயது என்று ஒவ்வொரு நாளும் சிறுவர்கள் காணாமற்போகும் பட்டியலை டி. வி.யிலும் ரேடியோவிலும் பேப்பர் மூலமாகவும் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். யாரையும் கண்டு பிடித்ததாகத் தெரியவில்லை. அதைவிட, பெண்களிடம் நடக்கின்ற கொள்ளை அதிக அளவில் நடந்து கொண்டிருக்கிறது. குற்றாலம் அருவியிலே குளித்த பெண்ணிடம் 33,500 ரூபாய் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக் கின்றன. இன்னும் திருடர்கள் கண்டுப் பிடிக்கப்படவில்லை.

புதுக்கோட்டை மாவட்டத்திலே மச்சுவாடி கண்ணன் நகரிலே கழுத்து நெறிக்கப்பட்டு ஒரு பெண் மர்மமாக கொலை செய்யப் பட்டு, நகைகளைத் திருடியிருக்கிறார்கள். திருடர்களு , கொலைக்காரர்களும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. துப்பு துலக்குவதற்காக போலீஸ் தனிப்படை போடப்பட்டிருக்கிறது.

கொடுங்கலூரிலே சினிமா பார்க்க தாயுடன் சென்ற பெண் காணவில்லை. பெண் பெயர் கிருஷ்ணவேணி. பெண்ணைப் போலீசார் தேடுகின்றார்கள். மாயவரத்திலே, திருமதி ஜெய பால் மருத்துவ மனையிலே 3 பேர் புகுந்து, 5 பவுன் நகைகளை யும், ரூ. 60,000 நகைகளையும் கொள்ளை அடித்துச் சென்றிருக் கிறார்கள். ஆதம்பாக்கத்தில், வள்ளியம்மாள் என்ற பெண்ணிட மிருந்து 7½ பவுன் தாலிச் சங்கிலியைப் பறித்துச் சென்றிருக்கிறார் கள். பல்லாவரத்திலே, ஜெயா என்ற பெண் கோயிலுக்குப் போய் விட்டு வருகிறபொழுது, வழிமறித்து 8 பவுன் சங்கிலியை அறுத் துக் கொண்டு போயிருக்கிறார்கள். கொரட்டூரிலே, வீட்டிற் குள்ளே புகுந்து பெண்களைத் தாக்கி 7 பவுன் நகைகள் கொள்ளை

அடிக்கப்பட்டிருக்கின்றன. அசோக் நகரிலே, வீட்டிலே புகுந்து
ஒரு பெண்ணின் தாலியை அறுத்துக் கொண்டு ஓடியிருக்கிறார்கள்.
உளுந்தூர்பேட்டையிலே, தூங்கிய பெண்ணிடமிருந்து தாலியை
அறுத்துக் கொண்டு ஓடியிருக்கிறார்கள். 19—7- 1980-லே
செய்தி கிடைத்தது. நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்கிறேன்
தாலிக்கு தங்கம் தருவதாக அறிவித்திருக்கிறீர்கள். அதைப்பற்றி
விளக்கம் கேட்கவில்லை. ஆனால், தாய்மார்களின் கழுத்திலே
இருக்கிற தாலி பறிக்கப்படாமல் இருக்குமா! காவல்துறையைத்
தன் கையிலே வைத்திருக்கிற முதல்வர் இதற்கு பதில் சொல்வாரா
என்று கேட்கிறேன்.

சென்னை நகரிலே, கூவத்திலே கைகள் மிதக்கின்றன. அடுத்த
நாள் தலை எங்கே என்று தேடுகிறார்கள் சாக்கு மூட்டையில்
மனித உடல் வெட்டப்பட்டு கட்டி கூவத்தில் கிடக்கிறது.
அதற்கு பிறகு தகரத்திலே வருகின்ற மாட்டிறைச்சியைப்பற்றி
புலன் விசாரணை செய்கின்றார்கள்.

கார் திருட்டு சென்னை நகரிலே பிரபலமாகிவிட்டது. கார்
திருடியவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால்,
சைதாப்பேட்டையிலே திருடப்பட்ட கார் வண்ணாரப்பேட்டை
யிலே நிற்கிறது, 4 சக்கரங்களில்லாமல், 2 ஹெட் லைட்கள் இல்
லாமல், பாட்டரி இல்லாமல்.

வழிப்பறிக் கொள்ளை அதிகமாகியிருக்கிறது. அதோடு,
சென்னை வானொலி நிலையத்திற்குள் புகுந்து
பித்தளைக் கைப்பிடிகள் திருடியிருக்கிறார்கள்.
நிலைய இயக்குநர் நிலைய நிகழ்ச்சி தயாரிப்பாளர்
அறைக் கதவுகளிலே உள்ள பித்தளைப் பிடிகள் திருடுபோயிருக்
கின்றன. போலீஸ் புலன் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்
கள்.

சைக்கிள் திருடு சாதாரணமாகிவிட்டது. பஸ்ஸிலே, மின்
சார ரயிலிலே ஜேப்படி, இரவிலே வழிப்பறிகள், சென்னை நகரிலே
அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இதற்குமேலும், தமிழகத்
திலே சட்டம் ஒழுங்கு கெடவில்லை, காவல் துறை சரியாகச்
செயல்படுகிறது என்றும் முதல்வர் கூறுவாரானால், அதைவிட
வெட்கக் கேடான விஷயம் வேறு இருக்க முடியாது என்று நான்
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை நகரிலே 150 டிவிஷன்கள் இருக்கின்றன. 51 போலீஸ்
ஸ்டேஷன்களை வைத்துக்கொண்டு இந்தக் கொலைகளையும்
இந்தக் கொள்ளைகளையும், இந்தக் கற்பழிப்புகளையும், இந்த
வழிப்பறிகளையும், இந்த பிக் பாக்கெட்டுகளையும் எப்படி கண்டு
பிடிப்பார்கள்! எவ்வளவு பெரிய ஏரியா அசோக் நகர்! 20
அவின்யூ 86 தெருக்கள் அதிலே இருக்கின்றன. அந்த போலீஸ்
ஸ்டேஷனின் போலீஸ்காரர்களுடைய எண்ணிக்கை 17. அவர்
களிலே அமைச்சர்களுடைய பந்தோபஸ்துக்கு, ஊர்வல பந்தோ
பஸ்துக்கு, நீதிமன்றங்களுக்குச் சென்று விட்டால், கலவரம் நடக்
கின்ற இடங்களுக்கு யார் போவது? புகார் மனுக்களை யாரிடம்



கொடுப்பது? இது என்ன மனுநீதிச் சோழன் ஆட்சியா? எஸ்.ஐ.
மேஜையிலேயுள்ள காலிங் பெல்லை அடித்ததும் நியாயம்
கிடைக்க?

1976 ஆம் ஆண்டு கணக்குப்படி டெல்லி நகரத்தில் 15,000
போலீஸ் இருக்கிறார்கள். கல்கத்தாவில் 12,000 போலீஸ் இருக்
கிறார்கள். பம்பாயில் 20,000 போலீஸ் இருக்கிறார்கள். சுமார்
40 இலட்சம் மக்கள் ஜனத்தொகை கொண்ட, தமிழகத்துத் தலை
நகராம் சென்னையில் 3,474 போலீசார், 490 ஏட்டுக்கள், 197
சப் இன்ஸ்பெக்டர்கள், 80 இன்ஸ்பெக்டர்கள் தான் இருக்கிறார்
கள். இவர்களை வைத்துக் கொண்டு, சென்னையிலே நடக்கின்ற
கொள்ளைகளையும், கொலைகளையும் எப்படி நீங்கள் கண்டு
பிடிக்கப்போகிறீர்கள் என்பது கேள்விக்குரியதான விஷயம்.

இந்த எண்ணிக்கையை வைத்துக் கொண்டு 173.34 சதுர
கிலோமீட்டர் பரப்பளவுள்ள சென்னை நகரிலே வாழும் மக்களின்
உடமைகளுக்கும், உயிர்களுக்கும், தாய்மார்களுடைய கற்பிற்கும்
எப்படிப் பாதுகாப்புக் கொடுக்கப் போகிறீர்கள்? மற்றைய தலை
நகரங்களுடைய கணக்குப்படி சென்னை நகருக்கு 12,000 போலீ
சார் இருந்தால்தான் இந்த குற்றங்களை ஓரளவாவது கண்டுபிடிக்க
முடியும், தண்டிக்கமுடியும். முதல்வர் மாநிலத்திற்கு காவல்
துறைக்கு 10,000 பேர் எடுக்கப் போவதாகவும், அதுவும் படிப்
படியாக என்றும் கூறியிருக்கிறார்கள். படி படி என்றாலே அந்தக்
காரியம் நடக்காது என்பது தமிழக மக்கள் அறிந்த உண்மை.
சாஸ்திரி நகர், வ.உ.சி நகர், நேத்தாஜிநகர், பெசன்ட் நகர்,
போன்று உருவாகி உள்ள புதிய இடங்களில் காவல் நிலையம்
இல்லை.

இவற்றிற்கெல்லாம் மேலாக காவல் துறையில் ஓய்வு பெறும்
வயதை 58 என்று உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால்,
45 வயதிற்கு மேல் அவர்களுக்கு 'கவாத்து பரேட்' வேண்டா
மென்றும் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறீர்கள். 45 வயதிற்கு
மேல் கவாத்து வேண்டாம் என்று அவர்களுடைய தளர்ச்சி
வைத்துதானே, பிசிக்கலி அன்பிட் அதனால் தானே 45 வயதிற்கு
மேல் அவர்களுக்கு கவாத்து வேண்டாம் என்று கூறி இருக்கிறீர்
கள். ஆனால், அலர்ட்டாக இருக்க வேண்டிய இலாக்கா, சோம்
பேரித்தனமாக இருக்கிற, சுறுசுறுப்புக் குறைவாக இருக்கிற
தாலே குற்றங்கள் அதிகமாகின்றன. மேலும் 55 வயதை 58
என்று உயர்த்தியிருக்கிறீர்கள், என்ன ஆகும்? அந்த ஓய்வுபெறும்
வயதை 58-ஐ, 50 என்று குறைக்க வேண்டும். அந்த 8 ஆண்டு
கள் சம்பளத்தை கிராச்சுட்டி என்று நீங்கள் கொடுக்க வேண்டும்.

கிளாஸ்-2 என்.ஜி. ஓக்களால், 10 கோரிக்கைகள் கொடுக்கப்
பட்டன. அந்த 10 கோரிக்கைகளிலே 8 கோரிக்கைகளை நிறை
வேற்றிக் கொடுத்து இருக்கிறீர்கள். அரசு அலுவலகங்களிலே
வேலை செய்யக்கூடியவர்கள் காலை 10 மணிக்கு வந்து மாலை
6 மணிக்கு சென்றுவிடுகிறார்கள்

[முற்பகல் 9-40]

ஆனால் அதே நேரத்தில் போலீஸ் இலாகாவிலே இருப்பவர்கள் காலை 7 மணிக்குப் பெரேடுக்குப் போனால் இரவு எந்த நேரத்தில் வீடு செல்வார்கள் என்ற நிலைமை இல்லாத காரணத்தால், அவர்களுடைய மனித சக்தியை அதிகமான அளவுக்கு உபயோகிக்கின்ற சூழ்நிலையிலே இருக்கிறார்கள். இந்த 58 வயதை அடைவதற்குள்ளாக அவர்கள் சோர்ந்து போய்விடுகிறார்கள். பல குற்றங்களைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. பல இளம் சப் இன்ஸ்பெக்டர்கள், அசிஸ்டன்ட் சப் இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள் பல ஆண்டுகளாக அதே பதவியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு புரமோஷன் கூட கிடைக்கவில்லை. அவர்கள் புரமோஷன்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மனது சங்கடப்படுகிறார்கள். அதனாலே வேலையில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆனால் அதே நேரத்தில் ராணுவத்திலே பணியாற்றுகின்றவர்கள் 20 ஆண்டுகள் 25 ஆண்டுகள் என்று கான்ட்ராக்ட் முறையிலே பணிபுரிவதால் அவர்கள் சுறுசுறுப்பாக இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

மத்திய அரசு இதைப்போன்ற நிலைமை அங்கே ராணுவத்தில் ஏற்படுத்தி இருக்கிறது. அப்படிப்பட்ட கான்ட்ராக்ட்முறையை இங்கே போலீஸ் இலாகாவில் புகுத்தி 20, 25 ஆண்டுகளுக்கு அவர்கள் பணியாற்றக்கூடிய ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 1978-79 ஆம் ஆண்டு ஆய்வுரைப் பக்கம் 472-473-ல் கூறியிருப்பதைப்போல தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் கூறப்பட்டவை. ஆனால் என்ன நடந்திருக்கிறது?

Report of the Comptroller and Auditor General of India 1977-78 பக்கம் 25-ல் பார்த்தால், மத்திய அரசால் கொடுக்கப்பட்ட பணம்

Modernisation of police with the assistance of Government of India—unutilised funds

என்ற தலைப்பில் மத்திய சர்க்கார் 29.74 லட்சம் ரூபாய் காவல் துறையை நவீனப்படுத்துகின்ற முறையிலே மத்திய சர்க்கார் 29.74 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கொலைக் குற்றம் செய்பவர்கள், கலப்படக் குற்றம் செய்பவர்கள் போன்றவர்களை எல்லாம் பிடிப்பதற்காக இந்த துறையை நவீனப் படுத்த வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட இந்த பணத்தை 27.36 லட்சம் ரூபாயை மத்திய அரசாங்கத்துக்கு திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு சதவிகிதம் கூட மத்திய அரசால்





கொடுக்கப்பட்ட பணத்தை செலவழிக்க வில்லை. இதற்கு என்ன காரணம். ஏன் அந்தப் பணத்தை திருப்பிக் கொடுத்தீர்கள் அந்தப் பணத்தை செலவழித்து இந்தத் துறையை நவீனப்படுத்தி இருந்தால் பலபேர்களுடைய உடமைகள் பறிபோயிருக்காது, பல குற்றவாளிகள் பிடிப்பட்டிருப்பார்கள். ஏன் இதைச் செய்ய வில்லை. முதல்வர் அவர்களுக்கு அச்ச உணர்வு வந்ததன் காரணம்? ஏன் அந்த அச்ச உணர்வு வந்தது என்பதை விளக்குவாரா!

அதேபோன்று, காவல் துறையில் நவீன மயமாக்கும் திட்டம் போலீஸ் துறையில் மாற்றம், மத்திய அரசின் மானியங்களை உபயோகப்படுத்துவது போன்ற நல்ல ஆலோசனைகளை சொல்வதற்கு ஹோம் டிப்பார்ட்மெண்டில் அதனுடைய செயலாளராக ஒரு ஐ.பி.எஸ். அதிகாரியைப் போட முதல்வர் முன்வருவாரா என்று கேட்க விரும்புகிறேன். போக்குவரத்துக் கழகங்களுக்கும், சுற்றுலா வாரியங்களுக்கும் ஐ.பி.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். இந்த துறைக்கு ஐ.பி.எஸ். அதிகாரியை முதலமைச்சர் போடுவாரா! என்பதை தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூறி முடித்துக் கொள்கிறேன். தொழிலாளர்கள் மீதான வழக்குகள்—கொலை முயற்சி வழக்குகள் தவிர மற்ற வழக்குகள் எல்லாம் 29-3-1979-ல் வாபஸ் வாங்கப்பட்டு விட்டதாக G.O. 614-ல் சொல்லியிருக்கிறீர்கள். அதே நேரத்தில் 10—3—1979 அன்று மதுரையில் நடந்த அண்ணன் சிவாஜி அவர்கள் 200-வது படவிழாவில் நடந்த ஊர்வல வழக்கு ஏன் இன்னும் வாபஸ் பெறப்படவில்லை. ஏன் மேலும் என்னைச் சேர்த்து 1,001 பேர்கள் மீதும் போடப்பட்ட அந்த வழக்கு ஏன் இன்னும் வாபஸ் பெறப்படவில்லை. அரசியல் கட்சியைச் சார்ந்தது அல்ல என்ற காரணத்தைச் சொல்லி வழக்கு நடக்கிறது. விவசாய சங்கம் கட்சி சார்பற்றது, காவல் துறையைச் சார்ந்தவர்கள் மீது உள்ள வழக்கு கட்சிச் சார்பற்றது. ஆனால் அண்ணன் சிவாஜி பட விழாவில் நடந்த ஊர்வல வழக்கு இன்னும் வாபஸ் பெறப்படவில்லை. என்ன காரணம் என்பதை தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

நியு ஆவடி டாக்சி டிரைவர் ஆறுமுகங்கள் பயமின்றி டாக்சி ஓட்ட காவல்துறை பாதுகாப்புத் தருமா! இந்திரா நகர் பிரேமாக்களின் உயிர்களுக்கு காவல் துறை உத்தரவாதம் தருமா, சுந்தரங்களும் ஈஸ்வரன்களும் சுக வாழ்வு வாழ காவல் துறையின் கண்பார்வை போகப்போகிறதா! லாக் அவுட்டிற்கு ஆதரவாக காவல் துறையின் லத்திக் கம்புகள் உயரப்போகின்றனவா! லாக்கப்பில் இறக்கும் சம்பவங்கள் தொடர்கதையாகப் போகின்றனவா! தொழில் தகராறுகளிலும், விவசாயப் பிரச்சினைகளிலும் போலீசின் கொள்கை என்ன என்பதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுவாரா என்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கும் காவல்துறை, தீயணைப்புத்துறை, பொதுப்பணித்துறை, மாவட்ட நிர்வாகம் போன்ற மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற நல் வாய்ப்புக் கிடைத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும், எடுத்துவைத்த குற்றச்சாட்டுகளைப் பார்க்கின்ற நேரத்தில் அந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் நிகழாமல் இருந்து இருந்தால் இங்கே ஒதுக்கப்படுகின்ற ரூ. 43,81,67,000 தேவை இருக்காது என்று கூறிக் கொள்ள வேண்டிய அவசியத்திற்கு ஆட்படுத்தப்பட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்தில் குற்றங்கள் நிகழ்வது இன்றைக்குச் சர்வ சாதாரணமாக இருந்து வருகிறது. இந்தக் குற்றங்களைக் கண்டுப்பிடிப்பதற்கு போலீஸ் எந்த அளவிற்கு செயலாற்றி வருகிறது, அந்தக் குற்றங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்வதற்கு எந்த முறையில் போலீஸ் துறை செயலாற்றி வருகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். அதை விட்டு விட்டு சமுதாயத்தில் இருக்கும் சமூக விரோத சக்திகளால் ஏற்படும் காரியங்களை இங்கே பெரிதுபடுத்திக் காட்டுகிற காரணத்தாலே அதை அவர்களைச் சார்ந்த பத்திரிகைகள் பெரிதுபடுத்துவதாலே, நாட்டு மக்கள் மத்தியிலே ஒரு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் அந்தச் செய்தி பரப்பப்படுவதாலே, இந்த அரசுக்குக் களங்கம் வந்து விடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பத்திரிகைகளைப் பார்த்தால், அந்த சிறுவனைக் காணவில்லை, இங்கே கொலை, அங்கே கொள்ளை என்று போடுகிறார்கள். அந்தப் பத்திரிகைகள் என்ன பத்திரிகைகள் என்று பார்த்தால், யாரைச் சேர்ந்த பத்திரிகைகள் என்று பார்த்தால், யாரை ஆதரிக்கின்ற பத்திரிகைகள் என்று பார்த்தால், அப்போது நமக்கு தெளிவாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட பத்திரிகைகள் மூலம் இந்த அரசுக்குக் களங்கம், அல்லது மாசு கற்பிக்க முடியாது அந்தப் பத்திரிகைகளை பத்திரிகைகள் என்று கூறிக்கொள்வதற்கும் இல்லை என்பதை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே அவை முன் வைக்கப்பட்டுள்ள காவல்துறை கொள்கைக் குறிப்பு புத்தகத்திலேயே குற்ற நிகழ்வுகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதைப் பார்த்தாலே குற்றங்கள் எந்த அளவிற்கு இந்த நாட்டிலே நடைமுறையிலே இருக்கின்றன என்பது தெரியவரும். 1978-ல் ஆதாயத்திற்காக செய்யப்பட்ட கொலைகள் 40, 1979-ல் 28, 1980 (31-3-80) வரையில் 10. அதைப்போலவே, 1978-ல் கொள்ளை-21, 1979-ல் 36, 1980 (31-3-80 வரை) 9, வழிப்பறி—1978-ல் 192, 1979-ல்



254, 1980 (31-3-1980 வரை) 62. கன்னக்களவு 1978ல் 10,499, 1979-ல் 9,637, 1980 (31-3-1980) வரை மூன்று மாதத்தில் 2,229. பெரிய திருட்டுகள் 1978-ல் 26,915, 1979-ல் 25,406 1980 (31-3-1980) 3 மாதத்தில் 5,948. இப்படிப்பட்ட புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது, பல்வேறு குற்றங்களைப்பற்றிய புள்ளிவிவரங்களை நாம் பார்க்கிறபோது, அவைகளில் இருந்து நாம் தெளிவாக அறிந்து கொள்ளமுடியும்—குற்றங்கள் அதிகரிக்கவில்லை. குற்றங்கள் குறைந்து இருக்கின்றன என்பதை, புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றங்களைப் பற்றிக் கூறுகிறபோது, 3 ஆண்டுகளில் நடந்த குற்றங்களை ஒன்றாகத் திரட்டி, அந்தக் குழந்தைகளின் பெயர்களை எல்லாம் படித்துக் காட்டினார்கள். இப்படிப்பட்ட வீணான காரியத்தை எடுத்துச்சொல் வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் அந்த காவல்துறை ஹோம் செக்ரட்டரிக்கு ஏன். ஐ.பி.எஸ். அதிகாரியைப் போடக்கூடாது நியமிக்கக்கூடாது என்று குறிப்பிட்டார்கள். அதைக் கூறுகிறபோது, நான் தெரிவித்துக்கொள்கிறேன். டூரிசம் டிப்பார்ட்மென்ட்டிற்கு எந்த ஆட்சி காலத்தில் ஐ.பி.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டார் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்றைய தினம் சமுதாயத்தில் பல்வேறு குற்றங்கள் செய்கின்ற தீய சக்திகள் இருக்கின்றன. அந்தச் சக்திகளை எல்லாம் கண்காணிக்க வேண்டும், அந்தச் சக்திகள் எல்லாம் குற்றங்கள் புரிவதிலிருந்து தடுக்கவேண்டும் என்றால் நாம் அத்தனைபேரும் இந்நாட்டுக் குடிமக்கள் என்ற உணர்வோடு நம்முடைய கடமையை எண்ணி அந்தப் பணியில் நாம் முனைப்போடு செயல்பட வேண்டும் காவல் துறையை மட்டும் நம்பி இருக்கக்கூடாது. காவல் துறை என்பது குற்றங்கள் நடக்காமல் பார்க்கவேண்டுமானால் இன்னும் காவல் துறைக்குப் பலகோடி ரூபாய் செலவழிக்கவேண்டிய அவசியத்திற்கு இந்த மாநிலம் தள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்தில்இருக்கின்ற ஒவ்வொருவரும் குற்றங்கள் நிகழாத அளவிற்கு நம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளவும், நாம் சார்ந்து இருக்கின்ற சமுதாயம் எந்த அளவிற்கு பக்குவப்படுத்தப்படுகின்ற முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய முயற்சியில் நாம் இறங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே நேரத்தில், இன்றைய தினம் குற்றங்கள் அதிகரிப்பதற்குக் காரணம் நம்முடைய நாட்டில் இருக்கிற இந்தியன் பினல் கோடு சட்டம்தான். ஒருவர் கொலை செய்தார் என்று வைத்துக் கொள்ளுவோம். அவர்தான் கொலை செய்தார் என்று எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும சட்டத்தின் பிடியிலிருந்து அவர் தப்பித்துக்கொள்கின்ற சூழ்நிலை இருக்கிறது. காரணம் ' ஐ விட்னஸ் ' இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். சமுதாயத்தில் அவர்தான் கொலை

[திரு. ஆ வெள்ளைசாமி] [1980 ஜூலை 25

[முற்பகல் 9.50]

செய்தார் என்று தெரிந்திருந்தாலும் சட்டப்படி நிரூபிக்க முடி
யாததால் தப்பித்துவிடுகிறார். ஆகவே, இந்தியன் பினல்
கோடு சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போலவேதான் திருட்டுக் குற்றமும் இருக்கிறது.
ஒருவன் திருடினான் என்று தெரிந்தால் அவனுக்கு 3 மாதம்,
6 மாதம் தண்டனை கொடுக்கிறார்கள். சிறையிலிருந்து
வெளியே வந்தவுடன் அவன் மீண்டும் திருடுகிறான். இதற்கு
இந்த இந்தியன் பினல் கோடுதான் காரணம். ஆகவே அதை
மாற்றியமைக்க வேண்டும். குற்றவாளிகள் கடுமையாகத்
தண்டிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குற்றங்களைப் பற்றி சொல்லும்போது மதுவிலக்குப்
பிரச்சனை வருகிறது. தமிழ்நாட்டில் இது ஒரு பெரிய பிரச்சனை
யாக இருக்கிறது. இந்த மதுவிலக்குக் குற்றங்களில் காவல்
துறையினர் எந்த அளவுக்கு கடுமையாக இருக்கிறார்கள் என்று
பார்க்கும்போது சில சமயங்களில் மது அருந்தாதவர்கள் கூட
தண்டிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. குற்றஞ்
செய்யாதவர்களையும் சந்தேகத்தின்பேரில் கைது செய்து,
வழக்குப் போட்டுவிடுகிறார்கள். ஏன் இப்படி வழக்குப் போடு
கிறீர்கள் என்று கேட்டால் மேலதிகாரிகள் மாதத்திற்கு இவ்வளவு
வழக்குகள் பதிவு செய்ய வேண்டுமென்று கோட்டா நிர்ணயித்து
விடுகிறார்கள்; அதை நிறைவேற்றுவதற்கு நாங்கள் இப்படிச்
செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். இதனால்
கிராமப் புறங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள் பாதிக்கப்
படுகிறார்கள். ஆகவே, இந்த முறையை மாற்ற வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்குச் சட்டத்தை எந்த அளவுக்கு நாம் கடுமை
யாக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்த அளவுக்கு
அந்த சட்டத்தை மீற வேண்டுமென்று மது அருந்துபவர்கள்
கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகிறார்கள். ஆகவே,
காவல் துறையினர் மட்டும் இந்தக் குற்றங்களைத் தடுத்துவிட
முடியாது. அவர்களால் மட்டும் இந்தச் சட்டத்தை தீவிர
மாகச் செயல்படுத்த முடியாது. பொதுமக்களும் இதில் ஒத்
துழைக்க வேண்டும். அதற்கு கிராமத்திற்கு ஒரு கமிட்டி
அமைக்க வேண்டும். கிராம கமிட்டி அமைத்து, அந்தக்
கமிட்டியின் மூலம் கிராமத்தில் இருக்கிற ஒவ்வொருவரும்
மதுவிலக்குச் சட்டத்தை செயல்படுத்துவதில் தீவிரமாக கடமை
யாற்ற வேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான
சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்று நம்முடைய
அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிச் செய்யாமல் நாம் காவல் துறையினரை மட்டும்
இதற்கு நம்பிக்கொண்டிருக்க முடியாது. காவல் துறையினரை
மட்டும் நம்பினால் குற்றங்களை குறைக்க முடியாது என்ப
தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 ஜூலை 25] [திரு. ஆ. வெள்ளைச்சாமி]

இன்றையதினம் இந்த அவையின் முன்னால் பல்வேறு
மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்
கின்றன. இந்தக் கோரிக்கைகளில் காவல் துறைக்கு அடுத்த
படியாக இருப்பது தீ அணைப்புத் துறை. தீ அணைப்புத்
துறையில் பணியாற்றுகின்றவர்களுக்கு பல்வேறு குறைகள்
இருக்கின்றன. முக்கியமாக அவர்கள் இரண்டு 'ஷிப்ட்'
ஆக வேலை செய்கிறார்கள். வேலைப் பளுவைக் குறைக்க
வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பஸ்ஸில்
செல்ல இலவச பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டிக்கிறார்
கள். அவைகளை எல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதே நேரத்தில், மதுவிலக்கைச் செயல்படுத்தும் காவல்
துறையினரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது.
இதை அதிகப்படுத்த வேண்டும். மாண்புமிகு முதலமைச்
சரவர்கள் 10,000 காவலர்களை புதிதாக நியமிக்க இருப்ப
தாகக் கூறியிருக்கிறார்கள். அவர்களை விரைவிலே நியமிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கிராமப் புறத்தில் இருக்கிற காவல் நிலை
யத்தில் காவலர் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. அந்தப்
பக்கத்தில் ஒருவர் ஏதாவது குற்றம் செய்தால் தனியாக ஒருவர்
போகவேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, அவருக்குப் போய்
வருவதற்கு வாகன வசதியும் கிடையாது. வாகன வசதிகளை
அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால் அவர்கள் தவறு
செய்வதற்கு நாமே வழிவகுத்து கொடுப்பது போன்று அமைந்து
விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்போது ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற வாகனங்கள்
செம்மையாக பணியாற்றுவதாகத் தெரியவில்லை. அந்த
வாகனங்களை எல்லாம் கிராமப் புறத்தில் இருக்கிற காவல்
நிலையங்களுக்கு மாற்றிக் கொடுக்கலாம் என்ற ஆலோசனை
யைத் தெரிவித்து, பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரி
வித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி
வணக்கம்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவரவர்களே, இங்கேஎனக்
குப் பக்கத்திலே ஒரு பெட்டி மூடப்பட்டு வைக்கப்பெற்று இருக்
கிறது. ஏதோ 'டைம் பாம்' வைத்த மாதிரி தெரிகிறது. எனக்கு
அச்சமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைக் கொடுத்து
அனுப்புங்கள்; என்ன பெட்டி என்று பார்க்கலாம்.

**திரு. ரா. உமாநாத் :** அன்புள்ள பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக அரசு கலைக்கப்பட்ட பிறகு கவர்னர் ஆட்சியில் தமிழக போலீஸ் நிர்வாக இயந்திரம் அக்கு வேறு ஆணி வேறாக கழன்று நின்றது நமக்குத் தெரியும். அதன் விளைவாக சமூக விரோதக் குற்றங்கள் 3, 4 மாதங்களிலே எப்படி நடந்து கொண்டிருந்தது என்பதையும், நாம் தொடர்ச்சியாக நாம் பார்க்கிறோம்.

அதாவது வேலியே பயிரை மேயக்கூடிய நிலைதான் அந்த இடைக்காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஏப்ரல் மாதத்தில் கோவை பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்த பாலிடெக்னிக் மாணவியின் கழுத்திலிருந்த செயினை ஒருவன் பறித்துக்கொண்டு ஓடினான். அவனை விரட்டிப் பிடித்தபோது யார் என்று பார்த்தால் கவர்னர் ஆட்சியின்கீழ் பணியாற்றிக்கொண்டிருந்த ஸ்பெஷல் ப்ரான்ச் போலீஸ் கான்ஸ்டபிள்தான் அந்த ஆள். இவ்வாறு வேலியே பயிரை மேயக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அடுத்து அதே மாதத்தில் இரயில்வே பெண்கள் கம்பார்ட்மெண்டில் பெண்களுக்கு பாதுகாப்புக்காக என்று இருந்த மோகன் என்ற கிரேட் ஒன் போலீஸ் கான்ஸ்டபிள் இரயில் ஓடிக்கொண்டிருந்தபோது தூங்கிக்கொண்டிருந்த ஒரு பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியைப் பறித்தார். அவ்வாறு பாதுகாப்புக்காக வருகின்ற கிரேட் ஒன் போலீஸ் கான்ஸ்டபிள் அவ்வாறு திருடக்கூடிய நிலை இருக்கின்றது.

இந்த மாதிரி நிலைகள் மட்டுமல்லாமல் போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய அரசியல் வஞ்சத்தைத் தீர்க்கக்கூடிய முறையிலேயும் சிலர் இறங்கி இருக்கிறார்கள். இதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. குறிப்பாக உத்தமபாளையம் டி.எஸ்.பி. சர்கிள் இன்ஸ்பெக்டர், கம்பம் எஸ்.ஐ. ஆகியோரும் இன்னும் ஐந்தாறு பேர்களும் சேர்ந்துகொண்டு 21-5-1980 அன்று கம்பம் தொகுதியிலே நின்ற வேட்பாளரின் வீட்டுக்குள்ளே பகிரங்கமாகப் புகுந்து அங்கே இருப்பவர்களை அடித்து எதிரிகள் முகாமை மிலிட்டரி சுற்றி வளைப்பதுபோல் வளைத்துக்கொண்டு அடித்து நொறுக்கி இருக்கிறார்கள். அப்போது உள்ளே இருந்த எங்களுடைய தோழர் ராஜு என்பவருக்கு அடி விழுந்து அவரது மண்டை உடைக்கப்பட்டு ரத்தம் சிந்துகின்ற நிலையிலே அவரை ஆஸ்பத்திரிக்குக் கூட கொண்டு செல்லாத வகையிலே தடுத்து இருக்கின்றது! அந்த போலீஸ் கோஷ்டி. இந்த சம்பவத்தை எதிர்த்து தாசில்தார் அலுவலகத்தின் முன்பு உண்ணாவிரதம் கூட நடந்தது. அப்போது தாசில்தார் நடவடிக்கை எடுப்பதாக ப்ராமிஸ் பண்ணினார். ஆனால் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே நான் அரசாங்கத்திடம் இது குறித்து கட்டாயமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசியல் கருத்து கொண்டிருக்கலாம். அதைப்பற்றி எனக்கு ஆட்சேபனை கிடையாது. ஏனென்றால் (They are also citizens of this country.)



ஆகவே அவர்களும் அரசியல் கருத்துக்கள் கொள்ளலாம். ஆனால் டியூட்டியிலே அதைக் காட்டக்கூடாது. அந்த சம்பவம் நிச்சயமாக அரசியல் வஞ்சம் தீர்க்கின்ற வகையிலே நடந்திருக்கின்றது. ஆகவே இது குறித்து கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். (I am very very Particular about it.) இப்படிப்பட்ட நிலையில் கலகலத்துப்போன ஒரு போலீஸ் நிர்வாகத்தை இந்த அரசாங்கம் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதிலே பல கஷ்டங்கள் உண்டு என்பது எங்களுக்கு தெரியும். நாங்களும் அதை உணர்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட குற்றங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றது. வரதட்சிணை குறைவுகளும், கணவன் கொடுமை காரணமாக பெண்கள் கொலை செய்யப்படுவதும் போன்ற சம்பவங்கள் வடக்கே இருந்து தெற்கே வெகு விரைவாக பரவிக்கொண்டிருக்கின்றன. இந்த விஷயத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 25-ம் தேதி நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். அன்றைய தினம் எல்.ஐ.சி. டெவலப்மெண்ட் ஆபீஸர் ரெங்கராஜன் என்பவருடைய சகோதரி அவர்களுடைய மரணம் பற்றி மறு விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருமணமான 50 நாட்களுக்குள் ஸ்டவ் வெடித்து தீப்பற்றி எரிந்து அவள் எரிந்துவிட்டாள். இறப்பதற்கு முந்திய நாள் அவள் தன் பெற்றோர்களைச் சந்தித்திருக்கிறாள். அப்போது கணவன் அவளை அடித்துத் துன்புறுத்தியதால் ஏற்பட்ட காயங்களைக் காட்டி இருக்கிறாள். மூக்கிலே காயம். உதட்டிலே காயம். இதையெல்லாம் முந்தைய நாள் பெற்றோர்களிடத்திலே காட்டிய அந்தப் பெண் மறுநாள் ஸ்டவ் வெடித்து தீப்பிடித்து இறந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். அந்த இடத்திற்கு முதலிலே சென்றது ஃபையர் சர்வீஸ்தான். அப்போது ஃபையர் சர்வீஸ் அலுவலர்களுக்கு அந்த ஸ்டவ் கண்ணிலே படவில்லை. அங்கே தீயை அணைத்தவர் கண்ணிலே படவில்லை, தீப்பெட்டி கண்ணிலே படவில்லை. ஆனால் அதற்குப் பிறகு போன போலீஸாரின் கண்களிலே மட்டும் அந்த ஸ்டவ் பட்டதாம். மேலும் அவள் இறந்த இடத்திலே துணியிலே இரத்தக் கறை இருந்திருக்கின்றது. அதைக்காட்டி கேட்டதற்கு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அது மாதவிடாய் அடையாளம் என்று சொன்னார்கள். ஆனால் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டிலே மாதவிடாய் அல்ல என்பது நிரூபணம் ஆகிவிட்டது. இந்தச் சம்பவம் காலை 8 மணிக்கு நடந்திருக்கின்றது. பெற்றோர்கள் சென்னையிலேதான் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அந்தச் செய்தியை உடனடியாக அவளது கணவனோ அல்லது அவரைச் சேர்ந்தவர்களோ அறிவிக்கவில்லை. பிறகு 4½ மணிக்கு ஓடிவருகின்றபோதுதான் செய்தி தெரிந்தது. அப்போது போஸ்ட்மார்ட்டம் செய்வதை எப்படியாவது தடுத்துவிடலாமா என்ற முயற்சியில் கணவன் சைடிலே இருப்பவர்கள் இறங்கியிருக்கிறார்கள். ஆனால் அதற்குப்பிறகு இவர்கள் வற்புறுத்தியதற்குப் பிறகு போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்டது.

(முற்பகல் 10.00).

எப்.ஐ. ஆரிலும் அந்த ரத்தக் கறை படிந்திருக்கக் கூடிய துணி சாட்சியாக சேர்க்கப் பெறவில்லை. ஆகவே முதலமைச்சர் அவர்களிடம் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், அது தற்கொலை அல்ல, இயற்கையான சாவும் அல்ல. கொலை என்ற அடிப்படையில் தான் நான் இங்கே சில விவரங்களைத் தந்திருக் கிறேன். இன்னும் அது மாதிரி நிறைய விவரங்கள் இருக் கின்றன. ஆகவே அவைகள் பற்றி ஆராய வேண்டும். அதனால் முதல்வர் அவர்கள்மறு விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மாதிரி தான் கல்யாணி என்கிற இன்னொரு பெண். 27 வயது. ஐ. ஓ. பி-யில் ஆசிரயாக இருந்த பெண். அவளுடைய கணவன் சிம்சன் குரூப்பில் பணி செய்கிறவர். கல்யாணம் ஆகி மூன்று வருடம் ஆகிறது. ஒரு குழந்தை இருக் கிறது. ஆனால் இந்த மூன்று ஆண்டுகளும் அடியும் உதையும் சித்திரவதை அனுபவிப்பதும்தான் அவளுடைய வாழ்க்கை யாகவே இருந்திருக்கிறது. அவள் சென்ற டிசம்பர் 31 ஆம் தேதி ஸ்டவ்வில் தீ பிடித்து இறந்தார். எல்லோருக்கும் இந்த ஸ்டவ் தான் கிடைத்ததா? ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பெற்று 3 ஆம் தேதியன்று இறந்துவிட்டாள் இது போலீ சாரின் கூற்று

ஆனால் உண்மையில் என்ன நடந்தது என்றால், அந்தப் பெண்ணின் பெற்றோர்களும் அதே தெருவில்தான் இருக்கிறார் கள். அந்தப் பெண்ணின் சகோதரி-தங்கை அவளும் எதிர் வீட்டில்தான் இருக்கிறாள். அந்தப் பெண்ணின் வீட்டில் ஏதோ புகை வருகின்றது என்று பக்கத்தில் இருக்கிறவர்கள் சொன்னதின் பேரில், அவளுடைய தங்கை ஓடோடிச் சென்று பார்த்தபோது கதவு பூட்டியிருந்தது. அதை தட்டி திறந்து போய் உள்ளே பார்க்கும்போது, உடல் எல்லாம் எரிந்த நிலையில் ஜாக்கெட் மட்டும் அணிந்துக் கொண்டிருந்த பெண் ஊர்ந்துக் கொண்டே கதவருகில் வந்து கொண்டிருந் தாளாம். அந்த நேரத்தில் அவள் கணவன் கையில் குழந்தையை வைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான் என்று சொல்கிறார்கள்.

எந்தக் கணவனாவது இந்த அக்கிரமத்தைப் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருப்பானா? அப்படி கையில் குழந் தையை வைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டே நின்று கொண் டிருந்த நிலையை அந்த தங்கை பார்த்திருக்கிறாள். அந்தப் பெண்ணை பிறகு ஆஸ்பத்திரியில் சேர்த்தபிறகு அவள் டாக்டரைப் பார்த்து 'என்னை எப்படியாவது பிழைக்க வைக்க வேண்டும் என்று கேட்கிறாள். தற்கொலை செய்து





கொண்ட ஒரு பெண் என்னை எப்படியாவது பிழைக்க வைக்க வேண்டும் என்று விரும்பிக் கேட்பாளா? ஆனால் துரதிருஷ்ட வசமாக 3 நாட்களில் அவள் இறந்து விடுகிறாள்.

அவள் இறப்பதற்கு முன் அங்கே உயிலை டிக்டேட் செய்கிறாள் என்னவென்று தன்னுடைய குழந்தையையும், பிராவிடண்ட் பண்ட், ஜி. பி. எப் எல்லாவற்றையும் யாரிடம் ஒப்படைக்கிறாள் கணவனிடம் அல்ல. தன்னுடைய சகோ தரனிடம் ஒப்படைக்கச் சொல்லி உயிலை டிக்டேட் செய்கிறாள். ஆனால் அந்தக் கணவன் என்ன செய்தார்; அவள் இறந்தவுடன் வீட்டிலே இருக்கிற எல்லாப் பொருளையும் எடுத்துக் கொண்டு, ஒரு கரண்டியைக் கூட விட்டு வைக்காமல் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அவன் போய்விட்டான் ஆகவே, அந்தப் பெண் கல்யாணியின் சார்பாக கேட்கிறேன். உங்களை பணிவோடு வேண்டிக் கொள்கிறேன் இவற்றிற்கான மறு விசாரணையை செய்ய முதல்வர் அவர்கள் உத்தரவு இட வேண்டும்.

இதுபோன்று எத்தனையோ பெண்கள் கணவனின் சித்திர வதைக்கு ஆளாகி கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமக்கு தெரியாது. இதுபோல் எத்தனையோ பெண்கள் உயிரிழந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமக்குத் தெரியாது. ஆகையினால் தான் மாதர் சங்கத்தைச் சேர்ந்த பெண்கள் பத்து நாட்களுக்கு முன்பு முதல்வர் அவர்களைச் சந்தித்து தங்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதில் முக்கியமாக மூன்று கோரிக்கைகள். என்னவென்றால்:

1. திருமணமான இரண்டு ஆண்டுகளுக்குள் ஒரு பெண் இறந்தால் அவளுக்காக கொடுக்கப்பட்ட வரதட்சிணை பணம் நகை, பாத்திரம், பண்டங்கள் எல்லாம்அவளுடைய பெற்றோர் களுக்கே போய் சேரவேண்டும். வேலை பார்க்கும் பெண்ணாக இருந்தால் அவளுடைய பி. எப். கிராச்சுவட்டி போன்றவை களும் பெற்றோர்களுக்கே போய்ச் சேர வேண்டும்.

2. இப்படி கொடுமைக்கு ஆளாக்கப்படும் பெண்களுக்கு வேலை வாய்ப்பினை அரசாங்கம் தேடித் தரவேண்டும்.

3. ஸ்வீடிஷ் முறையில் இருக்கிற மாதிரி 'ஆம்புட்ஸ் வுமன்'' என்று ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டும். அங்கே வெளிநாட்டில் ஆண் இருப்பார். ஆம்புட்ஸ் மேன் என்று சொல்வார்கள். அதை பெண்பாலாக்கி நான் ஆம்புட்ஸ் உமன் என்று சொல்லியிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு பெண் அதிகாரியை, புலன் விசாரணை செய்யக் கூடிய அதிகாரம் பெற்ற ஒரு பெண் அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

மிக நியாயமான வேண்டுகோள். ஏனென்றால் பெண்கள் கணவன் சித்திரவதை செய்தாலும் போலீஸ் ஸ்டேஷனில் சொல்வதற்கு தயங்குவார்கள், புலன் ஆய்வு செய்யக்கூடிய அதிகாரம் பெற்ற ஒரு பெண் ஆபீசராக இருந்தால், பாதிக்கப்பட்ட பெண் விரும்பினால், அவர்களிடம் சென்று சொல்வதற்கும் அதன்மேல் அந்தப் பெண் ஆபீசர் புலன் விசாரணை செய்து பிரைமா-பேசி கேசாக இருந்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கத்திற்கும் தெரிவித்து அதன் பிறகு நடவடிக்கை எடுப்பதற்கும் வசதியாக இருக்கும்.

இதற்குத்தான் 'ஆம்புட்ஸ்மான்' என்று போட்டிருக்கிறது. ஆம்புட்ஸ்மான்' என்பதற்கு [illegible] 'ஆம்புட்ஸ்வுமன்' என்று சொல்கிறேன். அவ்வளவுதான்.

அதேபோல், இரண்டொரு முக்கியமான விஷயங்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கம் தனது போலீஸ் கொள்கை பற்றி தெளிவாக விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொழில் தகராறுகளில் போலீஸின் கொள்கை அல்லது நிலை என்ன என்பது பற்றி பட்ஜெட் விவாதத்தின் போதே நான் கேட்டேன். இப்படி இருக்கவேண்டும் என்று எங்களுடைய யோசனையையும் கூறினேன். திரு. ஜோதிபாசு அவர்களின் குறிப்பையும் படித்துக் காட்டினேன். அதே போல் செய்யவேண்டும் அல்லது அதைவிட நல்ல முறையில் செய்தால் நிச்சயமாக நாங்கள் வரவேற்போம் என்று சொன்னேன். ஆனால் அதைப் பற்றிய பதில் இல்லை. சட்டப்படி 75 பங்கு கேட்கும்போது அந்த குத்தகைதாரர்களை வெளியேற்றாமல் தடுக்கவேண்டும் என்றும் சட்டப்படியான கூலி கேட்கும்போது அந்த விவசாயத் தொழிலாளர்களை ஒதுக்கி விட்டு குறைந்த கூலிக்கு வெளி ஆட்களை கொண்டு வருகிற போது அது தடுக்கப்பட வேண்டும் என்றும் அந்தந்த போலீசுக்கு சுற்றறிக்கை விட வேண்டும் என்றும் நாங்கள் பல முறை வேண்டுகோள் விட்டோம். ஆனால் அதற்கு எந்த விதமான பதிலும் இதுவரையில் கிடைக்கவில்லை. ஆகவே இம்முறையாவது தெளிவாக அந்த விஷயம் பற்றி பதில் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இந்த ஆய்வுரையைப் படித்த பிறகு அதைத் தெளிவுபடுத்தவேண்டியது இன்னும் அவசியம் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், கீழ் தஞ்சை ஆத்தூர் கிராமத்தில் சட்டப்படி கூலி கேட்டு போராடிய விவசாயத் தொழிலாளர்கள் மீது போலீஸ் போட்ட வழக்குகளை, அவர்கள் மீது போட்ட 107 ப்ரொஸீடிங்ஸ், நியாயப்படுத்தக்கூடிய முறையில் இந்த ஆய்வுக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



அதேபோல் கடந்த ஆண்டு நடந்த தொழில் தாவாக் களில் நடந்த போராட்டங்களில் தொழிலாளர்களுக்கு எதிராக போலீஸ் தலையிட்டுள்ளதை நியாயப்படுத்தக்கூடிய வகையில் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக்கூடிய இந்த ஆய்வுரையில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. 1979-ம் ஆண்டு சூலை மாதம் வெளியிடப்பட்ட வேலைநிறுத்த தடை அவசரச் சட்டத்தைப் பற்றி குறிப்பிடும்போது இங்கே குறிப்பிடுருக் கிறது. அது ஆங்கிலத்தில் இருப்பதை படிக்கிறேன்.

"The Tamil Nadu Essential Service Maintenance ordinance promulgated on 13th July 1979 being strike in Essential Services like Transport, etc. proved extremely effective in that it quelled all intent to strike in the minds of workers of essential Services like Transport, Electricity, water supply etc."

'நீக்கிவிட்டது' என்றிருக்கிறது. தமிழில் 'க்வெல்' என்றால் அடக்குவது, ஒடுக்குவது, என்றுதான் அர்த்தம். இதையெல்லாம் ஸீரியஸாக செய்துவிட்டோம் என்று அரசாங்கம் க்ளெயிம் செய்கிறது. ஆங்கிலத்தில் 'க்வல்ட்' என்றுதான் இருக்கிறது. எப்படி இது ரிப்போர்ட்டில் வந்தது என்று தெரியவில்லை. தொழிலாளர்கள் இயக்கங்கள் இவற்றில் போலீஸ் கொள்கை என்ன என்று தெளிவாக அறிவிக்கவேண்டும். திரு. இராகவானந்தம் அவர்கள் அவர் களுடைய மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வந்தபோது பல விஷயங்களைப்பற்றி விளக்கினார்கள். ஆனால் போலீசின் கொள்கை சம்பந்தமாக கடந்த கால அணுகுமுறை அப்படியே தொடரும் என்று எடுத்துக்கொள்வதா அல்லது ஜனநாயக ரீதியில் ஒரு புதிய அணுகுமுறை முடிவு செய்யப்பட்டுள்ளதா/ முதல் அமைச்சர் அவர்கள் அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆய்வுரையைப் படித்தபோது எனக்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது அ.இ.அ.தி.மு.க. அரசைக் கலைத் ததைக் கண்டித்து முதல் அமைச்சர் அவர்கள்—அப்போது அவர்கள் அந்தக் கட்சியின் தலைவர்—மார்ச் 2-ம் தேதி ஒரு ஊர்வலம் நடத்தினார்கள். அப்படி நடத்தப்பட்ட அந்தப் பேரணிமீது போலீஸ் கடுமையான லத்திசார்ஜ் செய்தது. தோழமைக் கட்சி ஊழியர்கள் மீது லத்திசார்ஜ் செய்யப்பட்டு தொண்டர்களின் மண்டைகள் உடைக்கப்பட்டது தெரியும். அவர்கள் ரத்தம் சிந்த வைத்தார்கள் போலீஸார். அன்று முதல் அமைச்சர் அவர்கள் போலீஸை வன்மையாக, நியாயமாக கண்டித்தார்கள். போலீசின் அட்டூழியத்தை இனி பொறுக்க முடியாது என்று நியாயமாக கரெக்டாகச் சொன்னார்கள் 15 நாள் கெடு கொடுத்தார்கள். அதுவும் சரி ஏற்றுக்கொள் கிறோம். ஆனால் இப்போது இந்த ஆய்வுரையில் உள்ள குறிப்பைப் பார்த்தால், அதில் போலீஸ் தாக்கப்பட்டதாகவும். சில சமூக விரோத சக்திகளிடமிருந்து தப்பிக்க தற்காப்புக்காக போலீஸ் சுட்டதாகவும் என்று அந்தச் சம்பவத்தை ஒட்டு

மொத்தமாக போலீஸுக்கு ஆதரவாக நியாயப்படுத்தப்பட்டிருக்
கிறது. அந்த அளவிற்குத்தான் இந்தக் குறிப்பில் இருக்கிறது.
காயம்பட்ட போலீஸாரின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.
ஆனால் நம் தொண்டர்கள், அண்ணா தி.மு.க. கட்சித்
தொண்டர்கள் உட்பட நம் கட்சித் தொண்டர்கள் பலரது
மண்டைகள் உடைக்கப்பட்டது பற்றி, அவர்கள் ரத்தம் சிந்தியது
பற்றி இதில் ஒரு வார்த்தை கூட குறிப்பிடப்படவில்லை.

ஒரு முக்கியமான விஷயம். எப்படி இந்த நோட்டில்
இப்படி வந்தது என்று தெரியவில்லை. முதல் அமைச்சர் அவர்கள்
ஸீரியஸாக தமது பதிலுரையில் விளக்குவார்கள் என்று கருது
கிறேன்.

(முற்கபல் 10-10)

அதேபோன்று. அரிசனங்களை ஒடுக்குவதிலே போலீஸ்
பெரும்பாலான கேஸ்களிலே அரிசனங்கள் பக்கத்திலே திருப்ப
தில்லை என்பதை தான் நாம் சாதாரணமாக, அன்றாடம் நடை
முறையிலே பார்க்கின்ற அனுபவம். லேட்டஸ்ட் உதாரணம்.
1960-லே அரிசனங்களுக்கு பட்டா போட்டு கொடுத்த நிலத்தை,
வாழவந்தான் கணக்குப் பிள்ளை கையகப்படுத்தி, அபகரித்து,
சுவாதீனப்படுத்தி விற்றுவிட்டார். மூன்று தினங்களுக்கு முன்பு
திருச்சி கலெக்டர் அவரை சஸ்பெண்ட் செய்தார். கணக்குப்
பிள்ளை விசாரணை இன்னும் முடியவில்லை. அதற்குள்ளாக,
இந்த நிலத்தை எப்படியாவது சுவாதீனப்படுத்திக் கொள்ள
வேண்டுமென்பதற்காக சிலர் அந்த நிலத்திலே இறங்கினார்கள்.
ஆனால், 60-லே பட்டா போட்டு வாங்கிய அந்த அரிசனங்கள்
அதைத் தடுக்கிறார்கள். போலீஸ் அரிசனங்களைக் காப்பதற்குப்
பதில், அந்த நிலத்திலே இறங்கியவர்களை விரட்டுவதற்குப்
பதில், அவர்களை விரட்டுகிறது. குறைந்தபட்சம், அந்த
கணக்குப் பிள்ளை சம்பந்தமாக விசாரணை முடிகின்ற வரையில்,
144 போட்டு, யாரும் நிலத்திலே இறங்கக் கூடாது என்று
சொன்னாலாவது போலீஸ் அந்த நிலத்தைப் பாதுகாத்ததாக
இருக்கும். ஆனால், திருவரம்பூர் போலீஸ் இன்றையதினம்
அதை விட்டுவிட்டு, அரிசனங்கள் மீதே கேஸ் போடுகிறது
என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு
கொண்டுவருகிறேன். அரிசனங்கள் விஷயத்தில் போலீஸ்
கடுமையாக நடந்து கொண்டிருக்கிறது; வழக்குகள் தொடரு
கின்ற நிலைமை இருக்கின்றது. இந்த நிலைமையை மாற்ற
வேண்டுமென்றால், போலீஸிலே இதற்கு ஒரு தனிக் கொள்கை
உருவாக்கவேண்டும். இந்த திருவரம்பூர் போலீஸ் நிலை
யத்திலே யார் இந்தத் தவறை செய்திருந்தாலும், அவர்கள்
உடனே சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும்.



போலீஸ் ரெக்ரூட்மெண்டிலே, ஆபிசர்களானாலும்,
கான்ஸ்டேபிள்களானாலும் அரிசனங்களையும், முஸ்லீம்
களையும் போன்ற மைனாரிடி வகுப்பினரை இப்போது இருக்கின்
றதைவிட இன்னும் கொஞ்சம் அதிகமாக ரெக்ரூட் பண்ண
வேண்டும். அரிசன போலீஸ் அரிசனங்களை காப்பாற்றி
விடுவார்கள் என்ற வகையிலே இதை நான் சொல்லவில்லை. ஒட்டு
மொத்தமாக இந்த மாதிரி இன்னும் கொஞ்சம் அதிகமாகவே
இவர்களை ரெக்ரூட் செய்தால், மாக்சிமம் போர்ஸ் என்ற
அளவிலே எங்காவது சம்பவங்கள் நடைபெற்று செல்லுகின்ற
போது, இதன் மூலம் கொஞ்சம் கன்ட்ரோல் பண்ணமுடியும்,
பாதுகாப்பு அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற முறையிலே
இதைச் சொல்லுகிறேனே தவிர. அரிசன போலீஸ் அரிசனங்
களைப் பாதுகாக்கும், முஸ்லீம் போலீஸ் முஸ்லீம்களைப் பாது
காக்கும் என்ற அடிப்படையிலே இதை நான் சொல்லவில்லை.

இதேபோல், அரிசன போலீஸ் பிரிவு என்று பிரிவு
இருக்கிறது. இவர்களுக்கு மோட்டார் சைக்கிள் கிடையாது.
திடீரென்று கிராமங்களிலே சம்பவங்கள் நடைபெறுகின்றன.
உடனே பாதுகாப்புக்கு ஓடவேண்டும். ஆனால், அவர்களுக்கு
எந்தவிதமான வெகிகிளும் கிடையாது. இந்தப் பிரிவைப்
பொறுத்தவரை இந்தத் துறையிலே ஒரு தனி பார்வைதான்
இருக்கிறது.

இதைப்போல், லாக்-அப்பிலே இப்போது மரணங்கள்
நடக்கிறது. கும்பகோணம் லாக்-அப்பிலே மண்ணெண்ணெய்
ஊற்றிக் கொண்டு இறந்ததைப்பற்றி முன்னவர் அவர்கள்
விளக்கியதை நம்ப முடியவில்லை. இவர் விளக்கியது நம்மிடையே
ஒரு பேட் இம்பிரஷனைத்தான் உண்டாக்கியிருக்கிறது. அதே
போல், கடலூரிலே 14 வயது சிறுவன் இறந்த சம்பவம். அவன்
இறந்ததைப் பற்றியும், விளக்கம் கொடுத்ததை நம்மால் நம்ப
முடியவில்லை. ஒத்துக்கொள்ள முடியாது. போலீஸ் பொறுப்பிலே
ஒரு மனித உயிர் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் இறந்து
விட்டால் அதற்கு ஒரு ஜோடனை சொல்வதை ஏற்றுக் கொள்ள
முடியாது. உயிரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவர்
களுக்கு இருக்கிறது. அப்படி அவர்கள் பொறுப்பில் இருக்கும்
போது, இறந்தால், அதை மர்டர் என்று சொல்ல வேண்டும்.
அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. காரணம்,
உண்மையை வரவழைக்கவேண்டும் என்பதற்காக தேர்ட் டிகிரி
மெதடை யூஸ் பண்ணும்போது, ஒன்றுக்கு பத்தாக அடிக்கும்
போது, அடி கொஞ்சம் அதிகமாகி தப்பாக அடிபட்டு செத்துப்
போகிறான். இந்த மாதிரிதான் அதிகமாக நடக்கிறது. இதைத்
தடுப்பதற்கு ஒரு வழியை ஏற்படுத்த வேண்டும். தடுக்க முடியும்,
அதற்கு வழி என்ன? போலீஸ் பொறுப்பிலே ஒருவன் உயிரோடு
ஒப்படைக்கப்பட்டால், அவன் உயிரை காக்கின்ற பொறுப்பு
போலீசுக்கு இருக்கிறது என்றுதான் அர்த்தம். அப்பேர்ப்
பட்டவன் செத்துப் போவான் என்றால், இதிலே வரக்கூடிய
பர்ஸ்ட் பிரசம்ஷன் என்னவென்றால், The first presumption

must be that it is a case of murder இதை தைரியமாக, பகிரங்கமாக நான்சொல்கிறேன். போலீஸ் கஸ்டடியிலே உயிரோடு ஒப்படைக்கும் போது, அவர்களை புரொடக்ட் பண்ண வேண்டியது அவர்கள் கடமை. இன்வெஸ்டிகேஷன் செய்யும் போது ஒருவர் செத்தால், பர்ஸ்ட் பிரசம்ஷன் கொலை செய்யப்பட்டது என்றுதான் அர்த்தம். பொதுவாக. அதற்குக் காரணமாக இருந்த அதிகாரியை கைது செய்யவேண்டாமா ? இந்த ஆட்டிடியூட்டிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒருக்கால் கேட்பார்கள். இன்வெஸ்டிகேஷன் இல்லாமல் இப்படி கைது செய்யலாமா என்று அப்படி நடப்பதில்லையா! முதலாளி போலீசிலே கம்பிளைண்ட் கொடுத்தால்............

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> ஏற்கனவே 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

<u>திரு. ரா. உமாநாத் :</u> இன்றைக்கு முதலாளிகள் கம்ப் ளெயின்ட் கொடுத்தால் தொழிலாளர்களை உடனே போலீசார் கைது செய்கிறார்கள், பிறகுதான் இன்வெஸ்டிகேஷன். நிலச் சுவான்தார்கள் கம்ப்ளெயின்ட் கொடுத்தால் நூற்றுக் கணக் கான விவசாயிகளைச் கைது செய்கிறார்கள். பிறகுதான் இன்வெஸ்டிகேட் பண்ணுகிறார்கள். இன்வெஸ்டிகேட் பண்ணாமலே 307 போடுகிறார்கள். உழைப்பாளர்கள் விஷயத்தில் இது நடக்கும். உயிரோடு ஒப்படைக்கப்பட்ட ஒருவர் போலீஸ் நிலையத்தில் இறந்து விடுகிறார் என்று சொன்னால் ஏன் பொறுப்பானவர்களைக் கைது செய்யக் கூடாது? இன்றைக்கு இன்வெஸ்டிகேட் செய்யுங்கள். அதிகாரிகளுக்குத் தெரிந்துதான் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்றால் அந்த அதிகாரிகள் உட்பட கைது செய்யப்பட வேண்டும். அதிலே எந்தத் தயக்கமும் காட்டக் கூடாது.

காவலர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இருக்கக்கூடிய மனிதனைப் பற்றிய கருத்து—'ஆட்டிடியூட்' கண்ணோட்டம் இந்த நிலைமைகளுக்கு ஒரு பிரதான காரணம். ஏழை என்றால் திருடக் கூடியவன், பணக்காரன் என்றால் எப்போதும் உண்மை பேசுபவன் என்ற பார்வையில் இருக்கிறார்கள். அவர்களைப் குற்றம் சொல்லிப் பயன் இல்லை. போலீஸ் ட்ரெயினிங்கில் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய பாடம் அது. ட்ரெயினிங் முறை அப்படி இருக்கிறது. முதல்வர் அவர்கள் கவனத்தை ட்ரெயினிங் ஸ்கூல் விஷயத்திற்கும் கொண்டு போக விரும்பு கிறேன். போலீஸ் ட்ரெயினிங் ஸ்கூலில் என்ன கற்றுக் கொடுக் கிறார்கள் ?

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்
வோம்'



என்ற பாரதியார் கருத்தை ட்ரெயினிங் ஸ்கூலில் கற்றுக் கொடுக் கிறார்களா? இல்லை. அதற்கு மாறாக—

'உழவுக்கும் தொழிலுக்கும் நிந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை வந்தனை
செய்வோம்'——

இதுதான் இன்றைய பாடம். இது இந்த அரசாங்க காலத்தில் ஏற்பட்டதல்ல. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்து தொடர்ந்து வருகிறது.

'This is the thought process'

இதுதான் ஐடியாலஜி. இப்படித்தான் மனிதனைப் பற்றி அவர் களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆகவே, போலீஸ் ட்ரெயினிங் ஸ்கூலில் ட்ரெயினிங் முறைகளை அறவே மாற்ற வேண்டுமென்று முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன.

லத்தியால் அடிக்கக் கற்றுக் கொடுக்கிறார்கள், துப்பாக்கி யால் "ஃபயர், செய்யக் கற்றுக் கொடுக்கிறார்கள். 'போ, போ' என்று சத்தம் போட்டு 'விரட்டும் அளவுக்குக் கற்றுக் கொடுக் கிறார்கள். அவர்கள் நிலப் பிரபுக்களை லத்தி சார்ஜ் பண்ணு கிறார்களா ? முதலாளிகளை லத்தி ஜார்ஜ் பண்ணு கிறார்களா? ஏழை நடுத்தர மக்களைத்தான் லத்தி சார்ஜ் செய்கிறார்கள். ஃபயர் செய்கிறார்கள். இன்றைக்கு போலீஸ் பயிற்சி நிலையத்திற்குள் மனிதன் நுழைந்தால்

'They make a brute out of a man'

அதற்குள் மனிதன் நுழைந்தால் வெளியில் வருகிற போது முரடனாக மாறி வெளியே வருகிறான். அந்த முறையை மாற்றவேண்டும்.

பெண்களைப் பொறுத்தவரை தகாத முறைகளில் விசாரணை நடத்தக் கூடாது. பகலில்தான் அவர்களை ஸ்டேஷ னுக்குக் கொண்டு செல்ல வேண்டும். கோர்ட்டுக்குக் கொண்டு போனாலும் ஜாமீனில் அவர்களை வெளியே விட வேண்டும். மாலை ஆறு மணிக்குமேல் பெண்களை லாக்கப்பில் வைக்கக் கூடாது. இதை மீறி நடந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சஸ்பென்ட் செய்ய வேண்டும். விசா ரணையில் அவர்கள் தவறு செய்தது ருசுவானால் அவர்களை டிஸ்மிஸ் செய்ய வேண்டும். இதிலே தயவு தாட்சண்யம் காட்டக் கூடாது. முதல்வர் அவர்கள் பெண்களை மாலை ஆறு மணிக்கு மேல் போலீஸ் ஸ்டேஷனில் வைக்கக் கூடாது என்று இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் கான்ஸ்டேபிள்களை இதை இம்ப்ளிமென்ட் பண்ண வேண்டுமென்று சொன்னால் இவ்வளவு கடுமையாக இருந்தால்தான் முடியும்.

போலீசுக்கும் சமூக விரோதிகளுக்கும் இடையே உள்ள
கொல்யூஷன்தான் பல குற்றங்கள் ப்ராப்பராக இன்வெஸ்டிகேட்
பண்ணாமல் விடப்படுவதற்கு பிரதான காரணம். போலீஸ்
நினைத்தால் சுலபமாக சமூக விரோதிகளை ரவுண்ட் அப்
பண்ணி விடலாம். யார் யார் ஆண்டி சோஷல் எலிமெண்ட்,
ரவுடிகள் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் என்பது
அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நம்மை விட அவர்களுக்கு
நன்றாகத் தெரியும். அவர்கள் நினைத்தால் செய்ய முடியும்.
ஆனால் சமூக விரோதிகள் போலீசின் மாத வருமானத்திற்கு
ஊற்றாக இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த
விஷயம்.

இந்த போலீஸ் சமூக விரோதிகள் கூட்டுறவை
முறியடிக்கவேண்டுமானால், போலீசின் உண்மையான சங்கத்தை
அங்கீகரிக்கவேண்டும். அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்
தினால் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியும்.
அப்போது அவர்களுக்கு மன அமைதி ஏற்படும். அந்த நிலையில்
முதல்வர் அவர்கள் சங்கத்தின் மகாசபைக் கூட்டத்தில் கலந்து
கொண்டு போலீஸ்காரர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்
கொண்டு அவர்களுக்கு அறிவுரை கூறினால் அவர்கள் சமூக
விரோதிகளைச் சுலபமாகப் பிடிக்க முடியும். சில மோசமான
எலிமெண்ட்ஸ் இருக்கிறார்கள். நடவடிக்கை எடுத்துத்தான்
ஆக வேண்டும். பொதுவாக, 'பாடி ஆப் போலீஸ்மென்'
சாதாரண, விவசாய, தொழிலாளர் குடும்பத்தில் இருந்து வரக்
கூடியவர்கள். காவலர் செர்விஸ் கண்டிஷனில் மாற்றங்கள்
செய்ய வேண்டும். ஆர்டர்லிஸ் முறை ஒழிப்பு ஆகஸ்ட் 15 ஆம்
தேதியில் அறிவித்திருக்கும் அறிவிப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்
கிறேன். எங்கள் கட்சி அதனை வரவேற்கிறது. வேலை
நீக்கம் செய்யப்பட்டவர்களை நிபந்தனையின்றி வேலைக்கு
எடுத்துக் கொள்ளவும், இப்போதுள்ள எல்லா துறை
நடவடிக்கைகளையும் ரத்து செய்யவும், வழக்குகளை வாபஸ்
செய்யவும் இந்த அரசு போட்ட உத்தரவை மகிழ்ச்சியுடன்
வரவேற்கிறேன்.

(முற்பகல் 10.20).

என்று அரசு போட்ட உத்திரவு மகிழ்ச்சிக்குரியது, அரசுக்குப்
பெருமையளிக்கக் கூடியது என்பதைச் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். அன்றைக்கு போலீஸ் ஸ்ட்ரைக் நடந்தபோது,
எந்தக் கட்சி இந்த அரசைக் கண்டித்ததோ அந்தக் கட்சியே
இந்த அரசை அது ஒரு பிளாங்கட் ஆர்டரைப் போட்டதற்காக
உண்மையிலே பாராட்டுகிறது. மேற்கு வங்கம், திரிபுரா
இவற்றைத் தவிர போலீஸ் நிர்வாகத்திலே இப்படி அன்கண்டிஷ
னலாக பிளாங்கட் ஆர்டரைப் போட்ட அரசு, இந்திய நாட்டி
லேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக



அரசுதான் என்று சொல்வதிலே எனக்குத் தயக்கமே இல்லை.
அந்த ஆர்டரை நானே படித்துப் பார்த்தேன். அது அன்கண்டிஷ
னலாகப் போடப்பட்டிருக்கிறது. எத்தனை பெரிய அதிகாரி
களின் இடைஞ்சல்களை முதலமைச்சர் தட்டி எறிந்து அந்த
உத்திரவைப் போட்டிருக்கிறார் என்பதை நாங்கள் உணர்
கிறோம். ஆனால், அந்த உத்திரவின் முழுப் பலனை அனாள்
அடைய முடியாமல் அதிகாரிகள் தில்லுமுல்லுகள் செய்கிறார்கள்
என்பதை நான் பொது விவாதத்தின்போதே சொன்னேன்,
நேரடியாக முதல் அமைச்சரிடம் சொல்லியுள்ளேன். நான்
சுட்டிக்காட்டியதை இன்னும் சரிப்படுத்தவில்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். பழி வாங்கப்படுகிறார்கள்,
பிடிக்காத அதிகாரிகள் பழிவாங்குகிறார்கள். என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் டெபுடி இன்ஸ்பெக்டர்
சுந்தரமூர்த்தி இரண்டு தடவை மாற்றப்பட்டார். இரண்டு
தடவையும் இவர் அதை ரத்து செய்து வாங்கி வருகிறார்.
அவர் பொம்மை சங்கத்தினுடைய தலைவர், அவருக்கு அந்த
வசதி. ஆனால் வாசுதேவன் என்ற இன்ஸ்பெக்டர், அவர்
அந்தச் சங்கத்திற்கு ஆதரவாக இல்லை, தனியாக இருக்
கிறார். அவர் ஒரு அப்பாவி, அவரை டிரான்ஸ்பர் செய்து
விட்டார்கள். இவர் இரண்டு தடவை டிரான்ஸ்பரை ரத்து
செய்து வாங்கி வருகிறார், இவரை டிரான்ஸ்பர் செய்து
விட்டார்கள். எந்தச் சங்கத்தைப் போய் கேட்பது? இப்படிப்
பட்ட நிலைமைகள் நீடித்தால் காவல் துறையில் இந்த அரசு
பெற்ற நல்ல எண்ணம் மறைந்து, பிறகு எப்போது இந்தத்
தொல்லைகளை நீக்கினாலும் கூட வெறுப்பு நீங்காது. அது
வேரூன்றும். அதனால்தான் சொல்கிறேன், உடனடியாக இந்த
விஷயத்திலே தலையிட வேணடும். மேலும் தேர்தல் நேரத்திலே
காவல் துறையினருடைய 8 அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக்
கொண்டு பொதுக் கூட்டத்திலே முதலமைச்சர் அறிவித்திருக்
கிறார், கையெழுத்துப் போட்டிருக்கிறார் என்பது எல்லோ
ருக்கும் தெரிந்தது. அவற்றில் இன்னும் சில முக்கியமான
வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டியதுண்டு. அந்த
வாக்குறுதிகள் : காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ள
சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுத்தல் ; போராட்டத்திலே
ஈடுபட்ட வேலைக்கு எடுத்துக் கொள்ளாத நாட்களை வேலை
நாட்களாகக் கருதி, அந்நாட்களுக்குரிய சம்பளத்தைக்
கொடுத்தல் ; போராட்ட காலத்தில் போராட்டத்தில் பங்கு
கொள்ளாத காவலர்களுக்கு அளிக்கப்பட்ட சம்பள உயர்வை
எல்லோருக்கும் அளித்தல் ; போராட்டத்தில் ஈடுபட்டு
வேலை நீக்கம் செய்யப்பட்டவரின் இறந்த காவலர் குடும்பத்
திற்கு 10 ஆயிரம் பென்ஷன் தொகையும் இதர சலுகைகளையும்
வழங்கல் : போராட்டத்தில் ஈடுபட்ட காவலர்களுக்குக்
கொடுத்து இருக்கும் முறைகேடான மாற்றல் உத்திரவுகளை

ரத்துசெய்தல்; காவல் துறையினரின் அடிமட்டக்கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு நிர்வாகத்திற்கும் அவ்வப்போது எடுத்துரைப்பதற்குக் காவல் துறையினருக்கும், ஆசிரியர்களைப் போல சட்டமன்றத்திலோ அல்லது மேலவையிலோ பிரதிநிதித்துவம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கைகளை முதலமைச்சர் அன்று ஏற்றுக்கொண்டதைக் குறிப்பாக சங்க அங்கீகாரம் என்பதை உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஏராளமான குறைகள் தேங்கி அக்யூமிலேட் ஆகிக் கொண்டே இருக்கின்றன. என்.ஜி.ஓ.க்களுக்கு உடனடியாக டி.ஏ. இன்கிரீஸ் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்குக் கொடுத்தால்தான் இவர்களுக்குக் கிடைக்கும். விலைவாசி ஏறி இருக்கிறது என்று அவை முன்னவரே நேற்றுச் சொல்லியிருக்கிறார்.

ஓர்க் லோட் போலீசுக்கு அதிகம். மினிஸ்டீரியல் ஸ்டாபினுடைய ஓர்க் லோட் பிரச்சினையும் தீர்க்கப்படாமல் இருக்கிறது. இதனால் அவர்கள் மத்தியிலே பதட்ட நிலைமை இருக்கிறது. 10 ஆண்டுகள் ஒரு இடத்தில் வேலை பார்த்த பிறகு டிரான்ஸ்பர் என்ற ஆர்டர் அவர்களுக்குப் பொருந்தாது என்ற அண்டர்ஸ்டாண்டிங்கை அவர்களுக்குக் கொடுத்தாலும் கூட டைரக்டர் ஜெனரல் ஆபிசிலே 10 வருடம் கம்ப்ளீட் பண்ணியவர்கள் யார் யார் என்று கணக்கு எடுக்கிறார்கள் என்ற தகவல் அந்த மினிஸ்டீரியல் ஸ்டாப் மத்தியிலே பதட்ட நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது. 8 மணி நேர வேலை. காவலர், தலைமைக் காவலருடைய வீடுகளிலே எலெக்ட்ரிக் சப்ளை சம்பந்தமாக சப் மீட்டர் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கையும் ஏற்கப்பட வேண்டும். பிரிட்டிஷார் காலத்திலே 20 யூனிட் வரை ப்ரீ என்று நிர்ணயிக்கப்பட்டது. இப்போது ரொம்ப காலம் ஆகிவிட்டது. 20 என்பதை 30 அல்லது 40 என்று ஏதாவது ஒரு முறையிலே உயர்த்த வேண்டும். சங்கத்தை அங்கீகாரம் செய்யாததால் போடுகிற உத்திரவுகளை அமல் படுத்த முடியாத நிலமை இருக்கிறது என்ற அனுபவத்தைச் சொல்கிறேன். 45 வயதுக்கு மேற்பட்டவர்களை பெரேடுக்கு அழைக்கக்கூடாது என்று ஹோம் டிபார்ட்மெண்ட் 455/53 டேட்டட் 21—1—1953 போட்ட உத்திரவு அமல்படுத்தப்பட வில்லை என்பதை இந்த அவையிலே நான் மூன்று தரம் டேட்டோடு, நம்பரோடு சொல்லியிருக்கிறேன். இன்னும் அமல் படுத்தப்படவில்லை. 10 ஆண்டுகள் பூர்த்தி செய்தால் ஒரு அட்வான்ஸ் இன்கிரிமென்ட் கொடுக்க வேண்டுமென்று உத்திரவு போட்டு 2 வருஷம் ஆகியும் இன்னும் அமல் நடத்தப் படாமல் இருக்கிறது. பிள்ளைகள் திருமணத்திற்குச் சொந்த பி.எப் இ. லிருந்து அட்வான்ஸ் கேட்கிறார்கள், ஆனால் அவர் களுடைய பிள்ளைகளுக்குத் திருமணமும் ஆகி அவர்கள் பிள்ளை கள் பெற்றும்கூட இன்னும் அந்த அட்வான்ஸ் கிடைக்கவில்லை என்கின்ற நிலைமையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.



அடுத்து பி.ஏ. எம்.ஏ. எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் கிரேட்
ஒன் கான்ஸ்டபிள்களாக இருக்கிறார்கள். எஸ்.ஐ. செலக்ஷன்
இன்றைக்கு பி.பு.சியிலிருந்து டைரக்ட் ரெக்ருமென்ட் அதனால்
அந்த பி.ஏ., எம்.ஏ., படித்த கான்ஸ்டபிள்கள் வயது பார்
ஆகிவிடுகிறது என்ற காரணத்தினாலே வர முடியவில்லை என்று
சொல்கிறார்கள்.

அவர்களுக்கு வயது பார் ஆகிவட்டது என்று சொல்லி விடு
கிறார்கள். அந்த வயது பாரை நீக்கவேண்டும். இல்லாவிட்டால்
பி. ஏ., எம். ஏ.. கான்ஸ்டபிள்களாக இருந்து, அவர்களுக்குக்
கீழே ஜூனியர்கள், தேர்ட் ஃபாரம் படித்த பையன்கள் எஸ்.ஐ.
களாகி அப்படி ஒரு 'அனெக்ரானிசம், ஏற்படும் என்று நான்
சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, சங்க அங்கீகாரத்தைப்பற்றிச் சொல்லி நான்
முடித்துவிடுகிறேன். சங்கம் அங்கீகரிக்கப்படாததனுடைய ஒரு
கோரமான விளைவுகளைப் பற்றி மாண்புமிகு முதல்வரவர்
களுடைய பர்சனல் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.
தமிழ்நாடு ஸ்பெஷல் போலீசிலே 120 சமையல்காரர்கள் இருக்
கிறார்கள், மாநிலம் பூராவும் மொத்தமாக. 168
ஸ்வீப்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் துறையினராக இன்றைய
வரைக்கும் கருதப்படாமல் அப்படியே ரிடையராகிறார்கள். அவர்
களுக்கு கிராஜூவிட்டி சுத்தமாகக் கிடையாது; பென்ஷன் சுத்த
மாகக் கிடையாது. வெறுங்கையோடுதான் அவர்கள் போய்க்
கொண்டிருக்கிறார்கள். முதல்வரவர்களுக்கு இந்த ஃபேக்ட்
தெரியாமல் இருக்கலாம். தெரிந்திருந்தால் இதை அனுமதிக்க
மாட்டார்கள். ஆனால் இது டைரக்டர் ஜெனரலுக்குத் தெரி
யாதா? ஐ.ஜிக்களுக்குத் தெரியாதா? டி.ஐ.ஜிக்களுக்குத் தெரி
யாதா? ஏன் அவர்கள் இவ்வளவு மோசமான நிலையை
முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வராமல் இருக்
கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

கடைசியாக ஃபயர் சர்வீசைப்பற்றி இரண்டொரு வார்த்தை
களைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அந்த ஊழியர்களுக்
கும் சங்கஉரிமை வழங்க வேண்டும். டைரக்டர், டெப்டி டைரக்
டர்களில் ஒருவர், போலீஸிலிருந்து போட்டிருக்கிறார்கள். ஏன்?
புரமோஷன் வாய்ப்பில்லாத நிலையிலே, அவர்கள் மத்தியில்
இருந்தே எக்ஸ்பீரியன்ஸ்ட் ஆட்களை, சீனியர் ஆட்களைப்
பார்த்துப் போடக்கூடாதா? போலீசுக்காவது சில கிரேடுகள்
இருக்கின்றன. ஃபயர் சர்வீஸ்மென்களுக்குச் சுத்தமாகக் கிடை
யாது. அவர்களுக்குப் புரமோஷன் வாய்ப்பு இல்லை. ரிடைய
ராகிறதே ஃபயர்மென்களாகத்தான். ஏ. எஸ். ஐ.
போஸ்ட் மாதிரி வேண்டுமென்று கேட்டும்கூட அதற்குச் செவி
சாய்க்கவில்லை. எட்டு மணிநேர டியூட்டி இல்லை. ஹவுசிங்
சுத்தமாக இல்லை அவர்களுக்கு. சென்னை நகரத்தில் கார்ப்
பரேஷனில் வீடுகள், 12 ரூபாய் கார்பரேஷன் வாடகை.
ஆனால் இவர்களிடத்தில் 10 சதவீதம் என்று, அதற்குமேலே
வசூல் செய்கிறார்கள், எனவே, வீடு கிடையாது அவர்களுக்கு.

புதிய ஸ்டேஷன்கள் திறக்கப்படுவது சம்பந்தமாகவும் முதல்வரவர்களிடம் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். புதிய ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற முடிவைச் சர்க்கார் எடுக்கிறது. அப்படித் திறக்கும்பொழுது என்ன செய்கிறார்கள் என்றால், அதற்குக் கட்டிடம் கிடையாது. ஒரு ஷெட் போடுகிறார்கள். ஷெட் போட்டால், அது விழுந்து கொண்டே இருக்கிறது. ஃபயர்மென் அந்த ஷெட்டை நிறுத்துவதைக்கவனிப்பதா அல்லது தீயணைப்பு வேலையைக் கவனிப்பதா?

ஒட்டன்சத்திரத்திலே புதிய ஸ்டேஷன் திறக்கப்பட்டது போடியிலே இருக்கிற ஃபயர் எஞ்சினைக் கொண்டு வந்து இங்கே நிறுத்தினார்கள். போடிக்கு என்ஜின் கிடையாது. திருச்செந்தூரிலே புதிதாக ஸ்டேஷன் திறக்கப்பட்டது. திருநெல்வேலி பேட்டையிலே இருக்கின்ற ஃபயர் எஞ்சினைக் கொண்டுவந்து அங்கே நிறுத்தியிருக்கிறார்கள். பேட்டையிலே ஃபயர் என்ஜின் கிடையாது.

என்ஜினுடைய ஆயுள் 10 வருடங்கள் என்றால், 15, 20 வருடங்கள் ஆன கிழட்டு என்ஜின்கள் எல்லாம் இருக்கின்றன. டிரெயிலர் பம்புகள் முக்கியம். 49ஆம் ஆண்டு காலத்திலே அதைச் சார்ந்திருக்கின்ற டிரெயிலர் பம்புகளாக இருக்கின்றன. அதையெல்லாம் நவீனப்படுத்த வேண்டும்.

ஆம்புலன்ஸ் வண்டி பழையதாக இருக்கிறது. அந்த நிலைமைகளை மாற்ற வேண்டும்.

அரசு நிர்வாகம் பற்றிய விஷயத்தை எடுத்துக்கொண்டால் கலெக்டரேட், செக்ரடேரியட், அமைச்சரவை எல்லாம் இருக்கின்றன. இவ்வளவும் இருக்கின்ற பொழுது கவர்னர் பதவி நம்முடைய நாட்டிற்கு எதற்கு? எதற்காக கவர்னர் பதவி முன்பு வெள்ளைக்காரர்கள் அதை வைத்தார்கள். நம்மை அடிமைகளாக வைத்திருக்கின்ற நேரத்தில், அந்த அடிமை முறையை நம் தலையிலே வைக்க, மாநிலங்களிலே எஃபெக்டிவாகக் கொண்டு வருவதற்காகக் கவர்னர் பதவியை வெள்ளைக்காரர்கள் வைத்திருந்தார்கள். இன்றைக்கும் ஏன் அந்தப் பதவியை நீட்டிக்கவேண்டும். நான் குறிப்பிட்ட நபரைப்பற்றிச் சொல்லவில்லை. அந்த போஸ்டைப்பற்றியே சொல்கிறேன். எதற்காக அந்த போஸ்டை வைத்திருக்கவேண்டும்? இன்றைக்கு நாம் அடிமைகளா? மத்திய அரசாங்கத்திற்கு நாம் அடிமைகளா? பிரசிடென்ட் ஒரு முறையிலே தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. சட்டசபை தேர்ந்தெடுக்கப்படுகிறது, மேலவை ஒரு முறையிலே தேர்ந்தெடுக்கப்படுகிறது, பஞ்சாயத்து போர்டு தேர்ந்தெடுக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படாத ஒரே பதவி கவர்னர் பதவி. அவர் வருகிறபொழுது தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள நாம் எல்லாம் கையைப் பின்னாலே கட்டிக்கொண்டு நிற்பது என்றால், This is a democracy in reverse–தமிழிலே என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை ஆகவே This is a democracy in reverse அந்த மாதிரி ஜனநாயகமாக இருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கவர்னர் பதவியை அபாலிஷ் செய்ய



தயார் செய்திருக்கக்கூடிய அந்த
வேண்டும். முதலமைச்சர் தயார் செய்திருக்கக்கூடிய அந்த கவர்னர் பதவி வேண்டுமா? அதிலே ஒரு
அட்ரஸைப் படிப்பதற்கு கவர்னர் பதவி வேண்டுமா? அதிலே ஒரு
வேடிக்கை என்ன தெரியுமா? முதலமைச்சரவர்கள் தமிழிலே
தயார் செய்கிறார்கள். ஆமாம், அதுதான் பொஷிசன். அதை
அவரைப் படிக்க வைப்பதற்கு இங்கிலீஷிலே டிரான்ஸ்லேஷன்.
மூக்கை இப்படிப் பிடிப்பதற்குப் பதிவாக சுற்றிப்பிடிப்பது மாதிரி
தமிழிலிருந்து இங்கிலீஷ், இங்கிலீஷிலிருந்து தமிழ். இம்மாதிரி
விஷயம் அதிலே இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமை
களைப் பார்த்து நாடு பூராவும நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது.
அந்தப் போஸ்டைப் பார்த்து உலகம் பூராவும் சிரிக்கிறது. ஆகவே
அந்த நிலைமைகளை மாற்ற வேண்டும். அந்த போஸ்டையே
அபாலிஷ் செய்ய வேண்டும். அதைப்பற்றி நம்முடைய மாநில
அரசாங்கத்தினுடைய நிலை என்ன என்பதைப்பற்றி முதலமைச்ச
ரவர்கள் பதில் சொல்லுகின்றபொழுது தெளிவுபடுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு நன்றி கூறி, முடித்துக்
கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

திரு எம். சின்னராஜ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, சுதந்திரத்திற்கு முன்னும் சுதந்திரத்திற்குப் பின்னும்
காவல்துறையைப் பொறுத்த அளவிலே, தமிழகம் இந்தியா
விலே மட்டும் அல்லாமல், உலகத்திலேயே ஒரு சிறந்த
இடத்தைப் பெற்று வந்தது என்பதை நாடு அறியும். அப்போர்ப்
பட்ட சுதந்திரமான முறையிலே அமையப்பெற்ற ஒரு
நிர்வாகம், இடையிலே ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகள் காரண
மாக மக்களிடத்தில் தனது தனித் தன்மையை இழந்துவிட்டதோ
என்ற ஐயப்பாட்டினை ஒரு காலத்திலே ஏற்படுத்தியது. நா
மெல்லாம், சந்தேகித்தோம். ஆனால், அந்த ஐயப்பாட்டினை
அச்ச உணர்வை நீக்குகின்ற வகையிலே மீண்டும் காவல் துறை
சுதந்திரமான துறையாக இயங்குகிற முறையிலே, புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட
பின்னர், காவல்துறை நிர்வாகத்தைச் சிறந்த முறையிலே
நிர்வகித்து வருகிறார்கள். அவர்கள் ஏற்படுத்திய கடுமையான
நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக, இன்று வரை கழகத்
தோழர்கள் கூட பல இடங்களிலே பாதிக்கப்படுகிறார்கள் என்பது
உண்மை. பலகட்சியினரால் ஜோடிக்கப்பட்ட வழக்குகளில் இன்று
சிக்கிக்கொண்டு தவிக்கின்ற கழக உடன் பிறப்புக்கள், நாம்
ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலும் இருந்திருக்கிறார்கள். ஆட்
சிக்கு வந்ததற்குப் பின்னாலும் இருக்கிறார்கள். இன்றைக்குக்
கூட வழக்குமன்றத்திற்குச் சென்று வழக்குகளை அவர்கள் சந்
தித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை தான் நாட்டிலே இருக்
கிறது. ஆகவே, நிர்வாகத்தின் சிறப்பான முறையை ஏற்படுத்து
வதற்காக, கழக உடன்பிறப்புக்கள் தங்களைத் தியாகத்திற்கு
ஆட்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தியாக அடிப்படை
யிலேதான் புரட்சித் தலைவர் ஆட்சி மீண்டும் ஏற்பட, மக்கள்
துணை புரிந்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்
டாகும்.

இன்றைக்கு நிர்வாக முறையில் அவர்கள் சட்டத்தை அமுல் படுத்துகிறபொழுது பொதுமக்களுக்கு ஏற்படுகிற சில இடர்ப்பாடு களை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். பொது மக்க ளிடையே, இரண்டு கிராமங்கள் அல்லது இரண்டு சமூகங்கள், அல்லது இரண்டு அரசியல் கட்சிகள் அல்லது இரண்டு பிரிவினர் என்ற நிலையில் ஏதாவது மோதல் ஏற்படும்போது, காவல் துறையினர் சி.ஆர்.பி.சி. செக்ஷன் 107, 110, மற்றும் ஐ.பி.சி.160 செக்ஷன்களின்கீழ் வழக்குகளைப் போடுகிறார்கள். அந்த வழக்குகளைப் போடும்போது இரு தரப்பிலிருந்தும் 50க்கு மேற்பட்ட பொதுமக்களை வழக்குமன்றங்களுக்குக் கொண்டு வருகிறார்கள். அந்த வழக்குகள் அந்த நிலைமையிலே இருக்கும் போது, பின்னால் அந்தக் கிராமங்களிலே ஏற்படுகிற பஞ்சாயத்து அல்லது கட்சிகளிடையே ஏற்படுகிற தொடர்பு காரணமாக மோதல் நீக்கப்பட்டாலும், அந்த வேகமான உணர்வுகள் அந்தக் கிராமத்தில் நீக்கப்பட்டாலுங்கூட, மாதக் கணக்கில், வருஷக் கணக்கில், அந்த மக்கள் நீதிமன்றங்களுக்கும், ஆர்.டி.ஓ. போன்ற எக்சிக்யூடிவ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளுக்கும் நடக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, அந்த நிலைமையைத் தவிர்க் கும்பொருட்டு, காவல்துறையினர் பொதுவாக, ஒரு ஒழுங்கு முறையை ஏற்படுத்த, அந்த வழக்குகளைப் போட்டாலும், அந்த ஊரிலே வழக்குகளுக்கான காரணங்கள் நீக்கப்பட்ட பின்னால், அந்த வழக்குகளை வாபஸ் பெறாத தன்மையை உடனடியாகப் போலீஸ் நிர்வாகம் நீக்கவேண்டும். அப்படி நீக்காததால், சில கிராமங்களில் தொடர்ந்து நீதி மன்றங்களைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை நாம் தவிர்க்க வேண்டும்.

காவல் துறையிலே காவலாளிகளுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் இடையிலே டி.எஸ்.பி. என்ற அந்தஸ்திலே உள்ள அதிகாரிகள் இருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் சுமார் 200 அல்லது 250 அதிகாரிகள்தான் இருப்பார்கள். உயர் அதிகாரிகளுக்கும் காவலாளிகளுக்கும் இடையிலேயிருக்கிற அந்த அதிகாரிகள் நிலை கவனத்திலே கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் இன்று நேர்முகத் தேர்விலே வருகிற ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கும். புரமோஷனிலே வருகிற காவலாளிகளுக்கும் இடையிலே உள்ள அதிகாரிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு 1969லே யிருந்து எந்தப் பதவி உயர்வும் கிடைக்காமல் இருக்கிறது. அதற் குக்காரணம், ஏ.எஸ்.பி. என்று நியமிக்கப்படுகிற ஐ.பி.எஸ் அதிகாரிகள் 4 வருடங்களிலே, எஸ்.பி.க்களாகப் பதவி உயர்வு பெறுகிறார்கள். ஆனால், செக்ஷன் 142 ஸ்டாண்டிங் ஆர்டரின் கீழ் வருகிற, டி.எஸ்.பி. அந்தப் பதவி உயர்வுக்குத் தகுதியற்றவ ராக ஆகிவிடுகிறார். செக்ஷன் 142ல் டி.எஸ்.பி.யும் ஏ.எஸ்.பி. யும் ஒன்று என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் ஒரே அந்தஸ்தை உடைய அதிகாரிகளாக இருந்தாலுங்கூட 1969 லேயிருந்து பதவி உயர்வு இல்லாத உண்மை நிலையை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்குப் பதவி



உயர்வு அளிப்பதன்மூலம் காவலாளிகளுக்கும், உயர் அதிகாரி களுக்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள அவர்கள் மத்தியில் நல்ல தன்மையை நாம் காண முடியும், ஆகவே. குறைந்தது, 5 ஆண்டுகள் பணிபுரிகிற டி.எஸ்.பிக்கு ஏ.எஸ்.பி. பதவியை அளித்து, அதற்குப் பிறகு அவர்களுக்கு எஸ்.பி. வாய்ப்பினை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல்நிலையத்தில் அதிகாரிகள் பற்றாக்குறையாக இருக்கி றார்கள். ஒரு காவல் நிலைய வரம்பிற்குட்பட்ட எல்லை அளவு அதிகமாக இருக்கிற காரணத்தாலும், பெருகி வருகிற மக்கள் தொகையைக் கணக்கிலே கொண்டும், காவல் துறை அதிகாரிகளை அதிகப்படுத்தவேண்டும். ஒவ்வொரு காவல் நிலைய எல்லைக் குட்பட்ட பகுதிகளை ஒவ்வொரு பிரிவாகப் பிரித்து, அந்தப் பகுதிகளுக்கான பொறுப்பை, ஏ.எஸ்.பி. அந்தஸ்திலே உள்ள அதிகாரியின் கீழ் சாதாரண காவலாளிகளிடம் ஒப்படைத்தால், இந்தப் பகுதியிலுள்ள குற்றங்களையும் அவர்கள் ஆராய்ந்து, அதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க இயலும்.

ஆகவே, காவல் துறையைப் பொறுத்தவரையில், அதன் அதி காரிகள், காவலர்கள் ஆகியோருடைய எண்ணிக்கையைப் பெருக்கு வது இந்த நாட்டின் மிகமிக அவசியமானத் தேவை என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று அவர்களின் இடவசதியைப் பற்றிக் கூறினார் கள். டி.ஒய்.எஸ்.பி. போன்ற நிலையில் உள்ளவர்களுக்கு அவர்கள் பதிந்து வைத்திருக்கின்ற இடங்களில் வீடு கிடைப் பதில்லை. அவர்களுக்கு இப்படிப்பட்ட வசதிகளை ஏற்படுத்தித் தந்தால்தான் அவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்தும். மேலும் போராட்டங்களில் ஈடுபடாத பல கான்ஸ்டபிள்கள் இன்ஸ்பெக்டர் கள் ஆகியோருக்குக் கொடுக்கப்பட்ட அந்த லாயல்டி அலவன்ஸ் அட்வான்ஸ் இன்கிரிமென்ட்டை இந்த டி.ஒய்.எஸ்.பிக்களுக்கும் கொடுக்க வேண்டும். அதைப்போல ரிஸ்க் அலவன்ஸும் அந்த அதிகாரிகளுக்கு வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் முன்பே சொன்னதைப்போல இந்த அதிகாரிகளின் எண்ணிக்கை தமிழ்நாடு முழுவதும் 250க்கு உட் பட்டுத்தான் இருக்கும். ஆகவே இவர்கள் விஷயத்தில் தனிக் கவனம் செலுத்தி உதவி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் தமிழ்நாட்டிலே உள்ள கிராமப்புறங்களில் சட்டம் ஒழுங்கைக்காப்பாற்றுகின்ற அவருடைய பொறுப்பும் சிறப்பாக இருக்கும்என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள ஆலாந்துரை என்ற பகுதி சிறுவாணி அணைக்கட்டுக்கு அருகில் உள்ளது. பேரூரில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இடையிலே காவல் நிலையமே இல்லை. எனவே, அந்த அணை யைக் காப்பதற்கும், தொழிலாளர்கள் நலனுக்காகவும்

பொதுமக்கள் தேவைக்காகவும் அங்கே ஒரு காவல் நிலையத்தை எற்படுத்தவேண்டும் என்று பொதுமக்களிடம் இருந்து நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கை இருக்கிறது. எனவே இந்த ஆலாந்துறை கிராமத்தில் ஒரு புதிய காவல் நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீ அணைப்புப் படையிலே பணியாற்றுகின்றவர்கள், காவல் துறையினர் செய்யும் பணிகளிலும் ஈடுபடுகின்றார்கள். எனவே தீ அணைப்புப் படையிலே ஆட்களைச் சேர்த்து அவர்களை போலீஸ் இலாகாவினர் செய்ய முடியாத காவல் பணிகளுக்கு உபயோகப்படுத்துகின்ற அளவுக்கு அவர்களை முழு நேர பணியாளர்களாக மாற்றி, காவல்போன்ற பணிகளை அவர்களுக்கு ஏற்படுத்தித் தருகிற வகையிலே அவர்களுடைய எண்ணிக்கையை விரிவுபடுத்தி, அவர்களுக்கு வேண்டிய தேவைகளை இந்த அரசு செய்து தரவேண்டும் என்று கேட்டு இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு என்.ஏ. பூங்காவனம் : பேரன்புமிக்க துணைத்தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் 3 பொருள்கள்பற்றி என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக தீ அணைப்புப் பணி சம்பந்தமாக இதிலே கொடுத்திருக்கிறார்கள், 112 இடங்களிலே தீ அணைப்பு நிலையங்கள் இருக்கின்றன என்று. ஆனால் 400க்கும் மேற்பட்ட பேரூராட்சி மன்றங்கள், நூற்றுக்கும் அதிகமான நகராட்சிகள் உள்ள தமிழ்நாட்டிலே 112 இடங்களில் மட்டுமே தீ அணைப்பு நிலையங்கள் இருப்பது மிகவும் குறைவானதாகும். அதை அதிகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அதிகரிக்கும்போது, குடிசைகள் அதிகமாக உள்ள பகுதிகளிலும், தொழிலாளர்கள் அதிகமான அளவில் உள்ள பகுதிகளிலும் அதை அமைக்கவேண்டும்.

அப்படிச் சொல்லுகிற அந்தச் சந்தர்ப்பத்தில். நான் என்ன சொல்லுகிறேன் என்றால், போராடாத ஒரே தொழிலாளி இந்தத் தீ அணைப்புப் படையைச் சேர்ந்தவன்தான். அவர்கள் வேலை மிகவும் கடினமானது, ஆபத்து நிறைந்தது. அவர்கள் எல்லா விதமான பணிகளையும் செய்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வும் கிடையாது, சம்பள உயர்வும் கிடையாது. எதிர்கால வாழ்க்கை உத்திரவாதமும் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். எல்லோரும் போராடுகிற நேரத்தில் அவர்கள் போராட்டத்தை விரும்பவில்லை. எனவே அவர்களின் தேவைகளை அரசு உணர்ந்து அவர்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்ததாக வடாற்காடு மாவட்டம், போளூர் தாலுக்கா 99—புதுப்பாளையம் கிராம அரிசனக் காலனியில் வசிக்கும் புஞ்சலை என்பவரின் குமாரன் டேவிட் என்பவர் ஒரு விவசாயத் தொழிலாளி. அவர் 8–2–1980 அன்று இரவு நிலத்திற்கு நீர் பாய்ச்ச காங்கேயனூர் ஏரிக்கால்வாய்க்குச் சென்றார். 9–2–80–ஆம் தேதி மேற்கண்ட டேவிட் என்பவர் கால்வாயில் பிணமாகக் கிடந்து இருக்கிறார். அவர் அருகில் 'கே' என்று ஆங்கில எழுத்துப்போட்ட மண்வெட்டி இருந்தது. உடலில் 15க்கு மேற்பட்ட வெட்டுக்காயங்கள் இருந்தன. இதுவரையில் அந்தச்சம்பவம் குறித்து யாரும் போலீஸாரால் கைது செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல், வடாற்காடு மாவட்டம், செங்கத்தில் உள்ள புதியகுயிலம் எனும் காலனியைச் சேர்ந்த கேசவன், தகப்பனார் பெயர், பெருமாள், வயது 13—விறகு வெட்டி விட்டு, ஒரு டீக்கடை ஓரமாகச் செல்கிறான். அங்கே டீ குடித்துக்கொண்டு இருந்த கல்ல் என்ற ஆசிரியர் மேல் இடித்து விடுகிறான். அந்த டீ அவர் ஆடையில் பட்டு விடுகிறது. அதனால் ஆத்திரம் அடைந்த அந்த ஆசிரியர் அந்தப் பையன் முகத்தில் சூடான பாலை வீசுகிறார். அதற்குப் பிறகு பையனும் ஊருக்குச் சென்று விடுகிறான். பின்னால் அந்த ஊரில் உள்ள மக்கள் ஒன்றாகச் சேர்ந்து காவல் நிலையத்திற்குப் புகார் கொடுக்கப் போகிறார்கள். அங்கே சென்றால் அங்கேயுள்ள உதவி சப்-இன்ஸ்பெக்டர் முனிரத்தினம் அவர்கள் காலனி மக்களைப்பார்த்து வாயில் வரக்கூடாத கெட்டவார்த்தைகளை எல்லாம் பயன்படுத்தி இருக்கிறார்கள். இதுவரையில் இது குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்ததாக, காட்பாடி தொகுதியைச் சேர்ந்த கே. வி. குப்பம் பகுதியைச் சேர்ந்த ஆலங்கநேரி கிராமத்தில் வசிக்கும் தாமோதரம் என்பவர் தன்னையும், தன் குடும்பத்தையும் அதே கிராமத்தைச் சார்ந்தவர் ஒருவரால் தாக்கலாம் என்று ஐயப்பாடோடு 12-6-1980 அன்று புகார் மனு கொடுத்தார். மீண்டும் 16-6-1980 அன்று மற்றொரு மனு கொடுத்தார். அப்படியிருந்தும் போலீஸ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படி காவல் துறை கவனிக்காமல் விட்டதால், 17-6-1980 அன்று தாமோதரத்தின் தகப்பனார் கொடூரமாக, கத்தி, கடப்பாரை. மண்வெட்டி போன்றவற்றால் கடுமையான தாக்குதலுக்கு ஆளாகி இருக்கிறார். இவ்வளவுக்கும் பிறகு இதுவரையிலும் யாரும் போலீசாரால் கைது செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு எங்கே பார்த்தாலும், லஞ்ச ஊழல் மலிந்து கிடக்கிறது. காவல் நிலையங்கள் மக்களுக்குக் காப்பு நிலையங்களாக இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் மீண்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தில், வேலூர் நகரத்தில் கடந்த மே மாதம் 26 ஆம் தேதி நடைபெற்ற தீ விபத்தின்போது, பொதுமக்களுக்கும் தீயணைப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக, போலீஸ் தலையிட்டு, வேலூர் சரித்திரத்தில் என்றுமே நடந்திராத அளவில் இரண்டு கிலோமீட்டர் சுற்றளவுப் பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான ஆண், பெண் பொதுமக்களை மிகவும் கொடூரமாக போலீசால்—நான் அறிந்த வரையில் அந்த டயர் துரை செய்ததைப்போல் கடுமையான முறையில் கண்ணீர் வெடி வீச்சி, தடியடி நடந்து இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.40.)

உதாரணமாக, என்னுடைய வேலூரில் மே மாதம் 26 ஆம் தேதி ஒரு தீ விபத்து நடைபெற்றது. அந்த விபத்தின்போது சுமார் 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் வந்தது. ஆனால் தீ அணைக்க வந்து, தீ அணைப்பு வண்டிகளில் தண்ணீர் இல்லாமல் வந்து, அங்கே வந்த பின்தான் எங்கே தண்ணீர் கிடைக்கும் என்று கேட்டார்கள். அதனால் பொதுமக்கள் மத்தியில் ஆத்திரம் ஏற்பட்டு, அதன் காரணமாக, பொதுமக்களுக்கும் தீ அணைப்புப் படையினருக்கும் தகராறு ஏற்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க எந்த எந்த இடங்களில் தீயணைப்புப் படை நிலையங்கள் இருக்கின்றனவோ அங்கேயே 24 மணி நேரமும் தண்ணீர் வசதி கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, காவல் துறை சம்பந்தமாக சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். காவல் துறை போராட்டத்தில் ஈடுபட்ட அத்தனை போலீஸ்காரர்களையும் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொண்டதற்காக அரசுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மீண்டும் வரவேற்கத் தக்கதொன்றாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ்காரர்களின் பிள்ளைகளுக்குப் படிப்பு வசதி, சம்பள உயர்வு, வீட்டு வசதி போன்ற எல்லாவிதமான சௌகரியங்களையும் செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் துறையில் நடைபெறும் நடவடிக்கைகள் பற்றி நான் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ்காரர்கள் பொறுத்தவரையில் என்னுடைய மாவட்டமாக இருந்தாலும் சரி, வேறு மாவட்டமாக இருந்தாலும் சரி, தமிழகம் முழுவதும் இருக்கிற நிலைமைகளை நான் தெரிவிக்க விரும்புகிறேன். சாராயம் எங்கே காய்ச்சப்படு





கிறது. எங்கே விற்கப்படுகிறது, யார் காய்ச்சுகிறார்கள் என்பது போலீஸ்காரர்களுக்குத் தெரியும். அப்படி இருந்தும் அந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க [illegible] என்பதை என்னால் [illegible] புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, ஒட்டுமொத்தமாக தமிழகம் பூராவும் இந்த நிலைமை வளர்ந்து விட்டது, இதைத் தடுக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மே மாதம் 26 ஆம் தேதி நடந்தது. இரண்டு மைல் [illegible] விரட்டி, விரட்டி அடித்திருக்கிறார்கள். [illegible] பார்த்துக் [illegible] நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று [illegible] அவர்கள் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் போலீஸ்காரர்கள் படுகின்ற கஷ்டங்களை [illegible] என்று நினைக்கிறேன். அவர் [illegible] போலீஸ் வேலை செய்கிறார்கள். [illegible] போலீஸ் ஸ்டேஷனில் [illegible] மேல் அதிகாரிகளின் வீட்டிலும் வேலை [illegible] வீட்டிலுள்ள குழந்தைகளைப் [illegible] செய்கிறார்கள். [illegible] வேண்டும்; கடைக்குப் போய் [illegible] வேண்டும்; மேலதிகாரி வீட்டுத் [illegible] கொடுக்க [illegible] நிலையில் இருக்கிறார்கள். [illegible] வேண்டும் [illegible] விடுபட வேண்டும்; கொஞ்சம் இந்த நிலையிலிருந்து [illegible] வேண்டும்.

போலீஸ் ஸ்டேஷனில் சந்தேகத்தின் பேரில் யாரையாவது [illegible] அவரைப் பார்ப்ப [illegible] அனுமதிப்பதில்லை. அப்படியானால் [illegible] அவரை விசாரிக்க அனுமதிவிட [illegible] வேண்டும். [illegible] என்றால் வழக்குத் தொடர வேண்டும். [illegible] கூடாது. [illegible] போலீஸ் ஸ்டேஷனில் [illegible] சென்று கைது [illegible] அனுமதிவிட [illegible] உறுப்பினர்கள் [illegible] போலீஸ் ஸ்டேஷனில் போய் [illegible] பதில் சொல்ல ஏற்பாடு [illegible] அதற்கு அவர்கள் [illegible] அதிகாரிகளுக்கோ அமைச்சர் [illegible] பதில் அளிக்கிற [illegible] வேண்டும் என்று கேட்டுக் [illegible] அரசாங்கம் [illegible] கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, திருச்சி மாவட்டத்தில் கரூரில் நடை பெற்ற ஒரு பஸ் விபத்து. 17—7—1979 அன்று அந்த விபத்து நடந்தது. பஸ் நம்பர் எம்.டி.ஏ. 4467, உரிமையாளர் பாலசுப்ரமணியம் பஸ் சர்விஸ். விபத்தில் இறந்தவர் பெயர் அம்மையப்பன். பசுபதிபாளையம் காவல் நிலையத் தில் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்திருக்கிறார்கள். கிரைம் நம்பர் 285-79. இன்றுவரை கோர்ட்டுக்குப் போகவில்லை; எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த பஸ் உரிமையாளர், போலீசார் நடவடிக்கை எடுக்காததினால், இந்த விபத்துக்கும் தனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று சொல்கிறார். அதனால் உயிரிழந்தவர் குடும்பம் பெரி தும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பஸ் உரிமையாளருக்குச் சாதக மாக இருக்கும் காவல் துறை அதிகாரிகள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, செங்கற்பட்டு மாவட்டத்தில் நடந்த ஒரு சம்பவம். 4, 5 நாட்களுக்கு முன்னால், அதாவது 15—7—1980 அன்று ஒரு தோழரைக் காவல் துறையினர் அழைத்துச் சென்ற னர். அதன் பிறகு அவர் காணாமல் போய்விட்டார். இன் றையதினம் வரையில் வரவில்லை. கோர்ட்டில் மனு போட்டு, ஆளைத் தேடிய பிறகு வருவார் என்று சொல்கிறார்கள்; ஆனால் இன்று வரையில் வரவில்லை. இதுபற்றி திர விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட நிர்வாகம் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். அவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி. பொதுவாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சாதாரண பாமர மக்களிலிருந்து வருபவர்கள் அல்ல. வசதியுள்ள அல்லது நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வருகிறார்கள். அப்படி வருகின்றவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. ஏராளமான வேலை கொடுத்திருக்கிறார்கள். கலெக்டராக வருகிறவர் அந்த மாவட்ட நிர்வாகியாக மட்டுமல்லாமல் ஊராட்சி ஒன்றியம், நகராட்சி அல்லது கார்ப்பரேஷனுக்கு ஸ்பெஷல் ஆஃபீசராக வும் இருக்கிறார். இப்படி இரண்டு பொறுப்புகளை நிர் வகிக்கும் முறை அறவே தடுக்கப்பட்டாக வேண்டும். அடுத்து அவர்களுடைய வேலைப் பளுவை குறைக்க வேண்டும்.

இரண்டாவதாக ஒரு நாள் மனு நீதி நாள் என்று வைத்திருக்கிறோம். அந்த ஒரு நாளில் 60 மைல், 70 மைல் தூரத்திலிருந்து கூட மக்கள் கலெக்டரைப் பார்க்க வருகிறார்கள். ஏழை எளிய மக்கள் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு, கஷ்டப்பட்டு அன்று வருகிறார்கள். அப்படிவந்து, ஆயிரக்கணக்கானவர்கள் கூடி, மனு கொடுக்கும் போது மாவட்ட





ஆட்சித் தலைவர் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை; மனுக் களை வாங்கிக்கொள்ளத்தான் முடிகிறது. அது அல்லாமல் அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு நேரம் இல்லை; வாய்ப்பும் இல்லை. இந்தச் சங்கடத்தைப் போக்க, ஒவ் வொரு தாலுகாவிலும் இதே மாதிரியாக தாலுகா ஆபீசில் மனுக்களைப் பெற்று, குறைகளை நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்யலாம். அந்தந்த தாலுகாவிலே மனுக்களைப்பெற்று, குறைகளைத் தீர்க்கும் நிலையை உருவாக்க வேண்டும். தாசில் தாரைச் சந்திக்க ஏழை எளிய மக்களுக்கு வாய்ப்பு இருக்கும், அவர்களுடைய குறைகளைத் தீர்த்துக்கொள்ளவும் வாய்ப்பு இருக் கும், மாவட்ட ஆட்சித் தலைவரின் வேலைப் பளுவும் ஓரளவுக்குக் குறையும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அடுத்து இன்னொன்று, ஒவ்வொரு தாலுகா அலுவலகங் களிலும் வேலைப்பளு அதிகமாக இருக்கிறது. பென்ஷன் கொடுக்கின்ற வேலை, மது பெர்மிட் கொடுக்கின்ற வேலை, பட்டா கொடுக்கின்ற வேலை, வயோதிகர்களுக்குப் பென்ஷன் கொடுக்கின்ற வேலை, மேலும் சிமென்ட் பெர்மிட் கொடுக்கின்ற வேலை, இப்படிப் பல வேலைகளை அவர்கள் செய்ய வேண்டி இருக்கின்றது. ஆகவே பென்ஷன் கொடுப்பதற்கும் சிமென்ட் பெர்மிட் கொடுப்பதற்கும் ஒரு பிரிவை ஏற்படுத்தி அதற்குத் தனியாக வேறு அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தாலுகா அலுவலகங்களில் இருக்கின்ற இடத் தைப் பார்த்தால் மிகவும் பரிதாபகரமாக இருக்கின்றது. ஒரு சின்னக் கொட்டடியிலே அதிகாரிகள் இருக்கிறார்கள். வரு கின்ற மக்கள் வீதியிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். வெய்யி லிலே காய்கிறார்கள், மழையிலே நனைகிறார்கள். இப்படிப் பட்ட நிலை இருக்கின்றது. ஆகவே அதற்கு வேண்டிய இட வசதிகளை ஏற்படுத்தி அதோடு வேண்டிய அதிகாரிகளையும் நியமித்து பணிகளை எல்லாம் செம்மையாக அவர்கள் நடத்து கின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இராமநாதபுரத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தைத் தனியாகப் பிரித்த பிறகும் அதற்கான அலுவலர்களை நியமித்த பிறகும் அந்த அலுவலகம் எங்கே இருக்கின்றதென்றால் மதுரையிலே இருக்கின்றது. அந்த அலுவலகத்தை இராமநாதபுரத்திலேயே வைப்பதற்கு ஏற்பாடு

செய்ய வேண்டும். தற்போது பெரியார் மாவட்டம் தனியாகப்
பிரிக்கப்பட்டபோது அதற்காக தனிக் கட்டிடம், தனி அலுவலர்
கள் எல்லாம் எப்படி ஏற்படுத்தினார்களோ அதே மாதிரி
இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் தனிக் கட்டிடம், தனி
அலுவலர்கள். ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

அடுத்து போலீஸ் துறையைப் பற்றிக் குறிப்பிட விரும்பு
கிறேன். போலீஸ் துறையிலே ஏழை எளிய போலீஸ்காரர்கள்
இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டுவசதி, சம்பள உயர்வு,
அவர்களுடைய பிள்ளைகளுக்கு கல்வி வசதி போன்றவற்றை
எல்லாம் செய்து தரவேண்டும்.

அடுத்து பெரிய போலீஸ் அதிகாரிகளின் வீட்டில் போலீஸ்
காரர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். காய்கறி
வாங்குவதற்கும், துணிமணிகள் துவைப்பதற்கும், அவர்கள்
பயன்படுத்தப்படுகின்ற நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போலீஸ் அலுவலகங்களைப் பொறுத்தவரையில்
எல்லா இடங்களிலும் மாமூல் என்ற முறையில் பணம் வாங்கு
கின்ற நிலைமை இருக்கின்றது. இது மிகவும் அதிகமாக இருக்
கின்றது. இந்த மாதிரி நிலைமைகள் குறித்து மாண்புமிகு
உறுப்பினர் தோமர் திரு. உமாநாத் அவர்கள் கூடக் குறிப்
பிட்டார்கள். பிக்பாக்கெட் அடிக்கக்கூடிய கோஷ்டிகள் பஸ்
லாக இருக்கின்றன. வேலூரை எடுத்துக்கொண்டால் பஸ்
ஸ்டாண்டிற்கு ஒரு பிரிவு இருக்கின்றது. காந்தி மைதானத்தி
லிருந்து காட்பாடிக்குச் செல்லுகின்ற பாதையிலே ஒரு பிரிவு
இருக்கின்றது. விரதப்பட்டு பகுதியிலே ஒன்று இருக்கின்றது.
ஆற்காடு பகுதிக்கு ஒரு பிரிவு இருக்கின்றது. இப்படி நான்கு
பிரிவுகள் இருக்கின்றன. ஆனால் இவர்கள் அனைவரும்
போலீசாருக்குத் தெரிந்தவர்கள், வேண்டியவர்கள், நண்பர்
கள். எங்கே யார் திருடுகிறார்கள் என்பது போலீசாருக்கும்
தெரியும். பாக்கெட்டிலே பிளேடு போட்டு வெட்டிக்கொண்டு
செல்வது யார் என்பது அவர்களுக்குத் தெரியும். நகையை
விட்டு எடுத்துக்கொண்டு போகிறவர்கள் யார் என்பது போலீ
சாருக்குத் தெரியும். நகையை மட்டும் திருடிக்கொண்டு செல்ப
வர்கள் யார் என்பதும் போலீசாருக்குத் தெரியும். இதுபோல்
துணியை எடுப்பது யார், பாத்திரத்தைக் கொண்டு போகிறவர்
கள் யார் என்பது எல்லாம் தெரியும் போலீசாருக்கு. இப்படி
ஒட்டுமொத்தமாக திருடுகின்ற அத்தனைபேரும் காவல்
துறைக்குத் தெரிந்தவர்கள்தான். காவல் துறைக்கு வேண்டிய
வர்கள். ஒரு வேளை காவல் துறையினர் இவர்களுக்கு உடந்தை
யாக இருந்து இதையெல்லாம் அவர்கள் பகிர்ந்து கொள்கி
றார்களோ என்ற சந்தேகமும் வருகின்றது. அப்படிப்பட்ட
ஒரு நிலை இருக்கின்றது. அதைத் தடுக்கின்ற வகையிலே
நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கி
றேன்.



சொல்ல விரும்புகிறேன்.
அடுத்து மது விலக்கு பற்றி குறித்து நன்றாக
நம்முடைய முதலமைச்சரவர்கள் இதை ஏனென்றால் இந்த மது
யோசித்து முடிவெடுக்கவேண்டும். ஒரு பக்கம் நிதி விரயமாகிக்
விலைவைப் பொறுத்த வரையில் கிராமமோ, நகரமோ இடை
கொண்டிருக்கின்றது. மது இல்லாத காய்ச்சுகிறார்கள் என்
யாது. மேலும் எங்கெங்கு யார் யார் தூக்கிக்கொண்டு போகி
மது போலீசாருக்குத் தெரியும். யார் தெரியும். இப்படி ஒட்டு
றார்கள் என்பதும் போலீசாருக்குத் தொழிலை அனுமதித்துக்
மொத்தமாக கட்டாக நடக்கின்ற ஒரு கேட்டுக்கொண்டு இதை
கொண்டிருக்க வேண்டுமா என்று பார்க்க வேண்டும் என்று
அரசாங்கம் நன்றாகச் சிந்தித்துப் உரையை முடித்துக்கொள்கிறேன்.
கேட்டுக்கொண்டு என்னுடைய

திரு. எஸ். ஆண்டித் தேவர்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு
வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய
கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்கு துணைத் தலைவர்
அவர்களுக்கு நன்றி கூறிக் கொண்டு, தமிழகக்காவல் துறை எந்த
அளவிற்கு இந்த நாட்டில் அமைதியைக், காக்கிறது நாட்டில் நடக்
கிற குற்றங்களையும் தடுக்கிறது; அதற்காக இந்த அரசு
எந்த அளவிற்கு மானியம் ஒதுக்கியிருக்கிறது என்றெல்லாம்
விரிவாக விவாதிக்க வருகிற நேரத்தில், காவல் துறை எந்த
அளவிற்கு சில குற்றங்களுக்கு உறுதுணையாக இருக்கிறது
என்பதையும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே குற்றங்கள் அதிகரித்திருப்பதற்குக் காரணம்
காவல் துறை அவைகளுக்கு உறுதுணையாக இருக்கிறது
என்பதுதான் என்கிற குற்றச் சாட்டினை இங்கே சொல்லாமல்
இருக்க முடியாது. ஆனால் நல்லாட்சி நடத்தப்பட வேண்டும்,
நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்கிற
முறையில் திட்டங்கள் திட்டப்பட்டு அமுல் நடத்தப்பட வேண்
டும் என்ற முறையில், சொல்லி வருகிறபோது, குற்றங்கள் அதி
கரிப்பதற்குக் காவல் துறையிலேயே சிலர் காரணமாக இருக்
கிறார்கள் என்கிற நிலைமையையும் எடுத்துக்காட்டாமல் இருக்க
முடியாது.

தமிழகத்திலேகூட மதுவை ஒழிக்க வேண்டும் என்பதற்காக
ஒரு தனி ஐ. ஜி.யைப் போட்டு இந்தக் குற்றங்கள் தடுக்கப்பட
வேண்டும் என்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.
ஆனால் தமிழகம் முழுவதும், காவல் துறையினைச்
சேர்ந்தவர்களுக்குத் தெரியாமல் சாராயம் காய்ச்சும் இடங்கள்
இடையாது. காவல் துறையினருக்குத் தெரியாமல் அதை
விற்பவர்கள் இல்லை என்று சொன்னால் அது மிகையாகி
விடாது.

ஏனென்றால் காவல் துறையினைச் சேர்ந்தவர்கள் அப்படி கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டு அவர்களை அனுமதிக்கிறார்கள். அது மட்டும் அல்ல ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்லவும் ஆசைப்படுகிறேன், என்னுடைய தொகுதியிலே உசிலம் பட்டி நகரத்திலேயே ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையத்தின் வாசலிலேயே சாராயம் கொண்டு வந்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள். போலீஸ் அவர்களைப் பிடிப்பதில்லை. சாராயம் சாப்பிட வருபவர்களிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு சாராயத்தைக் கொடுத்து விட்டு, திரும்ப மீண்டும் அந்தப் போலீஸ் ஸ்டேஷன் வாசலிலேயே வந்து உட்கார்ந்து கொள்கிறார்கள். ஆனால் அவர்களைப் பிடிப்பதே இல்லை.

அதற்கு மாறாக கிராமப்புறத்தின் உள்ளே சென்று அங்கே யாராவது அவர்களுக்குப் பணம் கொடுக்காதவர்கள் இருந்தால் அவர்களையும் வேறு சில குற்றமே செய்யாத நபர்களையும் பிடித்துக்கொண்டு வந்து பொய் கேஸ் போடுகிற நிலைதான் அங்கே இருக்கிறது. ஒரு மாதத்தினை விட அடுத்த மாதம் கேஸ்கள் அதிகமாகக் காட்ட வேண்டும் என்பதற்காக சம்பந்தப்படாதவர்களை எல்லாம் அழைத்து வந்து பொய் வழக்குகள் போடுகிற கொடுமையைத்தான் அங்கே பார்க்க முடிகிறது. இப்பொழுது 25 ரூபாய் கொடுத்தால் பெர்மிட் வாங்கிக்கொண்டு குடிக்கலாம் என்று நீங்கள் வைத்திருப்பதினால் குடிக்கிறவர்கள் அதிகரித்திருக்கிறார்கள். ஆனால் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களைப் போலீசே அனுமதித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமைகளை போக்க நீங்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல பல கொள்ளைகள், கொலைகள் நடைபெறுகின்றன என்று இந்த மாமன்றத்திலே பல உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். அது உண்மைதான்; கொள்ளைகள், கொலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் இந்த ஆட்சி பதவியேற்ற காலத்திற்குப் பின்னால் குற்றங்கள் குறைக்கப்பட்டு, கொலைகள் தடுக்கப்பட்டிருப்பதாக இங்கே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பெற்றிருக்கிறது. ஆனால் இன்னும் சற்று அதிகமான அளவில் இத்தகைய கொலைகள் தடுக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதற்குத் திட்டவட்டமான முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்படி குற்றங்கள் அதிகரித்திருப்பதற்குக் காரணம் குற்றவாளிகளுக்கு உடந்தையாக காவல் துறையினரே இருப்பதுதான். சில அடிமட்டத்தில் உள்ள காவலர்கள் குற்றவாளிகளைப் பற்றிய உண்மைகள் தெரிந்தாலும் அதை அவர்கள் மறைத்து



விடுவதாலும், பொது மக்களிலேயே சிலருக்கு அப்படிப்பட்ட உண்மைகள் தெரிந்தாலும் சொல்வதற்கு அச்சப்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலும்தான் குற்றங்கள் அதிகரித்து அவைகளைத் தடுக்க முடியாத சூழ்நிலையை உருவாக்குகின்றன.

உதாரணமாக, ஒரு கொலைக் குற்றம் நடைபெற்றிருக்கிறது. அதைப்பற்றி நேரில் பார்த்தவர்களுக்குத் தெரியும் என்றாலும் நேராகச் சென்று காவல் துறையிலே அதைத் தெரிவித்தால், சம்பந்தப்பட்ட நபர்களுக்கு, அப்படி விவரம் சொன்னவர்கள் யார், அவர்கள் பெயர் என்ன, என்பதுபோன்ற விவரங்களையெல்லாம் சொல்வதற்குக் காவல் துறையிலேயே ஆட்கள் இருக்கிற காரணத்தினால்தான் பொது மக்கள் எதைப்பற்றியும் வெளியில் சொல்ல பயப்படுகிறார்கள்.

அதே மாதிரி மின் கம்பி திருடுவது பற்றி சொல்ல வருகிற போது, அந்தக் கம்பிகளை யார் வாங்கப் போகிறார்களோ அவர்கள் தாம் ஆட்களை விட்டுத் திருடிக் கொண்டு வரச் செய்கிறார்கள்.

[முற்பகல் 11-00]

அவர்கள் பணம் கொடுத்து அந்தத் திருட்டைச் செய்யச் சொல்லி குறைந்த விலைக்கு அதை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். காவல் துறையினரிடம் சென்று சொன்னாலும் அந்தக் கடைக்காரர்கள்மீது போலீசார் நடவடிக்கை எடுக்கவோ அல்லது அவர்களைப் பிடிப்பதோ இல்லை. காரணம் அதை வைத்து நடத்துபவர்கள் பணக்காரர்கள். கீழ் மட்டத்தில் உள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு அவர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டு தங்களுடைய பெயர்களை நீக்கிவிடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி நடப்பதன் காரணமாகத்தான் தமிழ் நாட்டில் மின் கம்பி திருட்டு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அரசு இதை கவனத்தில் கொண்டு திருட்டுப்பொருள்களை வாங்குகிறவர்கள்மீது நடவடிக்கை எடுத்து கடுமையான தண்டனை விதிக்கும் அளவிற்கு நிலை இருந்தால்தான் இத்திருட்டுக்கள் குறைக்கப்படுமே தவிர வேறு வழி இல்லை. உணவுக்குப் பணம் இல்லாதிருக்கும் நிலையில் பணத்தைக் கொடுத்து இதில் ஈடுபடுத்துகிற அளவிற்கு நிலைமை இருக்கிறது. ஆகவே இப்படி திருடுபவர்களுக்குக் அல்லது திருட்டுப்பொருள்களை வாங்குகிறவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கும் அளவில் நல்லதொரு சட்டத்தை அரசு கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆண்டித் தேவர்] [1980 ஜூலை 25

அடுத்து, தீயணைப்புப் படை. தீயணைப்புப்படை தமிழ் நாட்டில் இப்போது அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. எங்கள் தொகுதியில் உசிலம்பட்டியில் ஒரு தீயணைப்புப்படை வைத்திருக்கிறார்கள். அந்தத் தீயணைப்புப் படைக்கு வெறும் வண்டி மட்டும்தான் இருக்கிறது. எங்கே தண்ணீர் எடுப்பது என்று தெரியாது. அந்த வண்டி விவசாய மக்களை [illegible] பகுதியாகும். எங்கள் பகுதி எங்கேயாவது தீ பற்றிக்கொண்டுவிட்டது என்று சொன்னால் வண்டியை எடுத்துக்கொண்டு கிணறு கிணறாகத் தேடிச் செல்கிறார்கள். அப்படிச் செல்லும்போது அங்குள்ள விவசாயிகள் இவர்களைத் தண்ணீர் எடுக்க அனுமதிப்பதில்லை. அதற்குள் எல்லாம் தீ பற்றி எரிந்து முடிந்துவிடுகிறது. தீ பற்றி எரிகிற இடத்தில் இருந்து தகவல் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் 14, 15 மைல்கள் வந்து தகவல் கொடுப்பதற்குள் எல்லா காரியமும் முடிந்து விடுகிறது. ஆகவே பெரிய கிராமங்களில் போன் வசதி செய்து கொடுக்கவேண்டும். பத்து அல்லது இருபது மைல்கள் இடைவெளியில் உள்ள பெரிய கிராமங்களில் போன் வைத்து, தீ பற்றி விட்டால் தகவல் கொடுக்க ஏற்பாடு செய்யாவிட்டால் [illegible] தீயணைப்புப் படைக்காக நாம் செலவு செய்கிற பணத்திற்குப் பயன் இருக்காது. அப்படி போன் வசதி செய்யப்படாவிட்டால் எல்லாம் எரிந்து முடிந்தபிறகுதான் தீயணைப்புப் படை இடத்திற்குச் செல்கிற நிலை இருக்கும். ஆகவே இதை அரசு கவனத்தில் கொண்டு இப்படி போன் வசதி செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தீயணைப்புப் படையில் வேலை செய்கிற காவலர்களுக்குப் பதவி உயர்வு இல்லை. அவர்கள் எந்தப் பதவியில் முதலில் சேர்ந்தார்களோ அந்தப் பதவியில் தான் [illegible] நிலைமையிருக்கிறது. [illegible] வீட்டுவசதியும் கிடையாது. ஆகவே அவர்கள் [illegible] அவர்களுக்கு [illegible] வேலை செய்கிற அளவிற்கு [illegible] முறையில் வேண்டிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டத் தலைநகரில் வாரத்திற்கு ஒரு முறை குறை தீர்க்கும் நாள் என்று வைத்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் வந்து [illegible]. மாவட்டம் [illegible] ஒரு [illegible] அப்படி [illegible] இருக்கிறது. [illegible] மாவட்ட ஆட்சித் [illegible] பார்க்க அங்கிருந்து வரிசையாகப் [illegible] என்ன கொடுத்திருக்கிறார்கள் என்று பார்க்கக்கூடிய நிலை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இல்லை.



1980 ஜூலை 25] [திரு. எஸ். ஆண்டித் தேவர்]

ஆகவே மாவட்டத்தை மூன்று நான்கு பகுதிகளாகப் பிரித்து வாரத்திற்கு ஒரு முறை மாவட்ட ஆட்சித்தலைவர் இந்தப் பகுதிக்கு வருவார் என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டுச் சென்றால் அந்தப் பகுதி மக்களின் குறைகளைக் கவனித்து ஓரளவு செய்ய முடியும். மக்கள் குறைவாக வந்தால்தான் கவனம் செலுத்தமுடியும். ஆகவே ஒவ்வொரு பகுதியிலும் வாரத்திற்கு ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவர் செல்கிற முறையில் இந்தக் குறை தீர்க்கும் நாளை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு கொண்டு வந்திருக்கிற இந்த மானிய கோரிக் கையிலே நல்ல பல திட்டங்களை அறிவித்திருந்தாலும், அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அடி மட்டத்திலே இருக் கின்ற அதிகாரிகளின் ஒத்துழைப்பு இன்மை காரணமாக சில திட்டங்கள் தடைபடுகின்றன. அவற்றையும், நிறைவேற்றுவதற்கு இந்த அரசு நல்லமுறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

<u>திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்</u> : வணக்கத்திற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பு தந்த மைக்கு முதலிலே நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

காவல் துறையினருடைய நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது என்று சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன். தேர்தல் நேரங்களிலே அவர் களுக்கு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு, போலீசா ருடைய போராட்டத்தின்போது வேலை நீக்கம் செய்யப்பட்ட வர்களை மீண்டும் வேலையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டதைப் பாராட்டுகிறேன். புதிதாக போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஃபோன் வசதி செய்து கொடுத்திருப்பதைப் பாராட்டுவதோடு, சில கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தேர்தல் நேரத்திலே காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில், தேர்தல் அறிக்கையிலே போலீசார் தங்கள் பணியிலே இருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பு அவர்களுடைய ஒரு குழந்தைக்கு வேலை வாய்ப்பு அல்லது வேலைக்கு உத்திர வாதம் அளிக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்ட ஒன்று. அதை யும் இந்த அரசு நிச்சயமாகச் செய்யும் என்று நான் நம்புகிறேன்.

இதேபோன்று, இரவு நேரங்களில் காவல் நிலையங்களிலே பெண்களை வைத்திருக்கக் கூடாது என்பதும் வரவேற்கத்தக்க தாகும். சென்னை நகரைப் பொறுத்தவரையில் இரவு நேரங் களில் சினிமா தியேட்டர்களில் நடக்கின்ற சில திருட்டுகளிலே

பெண்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களை இரவு நேரங்களிலே காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கின்ற நேரத்தில், கமிஷனர் அலுவலகத்திலுள்ள பாதுகாப்பு அறைக்கு அந்தப் பெண்களை அழைத்துச் செல்லக்கூடிய போலீஸ்காரர்கள் அவர்களுடைய கைச் செலவிலேதான் அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படி அவர்கள் அழைத்துச் செல்வதற்கான பிரயாணப்படி அல்லது கைச் செலவிற்கான பணம் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிட்டத்தட்ட தமிழகத்தில் ஜனத்தொகையிலே 20 சதவீதம் பேர்கள் நகரத்திலேதான் வாழ்கிறார்கள். இங்கே இந்தமாதிரியான வசதி இருக்கிறது. ஆனால், 80 சதவிதத்திற்கு மேல் கிராமப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுக்கு, அந்தப் பகுதிகளிலே உள்ள காவல் நிலையங்களுக்கு இத்தகைய வசதிகள் கிடையாது. அங்கே இரவு நேரங்களிலே சில திருடுகள் நடந்து, அதிலே பெண்கள் சம்பந்தப்பட்டவர்களாக இருப்பார்களானால், இரவு நேரத்திலே அந்தப் பெண்களை காவல் நிலையத்திலே வைத்துக்கொள்வதற்கு என்னென்ன நடவடிக்கைகள், என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்பதை இந்த அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, சென்ற 17—7—1980 தேதிய குமுதத்திலே வந்த ஒரு செய்தியைப் பார்த்திருப்பீர்கள். 'நான் ஏன் விற்றேன்' என்ற தலைப்பிலே அந்தக் கட்டுரை வந்திருக்கிறது. அதிலே ஒரு தாய் தன் வறுமையின் காரணமாக ஒரு குழந்தையை விற்றிருக்கிறார். அப்படி விற்றதற்கான பணம்கூட அந்தத் தாய்க்குக் கிடைக்கவில்லை. அதற்கு ஒரு நர்சும், ஒரு டாக்டரும் துணை நின்றிருக்கிறார்கள் என்பது அந்த பத்திரிக்கை வாயிலாக நமக்குத் தெரிய வருகிறது. தமிழ்நாட்டிலே சமீப காலத்திலே, ஆஸ்பத்திரியிலே குழந்தைகள் திருடப்படுவதை நாம் அறிவோம். அதேபோன்று, இன்றையதினம் ரேடியோவை மாலையிலே திருப்புகின்ற நேரத்திலே 5 வயதிலிருந்து 12 வயதுவரை உள்ள குழந்தைகள் காணாமல் போய் விட்ட செய்திகள் வருகின்றன. இப்படிப்பட்ட செய்திகள் வருகின்ற நேரத்திலே, ஒரு ஆஸ்பத்திரியிலே ஒரு டாக்டரும், ஒரு நர்சும் இதற்குத் துணையாக இருந்தார்கள் என்று சொன்னால், தமிழகத்திலே இதற்கு ஒரு கும்பல் இருக்கிறது என்பதை ஆராய வேண்டுமென்று நான் காவல் துறையைக் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.10]

காவல் நிலையங்களிலே காவல் துறை அதிகாரிகளை தலைமை காவலர்களை மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக எந்த விதமான பொதுமக்கள் புகாரும் இல்லாமல் மாற்றக் கூடாது என்ற உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



குறிப்பாக, அமைச்சர்கள் வருகிற நேரத்திலே அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு காவல் துறையினருக்கு இருக்கிறது என்றாலும் மாலையில் அமைச்சர்கள் வருகிறார்கள் என்று சொன்னால் காலையிலேயே போலீசார் நிறுத்தப்படுகிற நிலைமை இருக்கிறது. அது நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். அமைச்சர்கள் எந்த நேரத்தில் வருகிறார்களோ அந்த நேரத்தில் அவர்கள் நின்றால் போதும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். சில நேரங்களில் அமைச்சர்கள் வரக் காலதாமதமாகிவிட்டது என்று சொன்னால் பாதுகாப்புக் கொடுப்பதற்காக ரோட்டில் நின்று கொண்டிருக்கும் காவலர்களுக்கு சாப்பாடு வசதி செய்ய ஏதாவது செய்ய வேண்டும். அமைச்சர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய காவல் துறையினர் நிழல் இல்லாத சாலைகளில் தண்ணீர் கிடைக்காத சாலைகளில் நிறுத்தப்படக்கூடாது என்று பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையில் பணியாற்றுகிறவர்கள் சொந்த ஊரை விட்டு பல்வேறு ஊர்களில் வந்து பணியாற்றுகிறார்கள். வருஷத்திற்கு ஒரு முறையாவது அவர்கள் குடும்பத்தோடு சொந்த ஊருக்குச் செல்ல பயணப்படி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எழும்பூரில் போலீஸ் ஹாஸ்பிடல் ஒன்று இருக்கிறது. அங்கு காலை 7 1/2 மணி முதல் 2 1/2 மணி வரைதான் டாக்டர்கள் இருக்கிறார்கள். இரண்டரை மணிக்குப் பிறகு டாக்டர்கள் வருவதில்லை என்ற குறை சொல்லப்படுகிறது. இதனால் மாலை இரண்டரை மணிக்குப் பிறகு வருகிற நோயாளிகள் மிகவும் சங்கடப்படுகிறார்கள் என்ற புகார் இருக்கிறது. மாலையிலும் டாக்டர்கள் இருக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். ஆஸ்பத்திரியில் அவுட் பேஷண்டில் பணியில் இருக்கும் தலைமைக் காவலர்கள் அல்லது காவலர்கள் மாலை ஐந்து மணிக்கு போலீஸ் ஸ்டேஷனில் வந்து கையெழுத்திட வேண்டுமென்ற நிலைமை இருப்பதை மாற்ற வேண்டும். சென்னையில் மட்டுமல்லாது போலீஸ் நிலையங்கள் இருக்கும் எல்லா ஊர்களிலும், கிராமங்களாக இருந்தாலும் ஒரு ஆஸ்பத்திரியை நிச்சயமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

காவலர்கள் தங்கள் பிராவிடெண்ட்பண்ட் பணத்திலிருந்து மகன் மகள் திருமணத்திற்காக கடன் கேட்டால் அது உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சில நேரங்களில் மகன், மகளுடைய திருமணத்திற்காக கடன் கேட்டவர்களுக்கு, குழந்தைகள் பிறந்து ஐந்து ஆண்டுகள் ஆகியும் கிடைப்பதில்லை. அந்த நிலைமையை மாற்றி உடனடியாகக் கடன்கள் கிடைக்க வழிவகை செய்யவேண்டும்.

மேலும் காவல் துறையில் இருபது ஆண்டுகளுக்கு மேலாகப்
பணி புரிந்தவர்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்கப்பட
வேண்டும்.

தீயணைப்புப் படையினரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்
பலரும் பேசினார்கள். காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்
தீயணைப்புப் படையினரின் தியாக சேவையை மனதில்கொண்டு
அவர்களுக்கு ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் மற்றைய
சலுகைகளும் அளிக்க இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள
வேண்டும்.

அறு நூறுக்கு மேற்பட்ட பேரூராட்சிகள் தமிழகத்தில்
இருக்கின்றன. பேரூராட்சிகள் குடிசைப் பகுதிகள், விவசாயி
கள் நிறைந்த பகுதிகள். ஒட்டுமொத்தமாக வைக்கோல்
பரப்புகள் தீப்பற்றிக் கொள்ளக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்
றன. என்னுடைய ஆலங்குளம் தொகுதி 45 கிலோ மீட்டர்
நீளம், 45 கிலோ மீட்டர் அகலம் உள்ள மிகப் பெரிய தொகுதி.
அங்கு ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும். அப்படி
ஏற்படுத்தினால் விவசாயிகள் குடிசைகள் பாதுகாக்கப்படும்,
வைக்கோல் பரப்பிலிருந்து தீ பரவாமல் காப்பாற்றப்படும்.

சாத்தான்குளம் தொகுதி மிகப் பெரிய தொகுதி என்று
சொல்லிக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் தீ பிடித்தால்
பாளையங்கோட்டையிலிருந்துதான் தீயணைக்கும் படை வர
வேண்டியிருக்கிறது.

அந்த நிலைமையை மாற்றி அங்கே, சாத்தான்குளம் தொகுதி
யிலே, ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தவேண்டும்.
மொத்தத்திலே தமிழ்நாடு அரசு காவல் துறை மானியத்திலே
போலீஸ் அதிகாரிகளுக்கும் போலீஸ்காரர்களுக்கும் அளித்திருக்
கிற ஆதரவைப் பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி,
வணக்கம்.

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மானியக் கோரிக்
கைகளின் மீது பேசுகின்ற ஒரு வாய்ப்பைக் கொடுத்தமைக்காக
நான் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கி
றேன. இங்கே போலீஸ் மானியக் கோரிக்கையிலே முன்னாலே
பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் துறையிலே இருக்கக்
கூடிய குற்றங்குறைகளை எல்லாம் சுட்டிக்காட்டினார்கள். குறிப்
பாக ஏறத்தாழ 50 ஆயிரம் பேர்கள், அதாவது 48,892 பேர்
கள் இருக்கக்கூடிய இந்தப் போலீஸ் படையிலே அதிகாரிகள்
10,911 பேர்களாகவும் காவலர் எண்ணிக்கை 37,931 ஆகவும்
இருக்கிறது. ஏறத்தாழ சராசரி 5 காவலர்களுக்கு ஒரு அதி
காரி என்ற விகிதத்திலே இந்தப் படையின் அமைப்பு இருக்கிறது
அதிகாரிகள் எண்ணிக்கை இந்த 20 ஆண்டு காலத்திலே உயர்ந்





கொண்டிருக்கின்ற அளவுக்கு அவர்களின் கீழே வேலை பார்க்கிற
காவலர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை. ஆக இந்த
போலீஸ் படையிலே பல இடங்களிலே சட்டம் ஒழுங்கு கவனிக்
கப்படவில்லை, திருட்டு போன்றவற்றைச் சரிவர கண்டுபிடிக்க
முடியவில்லை என்றால் அதிகாரிகளின் எண்ணிக்கைக்கு
ஏற்ப காவலர்கள் எண்ணிக்கை உயரவில்லை என்பதுதான்
முக்கியமான காரணம் ஆகும். ஏராளமாக படித்த இளைஞர்
கள், திடகாத்திரமான இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கக்
கூடிய இந்த நாளிலே அவர்களையெல்லாம் போலீஸ் படையிலே
சேர்த்து போலீஸ் படையை நவீனப்படுத்தவேண்டுமென்று நான்
மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கி
றேன்.

அதிகாரிகளிலே, டெபுடி இன்ஸ்பெக்டர், ஏ.எஸ்.ஐ. என்ற
புதிய பதவிகள் அண்மைக்காலத்திலே ஏற்படுத்தப்பட்டிருக்
கின்றன. இந்த இரண்டு பதவிகளுக்கு உரியவர்களுக்கு
வாட் இஸ் தி ஸ்பெசிபிக் ஒர்க் என்று கேட்டால் பெரும்பான்மை
யான போலீஸ் ஸ்டேஷன்களிலே ஸ்பெசிபிக் ஒர்க் இல்லை.
அங்கே இருக்கின்ற இன்ஸ்பெக்டர் அல்லது சப்இன்ஸ்பெக்டர்
என்ன வேலை கொடுக்கிறார்களோ அதைச் செய்யவேண்டிய
நிலைமை தான் அவர்களுக்கு இருக்கிறது. அதிலேயும் டெபுடி
இன்ஸ்பெக்டர் என்று சொல்லப்படுகிற அந்தப் புதிய பதவிக்கு
வருகிறவரின் கீழே எந்த ஸ்டாபும் கிடையாது. அந்த போலீஸ்
ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டருக்குக் கீழே இருக்கக்கூடிய காவலர்
களைத்தான் அவர்களும் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருக்
கிறது, அவர்கள் தனியாக செயல்பட முடியாத நிலைமை
இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு பதவி என்ன காரணத்திற்காக
ஏற்படுத்தப்பட்டது என்பது புரியவில்லை.

பெரும்பாலான போலீஸ் ஸ்டேஷன்களிலே லாக்-அப் வசதிகள்
இல்லை. அதன் காரணமாக கைது செய்யப்படுகிறவர்கள்
பல்வேறு விதத்திலே இன்னலுக்கு ஆளாக நேரிடுகிறது.
அதையும் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். போலீசாருக்கு இருக்கக்கூடிய வசதிகளைப்
பற்றி எல்லாம் முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி
னார்கள், அவர்களுக்கு வசதிக் குறைவு இருக்கிறது என்று
சொன்னார்கள். போலீசாரின் குடியிருப்புகள் மிக மோசமான
நிலையிலே இருக்கின்றன. மதுரையிலே கிரைம் பிராஞ்ச்
அலுவலகத்திற்கு அருகாமையிலே ஏறத்தாழ 30, 40 ஆண்டு
களுக்கு முன்னாலே கட்டப்பட்ட போலீசார் குடியிருப்புகள் அந்த
நாளிலே ஓடுகளாலே கட்டப்பட்டன. அவை அதே நிலைமையிலே
தான் இன்றைக்கும் மாறுதல் எதுவும் இல்லாமல் வசதிக் குறைவா
கவே இருக்கின்றன. அதையெல்லாம் கவனித்து மாற்றுவதற்கான
வழிவகைகளைச் செய்யவேண்டும். போலீஸ் துறையிலே
இருக்கக்கூடிய டி.ஐ.ஜி.-யிலிருந்து இன்ஸ்பெக்டர் வரை அவர்கள்

வசிக்கின்ற வீடுகளை ரிப்பேர் அல்லது மராமத்து செய்ய வேண்டுமென்றால் பி.டபிள்யூ.டி. தான் செய்யவேண்டுமென்ற முறையிலே அதிகாரம் அவர்களிடம் இருக்கிறது. அவர்கள் என்ன முறையிலே அதை ரிப்பேர் செய்கிறார்கள் என்று பார்த்தால்—

[முற்பகல் 11-20]

டெப்ரிஷியேஷன் வேல்யூவைப் பார்க்கிறார்கள், 30, 40 வருடங்களுக்கு முன்பு கட்டிய கட்டிடமாக இருந்தால் வருஷந்தோறும் டெப்ரிஷியேஷன் வேல்யூவைக் குறைத்துக் கொண்டே வந்தால், 30 வருடங்களுக்கு முன்பு 30,000 ரூபாய்க்குக் கட்டியிருந்தால் இன்றைக்கு டெப்ரிஷியேஷன் 5,000 ரூபாய், 6,000 ரூபாய் வந்து நிற்கும் அந்த வீடு. அந்த டெப்ரிஷியேஷன் வேல்யூவில் ஒரு பர்சன்ட் ரிப்பேருக்காகச் செலவழிக்கலாம் என்றால் வருடத்திற்கு 50 ரூபாய், 100 ரூபாய் தான் ஒதுக்குவதற்கு முடியும். ஆகவே, பி.டபிள்யூ.டி.-யில் அந்த ரிப்பேரைச் செய்வது இல்லை.

அடுத்து, எஸ்.ஐ., கான்ஸ்டபிள் ஆகியோர் வசிக்கும் குடியிருப்புகளைப் பார்த்தால், அந்தந்த மாவட்டங்களில் உள்ள போலீஸ் அதிகாரிகளின், எஸ்.பி.யின் கன்ட்ரோலில் இருக்கிறது. அவர்களுக்குப் போதுமான நிதி வசதி கிடையாது. ஆகவே, குடியிருப்புகளிலே இன்னும் மோசமான நிலைமைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. இதை மாற்றுவதற்காக, ''போலீஸ் ஹவுசிங் கார்ப்பரேஷன்'' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, டைரக்டர்-ஜெனரலின் நேரடிப் பார்வையின்கீழ் ஒரு சூப்பரின்டெண்டிங் என்ஜினியரை நியமித்து, போலீசாரின் குடியிருப்புகளைச் சீர்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்தில் இந்த நேரத்தில் வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

போலீசார் அனைவருக்கும் இல்லங்கள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே அவர்களுக்கும் எட்டு மணி நேர வேலை என்ற நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும். 24 மணி நேரமும் தொடர்ந்து வேலை பார்க்கும் நிலைமையிலே திறமையின்மையும் மற்றவைகளும் வந்து விடுகின்றன. அதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

போலீஸ் ஸ்டேஷன்களினுடைய நிலைமைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன என்று நான் முதலிலேயே குறிப்பிட்டேன். மதுரை நகரில் 9 ஸ்டேஷன்கள் இருக்கின்றன. 4 போலீஸ் ஸ்டேஷன்களுக்குத்தான் சொந்தக் கட்டிடம் இருக்கிறது. பாக்கியுள்ள 5 போலீஸ் ஸ்டேஷன்களும் வாடகைக் கட்டிடத்தில்தான் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒரு போலீஸ் ஸ்டேஷனின் நிலைமைகளைப்பற்றி நான் இங்கே சுட்டிக்காட்டியாக வேண்டும் என்று கருதுகிறேன். மதுரையிலே பி-5 என்ற போலீஸ் ஸ்டேஷன் அழகர் திருவிழா நடைபெறுகின்ற மண்டபத்தில் இருக்கிறது. அது ஒரு சிறிய மண்டபம். அந்த மண்டபத்தில் எந்த வசதியும் இல்லை, சுகாதார வசதி, குடிதண்ணீர் வசதி என்று எதுவும் இல்லாத நிலைமை. அந்த மண்டபத்திலே என்னென்ன போலீஸ் அலுவலகங்கள் இருக்கின்றன என்றால், பி-5 என்ற அந்த போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அதில் சம்பந்தப்பட்ட எஸ்.ஐ., மற்றவர்கள் இருக்கிறார்கள். அங்கே ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், லா அன்ட் ஆர்டருக்கு இருக்கிறார், கிரைமுக்கு ஒருவர் இருக்கிறார், பற்றாக்குறைக்கு, அந்தப் பகுதிக்கான டெபுடி சூப்பரின்டெண்ட் ஆஃப் போலீசின் அலுவலகமும் அந்த மண்டபத்திற்குள்ளேயே இருக்கிறது.



பி-5 போலீஸ் ஸ்டேஷன் ஏரியாவிலே என்னென்ன முக்கியமான அலுவலகங்கள் இருக்கின்றன என்பதை மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்களின் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கலெக்டர் ஆபிஸ், கார்ப்பரேஷன், அதைப்போல இராமநாதபுரம் கலெக்டர் ஆபீஸ், ஹாஸ்பிடல், கோர்ட், இது தவிர 9 காலேஜ்கள் அந்த போலீஸ் ஸ்டேஷன் வட்டாரத்திலே சரகத்திலே இருக்கின்றன. மதுரை நகரிலுள்ள முக்கியமான அரசு அலுவலகங்களும், கல்லூரிகளும் இருக்கின்ற பகுதியிலே இருக்கின்ற அந்த போலீஸ் ஸ்டேஷன் அழகர் மண்டபத்தில் இருக்கிறது. வருடத்திற்கு மூன்று நாட்கள், அழகர் திருவிழா நடக்கின்றபொழுது அங்குள்ள போலீஸ் அதிகாரிகள் மண்டபத்தைவிட்டு வெளியே போக வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அதை மாற்றி, மதுரை போன்ற முக்கியமான நகரங்களில் இருக்கும் போலீஸ் நிலையங்களுக்குப் போதுமான வசதிகளை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே இன்னொன்றையும் நம்முடைய முதலமைச்சரவர்களின் கவனத்திற்கு இந்த நேரத்திலே கொண்டுவர விரும்புகிறேன். தமிழகத்திலே இருக்கக்கூடிய சமுதாயக் கேடுகளாகிய விபச்சாரம், மது போன்றவைகள் ஒழிக்கப்பட வேண்டுமென்பதைத் தன்னுடைய இலட்சியமாக மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த இலட்சியம் உன்னதமானது. அந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அந்த நாளில் ரோமாபுரி சாம்ராஜ்யத்தில் விபச்சார வரி போட்டார்கள் என்று சரித்திரத்திலே படித்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு மதுரை நகரத்தில், என்னுடைய தொகுதியிலே, மத்திய தொகுதியிலே, லாட்ஜ்களிலிருந்து குறிப்பிட்ட போலீஸ் ஸ்டேஷனில் விபச்சார வரி என்று சொல்லாவிட்டாலும் ஒவ்வொரு லாட்ஜும் இவ்வளவு ரூபாய் மாதத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டு, குறிப்பிட்ட போலீஸ் ஸ்டேஷனுக்கு 10,000 ரூபாய் வரையில், மாதத்திற்கு, அவர்களுக்கு வருமானம் வந்து கொண்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற லாட்ஜுகளையெல்லாம் மிரட்டி அந்த ரூபாயைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, பரவலாக, எல்லா போலீஸ் நிலையங்களிலும் சாராய மாமூல் இருப்பது எல்லோருக்கும் தெரிந்தது. இதை ஒடுக்குவதற்கு, கடுமையான நடவடிக்கைகளை போலீஸ் துறையிலே இருக்கின்ற உயர் அதிகாரிகள் எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் மீதும் இதிலே சந்தேகம் என பரவலாக ஊரிலே பேசப்படுகிறது. அந்த நிலைமைகளை அனுமதிக்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

போலீசிலே, பல இடங்களிலே நடைபெற்ற அக்கிரமங்களைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய பல உறுப்பினர்கள் சொன்னார்கள். நம்முடைய மார்க்கிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சில நாட்களுக்கு முன்னாலே, இதே சபையிலே நக்சல்பாரிகள் வேட்டை என்ற பெயராலே, கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த அப்பாவிகளான உறுப்பினர்களை அழைத்துச் சென்று, கொடுமைப்படுத்தியதைப் பற்றிச் சொன்னார்கள். என்னுடைய கட்சியையும் போலிசார் விட்டு வைக்கவில்லை. தர்மபுரி மாவட்டத்திலே, அரூர் நகரத்திலே, எங்கள் கட்சியைச் சேர்ந்த மாணவர் காங்கிரஸ் தலைவர், திரு. எம். சுப்பிரமணியம், எம். எஸ். சி. படித்துக் கொண்டிருப்பவர், அவரையும், டி. மோகன், டி. இளங்கோவன் ஆகியோரையும் நக்சல்பாரிகள் என்று சொல்லி அழைத்துப் போய், அடித்துக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். நான் எம். எஸ். சி. படிக்கிறேன் என்று அந்த மாணவன் சொன்ன உடனே, நிச்சயமாக நீ நக்சல்பாரியாகத் தான் இருப்பாய் என்று அடித்து வலது கையை முறித்திருக்கிறார்கள் அதுபற்றி முதலமைச்சரிடம் கொடுக்க வேண்டிய புகாரை நான் வைத்திருக்கிறேன் அதை இப்பொழுது முதலமைச்சரிடம் அளிக்கிறேன் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். இன்று அந்த மாணவர் சென்னையில் இருக்கிறார். அந்த மாணவர் இன்னும் ஊருக்குப் போக முடியவில்லை. ஊருக்குப் போனால், அவர் மீது ஏதாவது வழக்கு போடுவார்களோ என்ற நிலைமை இருக்கிறது.

நிலக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த வத்தலகுண்டு போலீஸ் நிலையம் சர்க்கார் ஆதிக்கத்தின் கீழே இருக்கிறதா அல்லது அந்த ஊரிலே உள்ள தனி நபரின் ஆதிக்கத்தின் கீழே இருக்கிறதா என்று அங்கேயுள்ள மக்களுக்கும் தெரியவில்லை. என்னைப் போன்றவர்களுக்கும் தெரியவில்லை. அந்தப் போலீஸ் நிலையத்திலேயிருக்கிற அதிகாரிகளானாலும் சரி, காவலாளிகளானாலும் சரி, உள்ளூரிலே இருக்கிற ஒரு சமூக விரோதியின் ஆணைக்கு உட்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் சகோதரி பொன்னம்மாள் அவர்களே, போலீஸ் நிலையம் சென்று புகார் சொன்னாலும் அவர்கள் அதற்கு ஆவன செய்வதில்லை. நியாயம் வழங்குவதில்லை. மாறாக, நிரபராதிகளை, அப்பாவிகளைப் பிடித்து வழக்கு போடுகிற நிலைமை அங்கே தொடர்ந்து இருந்து வரு றது.





போலீஸ் துறையைப்பற்றிய அப்ரோச், போலீஸ் துறையிலே
இருப்பவர்களுக்கும் சரி, பொதுமக்களுக்கும் சரி, அதிலே ஒரு
மறு சிந்தனை நிச்சயமாக இருக்க வேண்டும். போலீஸ் துறை
என்பது மக்களின் நலனை, மக்களின் உயிரை, உடமைகளைப்
பாதுகாக்கின்ற ஒரு துறை. ஆனால், அந்தத் துறையிலே
இருக்கக்கூடிய அதிகாரிகள் பல பேருக்கு அந்த உணர்வு இருக்
கிறதா என்பது சந்தேகம். இன்றைக்கு அவர்கள் ஏதோ எஜ
மானர்களைப் போலவும், மற்றவர்கள் எல்லாம் அடிமைகள்
போலவும் நினைத்துக்கொண்டு விபரம் அறியாத, அப்பாவிப்
பொதுமக்களை இடைவிடாமல் துன்புறுத்துவதும், அவர்களுக்
குக் கொஞ்சம்கூட சம்பந்தமில்லாத வழக்குகளை எல்லாம்
அவர்கள்மீது போட்டு, அவர்களை அலைக்கழிப்பதும் இன்றைக்கு
அன்றாட நடவடிக்கைகள் ஆகிவிட்டது. போலீஸ் துறையிலே
ஒரு மறு சிந்தனை ஏற்படுவதற்கு நம்முடைய மதிப்பிற்குரிய
முதலமைச்சர் ஆவன செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், சிவில் பாதுகாப்பு உரிமைச்
சட்டம் எந்த அளவுக்கு இன்றைக்கு நாட்டிலே அமுலாக்கப்படு
கிறது என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டுமென்று
இந்த மாமன்றத்திலே உள்ள அத்தனை பேரையும் பணிவுடன்
நான் கேட்டுக்கொள்கிறேன். சிவில் பாதுகாப்பு உரிமைச் சட்
டத்தின் கீழே சமுதாயத்தின் அடித்தளத்திலே இன்றைக்கு நலிந்து
கொண்டிருக்கிற அரிசன சமுதாய மக்கள் எந்த அளவுக்குப்
பாதுகாக்கப்படவேண்டுமோ அந்த அளவுக்குப் பாதுகாக்கப்பட
வில்லை. பல இடங்களிலே, அவர்களை மற்ற வகுப்பினர்
துன்புறுத்துகிற நேரத்திலே, அரிசனங்களுக்கு உதவியாகச் செல்ல
வேண்டிய போலீஸ், யார் அவர்களைக் கொடுமைப்படுத்து
கிறார்களோ அவர்களுக்குத் துணையாக இருக்கக்கூடிய பல்வேறு
நிகழ்ச்சிகள் அன்றாடம் பத்திரிகையிலே வெளியாகிக் கொண்
டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஜாதியின் அடிப்படையிலே
யார் கொடுமைகள் செய்கிறார்களோ, அவர்களை, சிவில் பாது
காப்பு உரிமைகள் சட்டத்தின் அடிப்படையிலே ஈவு இரக்க
மின்றி ஒடுக்குவதற்கு நம்முடைய முதலமைச்சர் முன் வரவேண்டு
மென்று இந்த நேரத்திலே நான் வேண்டுகோள்விடுக்கிறேன்.

இதிலே, ஒரு பாலிசியாக நம்முடைய இந்த அரசு, ஒன்றை.
வகுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்தக் கட்டத்திலே குறிப்பிட
விரும்புகிறேன். அரிசன நல துறையைமதிப்பிற்குரிய முதலமைச்சர்
அவர்களே எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, இருக்கக்கூடிய
அமைச்சர் அதற்குத் தகுதியானவர் அல்ல என்று நான் சொல்ல
வில்லை. மாறாக அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவரை
அந்தப் பொறுப்பிலே இருப்பதும் ஹரிஜன் வெல்பேர்
ஆபீசர் அல்லது அந்தத் துறையைச் சேர்ந்த ஆபீசர்கள்
அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதும் பல
இடங்களில் அவர்களுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்துகிறது.

[முற்பகல் 11-30]

அவர்கள் சில காரியங்களை அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த
வர்களுக்கு செய்யவேண்டும் என்று மனமார விரும்பினாலும்
அதை நம்முடைய சமுதாயத்திற்குச் செய்கிறோம். ஆகவே நம்
மீது பழி வந்துவிடும் என்று அச்சம் ஏற்படுகிறது. ஆகவே
முதல் அமைச்சரே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் அந்த
துறையில் சம்பந்தப்பட்ட திட்டங்கள் உடனடியாக நிறைவேறும்.
அந்தத் துறைக்கான சலுகைகள் உடனுக்குடன் கிடைக்க வசதி
யாக இருக்கும். இரண்டாவது அந்தத் துறையின் பொறுப்பிலே
நியமிக்கப்படுகின்ற அதிகாரி சீனியர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக
இருக்கவேண்டும். அதுதான் நல்லது. அரிசனங்களின் முன்னேற்
றத்தில் நம்பிக்கைகொண்டு அதை ஒரு சோஷியல் சர்வீசாக
எடுத்துக்கொண்டு அவர்கள் செயல்படுவார்களேயானால் மற்
றத் துறையினர் அந்தத் துறையோடு இணைந்து செயல்படுவதற்
கும் அந்தத் துறையின் திட்டங்கள் மற்றத் துறையினரால்
ஏற்றுக்கொண்டு செயல்படுவதற்கும் வசதியாக இருக்கும் என்பதை
இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரிசனக் குடியிருப்புகளைப் பற்றி முதலமைச்சர் அவர்கள்
நல்ல கருத்தினை இந்த அவையிலேயும் சொன்னார்கள். வெளியி
லேயும் சொன்னார்கள். அரிசனங்களுக்குத் தனியாக குடியிருப்
பைக்கட்டி அவர்களை ஒதுக்கி வைக்கவேண்டும் என்பதை இந்த
அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லோரும் ஒன்றாக இரண்டறக்
கலந்து வாழவேண்டும் என்பதுதான் எங்களுடைய திட்டம் என்று
சொல்லுகிறார்கள். அதை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கட்டப்
படுகின்ற அந்த குடியிருப்பு மனைகளில் எந்த சமுதாயத்தை
சேர்ந்தவர்களாக இருந்தாலும் அரிசனங்களும் மற்றவர்களும்
இரண்டறக் கலந்து வாழவேண்டும் என்ற வகையில் அமைக்க
வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து மாவட்ட நிர்வாகம், பொது நிர்வாகம் பற்றி சில
கருத்துக்களை இந்த மன்றத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன்.
ஏற்கனவே தமிழகத்திலே இருந்த மிகப்பெரிய மாவட்டங்களான
சேலம், கோவை, திருச்சி போன்ற மாவட்டங்கள் இரண்டாகப்
பிரிக்கப்பட்டுவிட்டன. அதைப்போலவே நெல்லை முகவை
தஞ்சை, தென்னார்காடு, வடார்காடு மாவட்டங்களைப் பிரிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லை சுருங்கி
இருந்தால்தான் அங்கே வேலைகள் நிரம்பட நடக்க முடியும்.
4 அல்லது 5 தாலுகாக்களுக்கு மேல் ஒரு மாவட்டத்தில் இல்லாத
நிலையை உருவாக்கி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து அந்த டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் என்று
சொல்லப்படுகிற அந்த குழு வெறும் ஆலோசனைக்குழுவாக
மட்டும் இருந்துவருகிறது. அந்த நாளில் பஞ்சாயத்து யூனியன்
அமைப்பு வந்த நேரத்தில் அன்றைக்கு இருந்த அரசு இப்போ
தைக்கு இது ஒரு ஆலோசனைக்குழுவாக இருந்தால் போதும்
பின்னாலே ஒரு கட்டத்திலே முழு அதிகாரம் படைத்த குழுவாக
மாற்றிக் கொள்ளலாம் என்று அந்த அரசு கருத்து வெளியிட்டது.
அதை இன்றைக்கு மறு பரிசீலனை செய்து டி.டி.சி.க்கு முழு
அதிகாரம் கொடுத்து செயல்பட இந்த அரசு முன்வரவேண்டும்
என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான யோசனையையும் இந்த
அரசின் பரிசீலனைக்கு நான் வைக்கிறேன். இங்கே 234 தொகுதி
யில் இருந்து இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறோம். அந்தந்த
தொகுதியில் உள்ள மக்கள் அவர்களுடைய கோரிக்கைகளை
அந்தத் தொகுதி பிரதிநிதிகளிடம் கொடுக்கிறார்கள். நாங்கள்
அந்தக் கோரிக்கைகளை எடுத்துக்கொண்டு அமைச்சரிடமோ
அல்லது அதிகாரிகளிடமோ சென்று ஆவன செய்யவேண்டிய
நிலைமை இருக்கிறது. இது மட்டும் போதாது. ஒவ்வொரு
தொகுதியிலேயும் குறைந்த பட்சம் 3 மாதத்திற்கு ஒரு முறையா
வது மக்கள் குறை தீர்க்கும் நாள் என்று நிர்ணயித்து, அந்த
மாவட்ட அதிகாரிகள் அத்தனை பேர்களும் அதற்கு அழைக்கப்
பட்டு, அங்கே மக்கள் தங்களுடைய குறைகளை தெரிவிக்கவும்,
அந்தக் குறைகளை உடனடியாக பைசல் செய்யும் முறையை,
எல்லா தொகுதியிலும் அமைப்பதற்கு இந்த அரசு முன்வர
வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான பிரச்னையை இங்கே
மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள்.
மத்திய அரசின் ஆதிக்கம் என்பது இந்த மாநில நிர்வாகத்திலே
நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு போகிறது என்பதற்குப்
பல்வேறு உதாரணங்களை இன்றைக்குச் சொன்னார்கள்.
இந்த நேரத்திலே சுப்ரீம் கோர்ட்டின் முன்னாள் தலைமை
நீதிபதியாக இருந்த மதிப்பிற்குரிய திரு. சுப்பாராவ் அவர்கள்
சொல்லிய கருத்தை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு
வர நான் விரும்புகிறேன்.

இன்றைக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அகில இந்தியத் தேர்வின்
மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் அந்தந்த மாநிலங்களுக்கு
என்று ஒதுக்கப்படுகிறார்கள். அந்த முறையிலே எந்த விதமான
தவறும் இல்லை. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகள்
அகில இந்திய அடிப்படையில் இருக்கவேண்டும் என்பதை நான்
ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அப்படிப்பட்ட முறையில்
தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தந்த மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டு
ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆபீசர்கள் ஸ்டேட் சர்விசில் இன்குளுட்
செய்யவேண்டும். அவர்கள் ஸ்டேட் சர்விசில் தான் இருக்க

வேண்டும். அந்தந்த மாநிலத்தில் ஸ்டேட் சர்விசில் அவர்கள் இருந்தால்தான், அந்தந்த மாநில அரசுக்குக் கட்டுப்பட்டவர்களாக அவர்கள் இருக்கமுடியும்.

இன்றைக்கு அவர்கள் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருப்பதால், அவர்களுக்கு வேண்டிய நிலைமைகளுக்கு ஏற்ப அதிகாரிகளை இங்கே இருந்த டெல்லிக்கு எடுத்துக்கொள்வதும் அங்கே வேண்டாம் என்று நினைக்கிறபோது இங்கே அனுப்புவதும் என்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அவர்கள் ஒரு மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள் என்று சொன்னால், அதற்குப் பிறகு அவர்கள் அந்த மாநில அரசுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும். ஸ்டேட் சர்விசில் அவர்களை சேர்ப்பதன் மூலமே இதை நடைமுறைப் படுத்த முடியும் என்பதை நான் இந்த நேரத்துல் சுட்டிக்காட்டிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு அரசாங்க நிர்வாக அமைப்பிலே சில சீர்திருத்தங்களைச் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். சில காரியங்கள் இன்றைக்கு ஒற்றிக்கு இரட்டையாக நடைபெறுகின்றன. எந்தக் காரியமாக இருந்தாலும், அது கீழே இருந்து மேலே வரையில் வருகிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை இன்னும் மற்ற பொதுப் பணித் துறை ஆகியவற்றிற்கு சி.ஈ.க்கள் இருக்கிறார்கள். கூட்டுறவு துறையில் ரிஜிஸ்டிரார் இருக்கிறார், போலீஸ் துறையில் டைரக்டர் ஜெனரல் இருக்கிறார். அவர்களெல்லாம் கீழே இருந்து வருகின்ற அத்தனை திட்டங்களையும் சரிபார்த்து. ப்ராசஸ் செய்துதான் இங்கு அரசாங்கத்திற்கு அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பப்பட்ட திட்டங்கள் மீண்டும் அரசாங்கத்திற்கு வந்து இங்கே கிளார்க் லெவலில் இருந்து சீப் மினிஸ்டர் லெவல் வரையில் ப்ராசஸ் செய்யப்படுகிறது. இப்படி மீண்டும் ப்ராசஸ் செய்கிற அனாவசியமான தாமதத்தை மட்டுமல்ல பல்வேறு மட்டத்தில் பல்வேறு பைல்கள் திருப்பி அனுப்பப்படும் சூழ் நிலையும், அதன் காரணமாக பணிகள் செய்வதில் காலதாமதமும் ஏற்படுகிறது.

இதற்கு முன்பு தமிழகத்தில் ஒரு முறை இருந்து வந்தது. டி.ஆர்.டி. ஆக இருப்பவர், இங்கே ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மென்டில் அடிஷனல் செக்ரடரியாக இருப்பார். ஆகவே, அவர் அனுப்புகிற திட்டங்களையெல்லாம் உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார். இந்த மாதிரியான முறைகள் பஞ்சாப் மாநிலத்திலும் மேற்கு வங்கத்திலும் இருப்பதால்தான், கல்வித் துறையில் பெரிய முன்னேற்றம் வந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தத்துறையின் தலைவர்களை அடிஷனல் செக்ரடரி என்றோ அல்லது எக்ஸ்-ஆப்பிசியோ செக்ரடரி என்றோ நியமிக்கப்பட்டு, அவர்கள் எதையும் அரசாங்கத்திற்கு நேரடியாகக் கொண்டு வந்து அந்தத் திட்டங்களை அமல்படுத்துவதற்கு வழிவகைகள் இருக்கும். ஆகவே இ[illegible]



நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அரசாங்க மட்டத்தில் எடுக்கக்கூடிய முடிவுகள் விரைவாகவும் வேக[illegible]மாகவும் இருப்பதற்கும், அப்படி எடுக்கப்பட்டவைகள் விரைவாக[illegible]வும் வேகமாகவும் செயல்படுத்துவதற்கும் அந்த முறை[illegible] உபயோகமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன. அதை எந்தெந்தத் துறையில் செய்யலாம் என்பதை ஆராய்ந்து பார்த்து அந்தத் துறையில் செய்யவேண்டும் என்று சுட்டிககாட்டிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன.

அடுத்து, பொதுப்பணித்துறையைப் பொறுத்தவரையில் முன்னாள் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் சொல்கிறபோது அது ஒரு ஒயிட் எலிபென்ட் என்று வருணித்தார்கள். அந்த நிலைமை இன்றைக்கு இல்லாவிட்டாலும் கூட, அந்தத் துறையிலே இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிற ஒரு மந்த நிலைமையை நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பொதுப்பணித் துறையிலே இருக்கிற இன்ஜினியர்களுக்கு ஒரு மனச்சோர்வு ஏற்பட்டு இருக்கிறது.

[முற்பகல் 11-40]

பொதுப்பணிததுறையில் எஞ்சினியர்கள் பி.இ. படித்து வேலைக்கு வருகிறார்கள். அவர்களோடு படித்தவர்கள் ஹவுசிங் போர்டில், எலெக்டிரிசிட்டி போர்டில் அல்லது வாட்டர் போர்டில் சேர்ந்தால் அவர்கள் வேலையில் சேர்ந்த அன்றைக்கே 'கன்ஃபர்மேஷன்' ஆகிவிடுகிறது. அவர்களுக்கு இவர்களை விட அதிகமாக ஊதியம் கிடைக்கிறது. விரைவிலே ப்ரமோஷன் கிடைக்கிறது. ஆனால் பொதுப்பணித் துறையில் 10 ஆண்டு, 15 ஆண்டு ஆனாலும்கூட பதவிஉயர்வு சுலபமாக கிடைப்பதில்லை. ஒன்றாகப் படித்தவர்கள் ஒரே வயது உடையவர்கள், ஒரே வகையான பட்டம் பெற்றவர்கள். அவர்களுக்கிடையே இந்த வித்தியாசம் இருப்பதால் அவர்களுக்கு ஒரு மனச்சோர்வு இருக்கிறது. அவர்களுடன் படித்தவர்கள் எஞ்சினியரிங் கல்லூரியில் ஆசிரியர் வேலைக்கு சேர்ந்தால் அவர்களுக்கு 700 ரூபாய் சம்பளத்தில் தொடங்குகிறது. பொதுப்பணித்துறையில் 650 ரூபாயிலிருந்துதான் சம்பளம் தொடங்குகிறது. மற்ற வாரியங்களில் வேலையில் சேர்ந்தால் அவர்கள் சம்பளம் தொடக்கத்திலேயே அதிகமாக இருக்கிறது. இந்த ஊதிய முரண்பாட்டைப்பற்றி ஆராய்வதற்கு மாநில அரசு சி.வி.ஆர். பணிக்கர் தலைமையில் 'ஒன் மேன் கமிஷன்' அமைத்த[illegible] அந்தக் கமிஷனின் முடிவு என்னவாயிற்று? அந்த முடிவை மறுபரிசீலனை செய்து அல்லது அதை ஆராய்ந்து பார்த்து விரைவில் எஞ்சினியரிங் துறையிலிருந்து ஏற்றத்தாழ்வை ஒழிப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மெரினா கடற்கரையை அழகு படுத்தும் திட்டத்தைப் பற்றியும் பொதுப்பணித்துறை குறிப்பில் சொல்லியி[illegible]கிறார்கள். மெரினா கடற்கரை உலகத்திலேயே இரண்டாவது அழகான கடற்கரை, என்பது நம் அனைவருக்கும் பெருமை[illegible] அளிக்கக்கூடிய ஒன்று. அதே கடற்கரையில் அருமைத் தலைவர் காமராஜ் அவர்களின் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு

பின்னால் உள்ள இடத்தில் 'சில்ரன்ஸ் பார்க்' அமைக்கும் திட்டம் ஏற்கெனவே இருக்கிறது. அந்தத்திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்த்து, அந்த சிலைக்குப் பின்னாலே குழந்தைகள் பூங்கா ஒன்றை விரைவிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பெருமைத் தலைவர் காமராஜ் அவர்கள் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் குழந்தைகள் நலனுக்காகவே அர்ப்பணித்தவர் ஆவார்கள். அதனால் அங்கே குழந்தைகள் பூங்கா அமைக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மொத்தத்தில் போலீஸ் துறையிலும் மற்ற நிர்வாகத்திலும் இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டு இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலைக்கும் சமுதாய சூழ்நிலைக்கும் ஏற்ப சில மாறுதல்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவசியமாக ஆராய்ந்துபார்த்து செய்து இந்தத் துறைகள் மக்கள் நன்மைக்காக அமைக்கப்பட்ட துறைகள் என்ற உணர்வை இந்தத் துறையில் இருப்பவர்களுக்கு ஏற்படுத்தவேண்டுமென்று கூறி, இந்த மானியக் கோரிக்கைகளுக்கு என்னுடைய வரவேற்பைச் சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. சா. கிருட்டிணமூர்த்தி:</u> மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கொழுத்த சிந்தனைகளைத் தீட்டிக்காட்டும் எழுத்து வன்மை செழித்த எண்ணங்களை கொட்டி முழக்குவதில் சிறந்த நாவீறு, அளந்தெடுத்த வார்த்தைகளின் துணைக்கொண்டு அறிவார்ந்த விஷய விளக்கங்களை விவேக முரசம் கொட்டுவதில் தனி வழியும் கண்டு அதிலே பரிபூர்ணமாக வெற்றியும் கண்டு இரு ஆண்டுகள் ஆட்சி செய்து சீரார்ந்த செயல் பலவும் செய்து தமிழகத்து மக்களுடைய இதயங்களில் நீங்காத இடத்தைப் பெற்றவர் பேரறிஞர் அண்ணா. அந்த அண்ணா அவர்களின் இதயத்தில் நீங்காத இடத்தை பெற்றவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அவர் கரத்திலே ஒப்படைக்கப்பட்டுள்ள போலீஸ், தீயணைப்பு மீதான மானிய கோரிக்கைகளின் மீது என் கருத்துக்களை எடுத்து இயம்புகிறேன்.

நாட்டின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு சிந்தாமல் சிதறாமல் கட்டிக் காக்கும் பெரும் பொறுப்பு காவல் துறைக்கு உண்டு. காவல் துறை ஒரு நாட்டிற்கு இன்றியமையாதது. உடலுக்கு கிட்னி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு பலர் எதிர்ப்புகளைத் தெரிவித்த போதும், பலர் பல போராட்டங்களை தூண்டி விட்ட போதும் அமைதியாக இருந்து கட்டுப்பாட்டோடு செயலாற்றிய தமிழக காவல் துறைக்கு எங்களது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்து கொள்கிறோம்.



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களானாலும் சரி, அமைச்சர்களானாலும் சரி, யாரும் ஒரு சாதாரண சிகரெட்டு வாங்குவதற்கு டி.எஸ்.பி.யினுடைய தோளைத்தட்டிக் கொடுக்கின்ற ஆட்கள் இடையாது. பூக்கள் வாங்க எந்த காவல் துறையினரையும் பயன்படுத்தவில்லை. நிச்சயமாக அந்த அளவுக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இருக்கமாட்டார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலின்போது என்னுடைய தொகுதியில் * * * நடத்திய கொடூரமான செயல்களின் காரணமாக தாக்கப்பட்டவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நண்பர்கள் ஆனால் அதற்கு மாறாக அங்கே வழக்குகள் தொடுக்கப்பட்டிருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் மீது நான் தமிழகத்தினுடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அங்கே நடந்த நிகழ்ச்சிகளுக்கு ஒருவிசாரணைக் கமிஷன் அமைத்து அங்கே நடைபெற்ற கொடுமைகளுக்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும். என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சாராயம் நாட்டில் நதிபோல் ஓடுகின்றது என்று கூட்டங்களிலே பேசிவிட்டு வந்திருக்கின்ற * * * நண்பர்களைப் பார்த்து கேட்கிறேன். சாராயம் எந்த காலத்திலே ஓடியது? அதற்குக் கருணை காட்டிய கருணா மூர்த்திகள் யார் என்பதை எல்லாம் நாட்டு மக்கள் அறிவார்கள். இடைப்பட்ட காலத்தில் எங்களுடைய ஆட்சி நீக்கப்பட்டது. அப்படி நீக்கப்பட்டதற்குப் பின்னர் இடைப்பட்ட காலத்தில் நடந்த ஒரு சில நிகழ்ச்சிகளை உங்கள் கண் முன்னால் கொண்டுவர விரும்புகிறேன்.

சட்ட மன்றத் தேர்தல் நேரத்தில் அதிகாரிகளை மாற்றக் கூடாது என்னும் முறை இருந்தும் * * ஆகியோரின் தலையீட்டால் 19-5-1980 அன்று மதுராந்தகம் காவல் நிலையத்திற்கு * * ஆதரவான சப்-இன்ஸ்பெக்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் ஏஜெண்டாகவே செயல்பட்டார். 22-2-1980 அன்று மதுராந்தகத்தில் மக்கள் அதிக நடமாட்டம் உள்ள பகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தாக்கப்பட்டிருக்கின்றனர். அது குறித்து புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. அன்று இரவே புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்களுடைய மன்றத்தைச் சேர்ந்த தலைவர் அகமத் பாட்சா என்பவர் உயிரோடு பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டார். அந்த சப்-இன்ஸ்பெக்டர் குற்றவாளிகளைத் தப்பிவிக்கின்ற வகையில் எப்.ஐ.ஆர். தயார் செய்திருக்கிறார். முக்கிய குற்றவாளிகளை தப்பிவித்து அவர்கள் மீ

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் அகமத்பாட்சா மரணத் துடன் போராடிக் கொண்டிருந்த நேரத்தில் 8 தினங்கள் வரை. சிலரின் தலையீட்டால் மரண வாக்கு மூலம் கூட வாங்கவில்லை இவ்வாறெல்லாம் கவர்னர் ஆட்சி நடைபெற்றநேரத்தில் போலீ ஸார் * * * இதை எல்லாம் நாட்டு மக்கள் சிந்தித்ததன் காரணமாகத் தான் நாம் இன்று ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந் திருக்கிறோம். அதுமட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தேர்தல் காலத்தில் எடுத்தியம்பிய கருத்துக்களில் ஒன்றை நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஆட்சியிலே துப்பாக்கிச் சூடுகள் அதிகமாக நடை பெற்றன என்ற பொய்ப் பிரசாரத்தை எடுத்து இயம்பினார்கள். எதிர்கட்சிக்காரரர்கள். இப்போது எதிர்க்கட்சியாக இருப்பவர் கள் தான் அன்றைக்கு காவல் துறையினைரக் கையிலே வைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது தடியடிப் பிரயோகம் செய்யாமல் மலர் மாரியா பொழிந்து கொண்டிருந்தது துப்பாக்கிகளிலிருந்து பூக்களா வந்து விழுந்து கொண்டிருந்தன என்பதை மதிப்பு மிக்க எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்போது போலீஸ்காரருடைய துப்பாக்கிகள் எல்லாம் காட்சிப் பொருட்களாகவா வைக்கப்பட்டிருந்தன? சிறைச் சாலைகள் எல்லாம் அறச் சாலைகளாகவா மாற்றப்பட்டிருந் தன? போலீஸ்காரர்கள் எல்லாம் புத்த பிட்சுக்களாக மாறி இருந்தார்களா என்ன? யாரைப் பார்த்து இந்த உபதேசம் செய்கிறீர்கள்? கடந்த ஆண்டுகளாக எங்கள் கட்சித் தோழர் களுக்கு நீதிமன்றத்தின் படிக்கட்டுகள் வாடிக்கையான பஞ்ச மொத்தைகளாக அமைந்திருந்தன. இதை எல்லாம் நாங்கள் நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறோம். பல போலீஸ் நிலையங் கள், பல காவல் துறை அலுவல்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் வாடகை கொடுக்கா வீடுகளாக மாற்றப்பட்டிருந்தன. அந்தக் கொடுமைகள் எல் லாம் தமிழகத்து மக்களுக்கு தெரிந்திருக்கின்றன.

அடுத்து இப்போது காவல் துறை திறமையாக செயல்படு கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். டெல்லி மக்கள் தொகைக்கு அமர்த்தப்பட்ட காவல் துறை யினரின் எண்ணிக்கை சென்னை மக்கள் தொகைக்கு அதிகம் என்று சொன்னாலும் டில்லியை விட கற்பழிப்புச் சம்பவங்கள் கொலைகள், கொள்ளைகள் தமிழ்நாட்டில் மிகக் குறைவு இதுவே தமிழ் நாட்டுக் காவல் துறைக்குச் சிறப்பாகும் என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். என்னுடைய தொகுதியிலே காவல் துறையைப் பொறுத்த வரையில் செய்ய வேண்டிய சில பணிகள் பற்றிமாண்பு மிகு முதல்வ அவர்களுக்கு என்னுடைய பணிவான வேண்டு கோள்களை விடுக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





செந்துரை காவல் நிலையம் கூரை வீடாகக் காட்சியளிக் கின்றது. அங்கே போதிய கட்டிட வசதி கிடையாது. காவலர் களுக்கு குடியிருப்பு கிடையாது. எங்கள் பகுதிக்கு உரிய ஆபீஸ் உடையார்பாளையத்திலுள்ளது. இவ்வாறு நீண்ட நெடுந்தூரம் செல்ல வேண்டிய காரணத்தால் மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்றாலும் அவ்வாறு தொடர்பு கொள்ள முடியவில்லை. தொலைபேசி வசதியும் கிடையாது.

[முற்பகல் 11-50]

அதே போல் என்னுடைய தொகுதியிலே பல்வேறு கலவரங் கள் மீண்டும் ஏற்படுகிற போது காவல் துறை அதிகாரிகளுக்கு நாங்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வேண்டு மானாலும் அவர்கள் எங்களிடம் பேச விரும்பினாலும் போஸ்ட் ஆபீஸ் போனில் தான் தொடர்பு கொள்ள வேண்டும். அவர் களிடம் உடனடியாக தொடர்பு கொள்ள போன் வசதியும் கிடையாது. வாகன வசதியும் கிடையாது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் நாகம் பந்தல், கொளத்தூர் சேந்த மங்கலம், பொன் பரப்பி, இரும்புலிக் குறிச்சி ஆகிய பகுதி களில் அடிக்கடி கலாட்டாக்கள், சண்டை சச்சரவுகள் ஏற்படு கின்றன. அதை நான் காவல் துறை அதிகாரிக்கு தெரிவிக்கிற போது அவர்கள் அவைகள் எந்த முறையிலே ஏற்படுகிறது என்று எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை'. என்றுசொல்லு கிறார்கள். ஆகவே பணிவோடு முதலமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன், அந்த பகுதியில் நடைபெறுகிற தகராறுகள் ஆகியவற்றிற்கு யார் காரணம் என் பதை காவல் துறை அதிகாரிகளிடம் விசாரித்து அதற்கு ஒரு முடிவினை கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதிக்கு 15 மைல் தள்ளி தீயணைப்பு நிலையம் இருக்கிறது. இதனால் என்னுடைய பகுதியிலே எங் காவது தீ பிடித்து எரிகிற போது, அவர்களுக்கு ஆபீஸ் மூலம் போன் செய்து அவர்கள் வருவதற்குள் தீ எரிந்து அணைந்து முடிந்து விடுகிறது. என்வே, என்னுடைய தொகுதிக்கு பக்கத் திலேயே, மாத்தூரில் ஒரு தீயணைப்பு நிலையமும், ஆண்டி மடத்தில் ஒரு தீ அணைப்பு நிலையமும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

''திங்கள் பிறப்பினுக்கோ இருள் தேசங்கள் வாழ்த்துரைக்கும்
கங்குல் பிறப்பினுக்கோ இளம் காதலர்கள் வாழ்த்துரைப்பர்
மங்குல் பிறப்பினுக்கோ வயல்கள் வாழ்த்துரைக்கும்
உங்கள் தொண்டிற்கு தமிழ் உலகே வாழ்த்துரைக்கும்''

என்று கூறி என்னுடைய உரைக்கு திரையிட்டு, நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இன்றைய தினம் காவல் துறையைப் பற்றிச் சில கருத்துகளைச் சொல்வதற்கு முன்னதாக, இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினராக வந்ததுடன் முதலிலே கைது செய்யப்பட்ட பெருமை என்னைச் சேரும் என்பதையும் நான் பெருமையாகவே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றம் நடக்கிற நேரத்திலே கை கட்டி நிற்க வேண்டிய நிலையில் கையை காட்ட வேண்டும் என்ற நிலைக்கு என்னை ஆளாக்க வேண்டும் என்று யாருக்கு எண்ணம் இருந்ததோ, யார் அந்த எண்ணத்தைக் கொண்டிருந்தார்களோ. அவர்களால் அப்படி கை காட்டும் நிலைக்கு ஆளாக்கப்பட்டேன் ஆனால் அதற்குக் காரணம் மிக மிக சிறியது என்று நான் கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே பம்மல் பகுதியிலே கடந்த மாதம் 29ஆம் தேதியன்று ஒரு சிறிய கலவரம் நடைபெற்றது. அன்றைய தினம் மாலை மூன்று மணியிலிருந்து இரவு 12-30 மணி வரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டு சரியாக 12-30 மணிக்கு என்னுடைய இல்லத்திற்கு ஒரு நண் பரோடு சென்றேன். அந்த சமயத்தில் என்னுடைய மனைவி வருத்தத்தோடு ஒரு செய்தியைச் சொன்னார்கள். நம்முடைய ஊரிலே இருக்கின்றவர்களும் அருகிலே * * *
* * * * * சிறிய கலவரம் ஏற்பட்டு விட்டது. நீங்கள் இருந்திருந்தால் அதைத் தடுத்திருக்க முடியும் என்று வருத்தத்தோடு சொன்னார்கள்.

நான் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய வேன்களை எடுத்துக் கொண்டு வந்து என்னுடைய வீட்டின் பக்கத்தில் அதிகமான காவலர்களை அழைத்துக் கொண்டு வந்து, ஊரிலே புகுந்து தாய்மார்களை விரட்டி, அங்கிருந்த ஆடவர்களை அந்த வேனிலே ஏற்றிக் கொண்டிருந்த காட்சியை நான் என்னுடைய வீட்டிலே நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தேன்.

அன்றைய தினம் நடந்த நிகழ்ச்சியை நான் உண்மையிலேயே எண்ணிப் பார்க்கிறேன். இவ்வளவு கொடுமையான நிகழ்ச்சி நடந்திருக்க வேண்டுமா என்று சங்கடம் ஏற்பட்டது எனக்கு. நான் அந்த நேரத்தில் இல்லாத காரணத்திலாலே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு கீழ்த்தரமாக பெண்களை நடத்தினார்கள் எவ்வளவு மிகமிக லகுவான வார்த்தைகளை சொல்ல முடியுமோ அந்த அளவுக்குச் சொல்லி அவர்களை நாய் போல் அடித்து விரட்டி விரட்டி அடித்தார்கள். ஆடவர் களில் பல பேர் ஓடி ஒளிந்து கொண்டார்கள். ஒளிந்து கொள்ள முடியாமல் ஏமாந்தவர்கள் கலவரத்திலே ஈடுபடாத தினால் சிலர் கொஞ்சம் தைரியமாக வீட்டிலே இருந்தவர்கள் எல்லோரும் காவல் துறையினால் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

---

* * * மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



நான் சட்ட மன்ற உறுப்பினர் இந்த நிகழ்ச்சி எதிலும் கவனம் செலுத்தாமல் என் வீட்டிலேயே அமர்ந்திருந்தேன். இந்தச் செய்திகளைக் குறிப்பிட்டு அந்தக் கணவர்களின் தாய் மார்கள் என் வீட்டிற்கு வந்தார்கள். நீங்கள் வந்தால்தான் காவல் துறை அதிகாரிகள் விட்டு விடுவார்கள். ஆகவே தயவு செய்து வாருங்கள் என்று என்னை அழைத்தார்கள். நான் சொன்னேன். நான் ரொம்பவும் பொறுமையானவன். பொறுமையானவன் மட்டுமல்ல ரொம்பவும் அமைதியானவன். அமைதி என்னிடம் அதிகமாகக் குடி கொண்டிருக்கிறது. நான் சொன்னேன். இரண்டு கோஷ்டிகளுக்கு இடையே சண்டை ஏற்பட்டிருக்கிறது. நான் புதிதாக சட்ட மன்றத்திற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிற சட்ட மன்ற உறுப்பினர். பொறுமையாக இருந்து நீண்ட நாட்களுக்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன். ஆகவே அவசரப்பட்டு எதையும் செய்துவிடக் கூடாது என்று நான் அமைதியாக வீட்டிலே உட்கார்ந்திருக்கிறேன் கடைசியாக மிக வருந்தத்தக்க செய்தி என் காதுக்கு வந்தது. போனவர்கள் அத்தனை பேர்களையும் அடித்திருக்கிறார்கள். மிக மிக தரக் குறைவான வார்த்தைகளால் பேசி அடித்தார்கள். அந்த விஷயங்கள் எல்லாம் என் காதுக்கு வந்தது. இது நடை பெற்றது 29-ஆம் தேதி இரவு 2 மணி வரையில். அடுத்த நாள் காலை நான் என் இல்லத்தில் இருக்கிறேன். காலை நேரம் ஏறத்தாழ 25 பேர்கள், பார்வையாளர்கள், என் வீட்டுக்கு வந்தார்கள். எனது ஒன்றியத்தைச் சேர்ந்த ஒன்றியத் தலை வரும் என் வீட்டில் இருக்கிறார். சுற்றுப் புறத்தில் இருக்கிற தோழர்கள் அங்கே வந்திருக்கிறார்கள் அந்த நேரத்தில் என் காதுக்கு ஒரு செய்தி வருகிறது.

என் தொகுதியை அடுத்த தொகுதியைச் சார்ந்த * * * அவர்கள் அழைத்து வந்தார்கள் என்று செய்தி வருகிறது. அவர்கள் வந்து என்ன செய்தார்கள் என்று நான் கேட்டேன். போய்விட்டார் என்று சொன்னார்கள், அவர் போய் அரை மணி நேரத்திற்குள் ஏறத்தாழ ஐம்பது பேர்கள் தங்கள் கரங் களில் பட்டாக் கத்தி, கல், செயின் எடுத்துக் கொண்டு பகல் எட்டரை மணிக்கு நான் பார்க்கிற அளவுக்கு ஓடிவருகிற * * * * * நான் உறுதியாகச் சொல்கிறேன் * * * என்று நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. எம். அப்துல் ரசாக்: சட்டமன்ற உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள் 29-ஆம் தேதி ஏதோ நிகழ்ச்சி நடந் ததாகவும், மறுநாள் என்னை அழைத்து பின் பட்டாக்கத்தி எடுத்துக் கொடுத்ததாகவும் சொல்கிறார்கள். நண்பர் அவர்கள் அதற்கு ஆதாரம் காட்டுவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

திரு. பம்மல் நல்லதம்பி: என் மதிப்பிற்குரிய நண்பர் திரு. அப்துல் ரசாக் அவர்கள் நான் சொன்னதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. உள்ளத்தில் எதையோ வைத்துக் கொண்டு

---

* * * *மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

வெளிப்படையாகச் சொன்னார்கள். அதுதான் உண்மை. அவர் போன பிறகு தான் பட்டாக்கத்தியை எடுத்து வந்தார்கள் என்ற குற்றச்சாட்டை சபையில் நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர் வந்துபோன பிறகுதான்......

திரு. துரைமுருகன்: அவர் தன்னிலை விளக்கம் அளிப்பதில் தான் குறுக்கிடவில்லை. ஆனால் உறுப்பினர் திரு. பம்மல் நல்லதம்பி அவர்கள் தன் கன்னிப் பேச்சை பேசுகிறார். அதற்குப் பிறகு அவர்கள் பேசலாமே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவரது பெயரைச் சொன்னதால் அவர் பதில் சொல்ல விரும்புகிறார்.

திரு. துரைமுருகன்: கன்னிப் பேச்சில் குறுக்கிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கன்னிப் பேச்சு சர்ச்சைக்குரிய பேச்சாக இருக்கக்கூடாது, அவர்கள் அலிகேஷன் சொல்லியிருக்கிறார்.

[நண்பகல் 12.00]

திரு. கே. எம். அப்துல் ரசாக்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி சொல்லியது போல், * * * * ஈடுபடவில்லை அதற்கு சம்பந்தமில்லை என்பதை எடுத்துச் சொல்கிறேன்.

(மேசையைத் தட்டுதல்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் சொல்லி விடுகிறேன். நீங்கள் பேசும்போது ஒருவரை குறிப்பிட்டுப் பேசினால் இன்டரப்ஷன் வந்து விடுகிறது. நீங்கள் முதல் தடவையாகப் பேசுவதால், பொதுவாக சர்ச்சை இல்லாமல், இன்டரப்ஷன் வராத வகையிலே மானியத்தின்மீது பேசுங்கள்.

திரு. பம்மல் நல்லதம்பி: அந்தப் பக்கத்திலே இருந்த ஒரு நண்பர் கைதட்டினார். இந்த கை தட்டுகிற பழக்கம் எப்படி வளருகிறது, வளர்ந்தது என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால், அவர்கள் படித்த பள்ளிக்கூடம் அப்படிப்பட்ட பள்ளிக்கூடம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பம்மல் நல்லதம்பிக்கு நான் சொல்கிறேன். இந்த மாதிரி முதல் தடவையாக பேசுகின்ற போது, யாரைப் பற்றியும் தனிப்பட்ட முறையில் கடுமையாகப் பேசாமல், பொதுவாகப் பேசினால் நல்லது. இந்த மானியத்தின் மீது பேசுங்கள்.

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





திரு. பம்மல் நல்லதம்பி: நான் சொன்னது, அவர் வந்து போன பிறகு * * * பட்டாக்கத்தி கொண்டு வந்ததை நான் பார்த்தேன்; பார்வையாளர்கள் அத்தனை பேர்களும் பார்த்தார்கள். அவர்கள் ஓடி வருகின்ற நேரத்தில், என் வீட்டை கல்லால் அடித்தார்கள் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் காட்சியை நான் வீட்டிலே உட்கார்ந்து கொண்டு பார்த்துக் கொண்டிருந்தேன். அடுத்து, நான் பல்லாவரத்திற்கு வருகின்ற நேரத்திலே, இந்த நிகழ்ச்சியைப் பற்றி காவல்துறையிலே..........

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறதா அல்லது நடக்கவில்லையா என்ற விபரத்திற்குள் நான் போக விரும்பவில்லை. அந்த எல்லைக் கோட்டிலே நான் நின்று பார்க்க விரும்பவில்லை. இந்த மன்றத்திலே 234 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நடக்காத நிகழ்ச்சியைக் கூட நடந்ததாக ஒருவர் மீது ஒருவர் தாராளமாக குற்றச்சாட்டை சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்கு குற்றச்சாட்டை இன்னொருவர் மீது சொல்கிறார் என்று சொன்னால், இந்தப் பக்கத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் நடக்காத நிகழ்ச்சியை நடந்ததாக ஒரு சம்பவத்தைப்பற்றியோ அல்லது ஒரு பொருளைப் பற்றியோ பேச முடியும். இதை எப்படி நீங்கள் அனுமதிக்கிறீர்கள் என்பதை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைப் பற்றிய விவரம் விதியினிலே இருக்கிறது. உறுப்பினர் ஒருவர் பேசும் போது, தனிப்பட்ட முறையில் யாரையும் குறிப்பிடக் கூடாது. அவர் பெயரைச் சொல்வது தப்பு. மானியத்தின் மீது பேசுங்கள்.

திரு. பம்மல் நல்லதம்பி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * * அந்தப் பகுதியிலே புகுந்து பெரும் கலவரத்தை உருவாக்கி, தாய்மார்களை மிக இழிவான வார்த்தைகளால் பேசினார்கள். * காரணம், அப்போது ஆடவர்கள் இல்லை. இந்தச் சண்டை வெகு வேகமாக நடக்கும் என்ற காரணத்தால், நான் காவல் துறை அதிகாரியைச் சந்திக்கச் சென்றேன். காவல் துறை அதிகாரி இன்ஸ்பெக்டரைச் சந்தித்தேன். அந்த இன்ஸ்பெக்டர் என்னை பார்த்து உட்காருங்கள் என்றுகூட சொல்லவில்லை. உட்கார வேண்டும் என்று அவர் சொல்ல வேண்டுமென்று நான் சொல்லவில்லை.........

(கூச்சல், குழப்பம்)

காவல் துறை அதிகாரியைச் சந்தித்து சொன்ன நேரத்தில், எங்களுடைய உத்தரவு ஒரு கோஷ்டியைப் பிடிக்க வேண்டுமென்பது, 'நாங்கள் அம்புகள்' என்று சொன்னார். நான் அமைதியாக எழுந்து அவரிடத்தில் நியாயம் கிடைக்காது என்று

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

வந்து விட்டேன். அது 30ஆம் தேதி. 31ஆம் தேதி மீண்டும் ஒரு கலவரத்தை உண்டாக்கினார்கள். அந்தக் கலவரத்தைப் பற்றி நான் அங்கே இருநத காவல் துறை அதிகாரியிடத்தில் சொல்லா மல் அவர்களிடத்தில் நியாயம் கிடைக்காது என்ற காரணத்தால் நேரடியாக டி.எஸ்.பி. அலுவலகம், எஸ்.பி. அலுவலகம், டி.ஐ.ஜி. அலுவலகம் சென்று அவர்களிடம் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வழக்கு இது பற்றிப் பதிவு செய்யப்பட்டிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற விவரங்களை எல்லாம் சொல்லக் கூடாது. ஆகவே, வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தால் இதை விட்டு விட்டு மானியத்தில் வேறு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச வேண்டும்.

திரு. பம்மல் நல்லதம்பி: அடுத்து 1-ம் தேதி எங்கள் இளைக் கழகப் பிரதிநிதியை கத்தியால் குத்த * * * * முயற்சித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நேரமாக் திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * * என்றே சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இது பொருத்தந்தானா, நியாயந் தானா என்பதை இந்த நேரத்தில் தீர்மானிக்க வேண்டியவர் களாக இருக்கிறீர்கள். இப்போதும் அவர் கூறுகிறார் * * * என்று சொல்லும்போது அவர் எதற்கு இதை ஆதாரமாக்கு கிறார் என்பது தெரிகிறது. வழக்குமன்றத்திலே இருக்கும் வழக்கைப் பற்றி இப்படிச் சொல்லுவது பொருத்தந்தானா? யாரோ வந்தார்கள், தங்களுக்கு ஆபத்து ஏற்பட்டது என்று சொல்லட்டும், ஆட்சேபணை இல்லை. குறிப்பிட்டுச் சொல் வார்களானால் அதற்கு மற்றவர்கள் பதில் சொல்ல தாங்கள் அனுமதிக்கப்போகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பற்றி வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதால் உறுப்பினர் கூறுகின்ற கருத்துக் கள் வழக்கு வரும்போது வழக்குக்கு ஆதாரமாக ஆகிவிடும் இன்சிடெண்ட் பற்றிச் சொன்னார்கள். இடையில் * * என்று சொல்லிக்கொண்டு வருகிறார். வழக்கு மன்றத்திற்குப் போகும் போது சம்மந்தப்பட்டவர்கள், வேறு வேறு கட்சிகளைச் சேர்ந்த வர்களாக இருக்கலாம். இங்கே இப்படிப் பேசுவதன் மூலம் வழக்கு மன்றத்தில் சாட்சியங்கள் பாதிக்கப்படலாம். ஆகவே, வழக்கைப் பாதிக்கும் வகையில் உறுப்பினர் பேசியவற்றை நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. துரை முருகன்: நான் தங்களிடம் இருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். * * என்று உறுப்பினர் பேசிய தாகச் சொன்னார்கள். காலையில் மற்றொரு உறுப்பினர் மதுராந்தகம் நிகழ்ச்சியைப் பற்றிப பேசும்போது * * * என்று பேசினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தப் பிரச்சினை வழக்கு மன்றத்தில் இருக்கிறதா என்று தெரிய வில்லை.

திரு. துரை முருகன்: அதிலே ஒருவர் செத்துப் போயிருக் கிறார். வழக்கு நிச்சயமாக கோர்ட்டுக்குப் போகும்.

திரு அ. ரகுமான்கான்: The Case is Pending. இங்கு அண்ணா தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மதுராந்தகத்தில் நடைபெற்ற கொலை நிகழ்ச்சி சம்பந்தமாகப் பேசினார்கள்.

[பிற்பகல் 12-10]

அந்த வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர் களே, அப்படியென்றால் *** என்று குறிப்பிடப்பட்ட அந்த வார்த் தைகள் நீக்கப்படவேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கி றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் அரை மணிநேரததிலே நான் நடவடிக்கை குறிப்பை படித்துப் பார்த்து விட்டு எந்தப் பகுதிகள் நீக்கப்பெறும் என்று சொல்கிறேன்.

திரு. பம்மல் நல்லதம்பி: பாதிக்கப்பட்ட சட்டமன்ற உறுப் பினர் நான், எனக்குத்தான் விஷயங்கள் தெரியும். காவல்துறை யின் போக்கைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்து நான் காவல்துறை யிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்ற படிப்பினையை அறிந்துகொண்டு நான் முதலமைச்சர் அவர்களுக்கும் எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கும் பேரவைத் தலைவருக்கும் தந்தியைக் கொடுத்துவிட்டு, எங்கள் ஊரிலே சமாதானம் ஏற்பட வேண்டு மானால் உண்ணாவிரதம் இருப்பதைத் தவிர வேறு வழியே இல்லை என்ற முடிவுக்கு வந்து நான் உண்ணாவிரதத்தை மேற் கொண்டேன். அதற்கு மக்கள் பெருவாரியாக ஆதரவு தந்தார் கள். ஆயிரக்கணக்கில் வந்து ஆதரித்தார்கள். அதைப் பார்த்த அதிகாரிகளுக்கு என்மீது கோபம் வந்தது, என்மீது கோபம் கொண்டு என்மீது பல குற்றங்களைச் சொன்னார்கள். நான்

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவற்றை ஏற்றுக்கொண்டு அந்தக் குற்றங்களுக்கு எங்கே பதில் சொல்லவேண்டுமோ அங்கே பதில் சொல்லிக்கொள்கிறேன் என்று சொல்லிவந்து விட்டேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் அன்றைக்கு நான் உண்ணாவிரதம் இருந்தபோது அங்கே இருந்த டி.எஸ்.பி. என்னை ஒரு சட்டமன்ற உறுப்பினரிடம் பேசுவதைப் போன்று பேசவில்லை, மிக மிகக் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பேசினார். நீங்கள் விரும்பினால் அந்த வார்த்தைகளை நான் இங்கே எடுத்துவைக்க விரும்புகிறேன். அந்த அளவுக்கு கீழ்த்தரமான வார்த்தைகளைப் பேசினார். எதற்கும் பதில் சொல்லாமல் நான் அமைதியாக இருந்தேன். கடைசியாக என்னை கைது செய்தார்கள். கைது செய்வதற்கு முன்பாக என்னை ஆதரித்து அங்கே ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் வந்திருநதார்கள். என் மனைவிகூட என்னைப் பார்க்க வேண்டுமென்று அங்கே வந்தார்கள். அதை போட்டோ எடுத்தார்கள், பத்திரிகையிலே கூட வந்தது. பார்க்க வந்தார்கள் என்ற காரணத்திற்காக என் மனைவியை தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். என்மீது எவ்வளவு கருணை வைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கிறேன். என்னுடைய மனைவி ஆசிரியராக இருக் கிறார் அனகாபுததூர் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் பணியாற்றுகிறார் அரசியலுக்கு அப்பாற்பட்டவர். கணவன் உண்ணாவிரதம் இருக்கிறபோது மனைவி வந்து பார்க்கக்கூடாதா? ஆகவே இந்த அரசு தனிப்பட்ட முறையிலே என்மீதும், என் குடும்பத்தின் மீதும் கொண்டிருக்கிற அக்கறையை நான் பாராட்டுகிறேன், பேரானந்தம்கூட கொள்கிறேன்.

அடுத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், பல்லாவரம் காவல் நிலையத்திற்கு 307ஐத் தவிர வேறு ஒன்றும் தெரியாது. பல்லாவரம் காவல் நிலையத்திலே 307 யார்மீது போட்டிருக்கிறார்கள் என்றால் மாங்காளி, 307; ராதாகிருஷ்ணன் 307; ராஜாபாதர், 307; சிட்லபாக்கம் கழகச் செயலாளர் தயாளன் 307; எங்களுடைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரைக் கூட நாங்கள் 307 திரு சு. லட்சுமணன் என்று அழைப்பதுண்டு. அவர்மீது பல 307கள். என்னவோ தெரியவில்லை, நான் உண்ணாவிரதம் இருந்த காரணத்தால் 309 மட்டும் போட்டிருக்கிறார்கள். காவல் துறையைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. உங்களை உங்களைச் சேர்ந்தவர்களே கிண்டல் செய்துகொண்டிருக்கிறார்கள். நான் இங்கே ஒரு சில வார்த்தைகளை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

தாம்பரத்தைச் சேர்ந்த என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மாடம்பாக்கத்தில் ஒருவருடைய குழந்தை சென்னை மருத்துவமனையில் காணாமற்போய்விட்டது. அதைத் தேடிப்பிடித்து, ஒரு வாரம் கழித்துத்தான் அந்தக் குழந்தைதிரும்பக் கிடைத்தது.

இதே போன்று கிழக்கு தாம்பரத்தில் ஒரு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிக்கு அருகில் ஒரு இளைஞன் கொலை செய்யப்பட்டுக் கிடந்தான். ஆனால், காவல் துறையினர், மேல்நிலைக்





குடிநீர்த் தொட்டியின் மேலேயிருந்து அவனாகவே கீழே விழுந்து விட்டான் என்று பொய்யாகக் கணக்கிட்டு, ஏதும் செய்யாமல் விட்டு விட்டார்கள்.

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த அனகாப்புத்தூரிலே இருக்கின்ற கழகத் தோழர்களின் மீது இன்றைக்குப் பொய் வழக்குகளையெல்லாம் போட்டு வருகிறார்கள். இவைகளையெல்லாம் கவனிக்கின்றபொழுதும், அன்றாடம் நீங்கள் வாசிக்கின்ற பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளைப் பார்க்கின்றபொழுதும் இங்கே ஆட்சி நடக்கிறதா அல்லது வேறு என்ன நடக்கிறது என்பதைப்பற்றிய ஆதாரங்களைத் தினத்தந்தியைப் படித்துப் பார்த்தால் தெரியும்; மாலை முரசைப் படித்துப்பார்த்தால் தெரியும். அலை ஓசையிலே கூடப்படித்தால்தெரியும். குழந்தைகளை நரபலிக்காகக் கடத்திச் செல்கிறார்கள், கற்பழிக்கப்படுகிறது, கொள்ளையடிக்கப்படுகிறது, இதுபோன்று இங்கே துறைமுகத்திலிருந்து எண்ணெய் மணலிக்கு, குழாய் மூலம் போகிறது. அதை கத்தப்படுத்தி அந்தக் குழாய் எண்ணெய் தண்டையார்பேட்டைக்கு வேறு வழியாகப் போகிறது. இடையில் சமூக விரோதசக்திகள் பேரல் பேரலாக எண்ணெயைக் கடத்துகிறார்கள். அதற்காகக் காவல்துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் மாமூலாகக் கொடுக்கப்படுவதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அதே போன்று அண்ணா நகரில், ஆவடி ரோட்டில் கற்பழிப்பு, கொள்ளை, கொலை, சிமெண்ட், இரும்பு ஆகிய இவைகள் கடத்தப்படுவது போன்ற இந்தச் செய்திகள் பத்திரிகைகளில் வராமலில்லை. அந்த அளவிற்குப் பயம் அங்கே இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, காவல்துறை, மாவட்ட நிர்வாகம், பொதுப் பணிகள் கட்டிடங்கள், நீர்ப்பாசனப் பணிகள், பொதுப்பணிகள் பணியாளரும், கருவிகளும் இயந்திர சாதனங்களும் என்ற மானியங்களின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

பிரச்சனைகளுக்கு ஆளாவதும், பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதும் காவல்துறையினுடைய தலையாய பணியாக, யார் ஆட்சி பீடத்திலே இருந்தாலும் நடத்தப்பட்டு வருகிறது. கருதப்பட்டு வருகிறது என்பது வெளிப்படையான உண்மையாகும். சட்டங்களைப் பாதுகாக்க, நீதியை நிலைநிறுத்த ஒழுங்கைக்காப்பாற்ற, அமைதியைத் தவழவிட, ஒழுங்கை நிலைநாட்ட கண்டிப்பாக இந்தக் காவல் துறையினுடைய பங்கு பெரும் பங்காக விளங்கி வருகிறது என்பது நாம் அறிந்திருக்கின்ற நிலைமைகளாகும்.

இங்கே முன்னால் உரையாற்றிய பிரதான எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்கள் காவல்துறை தங்களுக்கு இழைத்த கொடுமைகளைக் கோடிட்டு காண்பித்து, ஆளுங்கட்சியினுடைய வரிசையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் கைதட்டி வரவேற்ற பொழுது இந்தக் கைதட்டுகின்ற பழக்கம் உங்களுடைய பள்ளிக் கூடத்திலேயிருந்து வந்தது, எங்கிருந்து வந்தது என்று எனக்குத் தெரியும் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆளுஙகட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கை தட்டுகின்ற பள்ளிக் கூடத்திலே படித்தவர்கள்தான், ஆனால் தலை தட்டுகின்ற பள்ளிக்கூடத்திலே நிச்சயமாகப் படிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட இதே பள்ளிக்கூடத்திலே படித்துப் பார்த்தார்கள், தேறமுடியுமா என்று பார்த்தார்கள்; தேறவில்லை, எனவே வேறொரு பள்ளிக்கூடத்திலே உட்கார்ந்திருக்கிறார்கள். ஆகவே, பள்ளிக் கூடங்கள் மாறியிருக்கின்றன.

திரு. பம்மல் நல்லதம்பி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், தந்தை பெரியார் பள்ளியிலும், பேரறிஞர் அண்ணா பள்ளியிலும் படித்தவன்; தெரியாமல் கொஞ்ச நாள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

[பிற்பகல் 12-20]

முதலிலேயேபம்மல் நல்லதம்பிக்குச் சொன்னேன். முதல் கன்னிப் பேச்சிலே பிரச்னை இல்லாமல், தொகுதியைப் பற்றி மட்டும் பசுங்கள் என்று சொன்னேன். பம்மல் நல்லதம்பிதான் பிரச்னையைத் துவக்கினார். சர்ச்சையை உண்டுபண்ணிவிட்டார். ஆகவே, இதோடு விட்டுவிடுங்கள்.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கும் நான் மறுப்பைச் சொன்னேன் என்று சொன்னால், விவாதங்களே இங்கே அடிப்படை பொருளாக எடுத்து வைக்கப்படும் என்ற நிலைமைக்கு ஒரு முற்றுப் புள்ளியைத் தந்து, மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய வாதத்தைத் தொடங்கலாம் என்று கருதுகிறேன்.

காவல்துறை மானியத்தைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்கிற பொழுது, ஜாதிக் கலவரத்தால், இனக் கலவரத்தால், பல்வேறு போராட்டங்கள் எழுந்த காலையில், கொள்ளை அடிக்கின்ற பேர் வழிகளைப் பிடிக்கப் போகின்றபொழுது, திருடர்களை, களவு செய்கின்றவர்களைக் கைது செய்வதற்காக காவலர்கள் எத்தனித்தபொழுது அவர்களுடைய கத்தி வீச்சால், அல்லது அவர்களுடைய துப்பாக்கி முனையால், அல்லது அவர்களுடைய



பயங்கரமான வன்முறையால், கொலைக்கு ஆளாக்கப்பட்டு மடிந்த காவலர்கள், இறந்துபோன காவலர்கள், அந்தத் தியாகச் சுடர்களுக்கு என்னுடைய வாழ்த்தினை, அஞ்சலியை, இந்த நேரத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

குறிப்பாக நான் ஒன்றை சொல்லியாக வேண்டும். அதிர்ச்சிகள் அனுபவங்களை உருவாக்குகின்றன. அனுபவங்கள் அந்த அதிர்ச்சிகளைச் சமாளிக்கின்றன. எதற்காக இதை நான் கோடிட்டுக் காட்டுகிறேன் என்று சொன்னால், 1972ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள் விலக்கப்பட்டதற்குப் பிறகு ஒரு புதிய எழுச்சியை இந்தத் தமிழ்ச் சமுதாயம் கண்டது என்பது மறுக்க முடியாத ஒரு உண்மையாகும். ஆல் போல தழைத்து, அருகு போல வேரூன்றி, மிக உன்னதமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய அமைப்பு தவழ்கிற குழந்தையாக இந்தத் தமிழகத்தினுடைய தொட்டிலில் கிடந்த காலையிலேதான் பல்வேறு பொய் வழக்குகள் படையெடுத்து வந்தன என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. 25,000 க்கு மேற்பட்ட வழக்குகள் ஏற்கனவே இந்த மாமன்றத்திலே எடுத்துவைக்கப்பட்டாலும் அதை நிழல்படமாக, அந்த நிகழ்ச்சிக்குறிப்பை இங்கே சொல்லிக் காட்டுவது என்னுடைய கடமை என்ற முறையிலேதான் கடந்த காலத்திலே, மறைந்த காலத்திலே இறந்த காலத்திலே நடந்து விட்ட நிகழ்ச்சிகளை நீங்கள் கண்ணுற்றுப் பார்க்கவேண்டுமென்று உங்களை இன்றைக்கு மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாமரைக்கனி என்ற சட்டமன்ற உறுப்பினரிலேயிருந்து மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் வரை, ஏன் இன்னும் ஒரு படி மேலே போய், புரட்சித் தலைவர் வரை அந்தப் பொய் வழக்குகள் விஸ்வரூபம் எடுத்துவிட்டன என்பது மறுக்க முடியாத ஒரு உண்மையாகும். அந்த அதிர்ச்சிகள் படிப்படியாக வந்துகொண்டே இருந்தன. 1972ஆம் ஆண்டிலிருந்து என்று நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். அந்த அதிர்ச்சிகளை இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய இதயத்தில் பசுமையாக ஏற்றி வைத்துக் கொண்டது. அதற்குப் பிறகு பல்வேறு அதிர்ச்சிகளை நாங்கள் சந்தித்து இருக்கிறோம். காவல் துறையை மையமாக, பகடைக்காயாக, அடிப்படைக்கருவாக, அடிப்படைக் கருவூலமாக வைத்து விளையாடியதனுடைய கோரத்தனத்தைத்தான் அந்தப் பொய்வழக்குகளிலே சந்திக்க வேண்டிய துர்பாக்கியமான நிலை இன்றைய ஆளுங்கட்சிக்கு அன்றையதினத்திலே ஏற்பட்டது என்பதை நான் வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ள விழைகின்றேன். அதற்குப் பிறகு ஆட்சிப பீடத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏறியதற்குப் பிறகு, அமர்ந்ததற்குப் பிறகு

3 ஆண்டு காலத்தில் உருவான போராட்டங்கள்—உருவான-போராட்டங்கள் என்றுகூட நான் சொல்ல மாட்டேன், உருவாக்கபட்ட போராட்டங்களின் எண்ணிக்கை கணக்கிலே அடங்காது. அந்தப் போராட்டங்கள் வன்முறையாளர்களால் அல்லது வன்முறையை மாத்திரமே மையமாக வைத்துக்கொண்டு ஒரு கோரத்தனமான விளையாட்டுவிளையாட வேண்டுமென்ற எண்ண உணர்ச்சியிலே மிதந்து கொண்டிருக்கிறவர்களால் தூண்டிவிடப்பட்டது என்று நான் சொல்லத் தயாராக இல்லை—தூண்டிவிடப் பட்டிருக்கலாமோ என்ற ஐயத்தை, சந்தேகத்தை நான் வைப்பது தவறாக இருக்காது. அப்படிப்பட்ட நேரத்தில், 3 ஆண்டு காலத்திலே ஏற்பட்ட அதிர்ச்சிகள் ஒரு அதிர்ச்சி அல்ல, இரண்டுஅதிர்ச்சி அல்ல, ஆயிரமாயிரம் அதிர்ச்சிகள் அலைமோதி வந்துகொண்டிருந்தன. அந்த அதிர்ச்சிகளையெல்லாம் 3 ஆண்டுகள் கழகத்தினுடைய ஆட்சி சந்தித்தது, அமைச்சரவை—அரசு தீர்த்திருக்கிறது.

அதற்குப் பிறகு திடீரென ஆட்சி கலைக்கப்படுகிறது. ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு இந்த 3 மாத காலத்தில் என்னென்ன விளைவுகள் நடைபெற்றன, என்னென்ன விபரீதங்கள் நடைபெற்றன? நாட்டு மக்களுக்குத் தெரியாதா? அல்லது அந்தக் கட்சிகளை எல்லாம் சேர்ந்து சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் இங்கே வந்திருக்கக் கூடியவர்கள் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அந்த இலக்கு இருக்கிறது. அந்த நிலைமை இருக்கிறது. இந்த 3 மாத காலத்திலே எப்படிப் பட்ட விளையாட்டுகள் நடைபெற்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு நான் எனது தொகுதியான திருப்பூர் நகரத்திற்குப் போகிறேன். அப்படி திருப்பூர் நகரத்திற்குப் போகின்றபோது அங்கே பயங்கரமான சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசியல் கட்சிகளின் வரலாற்றிலேயே நடைபெறாத ஒரு சம்பவம் திருப்பூர் நகரத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தது. திருப்பூர் நகரத்திலே உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அலுவலகத்தில் போலீசார் புடை சூழ்ந்து வருகிறார்கள். எல்லா போலீசாரையும் நான் குற்றம் சொல்ல விரும்பவில்லை. அவர்களுக்கு மனிதாபிமான உணர்வு இருக்கிறது; மனிதாபிமான தன்மை இருக்கிறது; மனிதாபிமான உணர்வு வேரூன்றி கிடக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அந்தப் போலீசாருடைய அதிகாரத்தை தவறாக பயன்படுத்தக்கூடிய ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மேலே வருகிறார். அந்த அலுவலகத்திற்கு வருகிறார். அங்கே இருக்கிற கழகத் தோழர்—தொகுதி அமைப்பாளர் பழனிச்சாமி என்ற பெயர்—அவரை அடிக்கிறார். புரட்சித் தலைவர் படங்களை உடைத்தெறிகிறார். போன் அடித்து நொறுக்கப்படுகிறது. மேசை நாற்காலிகள் உடைத்து எறியப் படுகின்றன. ரணகளங்கள் இழையோடிக்கொண்டு இருக்கின்றன. ரத்த தாயத்தை சொல்லிச் சொல்லி அடிக்கிறார்கள். உங்கள் ஆட்சி



கவிழ்க்கப்பட்டுவிட்டது, உங்கள் ஆட்சி ஒழிந்து விட்டது. நாங்கள்தான் வரப் போகின்றோம் என்று சொன்னார்கள். காக்கி சட்டை அணிந்தவர்கள் சொல்லலாமா? ஆட்சிக்கு வரப் போகிறோம் என்ற மதப்பில், எண்ணத்தில், கோணங்கித்தனமான வாதத்தை எடுத்துச் சொன்னார்கள். அந்த தோழர் ஆஸ்பத்திரியில் படுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கான ஆதாரங்கள், படங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் விரும்பினால் அந்தப் படங்களை அவரிடத்திலே கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

இந்த நிலை திருப்பூர் நகரத்திலே மட்டும் அல்ல. அடுத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகம் திருப்பூர் நகரிலே போலீசாரால் தாக்கப்படுகிறது. இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகம் தாக்கப்படுகிறது. கோவையில்உள்ள குனியமுத்தூரிலும் இதே நிலைதான். அங்கே உள்ள எம். ஜி. ஆர். மன்றம் தாக்கப்படுகிறது. அங்கே உள்ள தோழர்கள் அடிக்கப்படுகிறார்கள். இதே நிலைதான் நாடு முழுவதும். இந்த வியாதி நாடு முழுவதும் வியாபித்து இருக்கிறது. தேர்தல் நேரத்திலே மதுராந்தகத்திலே நடைபெற்ற அடுக்கடுக்கான சம்பவங்கள். அடுக்கடுக்கான தொடர்புடைய சம்பவங்கள் எல்லாம் நடைபெற்று இருக்கின்றன இந்த 3 மாத காலத்தில். அந்த அதிர்ச்சிதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு நல்ல அனுபவமாக காட்சி அளித்துக் கொண்டு இருக்கிறது. 1972ஆம் ஆண்டில் இருந்து 1980-ம் ஆண்டு வரை இந்த நாட்டிலே உருவாக்கப்பட்ட, இந்த நாட்டிலே தோற்றுவிக்கப்பட்ட அதிர்ச்சிகள்தான் முதலமைச்சர் புரட்சித் தலைவருக்கு அனுபவங்களாக அமைந்திருக்கின்றன. அந்த அனுபவங்கள் நிச்சயமாக எப்படிப்பட்ட அதிர்ச்சிகள் வந்தாலும் அனுபவங்கள் அந்த அதிர்ச்சிகளை சமாளிக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உடன் பிறந்தே கொல்லும் வியாதியைப் போல பச்சோந்தித் தனத்தின பிரதிபலிப்பைப் போல, விஷத்தை உள்ளடக்கும் மனோகரத் தனங்கள் எல்லாம் அங்கே கொடி கட்டிப் பறந்தாலும் கூட, அவற்றை எல்லாம் துரும்பாக மதித்து, தூசாக நினைத்துத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்த அதிர்ச்சிகளைத் தாங்கிக் கொண்டு அனுபவங்களைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

சமீப காலமாக குறிப்பாக தேர்தலுக்குப் பின்னாலே நடந்த விளைவுகளை நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும். ஜாதிப் பிரச்சினைகள் தலை தூக்கி நின்று கொண்டு இருக்கிறது. ஜாதி பிரச்சினைகள் விஷம் போல வளர்ந்து கொண்டிருக்கிறது. இது தேர்தலுக்குப் பின்னாலேதான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் பார்ப்பன எதிர்ப்புக் குரல் இன்று தமிழகம் முழுவதும் எதிரொலித்துக் கொண்டு இருப்பது

அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். பார்ப்பனர்கள் கூடாது. பார்ப்பனர்களை அழிக்க வேண்டும், பார்ப்பனர்களை ஒழிக்க வேண்டும் என்கிற கூக்குரல் இந்த நாட்டிலே எழுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்த ஜாதி துவேஷம் வளரலாமா?

(பிற்பகல் 12-30)

இந்த ஜாதி உணர்வுகள் வளரலாமா? காவல் துறையைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள், காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கண்ணுக்கு இந்தக் கூக்குரல்கள் எல்லாம் புலப்படவில்லையா, காதுகளுக்கு இந்தக் கூக்குரல்கள் எல்லாம் கேட்கவில்லையா, இப்படி எழுப்பிக் கொண்டு இருக்கிறார்களே அதைக் கண்காணித்துக் கொண்டு இருக்கிறீர்களா என்கிற கேள்வியைத் தான் இங்கே நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு இன்னொன்றைச் சொல்லிக் காட்ட விரும்புகிறேன். ஒரு பத்திரிகை சொல்கிறது. 'கோவில் மணியாட்டிக் கொடுத்த பார்ப்பன கும்பல்' இன்னமும் சொல்கிறது. ''ஆரிய நாயே வெளியே வா'' குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் சங்கரய்யா அவர்கள் ''ஐயரைப் பார்ப்பான் என்று சொன்ன காலம் போச்சு'' என்று சொன்ன காரணத்திற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை பயங்கரமாகத் தாக்கியிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இந்த நாட்டைப் பிடித்த எலும்புருக்கி நோயாம். பூணூலைக் கழற்ற முடியாதவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியாம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்து பூணூலைக் கழற்ற முடியாதவர்கள் என்று சொல்வதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

கோஷங்கள் என்ன தெரியுமா? ''ஒழிப்போம், ஒழிப்போம் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்போம்'', 'ஜாதியைப் பாதுகாக்கும் சங்கராச்சாரியர்களே வெளியேறு' உத்யோக மண்டலமா? பூணூல் வேலியா? 'வேலை கொடு, வேலை கொடு, பார்ப்பனர் அல்லாதாருக்கு வேலை கொடு''. ஒருமைப்பாடு இங்கே கொடி கட்டிப் பறந்து கொண்டு இருக்கிறது.

'வேலை கொடு, வேலை கொடு, பார்ப்பனர் அல்லாதாருக்கு வேலை கொடு', 'அரசு அலுவலகங்கள் பார்ப்பனர்களின் சத்திரங்களா?'. ரேடியோவும், டி.வி.யும் பூணூல்களின் மடமா? அக்ரஹாரத்துக் கூடமா, தேசிய மயமாக்கப் பட்ட பூணூல் சத்திரங்களா? நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன்.

அந்தப் பத்திரிகையிலே ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். அசாம் மாநிலத்தில் எவ்வளவு பெரிய கிளர்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதை அன்றாட





பத்திரிகையின் மூலம் படித்துக் கொண்டு இருக்கிறோம், பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அந்தப் பத்திரிகை என்ன எழுதிக் கொண்டு இருக்கிறது என்றால்——'அஸ்ஸாம் மாநிலத்தில் அஸ்ஸாம் மக்களை விட வெளியார் தொகையில் அதிக எண்ணிக்கை பெருத்து விட்டு நிலையில் பெரும்பான்மைப் பதவிகளை கபளீகரம் செய்வது தவிர்க்க முடியாத கட்டம். ஆனால் இங்கே தமிழ்நாட்டில் மக்கள் தொகையில் தமிழ் மக்களை விட மிகக் குறைவாக இருக்கும் நிலையில் பார்ப்பான் பெரும்பாலான பதவிகளை வேரோடு பிடுங்கி, சாறு உறிஞ்சுகிறானே அது எப்படி ? தமிழ் நாட்டிலே பணியாற்றும் ஐ. ஏ. எஸ், அதிகாரிகளின் புள்ளி விவரத்தை எடுத்துப் பாருங்கள். அந்தப் பத்திரிகை கோடிட்டுக்காட்டியிருக்கிறது.

நான் இன்னும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 'கட்டையிலே கோடாறி வெட்டு ஒரே இடத்தில்தான் விழ வேண்டும். வெட்டு சிதறினால் கட்டை உடையாது. விறகும் ஆகாது. ஆகவே, ஒரே இடத்தில் எல்லோரும் பார்ப்பானை அடிப்போம். இது நாட்டுக்குத் தேவையான கோஷம்தானா? இந்த நேரத்தில் தேவையான, அவசியமான காரியமா?

மார்க்ஸை பூணூல் போட்டு கட்டி வைத்து விட்டானே பாவிகள்? மார்க்சை பூணூலே போட்டு கட்டி வைத்து விட்டார்கள். அப்பாவி தமிழக இளைஞர்களை சோசலிச வாலிபர் முன்னணி என்ற பெயரால பாழ் படுத்துகிறார்கள் என்றெல்லாம் போட்டு இருக்கிறார்கள்.

நடந்து முடிந்த தேர்தலிலே விளைந்துவிட்ட கோபங்கள், தாபங்களாக, வேகங்களாக, வேதனைகளாக வெளிப்பட்டுக் கொண்டு இருப்பதைத்தான் தன்னுடைய பாணி என்ற முறையிலே கைக்கொண்டு இருப்பது நியாயம்தானா?

நான் எதற்காக இதைச் சொல்ல வருகிறேன் என்றால், பூணூல் அணிந்து இருப்பவனை யெல்லாம் தீயிட்டுப் பொசுக்கி விட்டால், இந்தச் சமுதாயம் சுபிட்சம் அடைந்து விடும் என்று கருதிக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு மக்கள் குரல் டி. ஆர். ஆர்., ஒரு மணியனை வைத்துத்தான் இந்தச் சமுதாயத்தை எடை போட வேண்டுமா? ஒரு துக்ளக் 'சோ'வை வைத்துத்தான் இந்தச் சமுதாயத்தின் அளவுகோலை அளந்து பார்க்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலையிலே நாம் இருக்கிறோமா? அப்படி எடை போடுவதாக இருந்தால், அது அரசியல் நாகரீகத்தின் பலத்தை அல்ல, அரசியல் பலகீனத்தின் எல்லைக் கோட்டைத்தான் காட்டுகிறது.

ஒரு டி. ஆர். ஆரின் பேனா முனை துள்ளி வரும் வேலாக சில பேர்களின் நெஞ்சைத் துளைத்தது என்று சொன்னால், அதற்கு நாங்கள் பொறுப்பாக முடியுமா ? அதற்கு மற்ற

வர்கள் பொறுப்பாக முடியுமா? ஒரு டி. ஆர். ஆர்-ன் பேனா
முனை பாய்ந்து வரும் ஈட்டியாக வந்து விழுந்தது என்று
சொன்னால் அதற்கு யார் பொறுப்பாக இருக்க முடியும். அதற்கும்
எப்படி மற்றவர்கள் பொறுப்பாக இருக்க முடியும்? ஒரு
டி. ஆர். ஆர்-ன் பேனா முனை ஹைட்ரஜன் குண்டாகக் கூட
வெடிக்கலாம், அதைத் தாக்குப் பிடிக்கவேண்டிய தைரியத்திலே
தான் அரசியல் பிரவேசங்களை நாம் நடத்திக் கொண்டு இருக்
கிறோம். எனவே பார்ப்பான் எதிர்ப்பு இன்றைக்கு என்று
சொன்னால், நாளைக்கு, அரிசன எதிர்ப்பு. அதற்குப் பிறகு
முதலியார் எதிர்ப்பு, அதற்குப் பிறகு கவுண்டர் எதிர்ப்பு,
அதற்குப் பிறகு நாடார் எதிர்ப்பு, அதற்குப் பிறகு தேவர்கள்
எதிர்ப்பு, அதற்குப் பிறகு முஸ்லீம்கள் எதிர்ப்பு. இந்த எதிர்ப்பு
கள் எல்லாம் இந்த நாட்டிலே நடைபெற்றுக் கொண்டு இருந்தால்
நிலைமை எங்கே போய் முடியும்?

1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3-ம் நாளன்று இத்த
லாரில் படகர் வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கும், படகர்
அல்லாத வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கும் சண்டை, கலவரம்
மூண்டதா இல்லையா, அதை இந்த அவையில்
எடுத்து வைத்தார்களா இல்லையா? தக்கலையில் முகமதியர்
களுக்கும் இந்துக்களுக்கும் இடையே தகராறு கலவரம்
பட்டதா இல்லையா? பாலக்கோட்டில் இந்து முஸ்லீம் கலவரம் ஏற்
ஏற்படவில்லையா? முதுகுளத்தூரில் தேவர்களுக்கும் அரி
சனங்களுக்கும் இடையே கலவரம் மூளவில்லையா? உஞ்சனை
யில் நாடார்களுக்கும், அரிசனங்களுக்கும் இடையே
கலவரம் ஏற்படவில்லையா? பண்ருட்டியில் ஜாதி இந்துக்
களுக்கும் அரிசனங்களுக்கும் இடையேகலவரம் ஏற்படவில்லையா?
மேல்விஷாரத்தில் இந்து முஸ்லீம் கலவரம் ஏற்படவில்லையா?
ஜாப்ராப்பேட்டையில் சாதி இந்துக்களுக்கும், அரிசனங்
களுக்கும் இடையே கலவரம் ஏற்படவில்லையா? இந்த
நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக இந்த நாட்டிலே இருக்கவேண்டுமா?
இந்த நிகழ்ச்சிகள் தொடர் நாவலாக இருக்க வேண்டுமா?
இதை நாம் அனுமதிக்கப் போகிறோமா? ஆகவே, காவல்
துறையினர் இந்த ஜாதி துவேஷத்தை யார் கிளப்பினாலும்,
ஜாதி சண்டை நடைபெற வேண்டுமென்று யார் ஆலவட்ட
மிட்டாலும் எந்த அரசியல் குறுக்கிட்டாலும் அவர்களை சிறை
பிடித்து சிறை கொட்டத்திலே அடைத்து வைக்க வேண்டியது
காவல் துறையினரின் கடமை என்பதை இங்கே பகிரங்கமாக
எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இதைச் சொன்னால் நீங்கள் எல்லாம் திராவிட பாரம்
பரியமா? தந்தை பெரியாரின் வழியில் வந்தவர்களா? பேரறிஞர்
அண்ணா வழியில் வந்தவர்களா? பார்ப்பானை ஆதரிக்கிறீர்
களா என்று கேட்பார்கள். பார்ப்பனியத்தை எதிர்ப்பதில்
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒருமித்த கருத்தைக்
தான் கொண்டிருக்கிறது. அதைத்தான் புரட்சித் தலைவரவர்கள்



பேசும்போது எடுத்துச் சொன்னார்கள். பார்ப்பனியம்
இன்றைக்கு எங்கே இல்லாமல் இருக்கிறது? எந்தச் சமுதாயத்தில்
இல்லாமல் இருக்கிறது? பார்ப்பனியம் எல்லாச் சமுதாயத்தி
லேயும் கொடிகட்டி பறந்து கொண்டிருக்கிறது. அந்த பார்ப்
பனியத்தை ஒழிக்க வேண்டுமே தவிர, ஒரு தனிப்பட்ட பார்ப்
பானை ஒழிக்க வேண்டுமென்று, ஐயரை ஒழித்துவிட வேண்டு
மென்று வெற்று கோஷம் போடுவதால் நாடு சுபீட்சத்தை
நோக்கி பயணம் ஆகாது. அதுவல்ல இப்போதுள்ள பிரச்
சனை என்பதை நான் கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டவனாக
இருக்கிறேன்.

பார்வைகளையும், இலக்குகளையும், நோக்குகளையும்
விசாலமாக்க வேண்டுமே தவிர அதற்கு எல்லைக்கோடு நிர்ணயம்
செய்து கொள்வது என்பது விவேகத்தின் அடையாளம் அல்ல.
அது விபரீதத்தின் முதல் படி என்பதை பணிவன்போடு தெரி
வித்துக்கொள்கிறேன்.

கட்டுத்தனமாக எந்த ஜாதியை யார் சாடினாலும்
அதைக் கண்டிக்கிற பொறுப்பு காவல் துறைக்கு இருக்கிறது.
அந்தக் காவல் துறை பொறுப்போடு பணியாற்றத்தான் சங்க
அமைப்பு அவர்களுக்கு இந்த தமிழகத்தில் உருவாக்கப்பட்டது.
காவல் துறையினர் சங்க அமைப்பை வைத்துக் கொள்ளலாம்;
உரிமைக்குப் போராடலாம்; தங்களுடைய ஜீவ கீதத்தை
எடுத்துச் சொல்லலாம்; தங்கள் இதயத்தின் அடித்தளத்திலே
ஊன்றிக் கொண்டிருக்கிற உணர்வுகளுக்கு உருவகம் கொடுக்
கலாம்; எடுத்துச் சொல்ல நியதி இருக்கிறது. நாங்கள் சங்க
அமைப்பு தருகிறோம். அவர்களுடைய சிந்தனைகளை நாங்கள்
சிறைப்படுத்தவில்லை. காவல் துறையினர் எண்ணத்தை
நாங்கள் குருடாக்கவில்லை. அவர்களுடைய சங்கடங்களைத்
தீர்க்க சங்கம் அமைப்பு. அந்த சங்க அமைப்பை புரட்சித்
தலைவர்தான் போலீஸ்காரர்களுக்கு அமைத்துத் தந்தார்கள்
என்பது ஒரு சரித்திர முக்கியத்துவம், ஒரு வரலாற்றுத் திருப்பம்,
நியாயமான கோரிக்கைகளை எழுப்பும்போது நாங்கள் கேட்க
மாட்டோம் என்று சொல்லுகிற அரசு இந்த அரசு அல்ல.
அந்த அமைப்பு காவலர்களுக்கு ஒரு கவசமாக, ஒரு குறிப்பிட்ட
சூழ்நிலைக்கேற்ப சாதகத்தை அமைத்துக் கொள்ளும்
சங்கமாக அந்த சங்கம் இருந்து வருகிறது என்பதை நான்
பணிவன்போடு உங்கள் மத்தியிலே எடுத்துச் சொல்ல கடமைப்
பட்டிருக்கிறேன்.

121 ஆண்டு கால வரலாற்றை தன்னுள்ளே அடக்கி
வைத்துக் கொண்டிருக்கிற இந்த காவல் துறை, 1859 ஆம்
ஆண்டிலே இருந்து இந்த நாள் வரை காலத்தின் சூழ்நிலைக்கு
ஏற்ப பல்வேறு மாறுதல்களை செய்து வருகிறது. 'மெட்ராஸ்
ஆக்ட்' என்று சொல்லக்கூடிய அந்த சட்டம்தான் பல மாநிலங்
களுக்கும் திசை காட்டும் தீபஸ்தம்பமாக காட்சியளிக்கிறது

என்பது மறுக்கமுடியாத உண்மை. 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்ட காவல் துறை இன்றைக்கு குறைந்த அளவிலேதான் காவலர்களை வைத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் அதன் விளைவு எவன என்பதையும் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். உண்மை. வரவேற்க கடமைப்பட்டிருக்கிறோம். காவல் துறையினர் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும்; அவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் காட்ட வேண்டும்; சட்டத்தை, ஒழுங்கை, நீதியை பாதுகாக்க வேண்டுமென்றால் அதைவிட வேறு வழியில்லை என்பதை நான் இங்கே கோடிட்டு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏனென்றால் பல இடங்களில் அரசியல் புயல் மிக அதிகமாக வீசுகிற நேரத்தில் சட்டங்கள் புத்தகங்களாக மாத்திரம் எழுத்துப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, குறட்டை கீதங்களை இசைத்துக் கொண்டிருக்கின்றன. வாதங்களுக்கு முன்னால் நியாயங்கள் மண்டியிட்டு ஞானஸ்நானம் பெறலாமா என்று ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கின்றன. உண்மைகள் ஊரை விட்டு வெளியிலே போகலாமா என்று ஊருக்கு வெளியிலே எல்லையிலே நின்று கொண்டிருக்கின்றன. தர்மங்கள் தலைவிரி கோலமாக தெருவோரத்து திண்ணையிலே படுத்துக் கொண்டிருக்கின்றன. அந்த உண்மையை காப்பாற்ற வேண்டும்; அந்த தர்மத்தை காப்பாற்ற வேண்டும்; அந்த சட்டத்தை பாதுகாக்க வேண்டும்; அந்த நீதியை பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இன்னும் விழிப்பாக இருக்க வேண்டும். விழிப்பாகப் பணியாற்ற வேண்டிய அவசியத்தைத்தான் கடந்த கால அனுபவங்கள் நமக்கு காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதற்கு என்ன செய்ய வேண்டும்? காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டியது அரசினுடைய கடமை.

[பிற்பகல் 12-40]

வாங்குகின்ற சம்பளம் காவல் துறையினருக்குப் போதுமா என்றால் போதாது. அவர்கள் வாங்குகின்ற படி போதுமா என்றால் அது போதுமானதாக இல்லை. நிச்சயமாக இல்லை. அந்தப் படியை வைத்துக் கொண்டு அந்தச் சம்பளத்தை வைத்துக் கொண்டு சிட்டுக்குருவிகள் வாழ்கின்ற சின்ன கூட்டுக்குள்ளே அந்த காவல் துறையைச் சார்ந்த காவலர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் ஆகவே காவல் துறையினர் வாழ்கின்ற வீடுகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டியது அரசினுடைய தலையாய கடமையாகும். வீட்டுவசதி வாரியம் காவலர்களின் பக்கமாக கொஞ்சம் தன் கண்களை பாய வைக்க வேண்டும் தங்களுடைய விழிகளை அவர்கள் பக்கமாக எடுத்து வைக்க வேண்டும். அவர்களுடைய கனிந்த பார்வை இந்தக் காவலர்



களின் பக்கமாக விழவேண்டும். இல்லாவிட்டால் காவலர்கள் குடியிருப்புக்கென்று தனியாக வீட்டு வசதி வாரியம் அமைத்து அந்த வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுப்பது மிகுந்த அவசியம் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து கவர்னர் ஆட்சிக் காலத்தில் எத்தனையோ நிலைமைகள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாறாக விழுந்தன. அதை நான் முன்பே கோடிட்டுக் காட்டி இருக்கிறேன். உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் அருமை முசிறிப்புத்தன் அவர்களைக் கூட தாக்க வந்தார்கள், கொலை செய்ய வந்தார்கள். ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு போலீஸ் ஸ்டேஷனிலே வைக்கப்பட்டன. ஆனால் அதற்குப் பிறகு கவர்னர் ஆட்சி வந்த பிறகு அந்த இன்வெஸ்டிகேஷன் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது, அதற்குப் பிறகு எந்தவிதமான நடைமுறை சாத்தியமான கூறுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இது தான் யதார்த்தமான நிலைமை. இதை எங்களால் சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூட என்னென்ன நிலைமைகள், எங்கெங்கே சட்டம் ஒழுங்குகள் அபகரிக்கப்பட்டன, அல்லது கீழே போட்டு மிதிக்கப்பட்டன என்ற சில விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். இதைக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக கண்காணிக்க வேண்டும். அவர்கள் இதிலே தனிக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு கட்சியினுடைய அலுவலகத்திலே அது எந்தக் கட்சியினுடைய அலுவலகமாக இருந்தாலும் உள்ளே புகுந்து கடமையை மறந்து அரசியலை மாத்திரம் நெஞ்சிலே நிறுத்திக் கொண்டு எந்தக் காவலர்கள் பணியாற்றினாலும் அந்தக் காவலர்களுக்குத் தண்டனையை கொடுக்க வேண்டியது காவல் துறையினுடைய கடமை என்பதை நான் பணிவோடு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இந்த மானியத்தை வரவேற்கின்ற அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய திருப்பூர் நகரம் தொழிலாளர்களை உள்ளடக்கிய நகரம். அன்றாடம் பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிற ஒரு நகரம். ஆயிரக் கணக்கான, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற ஒரு நகரம். அந்த நகரத்திலே பிரச்சினைகள் எழுவது என்பது இயற்கையான ஒன்றுதான். அது சகஜ நிலைமைதான். ஆகவே சூப்பிரண்டெண்ட் ஆப் போலீஸ் அலுவலகத்தை திருப்பூர் நகரத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆர். மணிமாறன்] [1980 ஜூலை 25

அடுத்து திருப்பூர் தொகுதியில் மங்களம் என்ற கிராமத்திலே
ஒரு காவலர் அலுவலகத்தையும் நீங்கள் அமைத்துத்தரவேண்டும்
என்ற கோரிக்கையை விடுத்துக் கொள்கிறேன். அன்றைக்கு
இருந்தநம்முடைய அனைத்திந்தியஅண்ணாதிராவிடமுன்னேற்றக்
கழக அரசு மாவட்ட மருத்துவ மனையை திருப்பூர் நகரத்
திற்குத் தந்தது. ஆனால் இன்னும் கட்டிடங்கள் கட்டப்பட
வில்லை. ஆகவே கட்டிடங்கள் கட்டுவதற்கான வழிவகை
களை அரசு செய்ய வேண்டும் என்றுநான்பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன். காவல் துறையிலே இருக்கக்கூடியவர்களுக்கு.
நாட்டிலே சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக உழைத்துக்
கொண்டிருக்கின்ற அந்தப் பெருமக்களை கழகத்தினுடைய சார்
பாக நான் வாழ்த்தி வரவேற்று மேலும் மேலும் அவர்களுடைய
பணி வளரவேண்டும் என்றால் அதைத் தீவிரப்படுத்த வேண்டு
மென்றால் இப்போது 5 மண்டலங்கள் என்று ஆக்கப்பட்டிருப்
பதை இன்னும் அதிகப்படியான மண்டலங்களாக ஆக்கலாமா
என்ற ஆய்வினை தலைமையிலே இருக்கின்ற அதிகாரிகள
நடத்தி அதற்குண்டான வழிவகைகளைச் செய்ய வேண்டும
என்று கேட்டுக் கொள்கிறேன். காவல் துறையைப் பலர்
குற்றம் காட்டலாம், பலர் வரவேற்கலாம். ஆனால் என்னைப்
பொறுத்தவரையில் காவல் துறை ஒரு தேன் தடவிய கத்தி,
அந்தக் கத்தியிலே இருக்கின்ற தேனை எப்படி லாவகமாக
உறிஞ்சிக் குடிக்கவேண்டுமோ அந்தப் பக்குவத்தோடு குடிப்பது
தான் சராசரி மனிதனுடைய சராசரி உணர்வினுடைய தன்மை
என்பதை எடுத்துச் சொல்லி இந்த மானியத்தை நான் வர
வேற்று வாழ்த்தி விடைபெற்றுக்கொள்கிறேன்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மதிப்பிற்குரிய துணைத்
தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து
ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த போலீஸ் துறையைப் பொறுத்தவரையில் சங்கம்
அமைக்க வேண்டும் என்ற ஒரு நிலைமை இருந்து வருகின்றது.
அதை கனம் முதலமைச்சரவர்கள் பரிசீலனை செய்து சங்கம்
தேவைதானா என்பதை சிந்தித்து அதற்கு அனுமதி கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால்
அவர்களை அழைத்துப் பேசி சங்கம் வேண்டாமென்று சொல்லி
விட்டுஅவர்களுடைய குறைபாடுகளைக் கவனித்து அவர்களுக்குச்
சம்பளம் போதவில்லை என்றால் அதை அதிகப்படுத்துவதற்கு
ஏற்பாடு செய்யலாம். அவர்களுடைய குழந்தைகள் படிக்க வசதி
செய்து கொடுப்பது போன்ற பிரச்சினைகளை எல்லாம் கவனித்து
ஆவன செய்யவேண்டும்.

அவர்களுக்கு வசிப்பதற்கு வீடுகள் வாடகைக்கு கட்டிக்
கொடுத்து, அந்த வீடுகளில் அவர்கள் தொடர்ந்து 10 ஆண்டு
களுக்கு மேல் தங்கியிருந்தால் அந்த வீடுகளை அவர்களுக்கே
சொந்தமாக்குகிற வகையில் வசதி செய்து கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 25] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

அடுத்தாற்போல் இங்கே பேசிய பல உறுப்பினர்கள்
தேர்தல் காலத்தில் நடைபெற்ற சில சம்பவங்களைப் பற்றிச்
சொன்னார்கள். நானும் அவைகளைச் சொல்லத்தான் வேண்டி
யிருக்கிறது. மாண்புமிகு தலைவர் அவர்கள் கட்சியின்
பெயர்களையெல்லாம் குறிப்பிட வேண்டாம் என்று சொல்லி
விட்டதினால் முடிந்த வரையில் அவற்றை விலக்கியே பேச
முயற்சிக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே அப்படிப்பட்ட சம்பவங்கள்
அந்த தேர்தல் காலத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்
டிருந்தன. அங்கேயிருந்த ஒரு சாரார் பெரிய கூட்டத்திற்கு
ஏற்பாடு செய்து, பந்தல் போட்டு, மைக் வைத்து பெரிய
ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். நான் பேசிவிட்டு இறங்கி
போனவுடன், மற்றொரு சாரார் உள்ளே புகுந்து பந்தலைக்
கொளுத்தி மேடையைச் சேதப்படுத்தி ஆட்களை அடித்து
இப்படிப் பல ரகளைகள் செய்தார்கள். நான் இரவு 10, 11
மணிக்கு மேல் ஒரு சுற்று சுற்றிவிட்டு, அடுத்த ரவுண்ட் தேர்தல்
பிரச்சாரத்துக்கு இடையில் அங்கே வந்தபோது, என்னிடம்
பெண்கள் முறையிட்டார்கள். அதன்பேரில் நான் வத்தலகுண்டு
போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றேன். அங்கே சர்க்கிள் இருந்
தார். சப்-இன்ஸ்பெக்டர் இருந்தார். மற்ற பல போலீஸ்
காரர்களும் இருந்தார்கள். நான் சென்று அவர்களிடம் சொன்
னேன். ''யாரோ தேர்தலில் நிற்கிறார்கள். அதில் யாரோ
ஜெயிக்கிறார்கள், யாரோ தோற்கிறார்கள். இதில் யாருடைய
தாலியையோ அறுப்பது என்பது என்ன நியாயம்? தயவு செய்து
பொதுமக்கள் இப்படி தாக்கப்படுவதை நீங்கள் தடுக்க வேண்டும்.
இப்படிப்பட்ட சம்பவம் திரும்பவும் நடைபெறாமல் பார்த்துக்
கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டிருந்த போதே,
அந்த மற்றொரு சாரார், அதிலே முக்கியமான நபர்கள் உள்ளே
நுழைந்தனர்.

அவர்கள் என்னைப் பார்த்து 'என்ன அக்கா, நீ தேர்
தலில் ஜெயித்து விடுவாயா? ஜெயித்து விட்டு, இங்கே நட
மாட முடியுமா உன்னால்? தெருவெல்லாம் ரத்த ஆறு ஓடும்,
என்று சொன்னார்கள். நான் அதற்கு சிரித்துக் கொண்டே
''அப்படியா தம்பி ரத்த ஆறு ஓடுமா? இந்தாப்பா உங்கள்
அக்காளின் தலை, இப்போதே வெட்டிக் கொள்ளுங்கள், ரத்த
ஆறு ஓடட்டும்'' என்று சொல்லி சமாளித்தேன். ஆனால்
அன்றையதினம் அவர்களை சமாளிப்பதற்குள் நான் பட்ட
பாடு எனக்குத்தான் தெரியும். அந்த கடவுளுக்குத்தான்
தெரியும். இந்த மன்றத்தை கடவுளின் மன்றமாக நினைத்துக்
கொண்டு சொல்கிறேன். இவற்றையெல்லாம் அந்தப் போலீஸ்
காரர்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால்
அன்றிருந்த நிலைமையில் வேறு யாராவது கொஞ்சம் பயந்த
வர்களாக இருந்தால் என்னென்ன சிக்கல்கள் எல்லாம் ஏற்
பட்டிருக்குமோ சொல்ல முடியாது. ஆனால் வெள்ளையனை

எதிர்த்து, அன்னியனின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து அவனை நாட்டைவிட்டு ஒட்டி விடுதலைக்காகப் போராடிய அந்தப் பாரம்பரியத்தில் வந்தவள் ஆதலால் அதை சமாளித்து நின்றேன்.

வெளியில் வந்து பிறகு பார்த்தால் இரண்டு பக்கமும் இரண்டு வித பிரிவினர் நின்று கொண்டு கையிலே ஆயுதங் களோடு நிற்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிற போலீஸ்காரர்கள் எல்லாம், பேசாமல் இருந்துவிட்டார்கள். பொன்னம்மாள் தானே அவர்கள் யாருக்கும் பயப்பட மாட்டார் கள். அவர்கள் பனங்காட்டு நரியாயிற்றே. அந்தப் பனங் காட்டு நரி எந்த சலசலப்புக்கும் அஞ்சாது. அவர்களுக்கு போய் என்ன பயம் இருக்கும் என்று சொல்லிக் கொண்டிருந் தார்கள் அங்கு தனித்து நின்ற பொதுமக்கள்.

வெளியில் என்ன நிலைமை என்றால், என்னை ஆதரிக் கும் பிரிவில் ஒருவர் எனக்குத்தான் ஓட்டுப் போடுவேன் என்று சொல்லியதற்கு, நீ எப்படி சொல்லலாம் என்று கேட்டு, அவர்கள் வீட்டிலே மறுநாள் காலையில் கல்யாணம், தாலி, சேலை, நகைகள், மற்ற சாமான்கள் எல்லாம் வாங்கி வைத்திருந் தார்கள். அன்று பட்டப்பகலிலே அந்த வீட்டிலே தீ வைத்துக் கொளுத்திவிட்டார்கள். கல்யாணத்திற்கு வாங்கிய துணிகள் இதர சாமான்கள் அவ்வளவும் எரிந்து சாம்பலாகிப் போய் விட்டது. முதல் நாள் போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்தவுடன் பயங்கர ஆயுதங்களுடன் நின்று கொண்டிருக் கிறார்கள். வெளியில் வந்த இரு சாரார்களிலும் முக்கியமான வர்களைப் பார்த்து, அக்காவிற்கு பசிக்கிறது. ஏதாவது சாப்பிட வாங்கி வாருங்கள் தம்பிகளா என்று சிரித்துக் கொண்டே சொல்லி எப்படியோ சமாளித்தேன். இந்த மன்றத்திலும் நிறைய அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-50]

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தீ வைத்துவிட்டார். (மணியடிக்கப்பட்டது). அப்படி தீ வைத்ததன் காரணமாக அங்கே தாலி எல்லாம் கூட எறிந்து போய்விட்டது. இதுபோன்ற எவ்வளவோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன. நான் ஜெயித்த பிறகு கூட, மெஜாரிட்டியில் வந்த பிறகும்கூட, ஊர்வலம் போகிறேன். 12 மணி இருக்கும். அங்கே வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் நொறுக்கப்பட்டிருக்கிறது. நீ கூட்டணிக் காக வேண்டி வேலை செய்தாயா, பொன்னம்மாளுக்காக வேண்டி வேலை செய்தாயா என்று சொல்லி அவர் மோட்டார் சைக்கிள் அடித்து நொறுக்கப்பட்டது. கேஸ் கொடுக்கப்பட்டு, அது ரெபர் பண்ணியாகிவிட்டது. மீண்டும் யார் பாதிக்கப் பட்டார்களோ அவர்கள் மீது ஜாமீன் கேஸ் போடப்பட்டிருக



கிறது. வத்தலகுண்டு போலீஸ் ஸ்டேஷனில். இந்த அளவிற்கு
அவர்களுக்கு தைரியம், துணிச்சல் இருக்கிறது என்றால் அதற்கு
என்ன காரணம் என்று பார்த்தால் அவர்கள் என்ன நினைக்
கிறார்கள் என்றால் எப்படியாவது அராஜகம் செய்யவேண்டும்,
இந்த ஆட்சிக்கு எப்படியாவது கெட்ட பெயர் ஏற்படுத்திக்
கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில்தான் போலீஸ் துறையில்
கீழ் மட்டத்தில் இருக்கிறவர்கள் இப்படிப்பட்ட ஈனமான காரி
யங்களைச் செய்து வருகிறார்கள் என்பதை நான் வலியுறுத்திச்
சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, சாராயம் காய்ச்சுவது, பெண்கள் கற்பழிக்கப்
படுவது, குழந்தைகளை நரபலிக்காகத் தூக்கிச் செல்வது
போன்றவை நடந்து கொண்டிருக்கின்றன என்றால் போலீஸ்
துறையில் இருப்பவர்கள் நல்ல முறையில் பணியாற்றுவார்களே
யானால் இவ்விதம் நடக்காது. நான் சொல்லப்போவது
சர்க்கிள் இன்ஸ்பெக்டர் லெவலில் இந்த கேஸ்பற்றி தெரியாமல்
இருக்காது. அவ்வளவு பேர்களுக்கும் தெரியும்.

எங்கள் பகுதியில் பல இடங்களில் மோட்டார்களை
தூக்கிக் கொண்டு போகிறார்கள். அப்படி தூக்கிக் கொண்டு
போய் ஒரு கடிதம் எழுதி வைப்பது. நான் இந்த இடத்தில்
இருக்கிறேன். ரூ. 500 கொண்டுவா என்று நாள் ஒன்றுக்கு
பத்து பதினைந்து மோட்டார்களை தூக்கிச் செல்கிறார்கள்.
இதைப்பற்றி போலீஸ் ஸ்டேஷனில் பெட்டிஷன் கொடுத்தால்
உன் தலை துண்டிக்கப்படும், உன் மோட்டார் நொறுக்கப்படும்
என்று சொல்லி அவர்களை மிரட்டி பணத்தைக் கொடுத்த
பிறகு அந்த மோட்டார் வருகிறது. இப்படிப்பட்ட சமூக
விரோதமான காரியங்கள் நடப்பதற்குக் காரணம் கீழ் மட்
டத்தில் இருக்கிற காவல் துறை அதிகாரிகள்—மேல்மட்டத்தில்
இருக்கிற அதிகாரிகளைப் பற்றி நான் சொல்லவில்லை—
எப்படியாவது இந்த ஆட்சியின் மீது மக்களுக்கு ஒரு கெட்ட
பெயர் வரவேண்டும் என்று செய்கிறார்கள். ஆகவே நான்
அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால் கற்
பழிப்பது, குழந்தைகளை திருடுவது போன்ற நிலைமைகள்
வந்தால் நான் வலியுறுத்திச் சொல்கிறேன், இரண்டு நபர்களை
யாவது தூக்கில் போடுங்கள், இரண்டு பேர்களைப் போடுங்கள்.
அது அப்படியே ஒழிந்து விடும். அப்போதுதான் ஒரு பயம்
ஏற்படும். அப்படி ஒரு பயம் இல்லாமல் போய் விட்டால் அது
நமது ஆட்சிக்கு ஒரு கேவலமானதொரு நிலையை உருவாக்கித்
தரும்.

இங்கே பணியாற்றுகிற போலீஸ்காரர்களுக்கு இரண்டு
ரூபாய் படி கொடுக்கிறார்கள். அது காபி குடிக்கக்கூடப்
போதாது. ஆகவே அதை ஐந்து ரூபாய் என்று அதிகப்படுத்த
வேண்டும்.

விரிவீடு, விளாம்பட்டு இவ்விடங்களில் காவல் நிலையங்
கள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

என் சொந்த ஊர் பற்றி ஒரே ஒரு வார்த்தை. கமலா புரம், தேர்தல் காலத்தில் ஒரு கலவரம் நடந்தது. நான் சொன்னேன், வம்புக்கு போகாதீர்கள், உண்மைக்கு, நியாயத் திற்குப் புறம்பான வழியில் செல்லாதீர்கள் என்று சொன் னேன். What is right we have done it. எங்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதைச் செய்கிறோம். உண்மைக்கு மாறாக ஒன்றும் செய்யக்கூடாது என்று நாங்கள் இருந்ததினால் தான் தோற்றுப்போய் பதிமூன்று ஆண்டுகள் சென்ற பிறகும் கூட அதிகாரிகள் இடையே மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள முடிகிறது.

எனது சொந்த ஊரில் சாராயம் காய்ச்சும் ஒரு பையன் என்னிடம் வந்து சொன்னான். அக்கா, நான் இனிமேல் சாராயம் காய்ச்ச மாட்டேன், எனக்கு ஏதாவது ஒரு உபதொழில் கொடுங்கள் என்று கேட்டான். நான் உபதொழிலுக்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தபோது போலீஸ்காரர்கள் சென்று ஏண்டா சாராயம் காய்ச்சுவதை நிறுத்தினாய், காய்ச்சி எங்களுக்குள்ள பங்கை கொடு என்று சொல்லி அதை எதிர்க்கக்கூடிய அளவில் போலீஸ் நடந்து கொள்கின்றார்கள்.

அந்தப் பகுதியில் ஊரில் உள்ள முக்கியமானவர்கள் சாராயம் காய்ச்சக்கூடாது என்று கண்காணித்து காய்ச்சுபவர் களை அழைத்து நீ இந்தக் காரியம் செய்யக்கூடாது என்று தடுத்தவர்களை போலீஸ் ஜாமீன் கேஸ் போட்டு அதன்மீது வாரண்ட் போட்டு நான் ஊரில் இல்லாத நேரத்தில் அவர்களை அரஸ்ட் செய்ய இருந்த நேரம் அந்த மக்கள் திண்டுக்கல் கோர்ட்டில் சென்று ஜாமீனில் எடுத்துவரப்பட்டுள்ளார்கள் என்பதை வருத்தத்தோடுகூறி என் உரையை முடித்துக் கொள் கிறேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களைச் சமர்ப்பிக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த மன்றத்திற்கு நாங்கள் புதியவர்களாக இருந்தாலும்கூட நாங்கள் பேசுகிற கருத்துக்களினால், அதனால் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாங்கள் நீங்கள் கொடுக்கிற அறிக்கைகளை எல்லாம் படித்துப் பார்த்துவிட்டு எங்கள் கருத்துக்களை உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கட்சி யைச்சேர்ந்த உறுப்பினர் அவர்கள் நான் மூன்று முறைகள் இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லியும் பலன் கிட்டவில்லை என் றார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை எனக்கும் வந்துவிடக் கூடாது என்ற அந்த அச்சத்தின் அடிப்படையிலே தான் என் னுடைய கருத்துக்களை நான் எடுத்து வைக்கிறேன். மனிதாபி மானத்தோடு இதை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.



குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இப் போதுகூட எல்லோரும் பேசினார்கள். தமிழகம் இன்றைக்கு சாராய சாம்ராஜ்யமாக திகழ்கிறது என்று சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது. எங்கு பார்த்தாலும் கீழ்மட்டத்திலே சாராய வியாபாரம் நடக்கின்ற காரணத்தினால், இந்த அர சாங்கம் இதை அமுல்படுத்துவதை ரத்து செய்தால், அரசாங் கத்திற்கு நல்ல வருமானம் கிடைத்திருக்கும். ஆனால், இன் றைக்கு இந்த வருமானம் தனிப்பட்ட சிலருக்கு, அதிகார வர்க்கத்திற்குப் போய்ச் சேர்ந்து, அதனால் மக்களுக்கு நல்ல காரியங்களை ஆற்றுவதற்குரிய வருமானம் கூட அரசாங்கத் திற்கு கிடைக்காமல் போய்விடுகிறது என்பதைக் குறிப்பிட நான் ஆசைப்படுகிறேன்.

உடனே, நீங்கள் பதில் அளிக்கின்றபோது, அம்மையார் அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள், எனவே சாராயம் கொண்டுவர வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களா என்று கேட்டால், என்னுடைய கட்சிக்கு அதிலே எவ்வித ஒட்டும், உறவும் கிடையாது. தனிப்பட்ட முறையில் என்னுடைய கருத்து.

இன்றைக்கு ஒவ்வொரு அரிசன காலனிகளிலும் இது போன்ற கொடுமைகள் அதிகம் நடக்கிறது. யாரேனும் ஒரு ஆண் சாராயம் விற்றால் அதற்கு, பெண்ணைக் கைது செய்து கொண்டு போய் சிறையிலே அடைக்கிறார்கள். பல கொடுமை களைச் செய்கிறார்கள். இது தவிர்க்கப்படவேண்டுமென்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். யாரேனும், குறிப்பிட்ட பெண் சாராயம் விற்றால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் படுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், கணவன் விற்கிறான், மகன் விற்கிறான் என்பதற்காக, மனைவியையோ அல்லது தாயையோ கைது செய்து கொண்டு போவது என்பது தவிர்க்கப்பட வேண்டும். முதல்வர் அவர்கள் பெண்களை மாலை 6 மணிக்குமேல் சிறையிலே வைக்கக் கூடாது என்று சொல்லியுள்ளார்கள். அது வரவேற்கத்தக்கதுதான்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அதேபோல், முடிந்த அளவுக்கு நீங்கள் அவுட்-போஸ்ட் போலீஸ் ஸ்டேஷன்களை குறிப்பாக அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே உருவாக்கித் தருவீர்களானால், அந்த மக்கள் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னும் சொல்ல வேண்டுமானால் இங்கே எனக்கு முன்னால் பேசிய சகோதரி பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டார்கள். எங்கு பார்த்தாலும், கொலை, கொள்ளை நடக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இது நாட்டிலே இன்றைக்கு அச்சத்தை உருவாக்கி வருகிறது என்று சொன் னார்கள்.

இந்த மாமன்றத்திலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் வீட்டில் இருக்கின்ற நேரத்திலே, அவர் மகள் படுத்திருக்கின்ற நிலையிலே, மேலே இருக்கின்ற ஜன்னல் திறந்திருந்த சூழ்நிலையிலே, அந்த ஜன்னல் வழியாக கீழே உள்ள ஜன்னலைத் திறந்து, அந்த குழந்தை அணிந்திருந்த சங்கிலியை அறுத்திருக்கிறான். விழித்துக்கொண்ட அந்தக் குழந்தை கையில் பாதி சங்கிலி சிக்க, பாதி சங்கிலியை எடுத்துக் கொண்டு திருடன் ஓடியிருக்கிறான். நம்முடைய எம். எல். ஏ. ஓட, அவன் ஓட கடைசியிலே திருடன் ஓடி விட்டான். இவர் தோற்றிருக்கிறார். இதுபோல் நிலை மாம்பலம் போன்ற மக்கள் நடமாடுகின்ற இந்தப் பகுதியிலேயே நடக்கின்றது என்று சொன்னால், மக்கள் நடமாட்டமே இல்லாத பகுதிகளில் எப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும் என் பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைக்கு பத்திரிகைகளைப் பிரிக்கின்றபோது, இப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் மனதைக் கலக்குகிறது. எங்கே பார்த் தாலும் கொள்ளை, கொலை அல்லது குழந்தைகள் திருடப் படுவது, குழந்தைகள் கற்பழிக்கப்படுவது போன்ற சம்பவங் கள் பத்திரிகையிலே வருகின்றது. நமக்கு என்ன அசௌகரியக் குறைவுகள் இருந்தாலும், இப்படிப்பட்ட காரியங்கள் நிகழாமல் அவைகளைப் போக்க இந்த நாட்டு மக்களைக் காப்பாற்ற நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இப்படிப் பேசுகின்ற நேரத்திலே அந்த மாநிலத்திலே அதிகக் கொள்ளை, அந்த மாநிலத்திலே அதிகக் கொலை, ஆனால் நம்முடைய மாநிலத்திலே அதைவிடக் குறைவாக இருக்கிறது. தமிழகத்திலே இந்த நிலை இருக்கிறது என்று சொல்லுகின்ற அந்த போலி வாதத்தை நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. அதைவிடத் தமிழகம் சிறப்பான சூழ் நிலையில் இருப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதை நிறைவேற்றுகின்ற கடமையும் உங்களுக்கு இருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்குப் பக்கத்திலே வரத ராஜபுரம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. எல்லா இடங்களிலும் பெயர் பெற்றிருப்பது போல் அங்கும் சாராயம் விற்கப்படு கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், அங்கே சாராயம் மட்டுமல்ல; ஸ்பிரிட்டும் விற்கப்படுகிறது. அது மேலும் போதையைத் தருவதாக சொல்லப்படுகிறது. அதே போல் அங்கே ஜிஞ்சர் விற்கப்படுகிறது. அதுவும் போதை கொடுக்கக்கூடியது என்று சொல்லப்படுகிறது. இதை வாங்கு கின்றவர்கள் அங்கே வரும்போது, விற்கின்றவர்கள் அவைகளை விற்கிறார்கள். அப்படி வாங்குகின்றவர்கள் வாங்கியவுடனே, அதைக் குடித்த பிறகு அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்க



வேண்டியிருக்கிறது. அப்படி தண்ணீர் கொடுப்பதற்கு பொது வாக, 3 வயதுக் குழந்தையிலே இருந்து, 4 வயதுக் குழந்தை யிலேயிருந்து 10 வயதுக் குழந்தைகள் வரையில் இப்படி தண்ணீர் கொடுப்பதற்காக அங்கே பயன்படுத்தப்படுகிறார்கள்.

[பிற்பகல் 1.00]

அந்தக் குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு சம்பளம் ஒன்றரை ரூபாய் என்று சொல்லும்போது அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகள், பள்ளிக்கு சென்று படிக்க வேண்டிய குழந்தைகள் கள்ளச் சாராயத்திற்குத் தண்ணீர் கொடுக்கின்ற கேவலமான நிலைக்கு நாடு போய்க் கொண்டிருக்கிறது. அதுவும் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே நடைபெற்று வரு கிறது. காலம் காலமாக நடைபெற்று வரும் சம்பவமாக இருப் பதால் அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பெண் போலீசுக்கு ஆட்கள் எடுக்கிறார்கள், அது மிகக் குறைவாக இருக்கிறது. பெண் போலீசுக்கு அதிக அளவில் எடுத்து அவர்களை சீரான முறையில் பயன்படுத்த வேண்டு மென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் சேகராயபுரம் என்ற ஊரில் சாதா ரண தகராறு ஏற்பட்டது. ஒரு பெண்ணின் தாலி அறுக்கப் பட்டது. தாலிக்கு என்ன மகிமை, மகத்துவம் என்பதைத் தமிழ்நாடு அறியாமல் இல்லை. அவர்கள் என்னிடம் வந்து கூறியபோது போலீசாரிடத்தில் புகார் கொடுத்தீர்களா என்று கேட்டேன். நடவடிக்கை எடுத்தார்களா என்று கேட்டேன். இரண்டு முறை கூப்பிட்டு விசாரித்து அனுப்பி விட்டார்கள் என்றார்கள். நான் போலீஸ் நிலையத்திற்குச் சொன்னேன்— தாலி பறிக்கப்பட்டு விட்டது. அந்தத் தாலியைப் பெற்று அந்தத் தாய்க்குக் கொடுங்கள், தாலி இல்லாமல் நன்றாக இருக் காது என்று சொன்னேன். பிறகு அந்த போலீஸ் அதிகாரி மிக கேவலமாகப் பேசியதாகக் கேள்விப்பட்டேன். இதனை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகி றேன்.

இன்னொரு விவகாரத்தைச் சொல்ல விரும்புகிறன். என்னுடைய தொகுதியான ஸ்ரீபெரும்புதூரில் செங்கோட்டை என்ற கிராமம், அங்கே அனீபா என்ற முஸ்லீம் சகோதரர் அவர் மனைவியையும் பிள்ளைகளையும் விட்டு விட்டு 1,500 ரூபாயையும் வீட்டில் வைத்துவிட்டு வெளியே சென்றிருக்கிறார். வீட்டுக்குக் கதவு கிடையாது. திடீரென்று ஒருவன் உள்ளே நுழை கிறான், பெயரைச் சொல்லலாம் என்றால் சொல்லுகிறேன்—

கிருஷ்ணன் அந்தப் பெண்ணிடத்தில் தகாத முறையில் நடக்க முயற்சி செய்திருக்கிறான். விழித்த பெண் அந்நியன் இருப்பதைக் கண்டு பயந்து கொண்டிருக்கும் நேரத்தில் வெளியே சென்ற கணவன் வருகிறான். அனிபாவையும் அவன் அடித்துவிட்டு பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறான். அனிபா காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார். மனைவியானவள் தன்னைக் கணவன் சந்தேகித்து விடுவானோ என்று பயந்து பக்கத்து வீட்டில் இரவெல்லாம் இருந்துவிட்டு மறுநாள் காலை என்னைப் பார்த்தாள். போலீசில் புகார் கொடுக்கச் சொன்னேன். போலீசில் கிருஷ்ணனைக் கூப்பிட்டு விசாரித்து அனுப்பி விட்டார்களாம். 1,500 ரூபாய்க்கு வழி என்ன என்று கேட்டால் அந்த அதிகாரி 'கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து 1,500 ரூபாயை பெற்றுக் கொள்ளுங்கள்' என்று சொல்லுகிறார். இந்த நாட்டில் இருக்கும் ஏழை மக்கள் நேராகப் போலீசில்தான் புகார் கொடுக்க முடியுமே தவிர, வழக்கு நடத்தி வெற்றி பெறமுடியுமா என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

போலீஸ் அதிகாரிகள் காக்கிச் சட்டையை போட்டு இதயத்தை மறைத்துக் கொள்ளாமல் அநுதாபம் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் வகையில் பணியாற்ற வேண்டும். உங்கள் கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றுகிற நேரத்தில் ஏழை மக்கள் நலனுக்காக நிச்சயமாக உங்கள் நேரத்தைச் செலவிட வேண்டும். அவர்களுக்கு வேண்டிய ஆக்க பூர்வமான காரியங்களைச் செய்யவேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பெண்களை ஆறு மணிக்கு மேல் போலீஸ் லாக்கப்பில் வைக்கக்கூடாது என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதை அதிகாரிகள் மனதில் வைத்துக்கொண்டு பெண்களை காவல் நிலையத்தில் லாக்கப்பில் வைப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டு உரையை முடிக்கிறேன், வணக்கம்.

<u>திரு. இரா. முத்தையா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கும் காவல் துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் இருக்கிற மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர், அதிலும் குறிப்பாக முதலாவதாகப் பேசிய பிரதான எதிர்க் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்கள் குற்றங்கள் பெருகிவிட்டன, உங்கள் ஆட்சியில் பாருங்கள்— இந்த இடத்திலே குழந்தையைக் காணோம், மறுநாள் இன்னொரு குழந்தையைக் காணோம், மூன்றும் நாள் இன்னொரு குழந்தையைக் காணோம், நான்காவது நாள் ஒரு கொலைக் குற்றம்



12306

என்று வரிசையாகச் சொல்லிக் கொண்டே போனார்கள். நான்
அந்த நேரத்திலே யோசித்துப் பார்த்தேன். எங்கே
இப்போதுதான் அந்தக் குற்றங்கள் நடைபெறுவதுபோல்
இருக்கிறது, குழந்தைகள் காணாமல் போவது கொலை
நடப்பது எல்லாம் நடப்பது போல் இருக்கிறது நினைத்துப் பார்த்
தேன். ஆனால் இவர்கள் ஆண்ட 7 ஆண்டு காலத்தில்
எந்தக் குழந்தையும் காணாமல் போகவில்லை போல் இருக்
கிறது. கொலையே நடக்கவில்லை போல் இருக்கிறது. அந்தக்
கால கட்டத்திலே ஏதோ காவல் துறையினர் தங்கள் அலுவலகங்
களிலே எல்லாம் வேலையே இல்லாது குற்றமே நடக்காத
அயோத்தியா பட்டணத்திலே இருந்தார்கள் என்பதை போல்
இருக்கிறது என்று எண்ணினேன். ஆனால் இவர்கள் ஆண்ட
நேரத்திலேயும் நடந்த குற்றங்கள் நடைபெற்ற கொலைகள்
பற்றி காவல் துறை கண்காணித்தது. இன்றைக்கும் கண்காணிக்
கிறது. அன்றைக்கு இருந்த அரசாங்கத்திலே அதற்கு
முன்னாலே இருந்த அரசாங்கத்திலே குற்றங்கள் எல்லாம்
எந்த அளவுக்கு விரைந்து கண்டுபிடிக்கப்பட்டது, குறைகள்
களையப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக
இருக்கும் என்று கருதுகிறேன். குற்றங்கள் பெருகியிருக்கிறது
என்று சொன்னால் இன்னும் இந்தத்துறை அதிக வேகமாகச்
செயல்படவேண்டும், இன்னும் இந்தத்துறை கவனமாகச் செயல்
படவேண்டும் என்பதுதான் நம்முடைய கருத்தாகும். ஆனால்
அன்றைக்கு நடந்ததைப் போன்று இன்றைக்கு நடக்கிறதா என்று
நான் எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்க ஆசைப்
படுகிறேன். அன்றைக்கு நடந்ததைப் போல் முதுகுளத் தூரிலே
5 பேர்கள் கண்ணைக் கட்டி எந்த இடத்திலேயாவது சுட்டிருக்கி
றார்களா. அன்றைக்கு நடந்ததைப்போல் உதயகுமார் என்ற
மாணவன் பிரேதத்தின் மீது ஏறி இன்றைக்கு டாக்டர் பட்டம்
முதலமைச்சர் வாங்குகிறாரா? அன்றைக்கு நடந்ததைப்போல்
ஏனைய குற்றங்களை அரசாங்கமே பின்னணியில் இருந்து
அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த சில நிகழ்ச்சிகளைப் போல்
இன்றைக்கு நடக்கிறதா? அன்றைக்கு நடந்ததைப்போல் கள்ள
நோட்டு வழக்குகளை மூடிமறைக்க அரசாங்கம் முற்பட்டதே,
அதைப்போல இன்றைக்கு அரசாங்கம் பெரிய குற்றங்களை
மூடிமறைக்க முற்படுகிற நிலை இருக்கிறதா? குழந்தைகளைக்
காணோம் என்பதை எல்லாம் பூதாகரமாக எடுத்துக்காட்டுகிற
போது இந்தத் துறையினிடத்திலே மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களிடத்திலே நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்பு
கிறேன். புரட்சித் தலைவர் அவர்களே எந்தக் குறையும்
காணமுடியாத உங்கள் ஆட்சியின்மீது பழியை, ஒரு பொல்
லாங்கை சுமத்துவதற்காக சில பொல்லாதவர்கள் இத்தகைய
நிகழ்ச்சிகளை திட்டமிட்டு செய்கிறார்கள் என்ற நிலையில்
அதைக் கவனிக்க எச்சரிக்கையாக இருந்து அந்தக் குற்றவாளி
களைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று அதற்கு இந்தத் துறை
முற்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

V211.31 'N80
N81-5-731

இங்கே சில காரியங்களை எடுத்துச் சொன்னார்கள்,
எந்தக் குறைபாடுகள் எல்லாம் நடந்திருக்கின்றன என்று. எந்த
அவர்கள் பழைய காலத்திற்குக் கூட அழைத்துச் செல்ல விரும்பு நான்
ல்லை. இங்கே திரு. உமாநாத் அவர்கள் எடுத்துச் சொன்
னதைப்போல் எங்களுடைய ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில்
கவர்னர் ஆட்சி என்ற பெயரால் காங்கிரஸ் கட்சி அரசாட்சி
நடைபெற்ற அந்த 3 மாதங்களில் என்ன என்ன குற்றங்கள்
இங்கே நடந்தன என்பது உங்களுக்குத் தெரியும்.
குறிப்பாக இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் அதிலேயும்
ருடைய பவனத்திலேயிருந்து வருகின்ற உத்தரவுகளை கவர்ன
வேற்றுவதைவிட ***வருகிற உத்தரவுகள் நிறைவேற்றப்பட நிறை
வேண்டுமென்ற நிலைமை அன்றைக்கு உருவாக்கப்பட
வில்லையா?

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு உறுப்பினர் திரு.
முத்தையா அவர்கள் தமிழகத்திலே கவர்னர் ஆட்சி நடை
பெற்ற போது * * * * * * * * *
வந்த உத்திரவுகளைத்தான் நிறைவேற்ற வேண்டுமென்று
உத்திரவு வரவில்லையா என்று சொன்னார்கள். அதை
சற்று விளக்கமாக ஆதாரத்தோடு சொன்னால் சபைக்கு உதவி
யாக இருக்கும்.

திரு. இரா. முத்தையா : பல்வேறு ஆதாரங்களைச்
சொல்ல முடியும், நான் அதற்குத்தான் வந்தேன். திரு. சித்தன்
அவர்கள் இதை இதை எல்லாம் சொல்லுங்கள் என்று சொல்வ
தைப் போல் கேட்டிருக்கிறார்கள். பல முறைகேடான நியமனங்
கள் நடந்தது, பல முறைகேடான மாற்றங்கள் அந்த அரசாங்கத்
திலே செய்யப்பட்டன. அதிலேயும் குறிப்பாகச் சொல்ல ஆசைப்
படுகிறேன். அன்றைக்கு இருந்த காக்கிச் சட்டையோடு
இருந்த கண்ணியமான ஒரு ஐ.சி.எஸ். அதிகாரி ஒருவரை
காக்கிச் சட்டையைக் கழற்றி இன்னொரு துறைக்குப் போய்
உட்கார வைத்தீர்களே அதற்கு யார் காரணம்? அன்றைக்கு
என்னுடைய அருமை நண்பர் திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசு
கின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

[பிற்பகல் 1—10]

முதுகளத்தூர் தொகுதியில் இரண்டு ஊர்களைக் குறிப்பிட்டு
அந்த ஊரில் காங்கிரசுக்கு ஒரே யொரு ஓட்டுதான் கிடைத்தது;
ஒரே ஒரு ஓட்டுதான் காங்கிரசுக்குக் கிடைக்குமா என்று கேட்டார்
கள். நீங்கள் செய்த காரியம் காக்கிச் சட்டையோடு இருந்த
அந்தக் கண்ணியமான அதிகாரியை காக்கிச் சட்டையைக்
கழற்றிவிட்டு கதர்ச்சட்டையை மாட்டுகின்ற நிலையை உரு
வாக்கியதனாலே அவர் அந்த மக்களுடைய கவனத்தை ஈர்த்
திருப்பார்...... .. .. .. .. ..

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றன.



திரு. என். எஸ். வி. சித்தன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர்
சார். தலைவரவர்களே, * * உத்தரவு வந்தது என்று
சொன்னார்கள். இப்பொழுது சொல்கிறார்கள். காக்கிச்
சட்டையைக் கழற்றி விட்டு அங்கே உட்கார வைத்தார்கள்
என்று சொல்கிறார்கள். இது பொதுப்படையான குற்றச்
சாட்டு. எந்த* * எந்த அதிகாரிக்கு உத்தரவிடப்பட்டது;
எந்த அதிகாரி என்ன நடவடிக்கை எடுத்தார் என்பதை ஆதாரத்
தோடு சொல்லட்டும்.

திரு. இரா. முத்தையா : தலைவரவர்களே, உங்கள் மூல
மாக நான் உறுப்பினரவர்களின் கவனத்திற்கு ஒவ்வொன்
றாகச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு நேரம் கொடுத்து
அனுமதித்தீர்களேயானால் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே நேரம்
இல்லை. குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் ஸ்பெசிஃபிக்
காகச் சொல்ல வேண்டும். இன்னும் இரண்டு நிமிடங்கள்தான்
இருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதிப்
பிரச்னை இருந்தால் சொல்லி முடிக்க வேண்டும்.

திரு. இரா. முத்தையா : நான் சொல்கிறேன் * * *
உத்தரவிலே கையெழுத்திட்டு அங்கேயிருந்து யாரும் அனுப்ப
முடியாது. ஆனால் **சொல்லுகின்றவற்றைக் கேட்க வேண்டும்
என்று சொல்லுகின்ற நிலைமைகள் உருவாக்கப்பட்டன.

திரு. என். எஸ்.வி. சித்தன் : உத்தரவு வரவில்லை
ஆனால் சொன்னதைக் கேட்க வேண்டுமென்று சொன்னதாகக்
கூறுகிறார்கள். அதை எந்த ஆதாரத்தோடு சொல்கிறார்கள்?
ஒன்று ஆதாரத்தோடு அதை நிரூபிக்க வேண்டும்; இல்லை
யென்றால் நான் உட்கார மாட்டேன். (கூச்சல்—குழப்பம்)
பேரவைத் தலைவரவர்களே** * உத்தரவு வந்தது என்று
முதலில் சொன்னார்கள்; அடுத்தாற்போல் அதைக் கொஞ்சம்
மாற்றி, உத்தரவு அல்ல, சொன்னார்கள் என்று சொல்கிறார்கள்.
குற்றச்சாட்டைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அப்படி
சொல்ல இயலாவிட்டால் நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து**
என்பதை எடுத்து விடுங்கள்.

திரு. இரா. முத்தையா : அப்படி நடந்த இந்த மாற்றங்
களைச் செய்தது யார்? யாருடைய தூண்டுதலாலே நடந்தது?
அன்றைக்கு எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர்
சுட்டிக் காட்டி, பின்னர் அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்
பட்டிருக்கிறது. ஒரு துறையினுடைய இயக்குநராக, குறிப்
பிட்ட ஒருவரை நியமித்தது இன்னாருடைய தூண்டுதலால்தான்
......(கூச்சல், குழப்பம்)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே,
நான் கேட்டதற்குத் தீர்ப்பு சொல்லுங்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, திரு. சித்தன்
அவர்களுடைய பிரச்னை முடியட்டும் என்று இருந்தேன்.**
என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் உட்கார
வேண்டும். காலையிலேயே, இந்தக் கட்சி அந்தக் கட்சி என்று
சொல்லிக் குற்றம் சாட்டப் பெற்றது. இப்பொழுது
மூன்றாவதாக ஒரு கட்சி எழுந்து கொண்டிருக்கிறது,

* *

என்று சொல்லப்பெற்றவைகளைச் சபைக் குறிப்பிலேயிருந்து
நீக்கி விடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : ஒரு கிளாரிஃபிகேஷன்,
இதற்கு முன்புகூட சபையிலே ஒரு டைரக்டர் பற்றி சொன்
னது, எடுக்கப்பட்டது என்று அவர் சொல்வதாவது, சபாநாயகர்
அவர்களும், கனம் அமைச்சர் அவர்களும் சட்டரீதியாக
அனுமதிக்கப்பட்டது, ரிட்டையர் ஆன அதிகாரியின் நியமனம்
என்று சொல்லியும்கூட மீண்டும் அதைத் தவறாக உறுப்பினர்
முத்தையா சொல்வது—தவறான கருத்தை— அதுவும் அமைச்ச
ரவர்கள் சொன்ன பதிலுக்குப் பிறகு சொல்வது, அது சரிதானா
என்று தாங்கள் சொல்ல வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு ரிட்டையர் ஆன
அதிகாரி நியமனத்தைப் பற்றி, அவர் பெயர் ஏற்கனவே சபைக்
குறிப்பிலேயிருந்து எடுத்தாயிற்று, நீக்கப்பட்டாகிவிட்டது.
(கூச்சல் குழப்பம்) திரு. முத்தையா, குற்றச்சாட்டுகள் இல்லா
மல் வேறு ஏதாவது இருந்தால் பேசுங்கள். இல்லாவிட்டால்
அடுத்தவரைக் கூப்பிட வேண்டியதாக இருக்கும்.

திரு. இரா. முத்தையா : குற்றச்சாட்டுகள் என்று வரும்
போது, குற்றச்சாட்டுகளைச் சொல்கிறேன். ஆட்சிக் கலைக்
கப்பட்டதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சிகளை நான் சுட்டிக்
காட்டுகிறேன். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் நடந்தது
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அன்றைக்கு
சட்டமன்றம் கிடையாது. சட்டமன்றம் இல்லாத நேரத்தில்,
இங்கே * * * * * * *

(கூச்சல், குழப்பம்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றன.



(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய செயலுக்கு
நோக்கம் கற்பிக்கக் கூடாது. அதுதான் முறை, மரபு, ஆகவே
நோக்கம் கற்பிக்க வேண்டிய அவசியத்தை மாண்புமிகு
உறுப்பினர் ஏற்படுத்தாமல் வேறு பிரச்னைக்கு செல்லும்படி
யாகக் கேட்டுக்கொள்கிறேன். நோக்கம் கற்பித்து கூறிய
பகுதியை அவைக்குறிப்பிலிருந்தும் எடுத்து விடலாம்.

மாண்புமிக, பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அவரவர்
களுடைய இடத்தில் உட்காரவேண்டும். கவர்னரைப் பற்றிச்
சொல்லப்பட்ட கருத்துக்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்
படி உத்தரவிடுகிறேன்.

திரு. இரா. முத்தையா : தலைவரவர்களே, அன்றைக்கு
எங்களுடைய மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவராக
சிரியாக் என்கிற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, எதிர்த்தரப்பிலே இருக்
கிறவர்கள்கூட குறைகூறமுடியாத அளவுக்கு ஒரு நாணயமான
அதிகாரி, பதவியிலே இருந்தார். அந்த மாவட்டம் முழுவதும்
இருக்கக்கூடிய பாமர மக்களெல்லாம் இந்த அளவுக்கு முற்
போக்கான எண்ணம் கொண்ட அதிகாரி இருக்க முடியாது
என்கிற அளவுக்கு அவரிடத்திலே அன்பு செலுத்தி வந்தார்கள்.
அந்த அதிகாரியைத் தேர்தல் அறிவித்ததற்குப் பிறகு, அவர்
எங்கே நமக்குச் சரியாக இருக்க மாட்டார்களோ என்று கருதி,
அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த அவரை,
உடனடியாக, அவர் லீவ் ஆக வேண்டுமென்ற உத்தரவைப்
போட்டு, இன்னொருவரை அந்த மாவட்ட அதிகாரியாக
அறிவித்தார்கள். அந்தப் புதிய அதிகாரி, உடனடியாகப் பதவி
யேற்க வருகிறார். வருகிறபொழுது, இருக்கிற மாவட்ட
ஆட்சித் தலைவர் திரு. சிரியாக் அவர்கள் மாவட்டத்திற்
குள்ளே, சுற்றுப் பயணம் சென்றிருக்கிறார்கள். அவர் வந்த
தற்குப் பிறகு இவர் பதவி ஏற்றிருக்கலாம். அவர் வந்து,
அவரிடத்திலே சார்ஜ் கொடுப்பதற்கு முன்னாலேயே இவர்
போய் அவர் நாற்காலியில் உட்கார்ந்து கொள்கிறார் என்று
சொன்னால், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி எந்த விதமான நிர்ப்பந்த
மும் இல்லாமல், இந்த அளவுக்கு இன்னொரு அதிகாரி வரு
வதற்கு முன்னாலே, நான் பதவியை ஏற்றுக்கொள்கிறேன்
என்று ஓடிப்போய் ஏற்றுக்கொள்வாரா ?

(பிற்பகல் 1-20)

இதெல்லாம் இன்றைக்கு நிர்ப்பந்தம் இல்லாமல் நடந்த
அடையாளங்களா? அதுமட்டுமல்ல, அன்றைய
அரசாட்சிக்கு எதிர்த்து எங்களுடைய கட்சித்தலைவர்
திணம் ஆட்சி கலைப்பை எதிர்த்து ஜனநாயக முற்போக்கு அணியினர்
அவர்களுடைய தலைமையில் ஊர்வலத்தில் திட்டமிட்டு கலைப்பதற்
சென்னையில் நடத்திய

காக திட்டமிட்டு அந்த ஊர்வலத்திலே வந்தவர்களைத் தாக்கு வதற்காக திட்டமிட்டு பின்னாலே ஒரு சதி நடந்திருக்கிறது என்ற குற்றச் சாட்டை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள [illegible]கிறேன். காரணம் 10 லட்சத்திற்கும் அதிகமான [illegible] வெள்ளம். அந்த மக்கள் வெள்ளத்தை ஒழுங்கு [illegible]தற்காகத்தான் காவல் துறை இருந்து தீர வேண்டும். [illegible] அன்றைக்குச் சரியாக புரட்சித் தலைவருடைய வேன் [illegible]ற்குப் பின்னாலே வழிமறித்து அந்த ஊர்வலத்தைத் [illegible], ஊர்வலத்திலே வந்த பல்லாயிரக்கணக்கானவர்களுடைய மண்டைகளைப் பிளந்து அந்த ஊர்வலத்தை திட்டமிட் [illegible] நடந்ததற்கான சதிச் செயலை சரியான விசாரணை மூலம், அன்றைக்கு யார் செய்தார்கள். யாருடைய தூண்டு [illegible] பேரில் செய்தார்கள் என்று கண்டறிந்து அவர்கள் மீது [illegible]டிக்கைகளை எடுக்கவேண்டும் என்று வேண்டி விரும் பிக்கேட்டுக்கொள்கிறேன்.

[illegible]போல தேர்தல் காலங்களில் ஊருக்கு ஊர், தொகுதிக் [illegible] நடந்த போலீஸ் வெறியாட்டத்தை இந்த நேரத் [illegible]யாக வேண்டும். போலீஸ்காரர்களாக [illegible] என்பதற்குப் பல்வேறு உதாரணங்கள் சொல்ல [illegible] என்னுடைய தொகுதியில் 21-5-1980 அன்று ஒரு [illegible]டம் நடக்கிறது. அந்தப் பொதுக் கூட்டத்தில் [illegible] பேசிக்கொண்டு இருக்கிறார்கள். சரியாக 8 அல்லது [illegible] மணிக்கு கூட்டத்தைக் கலைக்கிற முயற்சியில் மற்றக் [illegible] சேர்ந்தவர்கள்—சொன்னால் கோபித்துக் கொள் [illegible] இன்றைக்கு பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறவர்கள் [illegible]தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சியோடு மிரட்டு [illegible]. அப்படி மிரட்டுகிற நேரத்தில் கல் எறிகிறார்கள். [illegible]லிருந்து நாலா பக்கத்திலும் இருந்து கல் எறிகிறார்கள். [illegible] எறியப்படுகிற அந்த நேரத்தில் கூட்டம் நடத்தியவர்கள் தொடர்ந்து கூட்டத்தை நடத்த முடியாமல் மேடையை விட்டு [illegible] இறங்குகிறார்கள். கீழே இறங்கிய 6, 7 கழகத் தோழர் [illegible] மண்டை உடைகிறது. ஒலிபெருக்கி உடைந்து நாச [illegible]படுகிறது. அத்தனைக்கும் பின்னாலே இந்திந்த கட்சிக் [illegible] இன்னின்னார் என்று அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் [illegible] கொடுக்கப்படுகிறது. ஆனால் புகார் கொடுத் [illegible] கைது செய்யப்பட்டு அவர்கள் மேல் வழக்கு தொடரப் [illegible] வழக்குகள் கூட ஒரு 6 பேர்கள் மேல் தான் தொடரப் [illegible] 6 நாட்கள் கழித்து அந்தக் கட்சிக்காரர் களுடைய நிர்ப்பந்தத்தின் பேரில் அப்போது போலீஸ் இன்ஸ் பெக்டராக இருந்தவர்—இன்று தமிழக [illegible] பணியான சி.ஐ.டி. பிரிவின் அமைப்புச் செயலாளராக இருப்பவர்—ஜெய [illegible] அந்தக் கட்சிக்காரர்கள் [illegible] சொல்வார்கள் [illegible]தேன் என்று சொல்வார்கள். இன்றைக் [illegible] அழைத்துக் கேட்டால் சொல்லு [illegible] இன்ஸ்பெக்டரைக் கேட்டாலும் சொல்லு வார்.



மேலே இருந்து உத்தரவு வந்தது. நாங்கள் பின்னாலே கைது செய்தோம் என்று கூறுவார்கள். அந்த அளவுக்கு அன்றைக்கு ஒரு விதமான கட்சி அரசியலுக்கு அவர்கள் இந்த நிர்வாகத்தைப் பயன்படுத்தினார்கள் என்கிற குற்றச்சாட்டையும் சொல்லி தலைவர் அவர்கள் அவசரப் படுகிற காரணத்தால் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பிரச்சினை ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான சேடப்பட்டிக்கு காவல் நிலையம் வேண்டும். மக்கள் நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதைப் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான பைல்கள் மேலே இருந்து கீழேயும் கீழே இருந்து மேலேயும் போய்க்கொண்டு இருக்கிறது. அந்த சிரமத்தைப் போக்கி இந்தக் காவல் நிலையத்தைப் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டு, வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சா. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் பேசியதிலும், திரு. பம்மல் நல்லதம்பி அவர் கள் பேசியதிலும், திரு. அப்துல் ரசாக் அவர்கள் பேசியதிலும், குறிப்பாக, கட்சிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொன்ன பகுதிகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெற வேண்டும் என்று ஆணையிடுகிறேன்.

<u>திரு. கே. எம். அப்துல் ரசாக் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காவல் துறை மானியத்தின் மீது ஓரிரு கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவர் அவர்களின் கவனத் திற்கு நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். என்னுடைய ஆலந்தூர் தொகுதியில், கே.கே. நகரில் ஒரு காவல் நிலையம் வேண்டும். அதேபோல், ஆதம்பாக்கத்தில் ஒரு காவல் நிலை யம் அமைத்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்த மானியத்தின் மீது பல கோணங் களில் பேசியிருக்கிறார்கள். நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல லாம் என்று நினைக்கிறேன். நடந்து முடிந்த தேர்தலில் நடைபெற்ற பிரச்சாரத்தின்போது இங்கே உள்ள அமைச்சர்களை வங்கக் கடலில் நிற்கப் போகிறீர்கள் என்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே இருக்கிறார்கள். அந்த நிலையை எண்ணி நாட்டு மக்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து ஒரு நல்ல தீர்ப்பைத் தந்து இருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில் குரோம்பேட்டையில் சி.என்.சி. ன்ற தொழிற்சாலை இருக்கிறது. 27 மாதங்களாக அது டப்பட்டு திறக்கப்படாமல் இருக்கிறது கிட்டத்தட்ட 400

தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.
அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்
கொள்கிறேன், அந்தக் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் நிதியில் இருந்து ரூ. 500ஒரு ஆளுக்குத்
தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத்தான், இந்திரா காட்டன் மில் என்று ஒரு
தொழிற்சாலையில் தொழில் தகராறு நடந்து கொண்டு இருக்
கிறது. இங்கே மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்,
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்தவர்தான் ரௌடித்தனம் செய்வதாகச் சொல்லியிருக்கி
றார்கள். நான் சொல்கிறேன். அவர்கள் தான் அங்கே
ரௌடித்தனம் செய்து இருக்கிறார்கள். (குறுக்கீடு) நான்
எந்தக் கட்சியின் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.
இந்திரா காட்டன் மில்லில் நடக்கும் தொழில் தகராறில்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர்
தான் ரௌடித்தனம் செய்கிறார்கள் என்று சொன்னார்கள்.
அதற்காகச் சொல்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் அராஜக வழியில் என்றும் செல்லாது. அது
பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில், புரட்சித் தலைவர்
தலைமையில் இயங்குகிற காரணத்தால் நாங்கள் கட்டாயமாக
அப்படிப்பட்ட அராஜக நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோம்
என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதை
இங்கே இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு நான் எடுத்
துச்சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.
(மணியடிக்கப்பட்டது).

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மானியக் கோரிக்
கைகள் மீது இன்னும் நிறைய பேர்கள் பேசவேண்டியிருக்கிறது.
இன்று மாலையில் அவை நடைபெறுவதாக இருந்தது.
ஆனால் மாலையில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு
நடைபெறுகிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள்
அதிலே கலந்துகொள்கிறார்கள். எனவே, இன்று மாலையில்
அவைக்கூட்டம் நடைபெறாது. நாளை அலுவல் ஆய்வுக்
குழு கூடும். இந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவா
தத்தை மீண்டும் என்று நடத்தலாம் என்பது பற்றி அப்போது
முடிவு செய்யப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று
நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.





பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

2.2 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

59. தமிழ்நாடு 1973ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி
விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர் நல
வேலை வாய்ப்புத் துறையின் 25—1—1980ஆம் தேதியிடப்
பெற்ற 143ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு
(தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்
தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41(5) பிரிவின் கீழ் பேரவை
முன் வைக்கப்பெற்றது.)

60. தமிழ்நாடு 1968ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழி
லாளர் (வேலை நிபந்தனைகள்) விதிகளில் சில திருத்தங்கள்
செய்வது குறித்த தொழிலாளர் நல-வேலை வாய்ப்புத் துறை
யின் 10—11—1979ஆம் தேதியிடப்பெற்ற 1886ஆம் எண்
அரசாணையில் வெளியான அறிவிப்பு 1966ஆம் ஆண்டு பீடி-
சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிபந்தனைகள்) சட்டத்தின்
(மத்தியச் சட்டம் 32/1966). 44(4) பிரிவின் கீழ் பேரவைமுன்
வைக்கப்பெற்றது.)

61. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (சர்க்
கரை ஆலைகளின் உபரி நிலங்கள்) விதிகள் இயற்றுவது
குறித்து, வருவாய்த் துறையின் 21—1—1980ஆம் தேதி
யிடப்பெற்ற 81ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு
(தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச
வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961)
112(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

62. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81-ஆம் ஆண்
டிற்கான ஆண்டு நிதி நிலை விவர அறிக்கையும் 1979-
80-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை துணை விவர அறிக்கையும்
(1948-ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச்
சட்டம் 54/1948) 61(1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது.)

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

••104. 1979-80ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல்துறை
பற்றி ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

105. 1979-80ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத்
துறை பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

**106. 1980-81ஆம் ஆண்டில் பொதுப்பணித் துறைக் கட்டிடங்கள் சம்பந்தப்பட்ட மானிய கோரிக்கையின் கொள்கை சம்பந்தமான குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

**107. 1979-80ஆம் ஆண்டில் பொதுப் பணித்துறை-கட்டிடப் பிரிவு பற்றிய பணிகள் குறித்த ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

*108. கோரிக்கை எண் 11—265-A ஏனைய நிர்வாகப் பணிகள் AJ —பயிற்சி என்னும் தலைப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

*109. கோரிக்கை எண் 43—265—ஏனைய நிர்வாகப் பணிகள்—பயிற்சி என்னும் தலைப்பின் கீழ் பயிற்சி நிறுவனங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு-I.

[908-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### 265A. ஏனைய நிர்வாகப் பணிகள் AJ—பயிற்சி என்னும் தலைப்பில் 11 ஆம் கோரிக்கைக்குரிய கொள்கை விளக்கக் குறிப்பு.

(I) ஹைதராபாத், இந்திய நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் சங்கத்தில் இம்மாநில அரசு சாதாரண உறுப்பினராக இருக்கிறது. இது, இந்தியாவின் பயிற்சி நிறுவனங்களில் முதன்மையான ஒன்று. அரசு, பல்வேறு நிலைகளிலுள்ள அதிகாரிகளை இந்நிறுவனம் நடத்தும் பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெறுவதற்காக மேற்படி கல்லூரிக்கு அனுப்பி வைக்கிறது. இச்சங்கத்தின் உறுப்பினர் சந்தா ஆண்டொன்றுக்கு ரூ. 2,000. 1980-81ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 2,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(II) AG. ''சென்னை நிர்வாகப் பயிற்சி நிறுவனம்''

அண்மையில் ''சென்னை நிர்வாகப் பயிற்சி நிறுவனம்'' என்னும் பயிற்சி நிறுவனத்தை அரசு அலுவலர்களுக்கும் அரசினைச் சார்ந்த பொது நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக அரசு அமைத்துள்ளது. இப்பயிற்சி நிறுவனம் அரசு இணைச் செயலாளர் பதவித்தரத்தில் உள்ள ஒரு தனி அலுவலரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இதில் பணிபுரியும் ஆசிரியர்கள் பங்களூரிலுள்ள இந்திய நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்கள். ''சென்னை நிர்வாகப் பயிற்சி நிறுவனம்'' இதுவரை 6 ''பயிற்சி'' வகுப்புகளை நடத்தியுள்ளது.

சென்னை நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தை பதிவு செய்வதற்கு முன்னர் குறுகியகால பயிற்சி வகுப்புகளை முடிந்தவரை அதிக அளவு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட பின்னர் நீண்ட கால பயிற்சி வகுப்புகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தலைப்பின கீழ் ரூபாய் 6,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(III) AH. ''பவானிசாகரில் சிவில் பணிப்பயிற்சி நிறுவனம்''

குறிப்புரை :

பெரியார் மாவட்டம், பவானிசாகரில் மாநில அரசு அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கும் பொருட்டு சிவில் பணிப் பயிற்சி நிறுவனம் ஒன்று 1974 ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டுள்ளது இந்நிறுவனம் பின்வரும் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. :—

1. நேரடியாகப் பணிக்கு எடுக்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கும், உதவியாளர்களுக்கும் அடிப்படைப் பயிற்சிக் கால அளவு இரு திங்கள்— முழு நேரம்.

2. வருவாய்த்துறை, காவல் துறை, வணிகத்துறை, கூட்டுறவுத்துறை முதலிய நிர்வாகத் துறைகளில் பணிக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கும், பதவி உயர்வு அளிக்கப்படுபவர்களுக்கும் B—பிரிவு அதிகாரிகளுக்கு அடிப்படைப் பயிற்சி-பயிற்சிக்கால அளவு இரு திங்கள்—முழுநேரம்.

3. வேளாண்மைத்துறை, கால்நடை வளர்ப்புத்துறை, கல்வித்துறை, போன்ற சில துறைகளில் B—பிரிவு அரசு அலுவலர்களில் பணிக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கும், பதவி உயர்வு அளிக்கப்படுபவர்களுக்கும் அடிப்படைப் பயிற்சி—பயிற்சிக்கால அளவு மூன்று வாரங்கள்—முழு நேரம்.

4. வணிகவரித்துறை அதிகாரிகளுக்கு நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள் (15 நாட்கள்).

5. துணைத் தாசில்தார்களுக்கான பயிற்சியொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இப்பயிற்சிகள் யாவும் நிறுவனத்தில் தங்கியிருந்து பயிற்சி பெறும் பயிற்சிகளாகும்.

சிவில் பணிப்பயிற்சி நிறுவனம் 1974 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதிலிருந்து 6766 இளநிலை உதவியாளர்களுக்கும், உதவியாளர்களுக்கும் B—பிரிவு அதிகாரிகள் 571 பேருக்கும் அடிப்படைப் பயிற்சி அளித்துள்ளது. வணிகவரித் துறைக்காக உள்ள நினைவூட்டும் பயிற்சியில் 355 அதிகாரிகளுக்கு 31—3—1980 வரை பயிற்சி அளித்துள்ளது.

மேற்படி நிறுவனத்தை நடத்துவதற்காக 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் 4,46,000 ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## இணைப்பு II.

[. . 8-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாடு காவல் துறை.

### 1979-80 ஆம் ஆண்டு ஆய்வுரை.

தமிழ்நாடு காவல் துறைச் சட்டம் ஒழுங்கு அமைதியை நிலை நாட்டல், குற்றங்கள் நடைபெறா வண்ணம் தடுத்தல், குற்றங்களைத் துப்பு துலக்குதல் ஆகிய பணிகளோடு மாநில மக்களுக்கு ஆற்றும் பொதுவான பணி ஆகியவற்றைத், தொடர்ந்து செவ்வனே நிறைவேற்றி வருகிறது. இப்பணிகளை ஆற்றிவரும்போது எதிர்நோக்க வேண்டியிருந்த சவால்களைச் சமாளித்ததுடன் இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டபோது அவற்றுக்கு ஈடு கொடுத்தும் தங்கள் கடமையை நிறைவேற்றி வந்தது.



2. தற்போது காவல் படையில் உள்ளவர்களின் எண்ணிக்கை விவரங்கள் I ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. படைக்கலந்தாங்கிய காவற்படை அணிகள்.—இம் மாநிலத்தில் ஐந்து படைக்கலந்தாங்கிய காவற்படை அணிகள் உள்ளன. ஒவ்வோர் அணியும், ஆறு இயங்கும் பிரிவுகளையும் ஒரு தலைமையிடப் பிரிவையும் கொண்டுள்ளது. 30 இயங்கும் காவற்படை பிரிவுகளில் உணவுப்பொருள் வழங்கல் துறைக்கு அனுப்பப்பட்டு உள்ள மூன்று பிரிவுகள், அரிசி, நெல் குறித்த அரசுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக 1979 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் நாளன்று இப்பணியிலிருந்து திரும்பப் பெறப்பட்டன.

4. பயிற்சியும் தேர்வும்.—தமிழ்நாட்டிற்காக ஒதுக்கப்பட்ட இந்தியக் காவல்பணிப் பதவிகள் 130 ஆகும். மாநில அரசு காவல் படையில் பணியாற்றும் நான்கு அதிகாரிகள், 1979-ல் ''பதவியுயர்வு ஒதுக்கீட்டில்'' இந்தியக் காவல் பணிப்பதவிகளில் நியமிக்கப்பட்டனர். காவல் துறை உதவி சூப்பிரண்டெண்டுகள் பத்து பேர். 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரையில் தங்களது செயல் முறைப் பயிற்சியை முடித்த பின்னர், காவல் துறைத் துணைக்கோட்டங்களில் பொறுப்பைத் தனித்தனியாக மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு காவல் பணியில் ஐ.பி.எஸ். பதவித்தரத்திற்கு நியமிக்கப்பட்ட இரண்டு ஐ.பி.எஸ். அதிகாரிகள் (இவர்கள் ஐ.பி.எஸ். அதிகாரிகளாக நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்) மேற்கொண்டும் பயிற்சி பெறுவதற்காக 1979 டிசம்பரில் சென்னைக் காவலர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தனர்.

[ஒரு ஐ.பி. அதிகாரி (திரு. ஈ. எல். ஸ்ட்ரேசி) 1979 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள் முற்பகல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். முன்னாள் ஒழுக்கக் கண்காணிப்பு-ஊழல் ஒழிப்பு இயக்குநர் திரு. என். கிருஷ்ணசாமி, ஐ.பி.எஸ்., தானே முன் வந்து பணியிலிருந்து 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31 ஆம் நாள் முற்பகல் ஓய்வு பெற்றார். மற்றொரு ஐ.பி.எஸ். அதிகாரியான திரு.எஸ். மச்சீந்திரநாதன், ஐ.ஏ.எஸ். பதவியில் சேருவதற்காக 1979 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 19 ஆம் நாள் அன்று பதவி விலகினார். ஓய்வு பெற்ற திரு. ஈ. எல். ஸ்ட்ரேசி, ஐ.பி., 1979 ஆம் ஆண்டு சூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் ஆறு மாத காலத்திற்குக் காவல்துறை டைரக்டர் ஜெனரலாக

மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார். மீண்டும் பணியில்
அமர்த்தப்பட்ட கால அளவு முடிவடைந்ததன் பேரில், அவர்
1979ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ஆம் நாள் முற்பகல்
பணியை விட்டு விலகினார்.

5. நேரடியாக நியமிக்கப்பட்ட காவல் துறை டெபுடி
சூப்பிரண்டெண்டுகள் (வகை I) மூவர் சென்னையிலுள்ள காவ
லர் பயிற்சிக் கல்லூரியில் நிறுவனப் பயிற்சியையும், மாவட்டங்
களில் களப் பயிற்சியையும் முடித்த பின்னர் காவல் துறைத்
துணைக் கோட்டங்களின் தனிப் பொறுப்பினை மேற்கொள்ள
அங்கு நியமிக்கப்பட்டனர். 1979ல் பணியில் நேரடியாக
நியமிக்கப்பட்ட காவல் துறை டெபுடி சூப்பிரண்டெண்டுகள்
(வகை I) இருவர் நிறுவனப் பயிற்சிக்காக 1979ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள் 1ஆம் நாளில் சென்னையில் உள்ள காவலர்
பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தனர். சென்னையில் உள்ள காவலர்
பயிற்சிக் கல்லூரியில் 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்
31ஆம் நாள் முற்பகல் அவர்கள் தங்களுடைய ஓராண்டுப் பயிற்
சியை முடிப்பர். நேரடியாக நியமிக்கப்பட்ட காவல் துறைத்
துணை சூப்பிரண்டெண்டுகள் (வகை I) ஆறு பேர் மவுண்ட்
அபுவிலுள்ள உள்நாட்டுப் பாதுகாப்பு அகாடமியில் காவல் துறை
அதிகாரிகளுக்காக நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்புக் கருத்
தரங்கு வகுப்புக்குச் சென்று கலந்து கொண்டனர்.

6. ஐதராபாத்திலுள்ள மத்திய துப்பறியும் பயிற்சிப் பள்ளி
யில் "அறிவியல் முறையில் புலனாய்வு செய்தல்" பற்றிய
14 வார கால பயிற்சிக்கு இன்ஸ்பெக்டர் ஒருவரும், சப்-
இன்ஸ்பெக்டர் இருவரும் முகமையில் அனுப்பப்பட்டனர். தமிழ்
நாடு அரசு பணியாளர்த் தேர்வாணைக் குழுவின் மூலம் நேரடி
யாக நியமனம் செய்யப்பட்ட 291 சப்-இன்ஸ்பெக்டர்களும்,
23 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களும் முறையே சென்னையிலுள்ள
காவலர் பயிற்சிக் கல்லூரியிலும் ஆவடியிலுள்ள தமிழ்நாடு
சிறப்பு காவல் படை II பிரிவு ரெஜிமென்டல் நிலையத்திலும்
நிறுவனப் பயிற்சி பெற்று வருகின்றனர்; சப்-இன்ஸ்பெக்டர்
களையும் ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களையும் தமிழ்நாடு அரசு
பணியாளர் தேர்வாணைக் குழுவின் ஆய்வு வரம்பின் கீழ் கொண்டு
வந்து 1974ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15ஆம் நாள் வெளி
பிறப்பிக்கப்பட்ட அரசாணை தற்போது ரத்து செய்யப்
பட்டுள்ளது; சப்-இன்ஸ்பெக்டர்களையும் ரிசர்வ் சப்-இன்ஸ்
பெக்டர்களையும் தமிழ்நாடு காவலர் சார்நிலைப் பணி
யில் தெரிந்தெடுக்கும் பணி, நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு
காவல் துறை டைரக்டர் ஜெனரலிடமே மீண்டும் ஒப்படைக்கப்
பட்டுள்ளது.



7. பெண் காவலர் பிரிவு.—1973 டிசம்பரில் பெண் சப்-
இன்ஸ்பெக்டர் ஒருவரும், பெண் காவலர் 21 பேரும் உள்ள
காவலர் பிரிவு ஒன்று சென்னை மாநகரில் ஏற்படுத்தப்
பட்டது. செங்கற்பட்டு (கிழக்கு) மாவட்டம், மீனம்பாக்கம்
விமான நிலையத்தில் பாதுகாப்பு விமானக் கடத்தலைத் தடுக்கும்
பணிக்காக 1975-ல் 8 பெண் காவலர்களை நியமிக்க அரசு
அனுமதி வழங்கியது. மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்
பள்ளி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் பெண் சப்-
இன்ஸ்பெக்டர் ஒருவர், பெண் தலைமைக் காவலர் ஒருவர்,
பெண் காவலர்கள் 12 அடங்கிய பெண் காவலர்கள் பிரிவுகளை
ஏற்படுத்தவும் அரசு 1976-ல் அனுமதி வழங்கியது. இப்பிரிவுகள்
1979ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் செயல்படத் தொடங்கி
யுள்ளன.

8. **அதிகாரிகள் கலந்து கொண்ட வகுப்புகள், மற்றும் கருத்தரங்குகள் பற்றிய விவரங்கள்** வருமாறு:—

| | வகுப்பின் பெயர். | வகுப்பின் கால அளவு. | கலந்துகொண்ட அதிகாரியின் பதவித் தரம். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | சென்னை இயந்திரத் தொழில் நுட்ப நிறுவனத்தின் நகர்ப்புறப் போக்குவரத்து நிர்வாகம் பற்றிய மேல்படிப்பு. | 3 நாட்கள் | ஐ.பி.எஸ். காவல்கள் துறை டெபுடி சூப்பிரண்டெண்டுகள். |
| 2 | ஐதராபாத், எஸ்.வி.பி. நேஷனல் போலீஸ் அகாடமியில் (என்.பி.ஏ.) உயர்நிலை நிர்வாக மேம்பாட்டுத் திட்டம். | 2 வாரங்கள் | ஐ.பி.எஸ். அதிகாரி. |
| 3 | புதுடில்லி (குற்றவியல் - சட்டம் சார்ந்த அறிவியல் நிறுவனத்தில்) (ஐ.சி.எஃப். எஸ். ல்) காவலர், பொது மக்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைப் பற்றிய படிப்பு. | 2 வாரங்கள் | ஐ.பி.எஸ். அதிகாரி. |
| 4 | ஐதராபாத், எஸ்.வி.பி.என். பி.ஏ-ல் குற்றத் தடுப்பு பற்றிய படிப்பு. | 2 வாரங்கள் | ஐ.பி.எஸ். அதிகாரி. |
| 5 | சென்னை, பொதுமக்கள் தொடர்பு நிர்வாக நிறுவனத்தில் பொதுமக்கள் தொடர்பு பற்றிய பட்டயப் படிப்பு. | ஐந்து மாதங்கள். | ஐ.பி.எஸ். அதிகாரி. |



| | | | |
|---|---|---|---|
| 6 | புதுடில்லி இந்திய பொது நிர்வாக நிறுவனத்தில் காவலர் தலைமையேற்று நிர்வகித்தல் பொதுமக்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றிய படிப்பு. | 2 வாரங்கள் | ஐ.பி.எஸ். அதிகாரி. |
| 7 | சென்னை தேசிய உற்பத்தித் திறக் குழுவில் பயிற்சி-மேம்பாட்டு நிர்வாகம் பற்றிய கருத்தரங்கு. | 2 நாட்கள் | ஐ.பி.எஸ். அதிகாரி. |
| 8 | மவுண்ட் அபுவில் உள்ள உள்நாட்டு பாதுகாப்பு அகாடமியில் உள்நாட்டு பாதுகாப்பு பற்றிய படிப்பு. | 11 நாட்கள் | ஐ.பி.எஸ். அதிகாரி. |
| 9 | புதுடில்லி, ஐ.சி.எப்.எஸ்-ல் ஆராய்ச்சி ஒழுங்கு முறை பற்றிய புத்தறிவுப் பயிற்சி. | 11 நாட்கள் | ஐ.பி.எஸ். அதிகாரி. |
| 10 | புதுடில்லி, குற்றவியல் சட்டம் சார்ந்த அறிவியல் நிறுவனத்தில் குற்றவியல் பற்றிய மேற்படிப்பு. | ஒரு மாதம் | ஐ.பி.எஸ். அதிகாரி. |
| 11 | ஐதராபாத், எஸ்.வி.பி. நேஷனல் போலீஸ் அகாடமியில் முதுநிலை அதிகாரிகளுக்கான படிப்பு. | 14 வாரங்கள் | ஐ.பி.எஸ். அதிகாரி. எஸ்.பி.எஸ். அதிகாரி. |
| 12 | புதுடில்லி, குற்றவியல் - சட்டம் சார்ந்த அறிவியல் நிறுவனத்தில் காவலர் பொது மக்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றிய படிப்பு. | 11 நாட்கள் | ஐ.பி.எஸ். அதிகாரி. |
| 13 | சென்னை, நிர்வாக நிறுவனத்தில் பொருட்கள் தேவை பற்றிய திட்டம், கொள்முதல் கட்டுப்பாடு ஆகியவற்றின் நிர்வாகத்தில் படிப்பு. | 2 வாரங்கள் | எஸ்.பி.எஸ். அதிகாரி. |

10. குற்ற நிகழ்வுகள்.—1978, 1979ஆம் ஆண்டுகளிலும் 1980ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாள் முதல் 1980ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் நாள் வரையிலான கால அளவில் சொத்து குறித்து நிகழ்ந்த குற்றங்கள் பற்றிய ஒப்பு நோக்குப் புள்ளி விவர அறிக்கை பின்வருமாறு :—

| குற்றத்தன்மை. | 1978 | 1979 | 1980 (1-1-80 முதல் 31-3-80 வரையில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆதாயத்திற்காக கொலை செய்தல். | 40 | 28 | 10 |
| கொள்ளை .. .. | 21 | 36 | 9 |
| வழிப்பறி .. .. | 192 | 254 | 62 |
| கன்னக்களவு .. .. | 10,499 | 9,637 | 2,229 |
| பெரிய திருட்டுகள் .. | 26,915 | 25,406 | 5,948 |
| சிறிய திருட்டுகள் .. | 2,736 | 2,969 | 487 |
| கால்நடைத் திருட்டுகள் | 1,336 | 1,241 | 278 |
| மொத்தம் .. | 41,739 | 39,571 | 9,023 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | (சதவீதம்) | | |
| குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில், துப்புத் துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்பது. | 30.1 | 26.0 | 8.8 |
| தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகள் நடைவிசாரணை பெறுகின்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கையில் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்பது. | 47.2 | 47.6 | 40 |

11. 1979ஆம் ஆண்டு சொத்துக் குறித்துப் பதிவான
குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 38,671 ஆகும். அவ்வகையில்,
1978 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கு
களின் எண்ணிக்கை 41,739. இக்குற்றங்களின் எண்ணிக்கை
2,168. 1980ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாள் முதல்
1980ஆம் ஆண்டு மார்ச்சு 31ஆம் நாள் வரையில் சொத்து
குறித்த வழக்குகள் 9,023 பதிவாயின. 1979-ல் நிலைமைகள்
சாதகமாக இருந்ததாலும், குற்றவியல் விதிக்கோவையின
குற்றத் தடுப்புப் பிரிவுகளை அறிவார்ந்த முறையில் பயன்
படுத்தியதாலும், மொத்தத்தில் குற்ற நிகழ்வுகள் குறைந்தன.
ஆனால், அடுத்த ஆண்டிலும் இதே நிலைமை நீடிக்கும் என்று
உத்தரவாதம் அளிக்க முடியாது. ஏனெனில், இன்றியமையாப்
பொருள்களின் விலைவாசி தொடர்ந்து உயர்ந்து வருதல், வேலை
யில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு, தேவைகள் அதிக அளவு
பெருகி வருவது, மக்களின் பெரும் அளவிலான எதிர்பார்ப்புகள்
ஆகியவை குற்ற நிகழ்வுகள் பெருகுவதற்கான காரணங்களாக
அமைகின்றன.

12. குற்றங்களைத் துப்புத் துலக்குதல்.—குற்றப் பிரச்
சினையைச் சீரிய முறையிலும் திறமையாகவும் சமாளிப்பதற்கு
தமிழ்நாடு காவல் துறை அனைத்து முயற்சிகளையும் மேற்
கொண்டுள்ளது, தீர்த்து வைப்பது மிகக் கடினம் என்று
வெளிப்படையாகத் தெரிய வருகின்ற வழக்குகளும் பதிவு
செய்யப்படுகின்றன. 1978-ல் தண்டனையில் முடிந்த வழக்கு
கள் விசாரணை முடிவடையாத வழக்குகளின் சதவீதம் 47.2
ஆக இருக்க, 1979ஆம் ஆண்டு இது 47.6 சதவீதமாக சற்று
உயர்ந்து 1980ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் நாள் வரை
40 சதவீதமாக உள்ளது. புலனாய்வு செய்யப்பட வேண்டிய
வழக்குகள் முது நிலை அதிகாரிகளிடம் கொடுக்கப்பட்டு,
அவர்கள் இதில் கவனம் செலுத்தியதன் காரணமாகவே இம்
முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. துப்பு துலக்கும் அதிகாரிகளையும்
பணியாளர்களையும் மேலும் அதிக அளவில் நியமிப்பதின்
மூலம் பெருமளவில் வெற்றி கிடைக்கக்கூடும்.

13 திருட்டுச் சொத்துக்களை மீட்டல்.—1978 ஆம்
ஆண்டில் திருட்டுச் சொத்துக்களில் 41.2 சதவீதம் மீட்கப்பட்டு
விட்டன. ஆனால் 1979-ஆம் ஆண்டில் 41.9 சதவீதமும்,
1980ஆம் ஆண்டில் மார்ச் மாதம் 31 ஆம் நாள் வரையில்
41.4 சதவீதமும் திருட்டுச் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.
குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் செய்யும்
குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக
அறிவியல் சாதனங்கள், மாநில வரல் ரேகைப் பதிவு நிலையங்கள்
தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல் இரசாயன
ஆய்வுக் கூடம், மாவட்டங்களிலுள்ள குற்றம் சார்ந்த சட்ட
அறிவியல் நடமாடும் ஆய்வுக்கூடங்கள் போன்ற அமைப்புகள்,
காவல்துறை வான் தந்தி அமைப்புகள், துப்பறியும் நாய்ப்



படைகள், காவல்துறை கணக்கீட்டுப் பொறி பிரிவு ஆகிய
வற்றில் புலனாய்வு பணியாளர்கள் பெருமளவில் பயன்படுத்தப்
பட்டு வருகின்றனர். இந்தியாவில் அனைத்து மாநிலங்களையும்
சேர்ந்த குற்றவாளிகள் சில நேரங்களில் தமிழ்நாட்டில் செயல்
படுவதால் மாநிலங்களுக்கிடையே தொடர்புகள் வைத்துக்
கொள்ளப்படுகின்றன.

14. 1980-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாள் முதல்
1980ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் வரை காவல்
துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட முக்கியமான வழக்குகள்
சிலவற்றின் விவரங்கள்—

திருநெல்வேலி.—திருநெல்வேலி, இராமநாதபுரம் (கிழக்கு)
(மேற்கு), மதுரை (தெற்கு) ஆகிய மாவட்டங்களில் பரவலாகச்
செயல்பட்டு வந்த 6 பேர் கொண்ட கூட்டத்திற்குத் தலை
வரான வல்லநாடு டி. இ. சிதம்பரம் என்ற குற்றவாளியையும்
அவருடைய கூட்டத்தைச் சேர்ந்த ஐவரையும் திருநெல்வேலி;
காவல்துறையினர் 1980ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம்
நாள் அன்று வளைத்துப் பிடித்தனர். கொலை முயற்சிக்கும்
அஞ்சாத இக்கூட்டத்தினர் பல வழிப்பறி கொள்ளைகளில் ஈடு
பட்டு வன்முறையைத் தொழிலாகக் கொண்டு, 1978-79 இல்
இருவரைக் கொலை செய்தனர். இவர்களை கைது செய்த
தினால் திருநெல்வேலி மாவட்டத்தில் 1979ஆம் ஆண்டில்
நடைபெற்ற மூன்று வழிப்பறி வழக்குகளையும், திருநெல்வேலி
இராமநாதபுரம், மதுரை தெற்கு மாவட்டங்களில் (1978,
1979-ல் முறையே 5 மற்றும் 13 கொலை முயற்சியுடன் கூடிய
வழிப்பறி வழக்குகளையும்), இராமநாதபுரம், தென்மதுரை
மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் நடைபெற்ற ஒரு கொலை
வழக்கையும் துப்புத் துலக்க முடிந்தது. 25,000 ரூபாய் பெறு
மான திருட்டுச் சொத்துக்களை கைப்பற்றி திருடர்களைக் கைது
செய்தது. காவல் துறையின் தலைசிறந்த சாதனை என்று
மக்களால் பாராட்டப்பட்டது. இதனால், அப்பகுதி முழு
வதையும் சேர்ந்த மக்களுக்கு காவல் துறையினரிடம் நம்பிக்கை
மிகுந்து அவர்கள் மனதில் பாதுகாப்பு உணர்ச்சி ஏற்பட்டது.
கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு
விசாரணையில் உள்ளது.

கன்னக்களவு.

(அ) சென்னை மாநகர்.—(i) 30—1—1980 அன்று இரவு,
மேற்கு வங்காளம், பர்த்வான் மாவட்டத்தைச் சேர்ந்த அலிஷ்க்
ராம் காவல் நிலையம், அலிஷ்க் ராம் அஞ்சல், ராம் நகரைச்
சேர்ந்த அஜாய் போஸ் என்பவரின் மகனாகிய முன்னாள் குற்ற
வாளியான திரேன்போஸ் என்கிற தீபக் போஸ் (வயது 30)

[1980 ஜூலை 25

கன்னக் கருவிகளுடன் சந்தேகத்தின பேரில்,
ரால் கைது செய்யப்பட்டார். அவர் கொடுத்த தகவலின
பேரில், (1) மேற்கு வங்காளம், 24 பர்கானா, சௌகார்
பேட்டை காவல்நிலையம், இராஜ்பூர் காவல் நிலையம், நந்தன்
குடியிருப்பு, ராஜ்புட், எம். என். ராய்சாலை, கோபால்சந்த்
என்பவரின் மகனாகிய சுபாஷ் சங்கர் சர்க்கார் (வயது 25),
(2) ஹௌரா மாவட்டம், ஜோரா பரதட்டா ராணிஹட்டி,
அவோரி மஜூந்தர் என்கிற அலில் தாஸ் (வயது 22), (3)
ஹௌரா மாவட்டம் பௌரியா காவல் நிலையம், ஆக்
அஹசல், ராமேஸ்வர்பட்டி, யாகுப் ஹூசேன் என்பவரின்
மகனாகிய அல்தாஃப் ஹூசேன் (வயது 32), (4) பீகார்,
பாட்னா, 8/4 கங்கா பாக் சாலை, சங்கிய சர்தார் என்பவரின்
மகனாகிய இராஜன் என்கிற ஜூதன் சர்க்கார் (வயது 25),
(5) பீகார் மெய்ன் முகர்ஜி என்பவரின் மகனாகிய பி. எல்.
முகர்ஜி (வயது 35), (6) பீகார், கானிபுட், சோமமுஹ
கிராமம், உபந்தோ லஹாரி என்பவரின் மகனாகிய லஹாரி
(வயது 52) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். சுமார் 12.5
இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் தொடர்பான 45
திருட்டுகளுக்கு இவர்கள்தான் பொறுப்பானவர்கள் என்று கண்
டறியப்பட்டது. ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள்,
கல்கத்தாவைச் சேர்ந்த பாபுலு என்பவரிடமிருந்து வசூலிக்கப்
பட்டுள்ளது.

(b) தமிழ்நாடு முழுவதும் 1960-1980 ஆம் ஆண்டுகளுக்கு
இடையே நடைபெற்ற இரவு நேரத்தில் சன்னல் கம்பிகளை
வளைத்து, வீடுகளில் நுழைந்து கன்னக்களவு செய்யப்பட்ட
26 வழக்குகளில், சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மதிப்பு
1.4 இலட்சம் ரூபாயாகும். குற்றம் நடந்த இடத்திலிருந்து
எடுக்கப்பட்ட விரல் ரேகைப் பதிவுகள், பங்களாதேசைச்
சேர்ந்த பலாமா காவல் நிலையத்தைச் சேர்ந்த மகேந்திர
நாத் ராய் என்பவரின் மகனான விஷ்ணுபாதா ராய் என்பவரது
ரேகைகள் என்று தெரியவந்தன. அவருடைய விரல் பதிவுகள்
கல்கத்தா, கட்டாக் துப்பறியும் நிலையங்களில் பதிவாகி
யுள்ளன. 2-12-1948 ஆம் நாளிட்ட மார்குலாபாய் காவல்
நிலையத்தின் 292, 293, 294 ஆம் எண்ணுள்ள குற்ற வழக்கு
களை விசாரணை செய்த கட்டாக் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்
சி. சி. 1787/48-ல் அளித்த தீர்ப்பில் இவருக்கு இறுதியாக
ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. குற்ற
வாளியைக் கைது செய்து பிடித்துவர வேண்டியுள்ளது. அதற்கு
மேற்கு வங்காள மாநிலத்தின் உதவி தேவைப்படுகிறது.

(c) திருச்சிராப்பள்ளி.— உறையூரைச் சேர்ந்த குறசேவாதி
கள் தலைமையில் ஒரு குறவர் கூட்டத்தை திருச்சிராப்பள்ளி
காவல் துறையினர் பிடித்ததன் மூலம் காவல் துறையினர் தங்
களது திறமையை வெளிப்படுத்தினர். 1979 ஆம் ஆண்டுடன்
முடிவடையும இரண்டாண்டு காலத்தில், நடைபெற்ற ஒரு
கொள்ளை, இரவில் கன்னக்களவு வழக்கு 5, பகல் நேரக்



1980 ஜூலை 25]

கன்னக்களவு ஒன்று, 13 திருட்டுகள் ஆகியவற்றிற்கும் அவர்
களே பொறுப்பாகும் என்பது, குற சேவாதிகளையும், அவர்
வகுப்பைச் சேர்ந்த 5 பேர் அடங்கிய ஒரு கூட்டத்தையும்
வளைத்துப் பிடித்து விசாரித்தபோது தெரியவந்தது. இவர்
களை கைது செய்ததன் மூலம் ரூ. 60,000 மதிப்புள்ள திருட்டு
நகைகள் மீட்கப்பட்டன. அவர்கள் மீது விசாரணை நடை
பெற்று வருகிறது.

III. வங்கிக் கொள்ளை.

சேலம்.—சம்பவம் நடைபெற்ற இடத்தில் கண்டு பிடிக்கப்
பட்ட ரேகைத் தடயங்களின் மூலமும், காவல் துறையின்
உடனடி நடவடிக்கைகளின் மூலமும், 8-1-1980 ஆம் நாள்,
இரவு, நாமக்கல் லட்சுமி விலாஸ் வங்கியில், நடைபெற்ற
கொள்ளை உடனடியாகத் துப்புத் துலக்கப்பட்டது. இக் கொள்
ளையில் சம்பந்தப்பட்ட பவானியைச் சேர்ந்த நல்லையன்
என்கிற கன்றியக் குற்றவாளி இப்ராஹிம் பெங்களூரில் கைது
செய்யப்பட்டு, திருடப்பட்ட ரூ 2,36,500-ல் ரூ 2,19,000
அவரிடமிருந்து கைப்பற்றப் பட்டது. அறிவியல் முறைகளைப்
பயன்படுத்தி புலனாய்வு செய்வதனால் நல்ல பலன் கிடைக்கும்
என்பதற்கும், காவல் துறையினர் தமக்குக் கிடைத்த நல்ல
துப்புகளை வைத்துக் கொண்டு கூர்ந்த மதியுடனும் இடைவிடாது
முயற்சியுடனும் முயன்று வெற்றியடைந்ததற்கும் இது நல்ல
தொரு சான்றாகும்.

IV தெய்வச்சிலைத் திருட்டு.

செங்கல்பட்டு மாவட்டம் (கிழக்கு) —18, 19—1—1980
ஆம் நாள் இரவு சுமார் 1 மணிக்கு சிங்காவனம் நுற்றெட்டீஸ்
வரர் கோவிலில் ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள 11 பஞ்சலோகச்
சிலைகள் திருடப்பட்டன. இது தொடர்பாக குற்றஞ் சாட்டப்
பட்டவரும், தற்சமயம் அம்பத்தூரில் வசித்து வருபவருமான
சிவகாசியைச் சேர்ந்த மரியதுரையும் (தந்தை பெயர் அந்தோணி)
அவரது கூட்டாளிகள் 12 பேரும் கைது செய்யப்பட்டனர்.
லாரி ஒன்றில் சிலைகளை எடுத்துச் செல்லும்போது 11 சிலை
களும் கைப்பற்றப்பட்டன. இ. பி. கோ. 457, 380 ஆம்
பிரிவுகளின் படி 29/80 ஆம் எண் குற்ற வழக்கில், பொன்னேரி
காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வு
செய்யப்பட்டு வருகிறது.

மின்கம்பித் திருட்டு.

தருமபுரி மாவட்டம்.—தருமபுரி மாவட்டக் குற்றப் பதிவு
தனிக்குழு. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த என். எல். எப். ஒ.
திருவள (டி. சி. ஆர். பி.) டெபுடி சூப்பிரண்டின் தலைமையில்
சேகர் (தந்தை பெயர் பக்கிரியா பிள்ளை) என்
பவரைக் கைது செய்தது. தருமபுரி மாவட்டத்தைச்

சேர்ந்த 55 வழக்குகள், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 8 வழக்குகள், பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த 1 வழக்கு (மொத்தம் 64 வழக்குகள்) ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட ரூ. 20,000 மதிப்புள்ள தொலைபேசி இணைப்புச் செப்புக் கம்பிகளும், செப்புப் பாளங்களும் கைப்பற்றப்பட்டன. இ.பி. கோ. 379 ஆம் பிரிவின்படி அதியமான்கோட்டைக் காவல் நிலையத்தின் 138-80 ஆம் எண் குற்றவழக்கில் விசாரிக்கப்பட்டு வருகிறார்.

15. இனக் கலவரங்கள்.—ஆய்வு ஆண்டில், நீலகிரியில் இத்தலார், கன்னியாகுமரியில் தக்கலை, தருமபுரியில் பாலக்கோடு, இராமநாதபுரம் (கிழக்கு) மாவட்டத்தில் முதுகுளத்தூர், ஊஞ்சனை, வட ஆற்காடு மாவட்டத்தில் மேல் விஷாரம் ஆகிய இடங்களில் முகமதியர், இந்துக்கள் அரிசனங்களுக்கிடையே பெரும் வகுப்புவாதச் சண்டைகள் ஏற்பட்டன. பொதுமக்களிடையே அமைதியும், ஒழுங்கும் சிறிது காலத்திற்குக் குலைந்தாலும் காவல் படையினர் உரிய நேரத்தில் எடுத்த திறமை மிக்க நடவடிக்கையினால் குழப்பமான சூழ்நிலையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். மேற்சொன்ன பெருங்கலவரங்களின் விவரங்கள் வருமாறு :—

(i) நீலகிரி மாவட்டம்.—இத்தலாரில் கலவரம்— நீலகிரி மாவட்டத்திலுள்ள இத்தலார் என்னுமிடத்தில், 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3-ம் நாளன்று படகர் வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கும், படகர் அல்லாத வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கும் இடையே குடிபோதையில் ஏற்பட்ட சச்சரவு, 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5-ம் நாளன்று படகர்களுக்கும் படகர் அல்லாதவர்களுக்குமிடையே பெருஞ் சண்டையாக வளர்ந்தது. இத்தலாரைச் சேர்ந்த சுமார் 2,000 படகர்கள் ஆத்திரமடைந்து இத்தலார் கிராமத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள படகர் அல்லாதவர்களின் குடிசைகளுக்குத் தீ வைத்தனர். இக் கலகத்தின் விளைவாக, 3 படகர்கள் கொல்லப்பட்டனர். 45 படகர்களும், 22 படகர் அல்லாதவர்களும் காயமுற்றனர். கலகக் கூட்டத்தினரைக் கலைந்து செல்லும்படிச் செய்வதற்காகக் காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் செய்தனர். காவல் துறையினர் 20 வழக்குகளைப் பதிவு செய்தனர். 175 பேர் கைது செய்யப்பட்டனர். 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5-ம் நாளிலிருந்து 15 நாட்களுக்கு கு. வி. கோ. சட்டக் கோவையின் 144-ம் பிரிவின்படி ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன. கலகம் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில், காவல் படையினர் நியமிக்கப்பட்டனர்.

(ii) கன்னியாகுமரி மாவட்டம்.—தக்கலையில் முகமதியர்களுக்கும் ஐயப்ப பக்தர்களுக்குமிடையே கலவரம்.—1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 10-ம் நாளன்று, தக்கலையில், பள்ளிவாசல் தெரு வழியாக, ஐயப்ப பக்தர் குழுவினர் பஜனை



செய்துக் கொண்டும், முரசடித்துக் கொண்டும் செல்வதற்கு முகமதியர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இது, இரு குழுவினர்களுக்குமிடையே கலவரத்தைத் தூண்டி விட்டது. இக்கலவரத்தில், இந்து ஒருவரும், முகமதியர் மூவரும் காயமுற்றனர். காவல் துறையினர் 2 வழக்குகளைப் பதிவு செய்தனர். இதனைத் தொடர்ந்து, தக்கலையிலும், அதன் சுற்றுப் புறத்திலும் 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12-ம், 13-ம் தேதிகளில் இந்துக்களுக்கும், முகமதியர்களுக்குமிடையே சிறு கை கலப்புகள் நடைபெற்றன. தக்கலைக்கு அருகில் உள்ள மசூதி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த 'குரான்' எரிக்கப்பட்டது. சில விஷமிகள் 'உண்டியல்' வசூலைத் திருடி விட்டனர். இவர்கள் பின்னர் கைது செய்யப்பட்டனர். இந்துக்களுக்கும், முகமதியர்களுக்கு மிடையே இருந்த பகைமையினால், 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 14-ம் நாள் முதற்கொண்டு 15 நாட்களுக்கு, தக்கலையில், காவலர் சட்டத்தின் 39(2) ஆம் பிரிவின்படி ஒழுங்குமுறை ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 15-ம் நாளன்று, இ. பி. கோ. 107-ம் பிரிவின் கீழ், 102 இந்துக்கள், 44 முகமதியர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(iii) தருமபுரி மாவட்டம்— பாலக்கோட்டில் இந்துக்களுக்கும், முகமதியர்களுக்குமிடையே கலவரம்.—இந்து ஒருவருக்குச் சொந்தமான டீக்கடையில் வேலை பார்த்து வந்த முகமதிய வேலைக்காரச் சிறுவன் ஒருவனை, மளிகைக் கடை உரிமையாளர் ஒருவர் (இவர் ஒரு முகமதியர்) அடித்து விட்ட சிறு நிகழ்ச்சி பாலக்கோட்டில் (தருமபுரி) அமைதியைக் குலைக்கும் பெரிய கலவரமாகத் தலையெடுத்தது. 1979-ம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் வாரத்தில், பாலக்கோட்டிலும், அதன் சுற்றுப் புறத்திலும் இந்துக்களுக்கும், முகமதியர்களுக்குமிடையே தொடர்ந்து பல மோதல்கள் ஏற்பட்டன. காவல் துறையினர் 4 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர பல இடங்களில் தடியடிப் பிரயோகமும் நடத்தப்பட்டது. ஆனால், பாலக்கோட்டிலும், அதன் சுற்றுப் புறத்திலும், இந்துக்கள் முகமதியர்களை பகிஷ்காரம் செய்ததைத் தொடர்ந்து, பாலக்கோட்டில் இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் இடையே சிறு கைகலப்பு ஏற்பட்டது. இது இறுதியில், ரம்சான் பண்டிகைக்கு முந்தின நாள் அதாவது 1979-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 24-ம் நாளன்று இரவு, கலவரம், தீவைப்பு, கொலையில் முடிந்தது. பாலக்கோட்டில் முகமதியர் இருப்பிடங்களில் சுமார் 500 இந்துக்கள் நுழைந்து, முகமதியர்களைத் தாக்கியதன் விளைவாக இரு முகமதியர் இறந்தனர். கலகக்காரர்களை அடக்குவதற்காக காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியிருந்தது. இதில் இருவர் இறந்தனர். முகமதியர் ஒருவர் வீசிய நாட்டு வெடிகுண்டு வெடித்ததனால் இந்து ஒருவர் கொல்லப்பட்டார். காவல் துறையினர் எடுத்த கடுமையான நடவடிக்கையால் அமைதியான சமூக நிலைமை திரும்பியது.

நிலைமை இருப்பினும், பாலக்கோட்டிலும், அதன் சுற்றுப் புறத்திலும் இந்துக்களுக்கும், முகமதியர்களுக்குமிடையே இன்றும் பரஸ்பர அவநம்பிக்கை நிலவி வருகிறது.

## (iv) இராமநாதபுரம் (கிழக்கு) மாவட்டம்

(1) முதுகுளத்தூர் வட்டத்தில், அரிசனங்களுக்கும் தேவர்களுக்குமிடையே ஏற்பட்ட சாதிக் கலவரங்கள்.—இராமநாதபுரம் (கிழக்கு) மாவட்டத்திலுள்ள முதுகுளத்தூரிலும், அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் அரிசனங்களுக்கும், தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குமிடையே 1979-ம் ஆண்டு கோடைக் காலத்தின்போது திடீரென்று சாதிக் கலவரங்கள் ஏற்பட்டன. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மறைந்த முத்துராமலிங்கத் தேவரின் பெயர் சூட்டலாமென்று அரசு கருதியுள்ளதன் விளைவே இவர்களுக்குள் கருத்து முரண்பாடு ஏற்படக் காரணமாகும். டாக்டர் அம்பேத்கார் பெயரோ அல்லது 1957-ம் ஆண்டு முதுகுளத்தூரில் நடைபெற்ற கலவரத்தில் பலியான அரிசனத் தலைவர் இம்மானுவேல் சேகரன் அவர்களுடைய பெயரோ, இம் மாவட்டத்திற்குச் சூட்டப்பட வேண்டுமென்று அரிசனங்கள் விரும்பினர். காவலர்கள் எடுத்த நடவடிக்கையால் சூழ்நிலை கட்டுக்கடங்கியிருந்த போதிலும் தேவர்களுக்கும் அரிசனங்களுக்கும் இடையே மனத்தில் வேரூன்றியுள்ள அவநம்பிக்கையும் வெறுப்புணர்ச்சியும் அறவே மறையவில்லை.

(2) உஞ்சனையில் நாடார்களுக்கும், அரிசனங்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பு.—

இராமநாதபுரம் (கிழக்கு) மாவட்டம், உஞ்சனைக் கிராமத்தைச் சேர்ந்த நாடார்களுக்கும் அரிசனங்களுக்குமிடையே உள்ளூர் கோவிலில் கடவுளை வழிபாடு செய்வதில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக அவ்விரு சாராருக்குமிடையே மனத்தாங்கல் ஏற்பட்டது. மனத்தாங்கல் முதிர்ந்து மோசமாகி, 1979-ம் ஆண்டு ஜூன் திங்கள் 28-ம் நாளன்று சுமார் 1,000 நாடார்கள், சின்ன உஞ்சனை கிராமத்தைச் சேர்ந்த அரிசனங்களைத் தாக்கினர். 18 அரிசனங்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதில் 5 அரிசனங்கள் இறந்து போயினர். காவல் துறையினர் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர். 80 பேரை (நாடார்) கைது செய்து 1980-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 28-ம் நாளன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. நாளது வரை 240 நாடார்களிடமிருந்து இடைக்கால உறுதிமொழிப் பத்திரம் பெறப்பட்டது. தற்போது அமைதி நிலவிய போதிலும், இக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட அரிசனங்கள் தாக்குதல் நடத்தியவர்கள் மீது பழிவாங்கத் தக்க தருணத்தை எதிர் நோக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.



## தென்னார்காடு மாவட்டம்.

(v) பண்ணுருட்டியில் சாதி இந்துக்களுக்கும் அரிசனங்களுக்குமிடையே மோதல்—

சாதி இந்து ஒருவர், அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் கள்ளத்தனமான உறவு வைத்திருந்தது பண்ணுருட்டியில் 29—5—1979, 30—5—1979 ஆகிய நாட்களில் சாதி இந்துக்களுக்கும், அரிசனங்களுக்கும் இடையே பெரும் மோதலை ஏற்படுத்தியது. சென்னை-கும்பகோணம் சாலையில் கலவரத்தில் ஈடுபட்ட இந்து அரிசனங்களை அடக்க காவலர்கள் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். கூரை வேயப்பட்ட அரிசனங்களின் சுமார் 130 குடிசைகள் சில சாதி இந்துக்களால் தீக்கிரையாக்கப்பட்டன. 31—5—1979 அன்று, வன்னியர் (சாதி இந்து) ஒருவரின் கூரை வேயப்பட்ட கொட்டகைக்குத் தீ வைக்கப்பட்டது. உள்ளூர்க் காவல் துறை இ. பி. கோ. 107 ஆம் பிரிவின்படி 46 சாதி இந்துக்கள், 25 அரிசனங்கள் ஆகியோர் மீது பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

## வட ஆற்காடு மாவட்டம்.

(vi) மேல் விசாரத்தில் இந்துக்களுக்கும்-முஸ்லீம்களுக்குமிடையே மோதல் —

(1) 19—8—1979 அன்று (வட ஆற்காடு மாவட்டம்) மேல் விசாரத்தில் இரண்டு இந்து முஸ்லீம் சூதாடிக் கும்பல்களுக்கு மிடையே ஏற்பட்ட சச்சரவு இரு சாதியினருக்குமிடையே பெரும் கைகலப்பை ஏற்படுத்தியது. அதே நாளில், கீழ் விசாரத்தில் சுமார் 400 இந்துக்கள் உள்ளூர் திரையரங்குகளில் முஸ்லீம்களைத் தாக்கினர். மூன்று முஸ்லீம்களின் குடிசைகளுக்குத் தீ வைத்தனர். இக்கும்பல் கைகளில் தீப்பந்தங்களை ஏந்தி, தீ வைக்கும் நோக்கத்துடன் மேல் விசாரத்தை நோக்கிச் சென்ற போது, காவலர், கண்ணீர்ப் புகை குண்டு வீசிக் கூட்டத்தைக் கலைத்தனர். 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

(2) மேற்கூறிய பெரும் கலவரங்கள் தவிர, 19—9—1979 அன்று (வட ஆர்க்காடு) ஜாபராப் பேட்டையில் சாதி இந்துக்களுக்கும் அரிசனங்களுக்கும் இடையே ஒரு சிறு கலவரம் ஏற்பட்டது. சாதி இந்து ஒருவரின் கால்நடைகள் அரிசனங்களின் நிலத்தில் மேய்ந்ததின் காரணமாக இக்கலவரம் ஏற்பட்டது. சாதி இந்து ஒருவர் இக்கலவரத்தில் காயமுற்று மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் இறந்து விட்டார். காவல் துறையினர் இரு வழக்குகள் பதிவு செய்துள்ளனர்.

### மதுரை தெற்கு.

(vii) ஜோதிநாயக்கனூரில் 26—9—1979 அன்று துவைக் கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் போது, அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கும், சாதி இந்து வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு அதுவே, 27—9—1979 அன்று மோதலாக உருவெடுத்தது. கூரை வேயப்பட்ட 16 அரிசனக் குடிசைகளும், 'சாதி இந்து வகுப்பினரின் ஒரு வீடு, தேனீர்விடுதி ஒன்று, கால்நடைக் கொட்டகை ஒன்று முதலியவற்றுக்குத் தீ வைக்கப்பட்டது. இக்கலவரத்தில் காயமுற்று மதுரை எர்ஸ்க்கின் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட மூக்கன் (அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்) என்பவர் 1—10—1979 அன்று இறந்து விட்டார்.

(viii) 19—1—1980 அன்று காலை 8-45 மணி அளவில் (மதுரை தெற்கு) அவனியாபுரம், பெரியார் நகர் அரிசனக் குடியிருப்பினருகே, நான்கு அரிசனங்கள் தேவர் வகுப்பைச் சேர்ந்த, 30 வயது அருணா என்னும் ஆசிரியைக் கேலி செய்தனர். இதை ஆசிரியை தன்னுடைய உறவினர்களுக்குத் தெரிவித்ததால், அவர்கள் சட்டத்திற்குப் புறம்பாக பயங்கர ஆயுதங்களுடன் ஒரு கும்பலாகக் கூடினர். சுமார் 500 தேவர்கள் முக்கியச் சாலை வழியே அரிசனக் குடியிருப்பை நோக்கிச் சென்றனர். இதற்கிடையில் அரிசனங்கள் ஒருங்கு திரண்டனர். பின்னர் இரு சாராரும் சரமாரியாகக் கற்களை வீசியும், தடிகள், பயங்கர ஆயுதங்கள் ஆகியவற்றால் தாக்கிக் கொண்டனர். காவலர்கள் கூட்டத்தைக் கலைந்து செல்லுமாறு எச்சரித்தனர். ஆனால், கூட்டம் காவலர்களைத் தாக்கியதோடு காவலர் 'வேன்'கள் அரசு உடைமைகளைத் தாக்கிச் சேதம் விளைவித்தது. நிலைமை கட்டுக்கடங்காமல் போவதைத் தடுக்கும் வகையில் கூட்டத்தினரை அச்சுறுத்த திருப்பரங்குன்ற உதவித் துணை இன்ஸ்பெக்டர் ஊமைக் காயம் ஏற்படுத்தும் தோட்டாக் கொண்டு வானத்தை நோக்கி இருமுறை சுட்டார். அதன் பயனாய்க் கூட்டம் கலைந்து சென்றது. இதனால் ஒருவருக்கும் காயம் ஏதுமில்லை. ஒருவரும் உயிரிழக்கவில்லை.

(ix) மடவலம் (வட ஆற்காடு மாவட்டம்) கிராமத்தில் 14—1—1980 அன்று கணபதி முதலியாரின் (துணி வியாபாரி துணிக்கடையில் புருக்கி என்ற ஒருவரும், அரிசனங்கள் 44 பேரும் அத்துமீறிப் புகுந்து அவரைத் தாக்கியதோடு கடையிலிருந்து சுமார் 7,000 ரூபாய் மதிப்புள்ள புதுத் துணிகளை எடுத்துச் சென்றனர். அவர்கள் இரண்டு நாட்டு வெடிகுண்டுகளை கடைமீது வீசியதாகவும் கூறப்படுகிறது. இக்கலவரத்தில் குற்றம் சாட்டப்பட்ட (அரிசன்) கிருட்டிணன் என்பவர் காயமுற்று, திருப்பத்தூர் மருத்துவ மனையில் இறந்து போனார். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து திருப்பத்தூர் வட்டக் காவல்



துறையினர் கு. எண். 11/80-ல் 7. இ.பி.கோ. 147, 148, 427, 448, 324, 307, 397, 286 ஆம் பிரிவுகளின்படி வழக்கு ஒன்றைப் பதிவு செய்தனர். புருக்கியும் மற்றும் 14 பேரும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

(x) 15—1—1980 அன்று பழைய (மதுரை வடக்கு) வத்தலக்குண்டுவைச் சேர்ந்த இராமர் என்னும் நாயுடு வகுப்பைச் சேர்ந்த ஒருவர், கலா என்னும் அரிசனப் பெண்ணிடம் முறைகேடாக நடந்து கொண்டார்.

அன்றே, அவரும் வேறு 4 பேரும், கலாவைத் தம்மைச் சந்திக்க அழைத்து வரத் தவறியதற்காக மாரியம்மாள் என்பவரைத் தாக்கி அவருடைய வீட்டைச் சூறையாடினர். அன்றே ஆவேசமுற்ற அரிசனங்கள் இராமரின் தவறான நடத்தை குறித்து விசாரணை செய்ய நாயுடு தெருவிற்குச் சென்றனர். அப்போது ஏற்பட்ட கைகலப்பில் தாயுடு ஒருவரை அரிசன் ஒருவர் கத்தியால் குத்திவிட்டார். அதோடு நாயுடு வகுப்புப் பெண் ஒருவரின் வீடும் சூறையாடப்பட்டது. வத்தலக்குண்டு காவல் துறையினர் குற்ற எண். 11/80ல், இ.பி.கோ. 147, 148, 324 ஆகிய பிரிவுகளின்படியும் குற்ற எண். 12/80-ல், இ.பி.கோ. 324, 427, 448 ஆகிய பிரிவுகளின்படியும் அரிசனங்கள் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர். குற்றம் சாட்டப்பட்ட மூவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இராமர் மீதும் அவரைச் சார்ந்தவர்கள் மீதும் குற்ற எண். 13/80, கு. பு. கோ. 147, 427, 323 ஆகிய பிரிவுகளின்படியும் குற்ற எண். 14/80-ல் இ.பி.கோ. 354 ஆம் பிரிவின்படியும் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாயுடு வகுப்பினர் மூவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

(xi) 17—1—1980 அன்று மகாஜனப்பாக்கத்தில் (வட ஆர்க்காடு) நடைபெற்ற ஒரு சமயத் திருவிழாவில் துலுக்காணம் (அரிசன்) என்பவர் தெய்வ உருவச்சிலைக்கு மாலையணிவித்தார். அவர் இவ்வாறு செய்ததை அவமதிப்பாகக் கருதிய சாதி இந்துக்கள் கோபமுற்று அவரைத் தாக்கினர். இதன் விளைவாக அரிசனங்கள் சாதி இந்துக்கள் மீது கற்களை வீசினர். இக்கலவரத்தில் இரண்டு சாதி இந்துக்களும், அரிசன வகுப்பைச் சார்ந்த இருவரும் காயமுற்றனர். இது தொடர்பாக, தூசி காவல்நிலையக் குற்ற எண்கள் 17, 18/80-ல் இ.பி.கோ. 147, 323 ஆம் பிரிவுகளின்படி இரு வழக்குகளை பதிவு செய்தனர். கிராமத்தில் காவலர்கள் நிறுத்தி வைக்கப்பட்டனர். அரிசன வகுப்பினர் அறுவரும் ஏழு சாதி இந்துக்களும் கைது செய்யப்பட்டனர்.

(xii) 17—1—1980 அன்று கீழ் உரப்பனூரில் (மதுரைத் தெற்கு) பொங்கல் விழாக் கொண்டாட்டத்தில் அரிசனங்கள் ஒலிபெருக்கிகளைப் பொருத்தி இசைத் தட்டுக்களை ஒலிபரப்பினர். பொங்கல் விழாவை முன்னிட்டு ஒரு

(கபாடி) சடுகுடுப் போட்டியை ஏற்பாடு செய்திருந்த தேவர்
களுக்கு இது மிகவும் இடைஞ்சலாக இருந்தது. தேவர் வகுப்
பைச்சேர்ந்தவர்கள் பலமுறை அரிசனங்களை ஒலிபெருக்கி
யைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட
போதிலும் அரிசனங்கள் அதற்கு இணங்க மறுத்து விட்டனர்.
பின்னர் தேவர் வகுப்பைச் சேர்ந்த 30 பேர் அரிசனக் குடி
யிருப்பிற்குச் சென்று, அங்குள்ள வாசகசாலைக்குத் தீ வைத்து,
அரிசன வகுப்பினர் மீது கற்களை வீசினர். 14 அரிசனங்கள்
காயமுற்றனர். இவர்களில் இரண்டு நபர்கள் மருத்துவ
மனையில் சேர்க்கப்பட்டனர். இது தொடர்பாக திருமங்கலம்
நகரக் காவல் நிலைய குற்ற எண். 19/80 இ.பி.கோ. 147,
323, 427, 336, 436 ஆம் பிரிவுகளின்படி தேவர்கள் மீது
வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர். அதே நாளில் தேவர்
வகுப்பைச் சேர்ந்த ஒருவர் தம்மை அரிசன வகுப்பைச் சேர்ந்த
வர்கள் தாக்கியதாக புகார் செய்ததன் பேரில், குற்ற எண்
20/80-ல் இ.பி.கோ. 341, 323 ஆகிய பிரிவுகளின் கீழ் ஒரு
வழக்கு பதிவு செய்யப்பட்டது. தேவர் வகுப்பைச் சேர்ந்த
வர்கள் 10 பேரும் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் இரு
வரும் கைது செய்யப்பட்டனர்.

(xiii) கீழ் அரசூர் (திருச்சிராப்பள்ளி) கிராமத்தில்
உள்ளூர் கோவில் தேர் ஒன்றை அரிசன வகுப்பினர் வசிக்கும்
தெரு வழியாக இழுத்துச் செல்வதில் தகராறு ஏற்பட்டதை
தொடர்ந்து அவர்களிடையே சுமூகமான உறவு இல்லை. அன்று
முதல் சாதி இந்துக்கள் சிலர் அரிசன வகுப்பினரைப் பணிக்கு
அமர்த்துவதில்லை. 17—1—1980 அன்று சாதி இந்துப் பெண்
ஒருவர் பணிக்கமர்த்திய அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர்
முதலாளியிடமிருந்து பொங்கல் பரிசு பெறுவதற்காகச் சென்றார்.
இதை எதிர்த்து இரண்டு சாதி இந்து வகுப்பைச் சேர்ந்தவர்கள்
சண்டையிட்டனர். இதன் விளைவாக அப்பகுதியிலுள்ள சாதி
இந்துக்களும், அரிசனவகுப்பினரும் தத்தம் ஆட்களைச்
சேர்த்துக் கொண்டு சச்சரவிட்டனர். 22 அரிசன வகுப்பினரும்
4 சாதி இந்துக்களும் காயமடைந்தனர். கள்ளக்குடி காவல்
துறையினர் சாதி இந்துக்கள் மீது குற்ற எண். 16/80-ல்
இ. பு. கோ. 147, 148, 348, 323 ஆம் பிரிவுகளின்படியும்
அரிசன வகுப்பினர் மீது, குற்ற எண். 17/80-ல் இ.பி.கோ.
147, 323 ஆம் பிரிவுகளின் படியும் இரு வழக்குகள் பதிவு
செய்தனர்.

(xiv) 17—1—1980 அன்று பெருமாத்தூர் (திருச்சி
ராப்பள்ளி) கிராமத்திலுள்ள கணேசன் என்பவர் பொங்கல்
விழாவை முன்னிட்டு ஒரு விளையாட்டுப் போட்டிக்கு ஏற்பாடு
செய்தார். இப்போட்டியில் கலந்து கொள்ள முத்து (அரிசன
வகுப்பைச் சேர்ந்த) என்பவர் விரும்பினார். ஆனால் சாதி
இந்துக்கள் அவரைச் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டனர்.
மறுக்கப்பட்ட அவர் ஏனைய அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்
களிடம், சாதி இந்துக்கள் தம்மைத் தாக்கியதாகத் தெரி
வித்தார்.



அதன்பேரில் அரிசனங்கள், விளையாட்டுகளுக்கு ஏற்பாடு
செய்திருந்தவர்கள் மீது கல் எறிந்ததில் சாதி இந்துக்கள் மூன்று
பேருக்குக் காயங்கள் ஏற்பட்டன. காவல் துறையினர் அவ்விடத்
திற்கு விரைந்துச் சென்று நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.
இதுதொடர்பாக, அரிசனங்கள் மீது மங்கலமேடு காவல்
துறையினர் குற்ற எண். 17/80-ல் இ. பி. கோ. 147, 341, 336,
506 ஆகிய பிரிவுகளின்படி வழக்கு ஒன்று பதிவு செய்தனர்.

(xv) புதிய ஆயக்குடியில் (மதுரை வடக்கு) 9–2–1980ஆம்
நாளன்று அரிசனர் ஒருவருக்கும் முஸ்லீம் ஒருவருக்கும் ஏற்பட்ட
வாய்ச்சண்டையைத் தொடர்ந்து சுமார் முப்பது அரிசனங்கள்
இரண்டு முஸ்லீம்களைத் தாக்கினர். மேலும் அவர்கள் வரம்பு
மீறி அரிசி அரைவை ஆலைக்குள் நுழைந்து ஏனைய நான்கு
முஸ்லீம்களைத் தாக்கினர். இது தொடர்பாக, பழனி வட்டக்
காவல் துறையினர் இ. பி. கோ. 147, 148, 448, 427, 323,
506 (ii) ஆகிய பிரிவுகளின்படி, குற்ற எண் 54/80ல் வழக்கு
ஒன்று பதிவு செய்தனர். 10–2–1980 ஆம் நாளன்று காவல்
துறையினர் அரிசனங்கள் எட்டுபேரைக் கைது செய்தனர்.
14–2–1980 ஆம் நாளன்று அரிசனங்கள் இரண்டுபேரை, முஸ்
லீம்கள் 19 பேர் தாக்கினர். இது தொடர்பாக முஸ்லீம்கள் மீது
பழனி காவல் நிலையத்தினர் இ. பி. கோ. 147, 148, 341,
323, 306 ஆகிய பிரிவுகள்ன்படி குற்ற எண் 58/80ல் வழக்கு
ஒன்று பதிவு செய்தனர். 17–2–1980ஆம் நாளன்று முஸ்லீம்கள்
மூன்று பேரைக் காவல் துறையினர் கைது செய்து காவலில்
வைத்தனர்.

(xvi) சாத்தனூர் கிராம மக்களுக்கும் அவ்வூர் அரிசன காலனி
யைச்சேர்ந்த அரிசனங்களுக்கும், சாத்தனூருக்கு மேற்கில் அமைந்
துள்ள குளத்தில் ஜம்பைப்புல் அறுப்பது உட்பட பாசன உரி
மைகள் தொடர்பாக அவர்களிடையே நீண்ட நாட்களாக தக
ராறு இருந்து வந்தது. 25–2–80 ஆம் நாளன்று ஜம்பைப்புல்
அறுத்துக்கொண்டிருந்த அரிசனங்கள் மூன்று பேரை சாத்தனூர்
கிராமவாசிகள் மூன்று பேர் தடுத்தனர். அதே நாளில் அந்த
கிராமவாசிகள் மூவரில் ஒருவரை அரிசனங்கள் தாக்கினர். இது
தொடர்பாக விக்கிரவாண்டி காவல்துறையினர் இ.பி.கோ. 147,
323, 325 ஆகிய பிரிவுகளின்படி 57/80 ஆம் குற்ற வழக்கு
பதிவு செய்தனர்.

அதே நாள் இரவு, ஜம்பைப்புல் அறுக்கச்சென்ற மேலும்
மூன்று அரிசனங்களை, சாத்தனூர் கிராமவாசிகள் தாக்கினர்.
இதனால் ஆத்திரமடைந்த சாத்தனூர் அரிசனக் குடியிருப்பைச்
சேர்ந்த அரிசனக் கும்பல் ஒன்று 26–2–1980 ஆம் நாளன்று
கிராமவாசிகள் மூன்று பேரைத் தாக்கியது. சின்னத்தம்பி
கவுண்டர் என்பவர் தலத்திலேயே மாண்டார். இது தொடர்பாக
இ. பி. கோ. 147, 148, 324, 302 ஆகிய பிரிவுகளின்படி குற்ற
எண். 58/80ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. பழிக்குப்பழி
வாங்கும் நோக்குடன் கவுண்டர் கும்பல் ஒன்று சாத்தனூர்

அரிசனக் குடியிருப்புக்குச் சென்று அரிசனங்களைத் தாக்கியது.
இதுதொடர்பாக இ.பி.கோ. 147, 148, 323, 324 ஆகிய பிரிவு
களின் படி குற்ற எண். 59/80ல் வழக்கு ஒன்றும் இ.பி.கோ. 147,
436 ஆகிய பிரிவுகளின்படி குற்ற எண். 60/80-ல் வழக்கு
ஒன்றும் பதிவு செய்யப்பட்டன. அப்பகுதியில் காவலர் பாது
காப்பு அளிக்கப்பட்டது.

(xvii) தேவபட்டினத்தில் (இராமநாதபுரம் கிழக்கு) 1—3—80
நாளன்று ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், பனை
மரம் ஒன்றை வேருடன் பெயர்ப்பதை பார்க்க இடம் பிடிப்பதில்
படையாச்சி ஒருவருக்கும் முஸ்லீம் ஒருவருக்கும் ஏற்பட்ட வாய்ச்
சண்டையை அடுத்து, முஸ்லீம்கள் தங்களது ஆட்களைச் சேர்த்
துக்கொண்டு படையாச்சிகளின் தெருவிற்குச் சென்று அவர்கள்
குடியிருப்புகள் மீது கற்களை வீசினர். படையாச்சிகளும் பதி
லுக்குப் பதில் கல்லெறிந்தனர். முஸ்லீம்கள் நான்கு பேரும்
படையாச்சிகள் நான்கு பேரும் காயமுற்றனர். இரு தரப்பினரும்
புகார் செய்ததன்பேரில் தேவப்பட்டினக் காவல் துறையினர்,
இ.பி.கோ. 147, 323, 336, 337, 117 ஆகிய பிரிவுகளின்படி
குற்ற எண்கள் 28, 29/80-ல் இரண்டு வழக்குகள் பதிவு செய்து
முஸ்லீம்கள் 37 பேரையும் படையாச்சிகள் 47 பேரையும் கைது
செய்தனர்.

(xviii) ஜாதி இந்துப் பெண்ணை அரிசனங்கள் கேலி செய்த
தைத் தொடர்ந்து 14—3—1980 ஆம் நாளன்று திருமுல்லைவாயி
லில் (செங்கற்பட்டு கிழக்கு) அரிசனங்களுக்கும் சாதி இந்துக்க
ளுக்கும் ஏற்பட்ட தகராறை யொட்டி 16—3—1980 ஆம் நாளன்று
சாதி இந்துக்கள் 13 பேரை அரிசனங்கள் தாக்கி அவர்களைக்
காயப்படுத்தினர். இதில் அரிசனங்கள் இரண்டுபேரும் காய
முற்றனர். இருதரப்பினரும் புகார் செய்ததன்பேரில் ஆவடி
காவல் துறையினர் இ.பி.கோ. 147, 148, 23, 427, 606 ஆகிய
பிரிவுகளின்படி 176, 177/80 ஆம் எண்களுள்ள இரண்டு குற்ற
வழக்குகளைப் பதிவு செய்தனர். கிராமத்தில் காவலர்களின்
பலத்தப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

(xix) வேங்கம்பாக்கம் அரிசன குடியிருப்பைச் சேர்ந்த
(செங்கல்பட்டு கிழக்கு) அரிசனங்கள், கண்டிகையைச் சேர்ந்த
(செங்கல்பட்டு மேற்கு) பெண்களைக் கேலி செய்ததைத் தொ
டர்ந்து கண்டிகை கிராமத்தை சேர்ந்த சுமார் 50 பேர் 18—3—80
ஆம் நாளன்று வேங்கம்பாக்கம் அரிசன குடியிருப்பிலுள்ள அரி
சனங்களைத் தாக்கியதில் அரிசனங்கள் இரண்டு பேர் காயமுற்ற
னர். இது தொடர்பாக தாம்பரம் காவல் துறையினர் இ.பி.கோ.
147, 148, 324 பிரிவுகளின்படி 410/80 ஆம் எண் குற்ற வழக்கு
ஒன்று பதிவு செய்தனர். இராமத்தில் காவலர்களின் பலத்த
பாதுகாப்பு அளிக்கப்பட்டது.





## 16. தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்.

1979ஆம் ஆண்டில் தீவிரவாதிகளின் நடவடிக்கை மிகுந்
திருந்தது. அவர்கள் மூன்று கொலைகளைச் செய்துள்ளனர்.
அவற்றில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பாலையூர் காவல்நிலைய
எல்லைக்குள் ஒரு கொலையும், இராமநாதபுரம் மேற்கு மாவட்டத்
த்தில் சேத்தூர் காவல்நிலைய எல்லைக்குள் மற்றொரு கொலை
யும் மூன்றாவது தருமபுரி மாவட்டத்தில் மாத்தூர் காவல்
நிலைய எல்லைக்குள் நிகழ்ந்துள்ளன. இந்த அனைத்து
நேர்வுகளிலும் இத் தீவிர வாதிகள், யாரை வர்க்க எதிரிகளாகக்
கருதினார்களோ அவர்களைக் கொலை செய்துள்ளனர். இக்
கொலைகளைத் தவிர தருமபுரியில் 5, வடாற்காட்டில் 1,
சேலத்தில் 1, திருநெல்வேலியில் ஒன்று ஆக 8 கொலை முயற்சி
கள் நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டன. மருத்துவ உதவி
அளிக்கப்படாமலிருந்தால் பலர் இறந்திருப்பர். தருமபுரி மாவட்
டத்தில் கொள்ளையடிக்கப்பட்டது குறித்து ஆறு வழக்குகளுடன்
குறைந்த வன்முறைக் குற்றங்கள் மூன்றும் அறிவிக்கப்பட்டுள்ளன.
தருமபுரி, இராமநாதபுரம் (மேற்கு), வடஆற்காடு மாவட்
டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனிப் பணியாளர் அமர்த்
தப்பட்டனர். இதன் விளைவாக குறிப்பிட்ட குற்றங்களுக்காக
47 பேர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த ஆண்டில் சுவ
ரொட்டிகளும் சிறு வெளியீடுகளும் ஆங்காங்கே காணப்பட்ட
தோடு, நிலச் சொந்தக்காரர்களும், காவல்துறை அதிகாரிகளும்
தாக்கப்படுவதற்கு அச்சுறுத்தப்பட்டனர். இவை அனைத்தும்
ஒடுக்கப்பட்டதுடன் தடுக்கவும் செய்யப்பட்டன. இத்தகைய
அச்சுறுத்தல்கள் மாநிலம் முழுவதும் திடீரெனத் தோன்றி
யுள்ளன. இத்தீவிர வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவ
தாகத் தெரிகிறது. அண்டைய மாநிலங்கள் அனைத்திலும் இத்
தகைய போக்கு காணப்படுகிறது. இதனைத் தொடக்கத்தி
லேயே உறுதியுடன் தடுத்து நிறுத்த வேண்டியுள்ளது. இத்
தீவிர வாதிகள் ஊன்றிக்கொண்டு பொது மக்களிடையே செல்
வாக்கு பெற்றுவிட்டால் அவர்களைக் கண்டுபிடித்து விரட்டி
அடிப்பதே கடினமாகிவிடும். எனவே, மிகவும் பாதிக்கப்பட்ட
பகுதிகளான தருமபுரி வட ஆற்காடு மாவட்டங்களில் காவல்
நிலையங்கள் முதலியவற்றைப் பலப்படுத்தப் போதியளவுக்குக்
கூடுதல் பணியாளர்களை நியமிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

## 17. உழவர்கள் நிலைமை.

திரு. நாராயணசாமி நாயுடு தலைமையிலான தமிழ்நாடு
விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள், தங்களது கோரிக்
கைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் என வலியுறுத்தி அரசுக்கு
எதிராகப் போராட்டம் நடத்தினர்.

(ii) விவசாயிகளை எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு
ஒன்றைக் காண்பதற்காக, அரசு உயர்நிலைக் குழு ஒன்றை
அமைத்தது, இக்குழு, 1979 மே மாதத்தில் அரசுக்கு தன்

அறிக்கையை அளித்தது. விவசாயிகளுக்கு அரசு பல்வேறு சலுகைகளை அளித்தது. இதனால் சுமார் ரூ. 40 கோடி அரசுக்கு செலவு ஏற்பட்டது. ஆனால் வெவ்வேறு விவசாயிகள் சங்கங்கள் அனைத்தும் இச் சலுகைகள் வெறும் கண்துடைப்பு என்றும் அறிவிக்கப்பட்ட சலுகைகள் ரூ. 4 கோடி அளவுக்குக் கூட இல்லை என்றும் அறிவித்தன. அவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

(iii) வாகைக் குளத்தில் (இராமநாதபுரம் மாவட்டம்) 4–4–79 ஆம் நாளன்று விவசாயிகள் மீது காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும் விவசாயிகள் கோரிக்கைகளை வலியுறுத்தியும் திரு. நாராயணசாமி நாயுடு தலைமையிலான தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் 23–4–1979 ஆம் நாளன்று மாநிலம் தழுவிய (பந்த்) மறியல் ஒன்றை நடத்தியது. இந்த மறியலினால் சில இடங்களில் வன்முறை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. காவல்துறையினர் 7 இடங்களில் துப்பாக்கிச்சூடு நடத்தினர். உடுமலைப்பேட்டையில் (கோயம்புத்தூர்) காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காயமுற்ற இரண்டு பேர் இறந்து போயினர். இந்த (பந்த்) தொடர்பாக குறிப்பிட்ட பிரிவுகளின் கீழ் 7,362 பேர்களும் குற்றத் தடுப்புப் பிரிவுகளின் கீழ் 15,297 பேர்களும் காவலில் வைக்கப்பட்டனர். மேசியாபுரத்தில் (திருநெல்வேலி) சாலைகளில் போடப்பட்டிருந்த தடைகளை அகற்றும் பணியில் காவல் துறையினர் ஈடுபட்டிருந்த போது அவர்களை வன்முறைக் கும்பல் ஒன்று தாக்கியது. காவல் துறையினர் தற்காப்புக்காக துப்பாக்கிச் சூடு நடத்திய போதிலும் அதையும் மீறி வன்முறைக் கும்பல் சப்இன்ஸ்பெக்டர் ஒருவரை வெட்டிக் கொலை செய்ததோடு மற்றொரு காவலரையும் கடுமையாகக் காயப்படுத்தியது. இச்சம்பவத்தையடுத்து விவசாயிகள் சங்கத்தலைவர் திரு. சி. நாராயணசாமி நாயுடும் கைது செய்யப்பட்டார்.

(iv) "பந்த்" நடந்தபோது கைது செய்யப்பட்ட திரு. நாராயணசாமி நாயுடுவை நிபந்தனையின்றி விடுதலை செய்யக்கோரியும் அதுசமயம் விவசாயிகள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறக்கோரியும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தைச் (நாராயணசாமி பிரிவு) சேர்ந்த உறுப்பினர்கள் 7–5–79 ஆம் நாளன்று மாநிலத்தில் வெவ்வேறு இடங்களில் ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடத்தினர். அவர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி 1979 மே 21 முதல் 28 வரையில் இம்மாநிலத்தில் பல்வேறு இடங்களில் அரசு அலுவலகங்களுக்கு முன்பாக மறியல் செய்து தாமே முன் வந்து கைதாயினர். மறியல் செய்த சுமார் 33,000 பேர் அப்போது கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

(v) தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் இம்மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பேரணிகளையும், 1979 ஜூலை டிசம்பர் மாதங்களுக்கு இடையில் பல்வேறு மாவட்டத்தலைநகர்களில் ஒவ்வொரு





மாதமும் மாநாடும் நடத்தினர். திரு நாராயணசாமி நாயுடு நீதிமன்றத்திலிருந்து அனுமதி பெற்ற பின்னர்தான் பேரணிகளில் கலந்துகொண்டு மாநாடுகளில் பேசினார். அவ்வாறு அவர் முன் அனுமதி பெறாமலிருந்தால் நீதிமன்றத்தின் நிபந்தனைகளை மீறியவராவார்.

(vi) திரு பி. பாலசுப்பிரமணியம் தலைமையிலான தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் 24–11–1979 ஆம் நாளன்று சேலத்தில் விவசாயிகள் பேரணி நடத்தியபோது முன்னாள் பாரதப் பிரதமர் திரு சரண்சிங் அப்பேரணியில் கலந்து கொண்டு கிராம மக்களின் மேம்பாட்டுக்காக வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். விவசாயிகள் தங்களது பிள்ளைகளில் குறைந்தது ஒருவரையாவது விவசாயத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் இது கிராமங்களின் மேம்பாட்டிற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கியமானதாகும் என்றும் விவசாயிகளைக்கேட்டுக்கொண்டார். தமிழ் நாடு முதலமைச்சர், மாநில அரசு, கிராமங்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதில் ஆர்வம் காட்டி வந்திருக்கிறது என்று தமது பேச்சில் குறிப்பிட்டார்.

(vii) விவசாயிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்புக் குழு 1979 மே 25, 26, 28 ஆகிய நாட்களில் இம்மாநிலத்தில் பல்வேறு இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள் முன்பாகவும் வட்டாட்சியர் அலுவலகங்கள் முன்பாகவும் மறியல் செய்தனர். மறியலின்போது 26,429 பேர்களைக் காவல்துறையினர் கைது செய்து அன்றே விடுதலை செய்தனர்.

(viii) தஞ்சாவூரில் 27–11–79 ஆம் நாளன்று ஜப்தி நடவடிக்கை எதிர்ப்பு மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர், காங்கிரஸ் (இ) ஆகிய கட்சியைச் சேர்ந்தவர்கள் சுமார் 500 பேர் இதில் கலந்து கொண்டனர். விவசாயிகள் மீது தொடரப்பட்ட ஜப்தி நடவடிக்கைகளைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றி, தங்களது கோரிக்கைகளை அரசு ஒப்புக்கொள்ளும்வரை விவசாயிகள் தங்களது ''வரி கொடா'' இயக்கத்தை தொடர்ந்து நடத்தவேண்டுமெனக்கேட்டுக்கொண்டது.

(ix) தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்துடன் (திரு. சி. முத்துசாமி கவுண்டர் பிரிவு) இணைக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் சங்கம், தஞ்சாவூரில் 23-12-1979 ஆம் நாளன்று மாநாடு ஒன்றைக் (5,000) கூட்டியது. இச்சங்கத்தின் முன்னாள் தலைவர் காலஞ் சென்ற உறுப்பினர் திரு முத்துசாமி கவுண்டர் திறந்து வைத்தார். மாநாடு தொடங்கப்படுவதற்கு முன்பாக அருள் திரையரங்கத்திலிருந்து மாநாடு நடக்கும் இடத்திற்கு, மாட்டு வண்டிகள், டிராக்டர்கள் 11, சைக்கிள் 100 ஆகியவற்றில் 5,000 பேர் கொண்ட பேரணி ஒன்று கூடியது.

(x) ஊர்வலத்தில் யானை ஒன்று வந்தது. மாநாடு, ஏனைய கோரிக்கைகளுடன் உழவர்களுக்கு வழங்கப்பட்ட எல்லாக் கடன்களையும் தள்ளுபடி செய்வதற்குத் தீர்மானங்களை நிறைவேற்றியது. மற்றொரு தீர்மானத்தின் மூலம், தங்களது கோரிக்கைகள் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க 27-12-1979 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 11 கூட்டுறவு வேளாண்மை வங்கிகளின் முன் அமைதியான முறையில் மறியல் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. 27-12-1979 அன்று 17 இடங்களில் உழவர்கள் இத் தீர்மானத்திற்கிணங்க மறியல் செய்த போது 596 உழவர்கள் கைது செய்யப்பட்டு அன்று மாலையே விடுவிக்கப்பட்டனர்.

(xi) திரு. சி. நாராயணசாமி நாயுடுவின் தலைமையில் அமைந்துள்ள ''தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்'' 19-1-1980 அன்று கரூரிலும் (திருச்சி) 5-2-1980 அன்று கடலூரிலும் அணி அணியாகத் திரண்டு பேரணிகளை நடத்தியது. 1980 பிப்ரவரியிலும் மார்ச்சிலும் திருச்சிராப்பள்ளி, வடக்கு மதுரை' சேலம், வட ஆர்க்காடு, பெரியார், புதுக்கோட்டை, கோயம்புத்தூர் (நகர்-கிராமப்புறம்) ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த உழவர்கள், பம்பு செட்டுகளுக்குத் தடை இல்லாத மின்சாரமும் போதுமான அளவுக்கு டீசல் எண்ணெயும் வழங்க வேண்டுமாறு கோரி, பலவகையான போராட்டங்களை நடத்தினர்.

(xiii) சில இடங்களில், போராட்டக்காரர்கள் வன்முறையில் இறங்கினர். 7-2-1980 அன்று கோவிலூரைச் (வட மதுரை) சேர்ந்த உள்ளூர் துணை மின் நிலையத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த எட்டு பணியாளர்களை சுமார் 200 உழவர்கள் சுற்றி வளைத்துக் கொண்டு கலவரம் செய்தனர். 5-2-80 அன்று ஆத்தூரில் (சேலம்), பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த சுமார் 1,000 உழவர்கள் வாகனப் போக்குவரத்து தடையை ஏற்படுத்தி சாலையில் செல்லும் வாகனங்களை நிறுத்திவிட்டனர். 11, 13, 14-2-1980-ம் நாட்களில் துறையூரில் (திருச்சி) ''உழவர் கட்சியைச்'' சேர்ந்த உழவர்கள், மின் வாரிய அலுவலகத்தைக் கொள்ளையடிக்க முயற்சி செய்து கைது செய்யப்பட்டனர்.

(xiv) 16-2-1980 அன்று மலையூரில் (வட ஆற்காடு), உழவர்கள் சிலர் அரசுப் பேருந்துகள் சிலவற்றையும் தனியார் பேருந்துகள் சிலவற்றையும் நிறுத்தி, அவற்றிற்குத் தீ வைக்கப் போவதாக அச்சுறுத்தினர். சில இடங்களில் அவர்கள், மின்சார வாரிய அலுவலகம், வட்ட அலுவலகம் ஆகியவற்றின் முன்பும் உட்கார்ந்து கொண்டு, வாகனப் போக்குவரத்தைத் தடை செய்து, போராட்டம் நடத்தியும் ஊர்வலமாகச் சென்றும் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கொடுத்தனர்.



கரும்பு பயிரிடுவோர் (திரு. சி. நாராயணசாமி நாயுடு சங்கத்தைச் சேர்ந்தவர்கள்) கரும்புக்கு அதிக விலை கோரி; 26-2-80 முதல் 10-4-1980 வரை தென் ஆற்காட்டைச் சேர்ந்த நெல்லிக்குப்பத்திலுள்ள இ.ஐ.டி. பாரி அண்ட் கோ நிறுவனத்தின் முன் மறியல் செய்தனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் திரு. எம். மயில்சாமி உட்பட மொத்தத்தில் 1,612 உழவர்கள் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டனர். 10-4-1980 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் ஈ.ஐ.டி. பாரி கம்பெனி, நிர்வாகத்தினரின் பிரதிநிதிகளுக்கும் கரும்பு பயிரிடுவோருக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டது. அதன் விளைவாகப் போராட்டம் கைவிடப் பட்டது. கைது செய்யப்பட்ட அனைவரும், அரசு ஆணைகளின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர். கரும்பை அறுவடை செய்வதற்காக மிகை ஊதியம் கேட்டதினால் ஆக்கூர் (கிழக்குத் தஞ்சாவூர்) கிராமத்தில், உள்ளூர் மிராசுதாரர்களுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உழவர்களுக்கு மிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் விளைவாக. மிராசுதார்கள், கரும்பு அறுவடை செய்வதற்காக வெளியூர்களை சேர்ந்த உழவுத் தொழிலாளர்களை நியமித்தனர். இதனால் 1-3-1980 அன்று உள்ளூர் மிராசுதார்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உழவர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இதன் விளைவாக அரிசனக் குடியிருப்புக்களில் ஒரு தேநீர்க் கடைக்கும் இரண்டு வீடுகளுக்கும் இந்து மக்களின் 7 கூரை வேயப்பட்ட கடைகளுக்கும் தீ வைக்கப்பட்டன. இம் மோதல்களில் உழவர்களில் ஐவரும் காயமடைந்தனர். காவல் துறையினர் மொத்தம் ஆறு வழக்குகளையும் பதிவு செய்து, மிராசுதார்களில் 14 பேரையும் உழவர்களில் 16 பேரையும் கைது செய்தனர். 5-3-1980 அன்று இரு பிரிவுகளையும் சேர்ந்த தீவிரவாதிகள் மீது, குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 107ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 18. தொழிலாளர்கள் அமைதியின்மை:

(i) தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் போன்றவற்றைச் செய்வது 1979ஆம் ஆண்டில் கணிசமான அளவுக்குக் குறைந்திருந்தது.

(ii) போக்குவரத்து போன்ற இன்றியமையாப் பணிகளில் வேலை நிறுத்தம் செய்வதைத் தடை செய்து, 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் நாள் அன்று, தமிழ்நாடு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு அவசரச் சட்டம் அதிகார முறையில் வெளியிடப்பட்டது. இது போக்குவரத்து, மின்சாரம், குடி நீர் வழங்கல் முதலியவை போன்ற இன்றியமையாப் பணிகளில் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் மனத்தில் ஏற்படும் வேலை

நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை முற்றிலும் நீக்கி விட்டது. எனினும், இந்த அவசரச் சட்டம், மாநிலச் சட்டப் பேரவையின் மழை பருவக் கூட்டத் தொடரில் காலங் கடந்ததால் செயல் திறனற்றதாயிற்று.

(iii) இம்மாநிலத்திலுள்ள 175 நுணி ஆலைகளில் பணி புரியும் பணியாளர்கள், தங்கள் 16 கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளுமாறு கோரி, 1979 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் நாள் முதல் 1979ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் நாள் வரை வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை, தென் மதுரை, வட மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய பகுதிகளில் இவ் வேலை நிறுத்தம் அமைதியான முறையில் நடந்தது. சென்னை மாநகரில் தொழிலாளர் நல அரசுக் காப்புறுதி மருந்தகத்தைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகளிடமிருந்து மருத்துவச் சான்றிதழ்களைக் கோரி, வேலை நிறுத்தம் செய்து வன்முறையில் இறங்கிய தொழிலாளர்களின் கூட்டத்தைக் கலைப்பதற்கு, காவல் துறையினர் 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் நாள் அன்று கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் நாள் அன்று மதுரையிலுள்ள மதுரை கோட்ஸ் கம்பெனி, (Madura Coats) முன்னர் உண்மை ஊழியர்களையும், காவல் துறையினரையும் தாக்கி, வன்முறையில் இறங்கிய, வேலை நிறுத்தம் செய்து கொண்டிருந்த தொழிலாளர்களின் கூட்டத்தைக் கலைக்கக் கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. இலேசாகத் தடியடி நடத்தப்பட்டது. அதே நாளில், மதுரை கோட்ஸ், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில், வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள், உண்மை ஊழியர்களைப் போல் ஆலைக்குள் புகுந்து ஆலைச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தனர். இது குறித்தும் 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் நாள் முதல் 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் நாள் வரை தொழிலாளர்கள் மறியல் போராட்டம் நடத்திய போதும் காவல் துறை உரிய நடவடிக்கை எடுத்தது.

(iv) திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் நாள் முதல் 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் வரை செய்த வேலை நிறுத்தத்தின் போதும், சேலம், பள்ளிப் பாளையம் சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம் நாள் முதல் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் நாள் வரை செய்த வேலை நிறுத்தத்தின் போதும், சட்டம் ஒழுங்கைக் குலைக்கும் வண்ணம் அவர்கள் நடந்து கொண்டனர். இந்த இரு நிறுவனங்களிலும் உண்மை ஊழியர்கள் தாக்கப்பட்டனர்; தொழிற்சாலைகளின் சொத்துக்கள் முதலியவற்றின் மீது கல்லெறியப்பட்டது. இவ்வெல்லாச் சம்பவங்களின் போதும், காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுத்தனர்.



அம்பத்தூர், டன்லப் பேக்டரி லிமிடெட் நிறுவனத்
(v) தொழிலாளர்களில் இரு பிரிவினர்க்கிடையே
தைச் சேர்ந்த நிர்வாகம், 1979ஆம் ஆண்டு ஆகஸ்டு
ஏற்பட்ட பகைமையினால், ''அடையாள அட்டையைக்''
மாதம் 14 ஆம் நாளிலிருந்து கொண்டு வந்தது. பாதுகாப்பு
காண்பிக்க வேண்டிய முறையைக் தொழிலாளர்கள் ஐவர் தற்காலிக
விதிகளை மீறியதற்காக எதிர்த்து, தொழிலாளர்கள்
வேலை நீக்கம் செய்யப்பட்டதை 25 ஆம் நாள் அன்று வேலை
1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நிர்வாகம் கதவடைப்பு
நிறுத்தம் செய்தனர். அதே நாளன்று 1979 ஆம் ஆண்டு
செய்தது. பிறகு ஏற்பட்ட உடன்பாட்டினால் தொழிற்சாலை திறக்கப்
அக்டோபர் மாதம் 18 ஆம் நாள் அன்று
பட்டது.

சேந்தணிர்புரம் காவேரி
(vi) திருச்சிராப்பள்ளி சேர்ந்த தொழிலாளர்கள்
இன்ஜினிபரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தைச் கொள்ளுமாறு கோரி,
தங்களது 18 கோரிக்கைகளை ஏற்றுக் நாளிலிருந்து
1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29 ஆம் எனினும், உண்மை
தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1979 ஆம் ஆண்டு
யாகப் பணி புரிந்தவர்களில் ஒரு பிரிவினர் தங்களது பணியைக்
நவம்பர் மாதம் 12 ஆம் நாளிலிருந்து தாக்கப்பட்ட சில
கவனித்து வந்தனர். உண்மை ஊழியர்கள்
சம்பவங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகரில் 'மெயில்' 'அமால்கமேஷன்'
(vii) சென்னை திருவாளர்கள் சிம்சன் தொகுதி நிறுவனத்
ஆகியவை நீங்கலாக தொழிலாளர்கள் தங்களது 23 கோரிக்கைகளை
தைச் சேர்ந்த கோரி, 1979 ஜூலை இரண்டாம் வாரத்
ஏற்றுக் கொள்ளுமாறு கால வரையில்லாத வேலை நிறுத்தம் செய்தனர்.
திலிருந்து காக்களூர். மேற்கு செங்கற்பட்டு,
இந்தியா பிஸ்டன் ரெப்கோ, பை-மெட்டல் பேரிங், மேற்கு தஞ்சாவூர்,
கோயம்புத்தூர், டயமண்ட் ரூல்ஸ் குன்னூர், நீலகிரி, கும்ப
வான் மோவேஸ் எஸ்.ஆர்.வி.எஸ். ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த
கோணம், 1979 ஜூலை இராண்டாம் வாரத்திலிருந்து
தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். நிர்வாகத்தி
கால வரையில்லாத தொழிலாளர்களுக்குமிடையே உடன்பாடு ஒன்று ஏற்
னருக்கும், 1979 செப்டம்பர் இரண்டாம் வாரததில்
பட்டதன் விளைவாக வேலை நிறுத்தத்தின்
வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. தொழிற்சாலைகளுக்கு
போது, தொழிலாளர்கள் அவரவர் தங்களது கோரிக்கை
முன்னர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் வேண்டும் என்று கோரி
களை நிர்வாகத்தினர் ஏற்றுக் கொள்ள உண்ணாவிரதம் இருந்
ஊர்வலமாகச் சென்றனர்; தொடர் எனினும், வேலை
தனர்; பொதுக் கூட்டங்கள் கூட்டினர். எவையும் நடை
நிறுத்தத்தின் போது ஏறுமாறான நிகழ்ச்சிகள்
பெறவில்லை.

(viii) திருச்சி, சேந்தனீர்புரம், காவேரி இன்ஜினியரிங்
ஓர்க்ஸ்.—காவேரி இன்ஜினியரிங் ஓர்க்ஸின் இந்து மஸ்தூர் சபா
வைச் சேர்ந்த தொழிலாளர்கள், தங்களது 18 கோரிக்கைகளை
வலியுறுத்தி 1979ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29 ஆம் நாளி
லிருந்து 1980ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ஆம் நாள் வரை
வேலை நிறுத்தம் செய்தனர். வேலை நிறுத்தம் செய்த தொழி
லாளர்கள், வன்முறையில் ஈடுபட்டு, உண்மை ஊழியர்களைத்
தாக்கினர். 1980ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ஆம் நாள்
அன்று, வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் பொது
மக்களிடமிருந்து நன்கொடை வசூலிக்கையில், அவ்வழியாகச்
சென்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் காரை
நிறுத்தி, அக்காருக்குச் சிறு சேதங்களை விளைவித்தனர். 1980
ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாள் முதல் 1980ஆம் ஆண்டு
பிப்ரவரி மாதம் 25ஆம் நாள் வரை தொழிலாளர்கள் மீது
மொத்தத்தில் 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(ix) இன்ஜின் வால்வ்ஸ் லிமிடெட் ஆலந்தூர்: (இழக்கு
செங்கற்பட்டு)—11-6-1979 அன்று ஆலந்தூர், இன்ஜின் வால்வ்ஸ்
லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் உள்ளிருப்பு
வேலை நிறுத்தம் செய்ததால், நிர்வாகம், 12-6-1979 அன்று
கதவடைப்பு செய்தது. இவ்விருவருக்குமிடையே உடன்பாடு ஒன்று
ஏற்பட்டதன் பயனாகத் தொழிற்சாலை 25-2-1980 அன்று
திறக்கப்பட்டது. எனினும், தொழிலாளர் குழுவைச் சார்ந்த
தலைவர் திரு. ஆர். குசேலரும், 123 தொழிலாளர்களும், தடை
ஆணையை மீறியதற்காகவும், உண்மை ஊழியர்களை வேலைக்கு
செல்ல விடாமல் தடுப்பதற்காகத் தொழிற்சாலையின் முன் கூடி
யிருந்ததற்ககாவும் கைது செய்யப்பட்டனர். திரு குசேலரைக்
கைது செய்ததைக் கண்டித்து, என்ஜின் வால்வ்ஸ் லிமிடெட்
தொழிலாளர் குழுவைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஏனைய
தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தடை
யாணையை மீறினர். அவர்கள் 26-2-1980-லிருந்து தொகுதி
தொகுதியாகக் கைது செய்யப்பட்டனர். மொத்தத்தில் 426
தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை
செய்யப்பட்டனர். 9-4-1980 அன்று பணி நீக்கம் செய்யப்பட்ட
22 தொழிலாளர்களைத் தவிர ஏனைய தொழிலாளர்கள்
அனைவரும், நிபந்தனை ஏதுமின்றி பணிக்குத் திரும்பினர்.

(x) டால்மியா மாக்னசைட், சேலம்—சேலம் டால்மியா
மாக்னசைட் லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 2,250
தொழிலாளர்கள் (இவர்களில் பெரும்பாலோர் சி.ஐ.டி.யு.)
(C.I.T.U.), ஏ. ஐ. டி. யு. சி. (A.I.T.U.C.) சங்கத்தைச்
சேர்ந்தவர்களாவர். பணி நீக்கம் செய்யப்பட்ட 30
தொழிலாளர்களையும், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்ட
7 தொழிலாளர்களையும் மீண்டும் பணியில் அமர்த்துமாறும்,



கோரி,
ஞாயிற்றுக் கிழமைகளுக்கு ஊதியம் வழங்குமாறும்,
11-3-1980 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். எனினும்,
எக்கட்சியையும் சாராத சுமார் 100 பேர்களும், ஏனைய சங்கங்
களைச் சேர்ந்த தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பினர்.
வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள், உண்மை ஊழியர்
களைத் தாக்குதல், வாகனங்கள் மீது கல்லெறிதல் போன்ற
வன்முறைகளில் ஈடுபட்டனர். ஐந்து வழக்குகள் பதிவு செய்யப்
பட்ட உடன்பாடு ஒன்று ஏற்பட்டதன் பயனாக, 30-4-1980
அன்று வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

(xi) போக்குவரத்து—11-3-1980 அன்று சேலத்தில், கால
அட்டவணையை சரியாகக் கடைப்பிடிக்காதது குறித்து அண்ணா
போக்குவரத்துக் கழகப் பேருந்துப் பணியாளருக்கும், தனியார்
பேருந்தைச் சேர்ந்த ஒருவருக்கும் இடையே சண்டை ஏற்பட்டது.
இச் சண்டையில் தலையிட்ட போக்குவரத்துக் காவலரை கூறத்
தகாத வார்த்தைகளைக்கூறி திட்டினர். சில வார்த்தைகளால் புண்
பட்ட போக்குவரத்துக் காவலர், அண்ணா போக்குவரத்துக் கழகப்
பேருந்தின் நடத்துனரை சேலம் நகர்க் காவல் நிலையத்திற்கு
அழைத்துச் சென்றார். போக்குவரத்துக் காவலரின் நடவடிக்
கையை எதிர்த்து, சேலத்திலுள்ள அண்ணா போக்குவரத்துக்
கழகப் பேருந்துப் பணியாளர்கள் அனைவரும் தங்களது வாகனங்
களைச் சாலையில் ஆங்காங்கே நிறுத்தி விட்டனர். இதனால்
போக்குவரத்துக்கு இடைஞ்சலை ஏற்படுத்தியதோடல்லாமல்
திடீரென வேலை நிறுத்தமும் செய்தனர். பேருந்து நிலையத்தி
லிருந்து கிளம்பிய சோழன் போக்குவரத்துப் பேருந்து ஒன்று
வேலை நிறுத்தம் செய்து கொண்டிருந்த அண்ணா போக்கு
வரத்துக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 100 பணியாளர்களால்
நிறுத்தப்பட்டது. சோடா பாட்டில்களை பேருந்தின் மீது
எறிந்தனர். அப்பேருந்தின் டயர்களிலிருந்து காற்றை வெளி
யேற்றி விட்டனர். அப்போது அங்கிருந்த அம்மாப்பேட்டை
காவல்துறை இன்ஸ்பெக்டர் திரு. சுந்தரராஜன், அவ்விடத்
திற்குச் சென்று டயர்களிலிருந்து காற்றை வெளியேற்றுவதைத்
தடுத்தார். தொழிலாளர்கள் அவருக்கு ஊறு விளைவிப்ப
தற்காக அவரைச் சூழ்ந்து கொண்டனர். இச்செய்தி கிடைத்த
வுடன், சேலம்கிராமப்புறகாவல் டிபுடி சூப்பிரண்டெண்டு, காவலர்
களுடன் அவ்விடத்திற்கு விரைந்து சென்று, போராட்டத்
தொழிலாளர்கள் மீது சிறிதளவு தடியடி நடத்தி அவர்களைக்
கலைத்தார். காவல்துறை ஓட்டுநர்களைக் கொண்டு, போக்கு
வரத்துக்குத் தடை செய்யும் விதத்தில் நிறுத்தி வைக்கப்பட்டி
ருந்த ஊர்திகளை அப்புறப்படுத்தினார். சேலத்தில் வேலை
நிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும்
வகையில், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஒசூர் ஆகிய இடங்களி
லுள்ள பேருந்துப் பணியாளர்கள் 13-3-1980 அன்று வேலை

நிறுத்தம் செய்தனர். சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர்,
அண்ணா போக்குவரத்துக் கழக அதிகாரிகளுடன் இணக்கப் பேச்சு
வார்த்தைகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார். வேலை
நிறுத்தம் 13-3-1980 அன்று மாலை 4-45 மணிக்குக் கைவிடப்
பட்டது.

(xii) தளவாய்புரம் விசைத்தறி தொழிலாளர்கள் இராமநாதபுரம்
மேற்கு.—சம்பளத்தை 50 சதவீதம் உயர்த்தவேண்டுமென்றும்,
படியை அதிகரிக்க வேண்டுமென்றும் கோரி, தளவாய்புரத்தி
லுள்ள 78 தொழிற்சாலைகளில் பணிபுரியும் சுமார் 5,000 தொழி
லாளர் 24-3-1980ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர்.
வேலை நிறுத்தம் நடைபெற்ற காலங்களில் தறிச் சொந்தக்
காரரின் முகவர்களைத் தாக்கியும், தொழிற்சாலைகளில் கற்
களை வீசியும், தமிழ் நாடு மின்வாரிய உள்ளூர் அலுவலகம்,
போக்குவரத்துப் பேருந்துகள் ஆகியவற்றின் முன் மறியல் செய்தும்
தொழிலாளர்கள் வன்முறைகளில் ஈடுபட்டு சட்டம்-ஒழுங்கைக்
குலைத்தனர். 17-5-1980 ஆம் நாளன்று வேலை நிறுத்தம்
நிறுத்தப்பட்டது.

19. தமிழ்நாடு காவல் துறை அமைச்சுப் பணியாளர்கள் வேலை
நிறுத்தம்—

காவல்துறை அலுவலகங்களின் சீரமைப்பு தனி அதிகாரி
1965ஆம் ஆண்டில் பரிந்துரைத்தவாறும், தமிழ்நாடு காவல்
துறை ஆணைக் குழுவின் 73ஆம் எண்ணுள்ள பரிந்துரைக்
கிணங்கவும, அமைச்சு பணியாளர்களைக் கூடுதலாக நியமிக்க
அனுமதிக்க வேண்டும், நியாயமான அளவுப்பணி என்னும்
கோட்பாட்டைச் செயல்படுத்த வேண்டும் என்ற தங்களது
கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு தமிழ்நாடு அரசை வலி
யுறுத்துவதற்கு 14-6-1979 ஆம் நாளிலிருந்து காலவரையற்ற
வேலை நிறுத்தம் ஒன்றைத் தமிழ்நாடு காவல்துறை அமைச்சுப்
பணியாளர்கள் (Tamil Nadu Police Ministerial Service) சங்கம்
தொடர்ந்தது. நாகப்பட்டினம் நீங்கலாக, இம்மாநிலம் முழு
வதும் இவ்வேலை நிறுத்தம் நடைபெற்றது. 21-6-1979 ஆம்
நாளன்று நிபந்தனையின்றி இவ்வேலை நிறுத்தப் நிறுத்தப்
பட்டது.

20. காவலர்கள் கிளர்ச்சி—

தமிழ்நாடு நீங்கலாக, நாடு முழுவதும் காவலர்கள் கிளர்ச்சி
செய்ததையொட்டி, 1979 ஜூன் திங்களில், டில்லியில் மாநில
முதலமைச்சர்கள் கூட்டம் ஒன்றை மத்திய உள்துறை அமைச்சர்
கூட்டினார். காவலர்கள், தங்களது சங்கங்கள் மூலமாகத்



தங்கள் குறைகளை உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தலா
மென்று அக்கூட்டத்தில் பொதுவாக முடிவெடுக்கப்பட்டது.
அதன்படி, தமிழ்நாடு காவலர்களும் தங்களுக்கென்று சங்கங்களை
அமைத்துக் கொள்ளலாமென்று 1979ஆம் ஆண்டு ஜூன் திங்கள்
முதல் வாரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தார். உள்
(காவலர்-7) துறையின் 8-6-1979ஆம் நாளிட்ட 1431ஆம்
எண்ணுள்ள அரசாணையில், தனித்தனியாக மூன்று சங்கங்
களை அமைத்துக்கொள்ள அரசு அனுமதித்தது. அவையாவன—
(1) காவல் துறை சூப்பிரண்டுகள், காவல் துறைக் கூடுதல்
சூப்பிரண்டுகள் (ஐ.பி.எஸ். அல்லாதவர்கள்), காவல்துறை
டெபுடி சூப்பிரண்டுகள் முதலியோருக்கானது (2) காவல் துறை
இன்ஸ்பெக்டர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்
கள், உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருக்கானது; (3)
தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோருக்கானது. இச்
சங்கங்களை அமைப்பதற்குரிய குறிப்பிட்ட சில வழிகாட்டிக்
குறிப்புகளையும் அரசு அறிவித்தது.

இதற்கிடையில், திரு. நயினார்தாஸ் என்ற சப்-இன்ஸ்பெக்
டர் அரசிதழ் பதிவு பெறாத பதவித் தரத்திலுள்ள காவலர்
களின் கூட்டம் ஒன்றை 1979ஆம் ஆண்டு சூன் திங்கள்
6ஆம் நாளன்று சென்னையில் கூட்டி, தமிழ்நாடு காவல் துறை
சார்நிலைக் காவலர்கள் சங்கம் என்ற பெயரில் சங்கம் ஒன்று
அமைக்கப்பட்டுள்ளதாக அறிவித்து, அவரைத் தலைவராக
வும், திரு. ஏ. சி. ஜே. பிரிட்டோ என்ற காவல் துறை சப்-
இன்ஸ்பெக்டரை பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுத்துக்
கொண்டார்கள். இச்சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்க மறுக்
கப்பட்டதால், திரு. பிரிட்டோ சென்னை உயர்நீதி மன்றத்தில்
'ரிட்' மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். 1979ஆம் ஆண்டு
ஆகஸ்ட் திங்கள் 24ஆம் நாளன்று இந்த 'ரிட்' மனு விசா
ரணைக்கு வந்தபோது, இச்சங்கத்திற்கு அங்கீகாரம் அளிப்ப
தற்குத் தகுதி வாய்ந்த அதிகாரி காவல் துறை டைரக்டர்-
ஜெனரல் என்றும், சங்கத்திற்கு அங்கீகாரமளிக்க அரசுக்கு
அதிகாரம் ஏதுமில்லையென்றும் கூறி உயர் நீதிமன்றம் ஆணை
பிறப்பித்தது. அதுமுதல் திரு. நயினார்தாஸ் தலைமையி
லுள்ள பிரிவினர் கட்டுப்பாட்டை மீறுபவர்களாக மாறினர்.

அங்கீகாரமளிக்கப்படாத தமிழ்நாடு காவல் துறை சார்
நிலைக் காவலர்கள் சங்கம், மாநிலத்தில் பல இடங்களில் கூடி,
தங்களது சங்கத்திற்கு அங்கீகாரமளிக்குமாறு அதிகாரிகளைக்
கேட்டுக்கொண்டு தீர்மானங்களை நிறைவேற்றினர். 1979ஆம்
ஆண்டு அக்டோபர் திங்கள் 7ஆம் நாளன்று சென்னையில் நடை
பெற்ற இத்தகைய ஓர் கூட்டத்தில், தங்களது குறிக்கோளை
எய்துவதற்குக் கிளர்ச்சி நடத்த உறுப்பினர்கள் முடிவு செய்
தனர். தங்களது சங்கத்திற்கு அங்கீகாரமளிக்குமாறு கோரி,

[1980 ஜூலை 25

இச்சங்க உறுப்பினர்கள் 1979ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்
15ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். 1979 ஆம
ஆண்டுஅக்டோபர் திங்கள்16-ம் நாளன்று இருகாவலர்கள்துண்டுக்
கல்லில்(மதுரை வடக்கு மாவட்டம்) அடையாள உண்ணாவிரதம்
மேற்கொண்டனர். இதன் மூலம் மாநிலத்திலுள்ள காவலர்
களிடையே கிளர்ச்சி மூண்டது. அவர்கள் தங்கள் பணிகளை
விட்டுச் சென்று, ஊர்வலங்கள் நடத்தி, உண்ணாவிரதம் மேற்
கொண்டு, இதில் கலந்து கொள்ளாதவர்களையும் அவா
களது குடும்பத்தினரையும் அச்சுறுத்தத் தொடங்கினர்.

1979ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ஆம்
நாளன்று சென்னை மாநகரில், வேலை நிறுத்தம் செயது
வன்முறையில் இறங்கிய காவலர்களைக் கலைப்பதற்காக,
தடியடி நடத்தபபட்டது. 1979ஆம் ஆண்டு அக்டோபர்
திங்கள் 24ஆம் நாளன்று, திருநெல்வேலியில் நயினார்தாஸ்
கைது செய்யபப்பட்டு, 1979ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்
25 ஆம் நாளன்று வேலூர் மத்திய சிறையில் வைக்கப்பட்டார்.
அன்றிரவே, அவர் போராட்டத்தை கைவிட்டு பணிக்குத்
திரும்பிச் செல்லுமாறு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த
காவலர்களுக்குப் பத்திரிகைச் செய்தி ஒன்றை விடுத்தார்.
1979ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ஆம் நாளன்று,
செயலிலிருந்த தடை ஆணைகளை மீறி மதுரை மாவட்ட
ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன் சுமார் 300 காவலர்
கள் கூடினர். அங்கிருந்து கலைந்து செல்லுமாறு விடுக்கப்பட்ட
வேண்டுகோளுக்கு அவர்கள் செவிமடுக்காததால், கண்ணீர்ப்
புகைக் குண்டுகள் வீசப்பட்டு, அவர்கள் துரத்தப்பட்டனர்.
1979ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29ஆம் நாளன்று,
போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காவலர்களில் சிலர், தடை
யுத்தரவுகளை மீறி, திருநெல்வேலி பேருந்து நிலையத்திற்கரு
கில் ஒன்று கூடி கற்களை வீசினர். இதன் விளைவாக தமிழ்
நாடு தனிக்காவலர் படைப்பிரிவைச் சேர்ந்த காவலர்கள்
சிலருக்கும் காவல் துறை சூப்பிரண்டுக்கும் காயங்கள் ஏற்
பட்டன. அவர்கள் கைது செய்யப்படுவதையும் எதிர்த்தனர்.
எனவே, அவர்களைச் சிறையிடுவதற்குச் சிறிதளவு பலப்பிர
யோகம் செய்யப்பட்டது. அதே நாளில் தச்சநல்லூர்
இரயில்வே வாயிலுக்கருகில் கோவில்பட்டிச் சாலையில் (திரு
நெல்வேலி) போராட்டம் நடத்திய காவலர்கள் கட்டபொம்மன்
போக்குவரத்துக் கழகப் பேருந்து (2358) ஒன்றுக்குத் தீ வைத்
தனர். இது தொடர்பாக இ.பி.கோ. 147, 435ஆம் பிரிவு
களின்கீழ் தச்சநல்லூர் காவல் நிலையத்தில் 177/79ஆம்
எண்ணுள்ள குற்ற வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இவை
நீங்கலாக, சில இடங்களில் வேலை நிறுத்தம் செய்த காவலர்
கள் பொதுச் சொத்துக்களுக்கும் (மிக உயர் மின் அலை செய்தித்
தொடர்புச் சாதனங்கள் முதலியவற்றிற்கும்) சேதம் விளை
வித்தனர்.



1980 ஜூலை 25]

திரு. நயினார்தாஸ் நிபந்தனையோடு பிணையத்தின் பேரில்
வேலூர் மத்திய சிறையிலிருந்து 1979 ஆம் ஆண்டு நவம்பர்
திங்கள் 1ஆம் நாளன்று விடுதலை செய்யப்பட்டார். அவர்
பத்திரிகை நிருபர்களுடன் பேசியபோது, போராட்டத்தைக்
கைவிட்டு பணியில் சேருமாறு 25—10—1979 ஆம் நாளன்று
அவர் காவலர்களுக்கு விடுத்த வேண்டுகோள் உண்மை
யானது என்றும், தானாகவே அறிவித்தார் என்றும் பிறரது
வற்புறுத்தலினாலோ, அச்சுறுத்தலினாலோ அறிவிக்கவில்லை என்
றும் கூறினார். தனித் தனியாக மூன்று சங்கங்களை அமைப்ப
தற்காக அரசு வெளியிட்ட வழிகாட்டிக் குறிப்புகளை அவர்
ஆதரிப்பதாகவும் கூறினார். போராட்டம் நடத்திய
காவலர்கள் படிப்படியாக மீண்டும் பணிக்குச் செல்லத்
தொடங்கினர். 1979 ஆம் ஆண்டு நவம்பர் மத்தியில் அமைதி
நிலை திரும்பியது.

மாநிலத்தில் காவலர்கள் கிளர்ச்சி செய்தபோது சுமார்
12,500 காவலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.
இதில் பல்வேறு குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட
சுமார் 3,000 காவலர்களும் அடங்குவர். அவர்கள் மீது
ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சுமார் 829 காவலர்
கள் பணியிலிருந்து நீக்கப்பட்டனர், தகுதிகாண் பருவத்திலிருப்
பவர் உட்பட.

கிளர்ச்சியில் கலந்துகொள்ளாது தங்கள் பணியைச் செய்து
வந்த உண்மை ஊழியர்களான காவலர் ஒவ்வொரு
வருக்கும் ரூபாய் 50 ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. கிளர்ச்சி
நடைபெற்ற காலங்களில் காவலர்களுக்கு உதவி செய்ய
ஊர்க்காவல் படையினரின் பணியும் பயன்படுத்தப்பட்டது.
இத்துடன் சென்னை மாநகர்க் காவலர்கள் சட்டம்,
மாவட்டக் காவலர்கள் சட்டம் ஆகிய சட்டங்
களின்கீழ் தனிக் காவல் அதிகாரிகளும் நியமிக்கப்பட்ட
னர். இக் காலத்தில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற காவலர்
கள் சிலரின் பணியும் பயன்படுத்தப்பட்டது. இக்கிளர்ச்சியின்
குறிப்பிடத்தக்க கூறு என்னவெனில், 70 சதவீதத்துக்கும் மேற்
பட்ட காவலர்களும், அதிகாரிகளும் (அரசிதழ் பதிவு பெற்றவர்
கள், அரசிதழ் பதிவு பெறாதவர்கள்) காவல் துறைக்கு ஆதரவா
யிருந்தனர்.

போராட்டம் நடத்தி, வன்முறைகள் முதலியவற்றில்
ஈடுபட்ட காவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டன. இதன் விளைவாக 829 காவலர்கள் பணியிலிருந்து
நீக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் மீண்டும் பணியில்
சேர்க்கப்பட்டு விட்டனர். ஆனால் ஒருவர் மட்டும் பணியில் சேர
வில்லை.

## 21. காவலர்கள் துப்பாக்கிச் சூடு.

1—1—1979 முதல் 31—12—1979 வரையுள்ள கால
அளவில் காவலர்கள் 13 முறை துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
இவை குறித்த விவரங்கள் பின் வருமாறு:—

(i) 4—4—1979ஆம் நாளன்று வாகைக்குளத்தில் (இராம
நாதபுரம் மேற்கு) துளைக்கிணறுகள் தோண்டுவதிலும் குழாய்
கள் போடுவதிலும் தமிழ்நாடு குடிநீர் வழங்கு-வடிகால் வாரியப்
பணியாளர்கள் ஈடுபட்டிருந்தபோது இத்தகைய கிணறுகள்
பாசனத்திற்குத் தேவையான நிலத்தடி நீரை வற்றச் செய்து
விடும் எனக்கருதி இத்தகைய கிணறுகள் தோண்டுவதை எதிர்த்து
சுமார் 2,000 உழவர்கள் மேற்சொன்ன பணியாளர்கள் அவர்
களது பணியைச் செய்யவிடாமல் தடுத்தனர். சிவகாசி கோட்
டாட்சியரின் கட்டளைகளின்படி உரியவாறு எச்சரிக்கை செய்த
பின்னர் காவலர்கள் 29 கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும்
6 எறி குண்டுகளையும் வெடித்தனர். இதனால் எதிர்பார்த்த
பலன் கிடைக்காததால் காவலர்கள் தடியடி நடத்தினர். அனால்
இதுவும் பயனற்றதாகிவிட்டது. உழவர்கள் வன்முறையில் ஈடு
பட்டு கற்களை வீசவும் காவலர்களைத் தாக்கவும் தொடங்கினர்.
எனவே ஊமைக்காயம் ஏற்படுத்தும் 23 சுற்று ரவைத் தோட்டாக்
களையும், 9 தோட்டாக்களையும் காவலர்கள் சுட்டனர். இதன்
விளைவாக 23 பேருக்கு (4 பெண்கள் உட்பட) காயங்கள் ஏற்
பட்டன. அவர்கள், அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு
எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் ஒரு பெண் உட்பட
மூவர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே
இறந்து விட்டனர். மேலும் ஒரு பெண் உட்பட காயமுற்றவர்
கள்ல் இருவர் 6—4—1979ஆம் நாளன்று மருத்துவமனையில்
இறந்தனர். காவல துறை டிபுடி சூப்பிரண்டு ஒருவர் சப்-
இன்ஸ்பெக்டர் ஒருவர் ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட
இருபத்திரண்டு காவலர்கள் காயமுற்றனர். இராமநாதபுரம்
மாவட்ட-செஷன்ஸ் நீதிபதி விசாரணை நடத்தினார் இத் துப்
பாக்கிச் சூடு நியாயமானதே என்று முடிவு செய்தார்.

(ii) 23—4—1979-ம் நாளன்று இராமநாதபுரம் மேற்குப்
பகுதியைச் சேர்ந்த ஆலங்குளத்தில் தமிழ்நாடு சிமெண்ட்
தொழிற்சாலைக்கு முன்னர் 700 உழவர்கள் ஒன்றா
கக்கூடி அந்தொழிற்சாலையை மூடும்படி வற்புறுத்தினர். அவர்
கள் காவலர்களின் மீது கற்களை வீசி காவல்துறை ஊர்திகளுக்
கும் தனியார் ஊர்திகளுக்கும் சேதம் விளைவித்தனர். காவல்
துறையினர் முறைப்படி எச்சரிக்கை விடுத்தபின்னர் கண்ணீர்ப்
புகைக் குண்டுகளை வீசினர். பின்னர் தடியடி நடத்தினர்.
இவை பயனற்றுப்போகவே காவல்துறையினர் ஊமைக்காயம்
ஏற்படுத்தும் 4 சுற்று தோட்டா கொண்டு சுட்டனர். இத்துப்
பாக்கி சூட்டில் உழவர்கள் நால்வர் காயமுற்றனர். இக் கலகத்



தினால் 24 காவலர்கள் காயமுற்றனர். இராமநாதபுரம்
மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி மாவட்ட கூடுதல் மாஜிஸ்ட்
ரேட்டு ஆகியோர் விசாரணை நடத்தி துப்பாக்கி சூடு நடத்தி
யது நியாயமானதே என்று முடிவு செய்தனர்.

(iii) 23—4—1979ஆம் நாளன்று 12.45 மணியள
வில் அடுத்துள்ள கிராமங்களிலிருந்து சுமார் 500 உழவர்கள்
கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை மத்திய
பேருந்து நிலையத்திற்கு வந்தனர். அவர்கள் பழனி நோக்கிச்
சென்று கொண்டிருந்த வாயிலை நிறுத்தி அதன் டயர்களிலிருந்து
காற்றைப்பிடுங்கிவிட்டு அதன் ஓட்டுநரைத் தாக்கினர்.
காவல் துறையினர் அவ்விடத்தை அடைந்தபோது கிளர்ச்சிக்
காரர்கள் வன்முறையுடனும் வலியத்தாக்கும் தன்மையுடனும்
காவலர்கள் மீது கற்களை வீசினர். அக்கூட்டத்தினரைக் கலைப்
பதற்கு காவலர்கள் மேற்கொண்ட கண்ணீர்ப் புகை வீச்சும்
தடியடியும் பலன் தரவில்லை. எனவே கூட்டத்தினரைக் கலைக்
கும் பொருட்டு ஊமைக்காயம் ஏற்படுத்தும் ரவைத் தோட்டா
ஒன்றை வெடித்து காவலர்கள் துப்பாக்கிச்சூடு நடத்த வேண்
டியதாயிற்று. இப்போராட்டத்தில் 6 கிளர்ச்சியாளர்களும்
12 காவலர்களும் காயமுற்றனர்.

(iv) மீண்டும் அதே நாளில், வன்முறையில் ஈடுபட்ட
சுமார் 3,000 உழவர்கள், உடுமலைப்பேட்டை மத்தியப் பேருந்து
நிலையத்திற்கு அருகிலுள்ள கடைகளைத் தாக்கினர்.
அவர்கள் கடைகளைச் சேதப்படுத்திக் கொண்டிருக்கையில்
காவல் துறையினர் குறுக்கிட்டு சொத்துக்களுக்கு சேதம் விளை
விப்பதைத் தடுத்தனர். கடைகளில் பணிபுரிவோரின் உயிர்களை
யும் காப்பாற்றினர். அக்கூட்டத்தினர் கற்கள், கம்புகள்,
சோடா பாட்டில்கள் ஆகியவற்றால் காவலர்களை மீண்டும்
தாக்கினர். அவர்கள் காவலர்களிடமிருந்து ஆயுதங்களைப்பறிப்
பதற்கும் முயற்சித்தனர். காவலர்கள் அறுவர் காயமுற்றனர்.
கண்ணீர்ப் புகை வீச்சும், தடியடியும் பயனற்றுப் போனதால்
காவல்துறையினர் ஊமைக்காயம் ஏற்படுத்தும் 3 ரவைத்
தோட்டாக்களையும், .410 ஒரு சுற்று ரவைத் தோட்டாவை
யும் கொண்டு சுட வேண்டியதாயிற்று. ஒருவர் கொல்லப்
பட்டார், 15 பேர் காயமுற்றனர். இச்சம்பவம் குறித்து,
பொள்ளாச்சி கோட்டாட்சியர் விசாரணை நடத்தினார்.
காவல் துறையனர் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே
என்று முடிவு செய்தார்.

(v) 23—4—1979ஆம் நாளன்று, அழகிய பாண்டியா
புரத்தில் (திருநெல்வேலி) சுமார் 1,000 உழவர்கள், மானூர்
—சங்கரன்கோவில் சாலையில் போக்குவரத்தைத் தடுத்து
நிறுத்தினர். அவர்களைக் கலைந்து போகும்படி காவலர்கள்
எச்சரிக்கைவிடுத்தவுடன் அவர்கள் காவலர்களைத் தாக்கினர்.
காவல் துறையினர் முறையான எச்சரிக்கை விடுத்த பின்னர்
காவலர்கள் தடியடி செய்தனர், இது பயனற்றுப் போனதால்

காவல்துறையினர் ஊமைக்காயம் ஏற்படுத்தும் 4 சுற்று தோட்டாக்களையும், .410, 2 சுற்று தோட்டாக்களையும், .303, 1 சுற்று தோட்டாவையும் கொண்டு சுட்டனர். ஒரு பெண் உள்பட மூவர் காயமடைந்தனர். 8 காவலர்கள் காயமடைந்தனர். திருநெல்வேலி கோட்டாட்சியர் இது குறித்து விசாரணை நடத்தினார். துப்பாக்கி சூடு நடத்தியது நியாயமானது என்று முடிவு செய்தார், அதனை அரசு ஏற்றுக்கொண்டது.

(vi) 23—4—1979 ஆம் நாளன்று, திருநெல்வேலி மாவட்டம் மேரியபுரத்தில் பனவடலியைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் அய்யாப்பழத்தின் தலைமையில் காவலர் படைப்பிரிவு ஒன்று, சங்கரன்கோவில்—திருநெல்வேலி சாலையில் போக்குவரத்திற்குத் தடையாக உழவர்களால் போடப்பட்டிருந்த முட்டுக்கட்டைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தது. திடீரென்று இக்காவலர் படைப்பிரிவு, 1,000 பேர் கொண்ட உழவர் கும்பலால் சூழப்பட்டு, தாக்கப்பட்டது. இக்காவலர்கள் தற்காப்பின் பொருட்டு துப்பாக்கியால் சுட்டனர். ஆனால், அவர்களது பலத்தைவிட கூட்டத்தினரின் பலம் அதிகமாக இருந்தது. சப்-இன்ஸ்பெக்டர் திரு. அய்யாப்பழம், அவ்விடத்திலேயே அடித்துக் கொல்லப்பட்டார். 11 காவலர்கள் காயமடைந்தனர்; அவர்களில் ஒருவர் கடுமையாகக் காயமடைந்தார். 2 உழவர்கள் காயமடைந்தனர். மொத்தம் காவலர்கள் 22 முறை சுட்டுள்ளனர். இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தும்படி திருநெல்வேலி மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அவரது அறிக்கை இன்னும் அரசுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(vii) 23—4—1979 ஆம் நாளன்று, கோவில்பட்டி—திருநெல்வேலி சாலையில், சத்திரப்பட்டியில் சுமார் 2,000 உழவர்கள் போக்குவரத்துத் தடைகளை சாலையில் போட்டு, வன்முறையில் ஈடுபட்டனர். காவலர்கள் வன்முறைக் கூட்டத்தைக் கலைப்பதற்கு 2 சுற்று 410 தோட்டாக்களை வான் நோக்கிச் சுட்டனர். எவரும் காயமடையவில்லை.

(viii) 23—4—1979 ஆம் நாளன்று, செங்கற்பட்டு மேற்கு காவல் நிலைய அதிகார எல்லையைச் சேர்ந்த மதுராந்தகத்தில் உள்ள மேரப்பாக்கத்தில், காவலர்கள் சாலையில் உள்ள தடைகளை நீக்கும் பணியில் ஈடுபட்டிருக்கையில், சுமார் 200 உழவர்கள் காவலர்களைத் தாக்கினர். காவலர்கள் நால்வர் காயமடைந்தனர். காவல்துறையினர் கூட்டத்தினரைக் கலைப்பதற்கு 5 சுற்று 303 தோட்டாக்களை வான் நோக்கி சுட்டனர். எவரும் காயமடையவில்லை. கல்லெறிந்ததனால் காவல்துறைப் பணியாளர்கள் அறுவர் காயமடைந்தனர். மாஜிஸ்ட்ரேட்டைக் கொண்டு இச்சம்பவம் குறித்து விசாரணை செய்வது, அரசின் ஆணைப்படி நிறுத்தப்பட்டுவிட்டது.



(ix) தசரதராமன் என்பவரின் தேநீர்க்கடையில் பணிபுரியும் இளம் முஸ்லீம் பணியாளர் ஒருவரை மளிகைக்கடை உரிமையாளரான குலாம் சாயபு 3—6—1979 ஆம் நாளன்று இரவு தாக்கியதின் விளைவாக, 4—6—1979 ஆம் நாளன்று பாலக்கோட்டிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இந்து முஸ்லீம் கலவரம் தோன்றியது. வகுப்புவாதக் கலவரத்தால் தோற்றுவிக்கப்பட்ட கடும் பதட்ட நிலையினை அடக்க, காவல் துறையினர் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசினர்; தடியடி செய்தனர், பின்னர் கூறியவாறு 4 தடவைகளில் துப்பாக்கிச் சூடு நடத்தினர்:—

(அ) வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்திற்குப் பின்புறம், பாலக்கோடு இரயில்வே தடத்திற்கு அருகில், ஊமைக்காயம் ஏற்படுத்தும் தோட்டா ஒன்றும் வெடிகுண்டு தோட்டா ஒன்றும் சுடப்பட்டது. கலகக்காரர்களில் ஒருவர் காயமடைந்தார். காவலர்களில் ஏழுபேர் காயமடைந்தனர்.

(ஆ) பாலக்கோட்டில் ஸ்நூபி மைதானத்திற்கு அருகிலும், பேருந்து நிலையத்திற்கு அருகிலும், 2 தோட்டாக்கள் சுடப்பட்டன. கலவரக்காரர்களில் இருவர் காயமடைந்தனர். காவலர்களில் நால்வர் காயமடைந்தனர்.

(இ) காவல் நிலையத்திற்குப் பின்புறம், முஸ்லீம் காலனி திறந்த வெளியில் 2 ஊமைக் காயம் ஏற்படுத்தும் தோட்டாக்களும், 6 தோட்டாக்களும் சுடப்பட்டன. கலவரக் காரர்களில் எழுவர் காயமடைந்தனர். காவலர்களில் ஐவர் காயமடைந்தனர்.

(ஈ) பாலக்கோடு, பலராம்பட்டிச் சாலை சந்திப்பில், 4 ஊமைக்காயம் ஏற்படுத்தும் தோட்டாக்கள் சுடப்பட்டன. கலகக்காரர்களில் 6 பேர் காயமடைந்தனர். காவலர்களில் இருவர் காயமடைந்தனர்.

கோட்டாட்சியரும், மாவட்டக் கூடுதல் மாஜிஸ்டிரேட்டும் விசாரணை நடத்தினர்; காவல்துறையினரின் துப்பாக்கிச் சூடு நியாயமானதே என்று முடிவு செய்தனர்.

(x) 8—6—1979 ஆம் நாளன்று, வேடப்பட்டி கிராமத்தில் (திருநெல்வேலி) திருவிழா ஒன்றின்போது கோனார்களுக்கும், நாடார்களுக்கும் இடையே கலகம் ஏற்பட்டது. இக்கலவரத்தில் கோனார்கள் ஐவரும், நாடார்கள் இருவரும் காயமடைந்தனர். காவல் துறையினர் விடுத்த வேண்டுகோள்கள் பயனற்றுப் போகவே கூட்டத்தினரைக் கலைப்பதற்கு .303 2 சுற்று தோட்டாக்கள் வான் நோக்கி சுடப்பட்டன. எவரும் காயமடையவில்லை.

(xi) 4—7—1979 ஆம் நாளன்று, இராமேஸ்வரத்தில்
(இராமநாதபுரம் கிழக்கு), மூக்கையூர் கூட்டத்தினர், கடையூர்
கூட்டத்தினர் ஆகிய இரு மீனவர் கூட்டத்தினரிடையே கலகம்
மூண்டது. மூக்கையூர் கூட்டத்தினர், காவல்துறையினரின் எச்
சரிக்கையையும் மீறி மரணம் உண்டாக்கக்கூடிய ஆயுதங்களுடன்
வன்முறையில் இறங்கினர். தடியடிப்பிரயோகமும், 2 சுற்று
ஊமைக்காயம் ஏற்படுத்தும் தோட்டாக்களினால் சுட்டதும்
விரும்பிய பயனை அளிக்கவில்லை. இரு கூட்டத்தினரும் வன்
முறையில் ஈடுபட்டனர்; பெரும் கலவரம் ஏற்பட்டது. அக்
கூட்டத்தினரைக் கலைப்பதற்காக மேலும் மூன்று சுற்று
ஊமைக்காயம் ஏற்படுத்தும் தோட்டாக்களைக் கொண்டு சுட்ட
னர். மூக்கையூர் கூட்டத்தினர் ஆயுதங்களை வீசிக்காட்டிக்
கொண்டு முன்னேறியதால், இராமேஸ்வரம், துணை வட்
டாட்சியாரின் ஆணையின் பேரில் ஒன்றன்பின் ஒன்றாக 5
ஊமைக்காயம் ஏற்படுத்தும் தோட்டாக்களும், 10 சுற்று .303
தோட்டாக்களையும் கொண்டு சுட்டனர். இச்சம்பவத்தில்,
மூன்று பேர் அவ்விடத்திலேயே இறந்தனர், 23 பேர் காய
மடைந்தனர். இச்சம்பவத்தில் பதினாறு காவலர்களும், தனித்
துணை வட்டாட்சியர் ஒருவரும் காயமடைந்தனர். இராமநாத
புரம் கோட்டாட்சியரும், மாவட்டக் கூடுதல் மாஜிஸ்டி
ரேட்டும் விசாரணை நடத்தி, துப்பாக்கிச் சூடு நடத்தியது
நியாயமானதே என்று முடிவு செய்தனர்.

(xii) 11—8—1979 ஆம் நாளன்று, இரவு 9.00 மணிக்கு,
மதுரைத் தெற்கு மாவட்டம், மேலூரைச் சேர்ந்த முகம்மதியா
புரத்தில் மேலூர் சப்-இன்ஸ்பெக்டரும் அவரது காவல் பிரிவி
னரும், செல்வதின் என்ற கன்றியக் குற்றவாளி ஒருவரை குடி
போதையிலிருந்த காரணத்திற்காக கைது செய்தனர். அக்
குற்றவாளி, எதிர்ப்பு தெரிவித்து தப்பிக்கப் பார்த்ததால், சப்-
இன்ஸ்பெக்டர் குறைவான பலப் பிரயோகம் செய்து காவல்
நிலையத்திற்குக் கொண்டு வந்தார். அவரது கூட்டாளிகள்,
உறவுக்காரர்கள், அப்பகுதியில் வாழ்வோர் அனைவரும் காவல்
நிலையத்திற்கு வந்து, அவரை விடுதலை செய்யும்படி கட்டா
யப்படுத்தினர். அது நிராகரிக்கப்பட்டது. சுமார் 1,000பேர்
கொண்ட கூட்டம் ஒன்று காவல் நிலையத்திற்கு முன்னர் கூடி,
காவல்நிலையத்தைத் தாக்கி, கற்களை வீசினர். மேலும் சப்-
இன்ஸ்பெக்டர், கூட்டத்தினரை எச்சரிக்கை செய்தார்.
ஆனால், அவர்கள் தொடர்ந்து தாக்கினர். தற்காப்பின்
பொருட்டு, சப்-இன்ஸ்பெக்டர் 4 ஊமைக்காயம் ஏற்படுத்தும்
தோட்டாக்களை கொண்டு வான் நோக்கிச் சுட்டார். இச்
சம்பவம் குறித்து, மதுரை மாவட்டம் கூடுதல் ஆட்சித் தலைவர்
விசாரணை நடத்தினார். காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி
யது நியாயமானதே என்று முடிவு செய்தார். அதனை அரசு
ஏற்றுக்கொண்டது.





(xiii) தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் ஜூன்
திங்கள் முதல் வாரத்தில், தோன்றிய இந்து—முஸ்லிம் கல
வரம் பின்னர் அமைதியடைந்தது; ஆனால் 23-8-1979
ஆம் நாளிலிருந்து மீண்டும் கலவரம் கோர உருக்கொண்டு
தோன்றியது. இதற்கு முன்னர், இவ்விரு இனத்தைச் சேர்ந்த
வர்களுக்கிடையில் சிறு சச்சரவுகள் நடந்தன. இந்து
முஸ்லிம் இனத்தாரிடையேயான பகைமை உணர்வு படிப்படி
யாக உச்ச நிலையை அடைந்து, பெரும் கலவரத்திலும்,
24-8-1979 ஆம் நாளிரவு தீயிடுதலிலும், கொலையிலும்
முடிந்தது. வன்முறைக் கும்பலை அடக்குவதற்கு காவல்
துறையினர் சுட வேண்டியதாயிற்று. ஒன்பது தோட்டாக்கள்
சுடப்பட்டன. இத்துப்பாக்கிச் சூட்டில் இருவர் இறந்தனர்.
இச்சம்பவம் குறித்து, தருமபுரி கோட்டாட்சியரும் மாவட்ட
கூடுதல் மாஜிஸ்ட்ரேட்டும் விசாரணை நடத்தி இத்துப்பாக்கிச்
சூடு நடத்தியது நியாயமானதே என்று முடிவு செய்தனர்.

1-1-1980—லிருந்து 31-3-1980 வரையிலான கால
அளவில் காவல்துறையினர் மும்முறை துப்பாக்கி சூடு நடத்
தினர். அதன் வவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(i) 4-1-1980 ஆம் நாளன்று தி.மு.க. ஊர்வலத்
தின் கடைசிப் பகுதியினர் சாலையைக் கடந்து செல்வதற்கு
(மதுரை தெற்கு) மதுரையில், சாலைச் சந்திப்பு ஒன்றில்
அ.இ.அ.தி.மு.க. தொண்டர்களைக் காவல் துறையினர் தடுத்து
நிறுத்தினர். அவ்வாறு செய்கையில், குழப்பம் ஏற்பட்டது.
சில சமூக விரோதிகள் இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்
கொண்டு, தி.மு. கழக ஊர்வலத்தினர் மீது கற்களை வீசினர்
தி.மு.க. வினரும் எதிர்த்து கற்களை வீசினர். காவல் துறை
யினர் குறுக்கிட்டு, ஒழுங்கை ஏற்படுத்தினர். இக்கலகத்தில்,
காங்கிரஸ் (இ), தி.மு.க. தேர்தல் அலுவலகங்களும், அலங்கார
வளைவுகளும் கொளுத்தப்பட்டன. சில கடைகள் கொள்ளை
யடிக்கப்பட்டன. முறையான எச்சரிக்கை விடுத்த பின்னர், 15
கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. ஆனால், அக்கூட்டத்
தினர் மிகவும் வன்முறையில் ஈடுபட்டு, காவலர்களை அச்
சுறுத்தும் வகையில் தொல்லை ஏற்படுத்தினர். அதன்பேரில்
காவலர்கள் தடியடி செய்தனர். இதுவும் பலனளிக்காமல்
போகவே, 5 சுற்று ஊமைக்காயம் ஏற்படுத்தும் தோட்டாக்
களைக் கொண்டு சுட்டனர். இதில் ஹார்த்ராஜ் (அ. இ. அ.
தி. மு. க.) குட்டி என்னும் ஜெயப்பிரகாஷ் (இ.க.க.)
ஆகியோர் இறந்தனர். இவ்வனைத்துச் சம்பவங்களிலும் 35
காவலர்களும் கூட்டத்தினை மீறிய கும்பலைச் சேர்ந்த 38
பேரும் காயமடைந்தனர். இ.பி.கோ. 147 14 332, 188, 307
435, 506 (1) ஆகிய பிரிவின் கீழ், 5/80-ம் எண்ணுள்ள குற்ற
வழக்கு ஒன்று செல் லூர் காவல் நிலையத்தில் காவல் துறை
யினர் பதிவு செய்தனர். இதனை விசாரிக்க, 1952ஆம் ஆண்டின்

விசாரணை சட்டத்தின் கீழ், வருவாய் வாரியத்தின் முதல்
உறுப்பினர் திரு. டி. எஸ் சங்கரன், இ.அ.ப. அவர்களை ஒரு
நபர் விசாரணை குழுவாக அரசு நியமித்துள்ளது.

(ii) அவனியாபுரம், பெரியார் நகர் அரிசனக் காலனிக்கு
அருகில் 17-1-1980 ஆம் நாளன்று, 8.45 மணிக்கு தேவர்
இனத்தைச் சேர்ந்த30வயது நிரம்பிய அருணா என்னும் ஆசிரியை
ஒருவரை அரிசனங்கள் நால்வர் சேர்ந்து கொண்டு கிண்டல் செய்
தனர். இதனை, அந்த ஆசிரியை, அவரது உறவினர்களிடம் கூற
அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களுடன்
சட்டத்திற்குப் புறம்பாகக் கூட்டமாகக் கூடினர். சுமார் 500
தேவர்கள் முக்கியச் சாலை நெடுக அரிசனக் குடியிருப்பை
நோக்கிச் செல்லத் தொடங்கினர். இதற்கிடையே, அரிசனங்
கள் தங்கள் ஆட்களை ஒன்று திரட்டினர். இதன் விளைவாக,
அவர்களுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டது. கற்கள் வீசப்
பட்டன. தடிகளும், ஆபத்து விளைவிக்கக்கூடிய ஆயுதங்களும்
பயன்படுத்தப்பட்டன.

கலைந்து செல்லுமாறு காவல் துறையினர் கூட்டத்தை எச்
சரித்தனர். ஆனால் கூட்டத்தினர் காவலர்கள் மீது தொடர்ந்து
தாக்குதல் நடத்தினர். காவல் துறைப் பணியாளர்களது உயி
ருக்கு ஆபத்தும், காவல்துறை வண்டி போன்ற அரசுச் சொத்துக்
களுக்கு சேதமும் ஏற்படவிருந்தது. நிலைமை மேற்கொண்டு
மோசமாகிவிடுவதைத் தவிர்க்கும் பொருட்டு, கூட்டத்தினரை
அச்சுறுத்துவதற்காக திருப்பரங்குன்றம் காவல்துறை உதவி
சப்-இன்ஸ்பெக்டர் இரண்டு தோட்டாக்கள் கொண்டு வானத்தை
நோக்கிச் சுட்டார். இது பலனளித்தது. கும்பல் கலைந்தது.
எவரும் காயமுறவில்லை. எவரும் இறந்துவிடவுமில்லை.

(iii) 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2 ஆம் நாளன்று
அ.தி.மு.க. வும் அதனைச் சார்ந்த கட்சிகளும், தமிழ்நாடு
சட்டப்பேரவை கலைக்கப்பட்டு அ.தி.மு.க. அரசு நீக்கப்பட்ட
தற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சென்னை அண்ணா
சாலையில் காமராஜ் சிலையிலிருந்து ராணி அரங்கத்திற்கு
ஊர்வலமாகச் சென்றன. ஊர்வலத்தின் போது, ஊர்வலத்
தின் கட்சித் தொண்டர்களின் உணர்ச்சிகளை சில சமூக
விரோதிகள் சாதகமாகப்பயன்படுத்திக்கொண்டு, வன்முறையில்
ஈடுபட்டு, தனியார் பொதுச் சொத்துக்களையும், காவலர்
களையும் தாக்கினர். வன்முறைக் கூட்டத்தினர் பு2 காவல்
நிலையத்தையும் தாக்கினர். வன்முறைக் கூட்டம் பு2 காவல்
நிலையத்தில் புகுந்து மேசை நாற்காலிகள் முதலியவற்றிற்கு
சேதம் ஏற்படுத்தி, மின் விளக்குகளை உடைத்து
காவலர்களைத் தாக்கி சென்ட்ரி காவலரிடமிருந்து துப்பாக்
கியைக் கைப்பற்ற முயற்சி செய்ததால், சென்ட்ரி காவலர்
1654 ராமர் தற்காப்புக்காகவும், ஆபத்தான நிலையில்
இருந்த பிற காவலர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்



காகவும், அரசுச் சொத்துக்களுக்கு மேற் கொண்டும் சேதம்
ஏற்படாமல் தடுப்பதற்காகவும் தனது 410 துப்பாக்கியைக்
கொண்டு ஐந்து முறை வானத்தை நோக்கிச் சுட்டார். 37
காவலர்களும் 3 தீயணைப்புத் துறை பணியாளர்களும் இச்சம்
பவத்தில் காயமுற்றனர்.

22. கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்தியமை:

இவ்வாண்டில், சட்டம் ஒழுங்கினை நிலை நாட்ட சென்னை
மாநகரில் 6 முறையும் வட ஆற்காடு மாவட்டத்தில் 6 முறையும்,
இராமநாதபுரம், மதுரை (தெற்கு) தஞ்சாவூர் மாவட்டங்களில்
ஒவ்வொன்றிலும் இரண்டு முறையும் கோயம்புத்தூர் (ஊரகம்),
செங்கற்பட்டு (மேற்கு), தருமபுரி, தஞ்சாவூர் (கிழக்கு) மாவட்
டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு முறையும், கண்ணீர்ப்புகைக்
குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

23. காவல் துறை வானொலிப் பிரிவு :

தமிழ்நாடு காவல் துறை மாவட்டத் தலைமையிடங்கள்
அனைத்தும் சென்னை காவல்துறை வானொலிப் பிரிவில்
இணைக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்
வேலி, கோயம்புத்தூர், வேலூர், செங்கற்பட்டு சரகங்
கள் ஆகிய ஆறு செய்தித் தொடர்பு நிலையங்கள் மேற் சொன்ன
பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவை தவிர, சென்னை
மாநகரக் காவற்படை வானொலி தொடர்பு அமைப்பு உள்ளது.
சென்னை மாநகரம், கல்லணை, தஞ்சாவூர், பவானிசாகர்,
தேக்கடி, மேட்டூர், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி
ஆகிய இடங்களில் வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்
கள் உள்ளன. 18 நிலையான வானொலி அமைப்பு நிலையங்
கள், 6 உட்கோட்ட வானொலி அமைப்பு நிலையங்கள், 24
இயவூர்தி வானொலி அமைப்பு நிலையங்கள், 19 மீவுயர்
அதிர்வலைச் செய்தி அஞ்சல் நிலையங்கள், 19
மாநகரச் செய்தித் தொடர்பு நிலையங்கள்,
10 வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள்
ஆகியவை தமிழ்நாடு காவல் துறை வானொலி அமைப்புடன்
இணைக்கப்பட்டுள்ளன. முக்கியமான திருவிழாக்கள், புயல்
வேலை நிறுத்தங்கள், பெரு மக்கள் வருகை, மற்ற நெருக்கடிக்
காலங்கள் எல்லாவற்றிலும் இந்நிலையங்கள் பயன் படுத்தப்
பட்டு வருகின்றன. சென்னை, காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர்
ஆகிய நான்கு இடங்களில் வானிலை அறிவிப்பு நிலையங்கள்
மன நிறைவு அளிக்கத்தக்க வகையில் நல்ல முறையில் செயல்
பட்டு வருகின்றன.

24. தமிழ்நாடு காவல் படையை நவீனப்படுத்துதல் :

காவலர் படையை நவீனப்படுத்துவதற்கான திட்டம்
ஒன்றை மத்திய அரசு தொடங்கியுள்ளது. இதற்கான நிதி
உதவியையும் அளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ். வண்டிகள்

கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள், அறிவியல் சாதனங்கள்
இவற்றை வாங்குவதற்காக 1969-70 முதல் 1978-79
வரை ரூ. 426.47 இலட்சத்திற்கு கடனாகவும் மானியமாக
வும் இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்துடன்
இவற்றை இயக்குகின்ற பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கு
வதற்காக ரூ. 38.50 இலட்சம் தொடரியச் செலவாகவும்
அரசு வழங்கியுள்ளது.

## 25. செய்தித் தொடர்பு :

உயர் அதிர்வலை, மீவுயர் அதிர்வலைச் செய்தித் தொடர்பு
மூலம் அனைத்து காவல் நிலையங்களை மாவட்டத் தலைமை
யிடங்களுடனும், மாநிலத் தலைமையிடத்துடனும் இணைப்
பதே அரசின் நோக்கமாகும். ஒலி வடிவிலும் வரிவடிவிலும்
வானொலி மூலம் அனுப்புவதற்கு வகை செய்ய மாவட்டத் தலை
மையிடங்கள் அனைத்தும் மாநிலத் தலைமையிடத்துடன் ஏற்
கனவே மீவுயர் அதிர்வலைச் செய்தித் தொடர்பு மூலம் இணைக்
கப்பட்டுள்ளன. தவிர, 873 காவல் நிலையங்களில் 640 காவல்
நிலையங்களும், 92 துணைக் கோட்டங்களில் 50 துணைக்
கோட்டங்களும், சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைமையிடத்
துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளன. விரல் ரேகைப்
பதிவுகள், நிழற்படங்கள், ஐயத்திற்கிடமான ஆவணங்கள், ஆகிய
வற்றின் படிகளை புகைப்பட ஒளிபரப்பு முறையில் அனுப்பும்
வசதிகள், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சென்னை
ஆகிய இடங்களில் உள்ள சரகத் தலைமையிடங்களில் தற்போது
உள்ளன.

26. மாநிலத் தலைமையிடத்திற்கும் மாவட்டத் தலை
மையிடங்களுக்கும் இடையே போக்குவரத்து அதிகரித்து
வருவதால், தற்போதுள்ள ஒரு வழி மீவுயர் மின்னலைச்
செய்தித் தொடர்பு வசதி போதுமானதாயில்லை. எனவே
ரூ. 100 இலட்சம் செலவில் நுண்ணலைப் பல்வழிச் செய்தித்
தொடர்பு வசதி ஏற்படுத்துவதற்கு அனுமதிவழங்கப்பட்டது. இந்த
பல்வழிச் செய்தித் தொடர்பு அமைப்பு சுமார் 540 கிலோ
மீட்டர் தொலைவுக்கு செய்தியை அனுப்பக்கூடியது.
இத்தொலைவு ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
இந்த அமைப்பின் கீழ் மிக உயரமான இடங்களில் 5 மறு
ஒலி பரப்பு வானொலி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
இந்த அமைப்பின் மூலம் விரல் ரேகைப் பதிவுகள் குற்ற வழக்கு
கள் குறித்த புள்ளி விவரங்கள் தேவைப்படும் பொழுது மாநிலத்
தின் எப்பகுதியிலிருந்தும் அறிந்து கொள்வதற்கு முடியும் என்ப
தோடு, மாவட்ட தலைமையிடங்கள் அனைத்திலிருந்து டெலி
பிரிண்டர்கள், உருவ நேர்படி தொடர்பு (Facsimile Transmission)
ஆகியவற்றின் மூலம் ஒரே நேரத்தில் குற்ற வழக்குகள் குறித்த
தகவல்களை விரைவாக அனுப்பவும் முடியும். இந்த நுண்ணலைத்
திட்டம் நிறுவப்பட்டு செயல்படத் தொடங்கி விட்டது.
அன்றாடத் தேவைகளுக்கு செயல் படுத்தப்படுகிறது.



27. மாநிலத்தில் 873 காவல் நிலையங்களும், 187 புறக்
காவல் நிலையங்களும் உள்ளன. இவற்றில் 871 காவல் நிலை
யங்களுக்கும் 184 புறக்காவல் நிலையங்களுக்கும் தொலை பேசி
வசதி செய்து கொடுப்பதற்கு அரசு ஏற்கனவே அனுமதி வழங்கி
யுள்ளது. ஆனால், தொலை பேசித் துறை இதுவரை 773
காவல் நிலையங்களிலும், 95 புறக்காவல் நிலையங்களிலும்
மட்டுமே தொலைபேசிகள் அமைத்துள்ளது. தொலைபேசித்
துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து எஞ்சிய 100 காவல்
நிலையங்களிலும், 92 புறக்காவல் நிலையங்களிலும், கூடிய
விரைவில் தொலைபேசிகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டு வருகின்றன.

## 28. காவல் துறையினருக்கு அறிவியல் தொழில் நுட்ப சாதனங்கள்.—

சட்டத்தையும் ஒழுங்கையும், திறம்படப் பேணி வரவும்,
குற்ற நிகழ்வுகளையும் குற்றவாளிகளையும் கண்டு பிடிக்கவும்
எல்லா மாவட்டங்களிலும் அறிவியல் சாதனங்களை அமைப்
பதென அரசு முடிவு செய்துள்ளது. மாநிலக் குற்றஞ்சார்ந்த
அறிவியல் ஆய்வுக் கூடத்தில் நவீன கருவிகள் அமைக்கப்பட்டு
வருகின்றன. அனைத்து காவல் துறை மாவட்டங்களிலும்
எல்லா வசதிகளும் நிறைந்த குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக்
கூடப்பிரிவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 20 காவல்
துறை மாவட்டங்களிலும், ஒரு விரல் ரேகைப் பிரிவுகள் செயல்
பட்டு வருகின்றன. குற்றம் நடைபெற்ற இடத்தில் காணப்
பெறும் தடயங்களையும் கைரேகைகளையும் விரைவாக
அடையாளம் கண்டு கொள்வதற்காக ரூ. 11.2 இலட்சம்
செலவில் 1977 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ''கோடக்
மிரா கோடு'' (Kodac Mira Code) மைக்ரோ பிலிம்
என்னும் சாதன அமைப்பு நிறுவப்பட்டது. நுண்படச்
சுருளில் கைவிரல் ரேகைப் பதிவேடு வைத்துவரும் முறை
ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது. இது 1980 டிசம்பர்
இறுதிக்குள் முடிவடையக்கூடும். மதுரை, கோயம்புத்தூர்,
தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டார குற்றஞ்
சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூட வசதிகளும் செய்து கொடுக்கப்
பட்டுள்ளன.

## 29. காவல் துறை புள்ளி விவரக் கணக்கீட்டுப் பிரிவு.—

காவல் துறைப் புள்ளி விவரக் கணக்கீட்டுப் பிரிவிற்கு அரசு
அனுமதி வழங்கியுள்ளது. அங்கு 5 இலட்சம் குற்ற நிகழ்வுகள்,
3 இலட்சம் குற்றவாளிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்
பட்டு, பதிவு செய்யப்பட்டு குறியீடு இடப்பட்டுள்ளன. மூன்று

இலட்சம் குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகளும் கணக்
கீட்டுப் பொறி முறையில் கணக்கு வைத்து வரப்படுகின்றன.
குற்ற நிகழ்வுகள், குற்றவாளிகள் பற்றிய புள்ளி விவரங்கள்,
விரல் ரேகை பதிவுகள் ஆகியவற்றைக் கணக்கிட்டு பொறி
முறையில் வைத்து வரும் பணி முடிவடைந்துள்ளது. இப்
மாநிலத்திலுள்ள காவல் நிலையங்கள் அனைத்திற்கும் அன்
றாடம் செய்தி வழங்கும் நடைமுறை 1-2-1975 முதல்
தொடங்கப்பட்டது. குற்ற நிகழ்வுகளையும் குற்றவாளி
களையும் விரைவில் கண்டுபிடிக்க மாநிலம் முழுவதிலும்
காவல் துறையினருக்கு இது மிகவும் பயனுள்ளதாய் இருக்கும்.
தேசிய காவல் துறைக் கணக்கீட்டுப் பொறி கணிப்பு முறைத்
திட்டத்தின் கீழ் ரூ. 74 இலட்சம் செலவில் டி.டி.சி. (T. D. C.)
316 கணக்கீட்டுப் பொறியை பெறவிருக்கும் மாநில காவல்
படை முதல் அணியில் தமிழ்நாடும் இடம் பெற்றுள்ளது.
திருவாளர்கள் எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேசன் ஆப் இந்தியா
லிமிடெட் என்னும் நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒர் உடன்
பாட்டின்படி, அந்த நிறுவனம் இரண்டு கட்டமாக கணக்கீட்டுப்
பொறியினை வழங்கி இருக்கிறது. முதல் கட்டம் தொடர்
பான இயந்திரங்கள் வழங்கப்பட்டு விட்டன.
னைக்குட்படுத்தப்பட்டபின் இயங்கி வருகின்றன. இவை சோத
கட்டம் தொடர்பான முதற்பகுதி இயந்திரங்கள் இரண்டாவது
ஆண்டில் வழங்கப்பட்டன. இரண்டாவது கட்டம் இந்த
பகுதி சம்பந்தப்பட்ட இயந்திரம் இரண்டாம்
படலாம். இவ்வாண்டிறுதன் வழங்கப்

30. புதிய மோட்டார் வண்டிகள் வழங்க ஒப்புதல் சென்னை
குற்றப் புலனாய்வுத் துறைக்கு (தனிப்பிரிவு) ஆறு அம்பாசிடர்
மோட்டார் வண்டிகளை வாங்க அரசு உள்துறையின் 5-6-1979
ஆம் நாளிட்ட 1400 ஆம் எண் அரசாணையில் ஒப்புதல் வழங்
கியது. இவ்வண்டிகள் 1979, நவம்பரில் வாங்கப்பட்டு வழங்
கப்பட்டுவிட்டன.

(ii) சென்னை மாநகர படைக்கலந்தாங்கிய சிறப்
காவல் படையினருக்கு எட்டு புதிய ஜீப்புகளை வாங்க அரசு
உள்துறையின் 4-3-1980 ஆம் நாளிட்ட 638 ஆம் எண்
அரசாணையில் ஒப்புதல் வழங்கியது. இவ்வண்டிகள் 1980
மார்ச்சில் வாங்கப்பட்டு வழங்கப்பட்டுவிட்டன.

(iii) சென்னை, குற்றப் புலனாய்வுத் துறை குற்றப்
பிரிவில் உள்ள தனிப் பிரிவிற்கு அம்பாசிடர் மோட்டார் வண்டி
ஒன்று வாங்க அரசு உள்துறையின் 28-2-1980 ஆம் நாளிட்ட
526 ஆம் எண் அரசாணையில் ஒப்புதல் வழங்கியது.
1980, ஏப்ரலில் வாங்கப்பட்டு வழங்கப்பட்டுவிட்டது. இது

(iv) துணைக்கோட்டத் தலைமையிடங்களுக்கு 3 ஜீப்பு
களை வழங்க அரசு உள்துறையின் 25-3-1980 ஆம் நாளிட்ட
924 ஆம் எண் அரசாணையில் ஒப்புதல் வழங்கியது இவ்
வண்டிகள் 1980 மே திங்களில்தான் வாங்கப்பட்டு வழங்கப்
பட்டுவிட்டன.





(v) குற்றப் புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவைச் சீர
மைப்பது தொடர்பாக கீழ்க்கண்ட வண்டிகளை வழங்க அரசு
உள்துறையின் 27-3-1980 ஆம் நாளிட்ட 972 ஆம் எண்
ணுள்ள அரசாணையில் ஒப்புதல் வழங்கியது:—

| வண்டிகளின் வகை. | வண்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| அம்பாசிடர் கார் .. .. .. .. | 1 |
| ஜீப்புகள் .. .. .. .. | 8 |
| வேன்கள் .. .. .. .. | 8 |
| மோட்டார் சைக்கிள்கள் .. .. .. | 2 |

இந்த வண்டிகள் இன்னும் வாங்கப்படவில்லை. இவ்வண்டிகளை
வாங்குவதற்கு நடப்பு நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருகிறது.

(vi) பெரியார் மாவட்டத்திற்கு ஒரு ஸ்டாண்டர்ட்-20
வண்டியையும் ஒரு அம்பாசிடர் வண்டியையும் வாங்க, அரசு
உள்துறையின் அரசாணையிலும் 13-9-1977 ஆம் நாளிட்ட
2305 ஆம் எண் அரசாணையிலும் 23-2-1980 ஆம் நாளிட்ட
504 ஆம் எண் அரசாணையிலும் ஒப்புதல் வழங்கியது. இவ்
வண்டிகள் இன்னும் வாங்கப்படவில்லை. இவற்றை வாங்கு
வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(vii) சென்னை காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல்
சட்டம்-ஒழுங்கு ஆயுதம் தாங்கிய காவல் படையினருக்காக
3 அம்பாசிடர் வண்டிகள், 4 மோட்டார் சைக்கிள்கள், 4
வேன்கள் 5 லாரிகள் ஆகியவற்றை வாங்க அரசு உள்துறையின்
27-3-1980 ஆம் நாளிட்ட 959 ஆம் எண் அரசாணையில்
ஒப்புதல் வழங்கியது 3 அம்பாசிடர் வண்டிகளும் 4 மோட்டார்
சைக்கிள்களும் 1980 மே திங்களில் வாங்கப்பட்டு வழங்கப்பட்
டன. நடப்பு நிதி ஆண்டில் 4 வேன்கள் 5 லாரிகள் ஆகிய
வற்றை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(viii) செயல்படுத்தும் பிரிவுக்கு கீழ்க்கண்ட வண்டி
களை வாங்க அரசு உள்துறையின் (காவல்-1) 15-12-1979
ஆம் நாளிட்ட 3075 ஆம் எண்ணுள்ள அரசாணையில்
ஒப்புதல் வழங்கியது:—

| | |
|---|---|
| அம்பாசிடர் வண்டிகள் .. .. .. .. | 2 |
| ஜீப்புகள் .. .. .. .. | 1 |
| மோட்டார் சைக்கிள்கள் .. .. .. | 2 |
| வேன்கள் .. .. .. .. | 42 |

கொள்கையில் மாற்றம் ஏற்பட்டதால் இந்த
மறுவிலக்கு வண்டிகள் வாங்கப்படவில்லை.

31. போக்குவரத்துப் பணிக்களரி—பயிற்சிப்பள்ளி, ஆவடி.

தமிழ்நாடு காவல் துறை ஆணைக்குழுவின் பரிவுரையின் அடிப்படையில், சென்னை மாநகரக் காவல் படைக்கும் ஆயுதந்தாங்கிய காவல் அணிக்கும் பயன்படும் விதத்தில் ஆவடியில் போக்குவரத்துப் பணிக்களரி—பயிற்சிப்பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. இப்பள்ளி 1975 டிசம்பர் திங்கள் 20-ஆம் தேதியிலிருந்து இயங்கி வருகிறது.

(ii) எல்லா சரகத் தலைமையிடங்களிலும் இதுபோன்ற பணிக்களரிகள் தொடங்குவது குறித்த செயற்குறிப்பு கூட இப்போது பரிசீலனையில் உள்ளது.

32. தமிழ்நாடு காவலர் நல நிதி.

காவல் துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெறாப் பணி யாளர்களுக்கு, இறப்பு, பிணி குறித்து செலவுக்காக நிதி உதவி குழந்தைகளுக்குப் படிப்புதவி, ஏனைய நல உதவி, பொழுது போக்கு வசதி ஆகிய உதவிகள் செய்து கொடுப்பதற்காக ஏற் படுத்தப்பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதி தொடர்ந்து செவ் விய முறையில் செயல்பட்டு வருகிறது. காவல் துறை யில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் மன முவந்து கொடுக்கும் நன்கொடைகள் மூலமும், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து பெறும் நன்கொடைகள் மூலமும் இந்நிதிக்குத் தொகை திரட்டப்படுகிறது. 1971-72 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு நிதி ஆண்டும் ஒரு மொத்த மானிய மாக ரூ. 1.5 இலட்சம் ரூபாயை அரசும் இந்நிதிக்கு வழங்கி வருகிறது.

33. தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு விழா படிப்புதவித் தொகை நிதி.

தமிழ்நாடு காவலர் நல நிதியைத் தவிர தமிழ்நாட்டு காவல் துறை நூற்றாண்டு விழா படிப்புதவித் தொகை நிதி யும் உள்ளது. காவல் துறை அரசிதழ் பதிவுறா நிர்வாக அதிகாரிகளின் பிள்ளைகளில் தகுதியுடையோர்க்குக் கல்லூரி களில் மேல்படிப்பும், தொழில் நுட்பக் கல்வியும் கற்க ஆண்டு தோறும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. தவிப்பட்டவர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் மூலம் இந்நிதிக்குத் தொகை திரட்டப்படுகிறது. 1978-79-ஆம் ஆண்டு படிப்புதவித் தொகை வழங்குவதற்காக இந்நிதியிலிருந்து 28,000 ரூபாய் செலவிடப்பட்டது.



34. தமிழ்நாடு காவலர் குடும்ப நல நிறுவனம்.

தமிழ்நாடு காவலர் குடும்ப நல நிறுவனம் தொடர்ந்து
நற்பணியாற்றி வருகிறது. இந்த அமைப்பு வகுத்த பல்வேறு
திட்டங்களின்கீழ், நூற்பு, தையல் வேலை, பாய்முடைதல்,
ஜமுக்காளம், நெசவு, தீக்குச்சி செய்தல், பட்டாசு வெடி
மருந்து வைப்பதற்கான உறைகள் செய்தல் பீடி சுற்றுதல்,
காகித உறை செய்தல், புத்தகம் கட்டுதல், பாற்பண்ணை.
கோழிப் பண்ணை, கைவினைத் தொழில்கள், பனியன்கள்
தயாரித்தல் முதலிய பல்வேறு தொழில்கள் காவலர் குடும்பங்
களின் வருவாயைத் தொடர்ந்து பெருக்குவதில் பெரிதும் துணை
புரிகின்றன.

35. ஊர்க் காவல் படை.

இந்தத் தொண்டு நிறுவனம், காவல் துறையினருக்குத்
தொடர்ந்து துணைப் படையாகத் திறம்படச் செயல்பட்டு
வருகிறது. தமிழ் நாட்டிலுள்ள 96 அணிகளில் 22 அணிகள்
சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சிய 74 அணிகள் மாவட்
டங்களில் 57 இடங்களில் அமைந்துள்ளன. ஊர்க்காவல் படை
மகளிர் அணிகள் 5 உள்ளன. அவற்றில் 3 அணிகள் சென்னை
நகரிலும், 2 அணிகள் அணியில் பதி பேர் விதம் நான்கு மாவட்
டத் தலைமை இடங்களான திருச்சிராப்பள்ளி, மதுரை,
கோயம்புத்தூர், நாகர்கோயில் ஆகிய இடங்களிலும் அமைந்
துள்ளன. இந்த அறிக்கை ஆண்டில், போக்குவரத்தை முறைப்
படுத்தல், இரவு நேரத்தில் ரோந்து பணி, வெள்ள நிவாரணப்
பணி, சமூகப் பணி ஆகியவை தொடர்பான கடமைகளைக்
கவனிப்பதுடன் திருவிழாக்கள் ஏனைய பொது நிகழ்ச்சிகளில்
பாதுகாப்புப் பணி இவற்றிலும் காவல் துறையினர்
போராட்டம் நடத்தும்போதும் ஊர்க்காவல் படையினரின் பணி
பயன்படுத்தப்பட்டது. முதலுதவி, தீயணைப்புப் பணி,
உள்நாட்டுப் பாதுகாப்பு ஆகிய பணிகளிலும் அவர்களுக்குப்
பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த அறிக்கை ஆண்டில் இம்
மாநிலத்தில், புதுக்கோட்டை, அறந்தாங்கி, திருச்சிராப்பள்ளி
குளித்தலை, நாகப்பட்டினம், வேதாரண்யம், இராமநாதபுரம்,
மண்டபம், சிதம்பரம், மதுராந்தகம், பெரம்பூர்,
சைதாப்பேட்டை போன்ற வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட
12 இடங்களில் கிராமப் பகுதி ஊர்க்காவல்படையை அமைப்
பதற்கு அரசு அனுமதி வழங்கியது. தமிழ் நாட்டில் அண்மைக்
காலத்தில் புயல் வீசிய போதும் இதற்கு முன் கண்டிராத அள
விற்குப் பெருமழை பெய்தபோதும், இந்த கிராமப் பகுதி
ஊர்க்காவல் படையினர், நற்பணி புரிந்தனர், நாடாளுமன்ற
இடைத்தேர்தல் 1980-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3-ஆம்
தேதியன்றும், 1980-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6-ஆம் தேதி
யன்றும் நடைபெற்றது. அப்போது காவல் துறைப் பணி
யாளர்களுடன் சேர்ந்து இந்த ஊர்க்காவல் படையினரும்
பந்தோபஸ்து பணிகளைச் செவ்வனே கவனித்தனர்.

## 36. போக்குவரத்து நெறிக் காவல் அமைப்பு.

''சென்னை மாநகரக் காவலர் போக்குவரத்து நெறிக் காவலர் அமைப்பு'' 1978 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அது முற்றிலும் தானாக முன் வந்து செயல்படும் அமைப்பாக உள்ளது. சென்னையில் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாளில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தலைமை வகித்த ஒரு நிகழ்ச்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்த அமைப்பு தொடங்கி வைக்கப்பட்டது. இந்த அமைப்பில் முதன்மைப் பாதுகாவலர் ஒருவர், துணை முதன்மைப் பாதுகாவலர் ஒருவர், போக்குவரத்துப் பாது காவலர்கள் 70 பேர் ஆகியோர் உள்ளனர். உடற்பயிற்சி போக்கு வரத்துச் சட்டங்கள், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றில் 10 நாட்களுக்கு அவர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. போக்குவரத்துப் பாதுகாப்பைக் கவனிப்பதில் காவலர்களுக்கு உதவி செய்தல், பொது மக்களுடனும் அதிகாரிகளுடனும் ஒத்துழைத்தல், விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பது, போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவது குறித்துச் சிறந்த திட்டம் ஒன்றை வகுப்பதும், சாலையில் செல்பவர் களுக்குப் பாதுகாப்பு பற்றி எடுத்துரைப்பதும் இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்களாகும். முக்கிய பிரமுகர்களின் வருகையின் பொழுது நடக்கும் பெருங் கூட்டங்கள், கிரிக்கெட் விளையாட்டின் பொழுது பாதுகாப்பு ஏற்பாடு செய்தல் போன்ற சமயங் களில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதில் அவர்கள் இதுவரை மிகச் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளனர்.

## 37. காவலர் வீட்டு வசதித் திட்டம்.

காவல் துறை சார் நிலைப் பணியாளர்களில் 80 சதவிகித் தினருக்கு வீட்டு வசதி அளிக்கும் நோக்கத்தோடு, 1955-56 ஆம் ஆண்டில் காவலர் வீட்டு வசதித் திட்டம் தொடங்கப்பட்டது. இதுவரை 46 சதவீதத்தினருக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசு 1978-79 ஆம் ஆண்டுக்குரிய கடன் உதவி திட்டத்தின் கீழ் 36.68 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. இந்திய அரசின் எழாம் நிதிக் குழுமமும் காவலர் வீட்டு வசதித் திட்டத்திற்காக 1979-84 ஆம் ஆண்டுக்கு ரூ. 675 இலட்சம் ஒதுக்கியுள்ளது. காவல் துறை பணியாளர் களுக்கு அண்ணா நகர், மயிலாப்பூர் (சென்னை மாநகர்), பாளையங் கோட்டை (திருநெல்வேலி மாவட்டம்) புதியம்புத்தூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஆகிய இடங்களில் ரூ. 70.87 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு 1978-79 ஆம் ஆண்டில் அனுமதி அளித்தது. இந்தப் பணிகள் நடந்தேறி வருகின்றன. இப்பணிகள் முடிவடைந்த பின்னர் அங்கு 3 இன்ஸ்பெக்டர்கள் 7 சப்-இன்ஸ்பெக்டர்கள் 25 தலைமைக் காவலர்கள் 232 காவலர்கள் ஆகியோர் குடியிருப்பு வசதி பெறுவர்.



1979-80 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் 30 இடங் களிலும் செங்கற்பட்டு கிழக்கு, செங்கற்பட்டு மேற்கு, தஞ்சாவூர் கிழக்கு, தஞ்சாவூர் மேற்கு, மதுரை (தெற்கு), இராமநாத புரம் மேற்கு, இராமநாதபுரம் கிழக்கு, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் நகர்புறம் ஆகிய இடங்களில் ரூ. 3,96,27,000 மதிப்பீட்டுச் செலவில் குடியிருப்புகள் கட்டி 3 காவல்துறை டெபுடி சூப்பிரண்டுகள், 11 இன்ஸ்பெக்டர்கள், 45 சப்-இன்ஸ் பெக்டர்கள் 83 தலைமை காவலர்கள் 1,109 காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்பு வசதிகள் அளிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது; இப்பணியை நிறைவேற்ற விரைந்து நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்துடன் சேலம் மாவட்டத்தில் அன்னதானப்பட்டி, தருமபுரி, தஞ்சாவூர் கிழக்கு மாவட்டத்தில் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ. 217.69 இலட்சம் ஒதுக்கி அரசு உள்துறையின் 21—3—1980 ஆம் நாளிட்ட 850 ஆம் ஆணையில் அனுமதி வழங்கியுள்ளது.

பொதுப்பணித்துறையும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் இப்பணிகளை மேற்கொண்டுள்ளன.

## 38. பதக்கங்கள்:—

தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 காவல்துறை அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் 1979 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரின் காவல் துறையினரின் பதக்கங்களும் காவலர் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

1979 ஆம் ஆண்டில் 34 காவல் அதிகாரிகளுக்கும், காவலர் களுக்கும் சிறந்த சேவைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கங்கள் வழங்கப்பட்டன. காலஞ்சென்ற திரு. பி. பெருமாள் சாமி, காவலர் 5,756 (சென்னை மாநகரக் காவல் படை) துணி வுடைமையைப் பாராட்டி, அவரது மரணத்திற்குப் பின் முத லமைச்சரின் காவலர் பதக்கத்துடன் ரொக்கப் பரிசு 3,000 ரூபாயும் வழங்கப்பட்டன.

## 39. விளையாட்டுப் போட்டிகள்:—

1979 ஆம் ஆண்டு மாநிலக் காவல் உடற் பயிற்சி, நீச்சல் போட்டி, மாநிலக் காவல் பணிப் போட்டி, சரகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி ஆகியவை தமிழ்நாடு காவல் துறையினரால் நடத்தப் பட்டன. லக்னோவில் 26-2-1979 முதல் 5-3-1979 வரை நடைபெற்ற அனைத்து இந்திய காவலர் விளையாட்டுப் போட்டிகளிலும் 3-8-1979 முதல் 6-8-1979 வரையில் நடைபெற்ற நீச்சல் போட்டியிலும் தமிழ் நாட்டைச் சேர்ந்த காவலர் பங்கு கொண்டனர். பூனாவில் 20-2-1980 முதல் 27-2-1980 வரை நடை பெற்ற அனைத்து

இந்திய 29 காவலர் விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு பா நிலக்
காவல் பணிப் போட்டிக் குழுவினர் பங்கேற்றனர். சுப்பிரமணி
யம் (முதல் நிலைக் காவலர் 1212), 100, 200 மீட்டர் ஓட்டப்
பந்தயங்களில் வெற்றி பெற்று தங்க பதக்கங்களைப் பெற்றார்.
தட்சிணாமூர்த்தி (ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்), "டிரிபில் ஜம்ப்".
பந்தயத்தில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.
சண்முகம் (முதல் நிலைக் காவலர் 1,241), "போல்வால்ட்
பந்தயத்தில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.
திரு. சுப்பிரமணியம் (முதல்நிலை காவலர் 1212) அவரது சிறப்பு
மிக்க விளையாட்டிற்காக ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டராக பதவி
உயர்வு அளிக்கப்பட்டார். அவர் தற்பொழுது மாஸ்கோவில்
நடைபெறும் 1980ஆம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டுப்
போட்டியில் இந்திய சார்பில் பங்கு கொள்கிறார்.

40. மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதித்
துறைகளை மீறி நடப்பவர்களைக் கண்டுபிடிக்கவும் குற்றவாளி
களைக் கைது செய்யவும் தமிழ் நாட்டில் உள்ள 19 காவல்
மாவட்டங்களில் 6 மாவட்டங்களில் அதாவது கோவை (நகரப்
புறம்), மதுரை (கிழக்கு), தென்னாற்காடு, தஞ்சாவூர் (மேற்கு),
திருச்சி, நெல்லை ஆகிய மாவட்டங்களில் சுற்றுக் காவல் படை
யினர் செயல்பட்டு வருகின்றனர். சுற்றுக் காவல் படை
ஒவ்வொன்றிலும் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஒருவர், சப்-
இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் இருவர், காவலர்
இருவர் உள்ளனர். அது போன்ற சுற்றுக் காவல் படைகள்,
செங்கல்பட்டு கிழக்கு, வட ஆற்காடு, இராமநாதபுரம்
மேற்கு, கன்னியாகுமரி, சேலம், தருமபுரி, நீலகிரி ஆகிய
ஏழு மாவட்டங்களில் 1979 செப்டம்பர் முதல் ஏற்படுத்தப்
பட்டன. இவ்வாறாக, 20 காவல் துறை மாவட்டங்களில் 13
மாவட்டங்களில், சுற்றுக் காவல் படையினர் தற்போது செயல்
பட்டு வருகின்றனர்.

41. தேர்தல்கள்.—நாகப்பட்டினம், தஞ்சாவூர் நாடாளுமன்ற
தொகுதிகளுக்குரிய துணைத் தேர்தல்கள் 17-6-1979 அன்று
நடைபெற்றன. நாடாளுமன்ற மக்கள் அவைக்குரிய இடைத்
தேர்தல்கள் 3-1-1980, 6-1-1980 ஆகிய நாட்களில் நடை
பெற்றன. விரிவான அளவில் திறம்பட பாதுகாப்பு ஏற்பாடுகளை
மேற்கொண்டதனால் தேர்தல்கள் அமைதியான முறையில் நடை
பெற்றன. இந்த ஆண்டு, பயணம் செய்ய வேண்டியிருந்த
தொலைவு மிகவும் குறைவு. மேலும், அவர்கள் மாவட்டங்
களுக்குள்ளேயோ அண்டை மாவட்டங்களுக்கோதான் சென்று
வர வேண்டியிருந்தது.

42. காவலர்—பொது மக்கள் நல்லுறவு.—

குற்றங்கள் நிகழாவண்ணம் தடுத்தல்- குற்றங்களைக் கண்டு
பிடித்தல் பணியில் மட்டுமல்லாமல் சட்டம் - ஒழுங்கினை நிலை



நாட்டுவதிலும் காவலர் செவ்வனே பணியாற்ற மக்களாட்சியில்
காவலருக்கும் பொது மக்களுக்கும் இடையே நல்லுறவு இருப்பது
மிகவும் இன்றியமையாததாகும்.

(ii) எல்லா வகையிலும் சிறந்த காவலர் ஒருவரை ஊரே
போற்றும். அவரே பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும்
சிறந்த அதிகாரி ஆவார். இது குறித்து காவலர் மனதில் பொறுப்
புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், அடிப்படை பணியிருப்பு
பயிற்சி காலமும் நீட்டிக்கப்பட்டிருப்பதோடு இதில் அதிக
நாட்டமும் தற்போது செலுத்தப்படுகிறது.

(iii) பொது மக்கள் தொடர்பு என்பது, இன்றைய
நிலையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. 48,892 பேரையும்
பரந்த அளவில் அதிகாரங்களையும் கொண்டு சமூகத்தின்
மூலை முடுக்குகளிலெல்லாம் பரவியிருக்கும் காவல்துறைப்
போன்ற பெரிய துறை எதுவும் பொது மக்களுடன் நல்லுறவு
வைத்திருப்பதில் வல்லுநரின் ஆலோசனையின்றிச் செயல்பட
முடியாது. சிறுவர் சங்கங்கள், சிறுவர் போக்குவரத்துப் பூங்காக்
கள், போக்குவரத்து வாகனங்கள், பொருட்காட்சிகளில்
காவல் துறை அரங்குகள் போன்ற தனி முயற்சிகள் மூலம்
காவலர் - பொது மக்களிடையே நிலவி வரும் நல்லுறவை மேம்
படுத்தப் பாடுபடுவது உண்மையே. ஆனாலும், இவற்றால்
இப்பிரச்சினையை ஓரளவிற்குத் தான் அணுக முடிகிறது. இவை
யாவும், ஒரு நூல் அறிவியலிலும் அதனையொட்டிய முறை
களிலும் இருந்து எழுதுவதாயில்லை. தமிழ் நாட்டில் காவல்
துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே அவ்வப்போது
விளையாட்டுப் போட்டிகள் முதற்சண் நடத்தப்பட்டன. இவ்
வகைப் போட்டிகள், காவல் துறையினர்-பொது மக்களிடையே
நிலவ வந்த நல்லுறவு பெரும் வளருவதற்கு உதவியதோடு
விளையாட்டு வீரர்களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றலை
வெளிப்படுத்தின; அப்படிப்பட்ட விளையாட்டு வீரர் ஒருவர்
தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் அளவிற்கு
உயர்ந்துள்ளார். ஆகவே காவல் துறை அலுவலகத்தில் பொது
மக்கள் நல்லுறவு ஆலோசகர் பதவிகள் இரண்டினை ஏற்படுத்து
மாறு அரசுக்கு எழுதப்பட்டு வருகிறது.

43. காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப் பட்ட
சலுகைகள்.—(i) காவல் துறையின் ஒழுங்குணர்வைக் கட்டிக்
காக்கவும் காவலர்களிடமுள்ள தைரியத்தையும் நம்பிக்கை
முயர்ச்சியையும் படிப்படியாக உயர்த்தவும் வேண்டி, கடமையே
பெரிதென மதித்து உயிரையும் பொருட்படுத்தாது காவலர்
வீரதீரச் செயல்களைச் செய்கின்ற போது இறந்துவிட நேரிட்டால்
அவரை நம்பியிருப்பவர்களுக்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள்
குடும்ப நலத் திட்டத்தின் கீழ் ஒரு மொத்தத் தொகை கொடுப்ப

துடன், தனியாக ரூ. 10,000 கருணை மானியமும், காயமுற்றோருக்கு காயத்தின் தன்மைக்கேற்ப ரூ. 1,000 முதல் 3,000 ரூபாயும், காயமடைந்த காரணத்தால் நிரந்தரமாக பணியாற்ற இயலாதோருக்கு ரூ. 5,000 ரூபாயும் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த சலுகையை 18-4-1979 முதல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(ii) வாராந்திர விடுப்பில் பணியாற்றும் தலைமைக் காவலர்கள், காவலர்களுக்கு மிகை நேர ஊதியமாக நாளொன்றுக்கு ரூ. 2 கொடுக்கப்பட்டது; இத்தொகை ரூ. 7 ஆக உயர்த்தி அரசு 5-5-1979 அன்று ஆணை வழங்கியுள்ளது.

(iii) காவல் துறை இன்ஸ்பெக்டர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர்கள் உதவிசப்இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருக்கு நாளொன்றுக்கு கொடுக்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ. 4.50 இலிருந்து ரூ. 6 ஆகவும் அதிகரிக்கப்பட்டது. தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோருக்கு நாளொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ. 3 இலிருந்து ரூ. 4.50 ஆகவும் தமிழ் நாடு சிறப்புக் காவல் அணியைச் சேர்ந்த ஹவில்தார்கள், நாயக்குகள், லான்ஸ் நாயக்குகள் காவலர்கள் ஆகியோருக்குத் திங்கள் ஒன்றுக்கு வழங்கப்படும் உணவுப்படி ரூ.36 இருந்து ரூ.60 ஆக உயர்த்தி அரசு 19-5-1979 அன்று ஆணை வழங்கியுள்ளது.

(iv) காவலர் கடமையைச் செய்யும்போது அவருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என்பதைக் கருதி, அனைத்துப் பிரிவினைச் சேர்ந்த காவலர் முதல் ஆய்வாளர் உள்ளிட்ட அனைத்து காவல் துறையினருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20-ஐ [illegible] படி 1979-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

(v) அண்மையில் காவலர்கள் மேற்கொண்ட கிளர்ச்சியில் கலந்து கொள்ளாமல் கடமையே உயிர் நாடியாகக் கருதி பற்றுறுதியோடு பணியாற்றி வந்த காவல் துறைப் பணியாளர்கள் அனைவருக்கும் காவலர் முதல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் முன்கூட்டியே ஓர் ஊதிய உயர்வு கொடுக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

41. காவல் துறையினர் எண்ணிக்கையை உயர்த்துதல்.

(a) காவல் துறையின் திறமையை மேலும் வளர்த்து அதன் பெருமையைக் காக்கும் பொருட்டு அத் துறையைச் சீரமைத்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்று அரசு அத்துறையை அலுவல் வகையில் 1-6-1979 முதல் மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளது. மது விலக்குச் சட்டம், வியாபாரத் [illegible] சட்டம், [illegible] நடைச் சட்டம், சினிமா, உரிமங்கள் [illegible] சட்டம், அவ்வப்போது பிறப்பிக்கப்பட்டு செயல்படுத்துவதற்கென காவல் துறையிடம் ஒப்படைக்கப்படக்கூடிய ஏனைய சமூக நலச் சட்டம்



ஆகிய சட்டங்களைச் செவ்வனே செயல்படுத்துவதற்காக, காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் செயல்படுத்துதல் பதவி ஏற்படுத்தப்பட்டது. காவல் துறை 22-4-1980 முதல் நிரப்பப்படாமல் காலியாக வைக்கப்பட்டிருந்த காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (செயலாக்கம்) பதவி தற்பொழுது நிரப்பப்பட்டு விட்டது.

(b) காவல் துறை வீட்டு வசதித் திட்டம் பண்டகசாலைப் பொருட்களை கொள்முதல் செய்து, அவற்றைக் கொண்டு செல்லுதல் கொண்டுவருதல், மோட்டார் வண்டிகள் வாங்குதல், காவல் படை முழுவதற்கும் தொடர்பான ஏனையவை உட்பட நலத் திட்டங்களையும் காவலர் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு தனிக் காவல் படை, ஊர்க்காவல் படை அமைப்பினை மேம்படுத்தி அவர்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளையும் நெருக்கடி நிலையின் போது செய்ய வேண்டிய பணிகளையும் கவனிக்க வேண்டிய, காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (படைக்கலந் தாங்கிய காவல் படை) பதவிப் பெயரில் இன்னொரு பதவி உள்ளது.

(c) காவல் துறையின் பொது அலுவல்களான சட்டம் ஒழுங்கினைப் பேணுதல், குற்றங்கள் நிகழா வண்ணம் தடுத்தல், குற்றங்களை கண்டுபிடித்தல், போக்குவரத்தை முறைப்படுத்துதல், பொதுமக்களுக்குத் தொண்டு புரிவது தொடர்பான ஏனைய பல்வேறு பணிகளைக் கவனிக்க வேண்டிய, காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (குற்றம், சட்டம் - ஒழுங்கு) பதவிப் பெயரில் மற்றொரு பதவி உள்ளது. இப்பணிகளை நிறைவேற்றி வரும் சென்னை மாநகரக் காவல் படையும் இம்மாநிலத்தில் உள்ள மாவட்டக் காவல் படையும் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. சென்னை மாநகர படைக்கலந் தாங்கிய சேமக் காவல் படையும் மாவட்டங்களில் உள்ள படைக்கலந் தாங்கிய சேமக் காவல் படைகளும் இவரது கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

(d) காவல் துறை கூடுதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் (திட்டமிடுதல் — ஒருங்கிணைப்பு) பதவி, காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவியாக உயர்த்தப்பட்டுள்ளது. அவர் திட்டமிடுதல் ஒருங்கிணைப்பு பணியை கவனித்து வருகிறார். காவல் துறை வானொலிப் பிரிவு, புள்ளி விவரப் பிரிவு ஆகியவை இவரது கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

(e) மேற்சொன்ன நான்கு பிரிவுகளிலும் உள்ள பணிகளை ஒருங்கிணைக்கவும், தனிப் பிரிவுகள் சிலவற்றை நேரடியாக மேற்பார்வையிடவும், பிரிவுகளுக்குரிய கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்கவும் இருக்கக் கூடிய பணி வசதிகள், தொழில் நுட்ப [illegible] அளவும் காவல் படையை நவீனப் படுத்தவும்

காவல் துறையினரின் தலைவராகப் பணியாற்றவும் அரசுடன் தொடர்பு கொள்ளவும் காவல் துறை டைரக்டர்-ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதும் அதன்படி வரவு-செலவு செய்து வருவதைக் கவனித்துக் கொள்வதும் இவருடைய கடமையாகும்.

**45. காவலர் மாவட்டங்கள், காவல் நிலையங்கள் கூடுதல் காவல் படை ஏற்படுத்தல்.**

(i) ஆய்வு ஆண்டில் கோயம்புத்தூர் (கிராமப்புற) காவலர் மாவட்டம், 17-9-1979 முதல் கோயம்புத்தூர் (கிராமப்புற) மாவட்டம் பெரியார் மாவட்டம், என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

(ii) ஆய்வு ஆண்டில் சென்னை மாநகரில் சேத்துப்பட்டிலும், சேலம் மாவட்டத்தில் கோயில்புதூரிலும், பெரியார் மாவட்டத்தில் மொடக்குறிச்சியிலும் நான்கு காவல் நிலையங்களைப் புதிதாக ஏற்படுத்தவும், வட ஆர்க்காடு மாவட்டம், இராணிப்பேட்டை 'சிப்காட்' தொழில் வளாகத்தில் ஒன்றும், தருமபுரியில் 'சிப்காட்' தொழில் வளாகத்தில் மற்றொன்றுமாக இரு புறக் காவல் நிலையங்களை ஏற்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டது.

(iii) குற்றம் நிகழா வண்ணம் தடுக்க, சென்னை மாநகரின் முக்கியமான பகுதிகளில் பந்தோபஸ்து-ரோந்துப் பணிகளில் 350 முன்னாள் படைவீரர்களை வேலைக்கமர்த்திக் கொள்ளும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம், மாவட்டத் தலைமையிடங்களிலும், வெளியூர்களிலுள்ள நகரங்களிலும் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

(iv) மேற்சொன்ன இனம் (i) முதல் இனம் (ii) வரையில் உள்ள பணிகளுக்காகவும், ஏனைய செயல் நோக்கங்களுக்காகவும் காவல் துறையினர் எண்ணிக்கையை உயர்த்துவதற்காக, 1979 ஆம் ஆண்டிலும் 1-1-1980 முதல் 31-3-1980 வரையிலான கால அளவிலும் கூடுதலாக அனுமதிக்கப்பட்ட நிர்வாகப் பணியாளர்களின் விவரங்கள், இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(v) 1979-ஆம் ஆண்டிலும் 1-1-1980 முதல் 31-3-1980 வரையிலான கால அளவிலும் கூடுதலாக அனுமதிக்கப்பட்ட அமைச்சுப் பணியாளர்களின் விவரங்கள், இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



**46. பொது.**

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள காவல் படையில் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பது, வருந்தத் தக்கது. இதனை அடுத்து தமிழ்நாடு காவல் படையிலும் கிளர்ச்சி ஏற்பட்டது. எனினும், தெளிவான கோரிக்கை இன்றி இக்கிளர்ச்சி எழுந்தது எனலாம். காவல் துறையில் உள்ள காவலர்கள் முதல் இன்ஸ்பெக்டர் வரை எல்லாப் பதவித் தரங்களுக்கும் ஒரே சங்கம் இருக்க வேண்டுமா, பதவி வாரியாகச் சங்கம் இருக்க வேண்டுமா என்பதே கிளர்ச்சிக்கான முக்கிய காரணமாகும். காவல் துறையிலுள்ள அதிகாரிகளும் பெரும்பான்மையானவர்களும் தங்கள் பதவிக்குரிய பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து, நற்பணி ஆற்றியதால் இக்கிளர்ச்சி சிதறிய நீர்த்துளிகள் போல பிசுபிசுத்துப் போய் விட்டது. காவல் துறையினருக்கு பல வகையில் இடர் பாடுகள் ஏற்பட்ட போதிலும், இவ்வாண்டு சட்டம்-ஒழுங்கு குறைந்து விடாமல் அமைதி நிலவச் செய்து தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித் தந்தனர்.

## இணைப்பு I.

1980 ஜூலை 25]

இன்றைய நிலவரப்படி நிர்வாகக் காவல் பணியாளர் எண்ணிக்கை

| | |
|---|---|
| காவல்துறை டைரக்டர் ஜெனரல் .. .. | 1 |
| காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் .. .. | 3+1 |
| கூடுதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் .. .. .. | .. |
| காவல்துறை கமிஷனர் .. .. .. .. | 1 |
| டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் .. .. | 14 |
| காவல்துறை சூப்பிரண்டு .. .. .. | 39 |
| டெபுடி கமிஷனர், ஆயுதம் தாங்கிய சேமக்காவற் படை. | 1 |
| காவல் துறை இணை சூப்பிரண்டு .. .. .. | 5 |
| தளவாய்கள் .. .. .. .. .. | 5 |
| கூடுதல் சூப்பிரண்டு, ஆயுதம் தாங்கிய சேமக்காவற் படை. | 1 |
| துணை தளவாய்கள் .. .. .. .. | 3 |
| உதவி சூப்பிரண்டுகள் .. .. .. .. | 12 |
| டெபுடி சூப்பிரண்டு— நிலை I .. .. | 194 |
| டெபுடி சூப்பிரண்டு—நிலை II .. .. .. | 27 |
| டெபுடி சூப்பிரண்டு—நிலை III .. .. .. | 21 |
| இன்ஸ்பெக்டர்/அட்சுடண்ட் இன்ஸ்பெக்டர் .. | 725 |
| ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 83 |
| டெபுடி இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 248 |
| சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. .. | 2,306 |
| ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 304 |



[1980 ஜூலை 25

| | |
|---|---|
| உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 831 |
| ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. | 160 |
| தலைமைக் காவலர் .. .. .. .. | 4,578 |
| ஹவில்தார் .. .. .. .. .. | 459 |
| நாயக்குகள் .. .. .. .. .. | 416 |
| லான்சு நாயக்குகள் .. .. .. .. | 377 |
| காவலர்—நிலை I .. .. .. .. | 4,517 |
| காவலர்— நிலை II .. .. .. .. | 33,472 |
| பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 22 |
| பெண் தலைமைக் காவலர்கள் .. .. .. | 4 |
| பெண் காவலர்கள் .. .. .. .. | 62 |
| மொத்தம் .. | 48,892 |

## இணைப்பு II

1979 மற்றும் 1980 (31-3-1980 வரைக்கும்) வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட கூடுதல் பணியாளர்களின் எண்ணிக்கை.

| | நிர்வாகப் பணியாளர்கள். | 1979 | 1980 (31-3-1980 வரைக்கும்). |
|---|---|---|---|
| 1 | டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் | 1 | .. |
| 2 | இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ். | 2 | 1 |
| 3 | சூப்பிரன்டென்ட் .. .. | 3 | 1 |
| 4 | துணை சூப்பிரன்டென்ட் .. | 4 | 2 |
| 5 | துணைத் தளவாய் .. | 1 | |

| | | | |
|---|---|---|---|
| 6 | காவல் துறை இன்ஸ்பெக்டர்கள் | 16 | 15 |
| 7 | ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் .. | 1 | 3 |
| 8 | துணை இன்ஸ்பெக்டர்கள் .. | 6 | 18 |
| 9 | சப்-இன்ஸ்பெக்டர்கள் (ரிசர்வ்) .. | 6 | 8 |
| 10 | சப்-இன்ஸ்பெக்டர்கள் .. | 136 | 107 |
| 11 | உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் .. | 7 | 10 |
| 12 | ரிசர்வ் அஸிஸ்டெண்ட் சப்-இன்ஸ்பெக்டர். | 5 | 6 |
| 13 | தலைமைக் காவலர் .. | 120 | 131 |
| 14 | காவலர் (முதல் நிலை) .. | 6 | 69 |
| 15. | காவலர் (இரண்டாம் நிலை) .. | 503 | 570 |
| 16 | பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் .. | 18 | .. |
| 17. | கைவிரல் ரேகைப் பதிவு வல்லுநர். | .. | 31 |
| 18 | தொழில் நுட்ப அதிகாரி .. | .. | 4 |
| 10 | தொழில் நுட்ப உதவியாளர் .. | .. | 7 |
| 20 | புகைப்பட உதவியாளர் .. | .. | 1 |
| 21 | வானொலி மேற்பார்வையாளர் | .. | 7 |
| | | 835 | 991 |



| | அமைச்சுப் பணியாளர்கள். | 1979 | 1980 (31-3-1980 வரைக்கும்). |
|---|---|---|---|
| | | 2 | 1 |
| 1 | நேர்முக உதவியாளர் .. .. | 2 | 5 |
| 2. | கண்காணிப்பாளர் .. .. | 46 | 9 |
| 3. | உதவியாளர் .. .. .. | 49 | 31 |
| 4 | இளநிலை உதவியாளர் .. .. | .. | 1 |
| 5 | தட்டெழுத்து சுருக்கெழுத்தர் .. | 8 | .. |
| 6. | தட்டச்சர் .. .. .. | 8 | .. |
| 7 | பதிவு எழுத்தாளர் .. .. | | |
| | | 115 | 47 |

## இணைப்பு-III

[..8..ம்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## தமிழ்நாடு தீயணைப்புத் துறை 1979-80.

### ஆய்வுரை.

தமிழ்நாடு தீயணைப்புத்துறை 1967ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தனித்துறையாக இயங்கி வருகிறது. தமிழ் நாடு தீயணைப்புத் துறை அதன் அமைப்பில் நாட்டிலேயே பெரியது எனவும் மிகத் திறமை வாய்ந்த தீயணைப்புத் துறைகளில் ஒன்று எனவும் பெயர் பெற்றுச் செயல்பட்டு வருகிறது. மக்களின் உயிரையும், உடைமையையும் தீ விபத்துக்களிலிருந்தும் மற்றும் இதர இயற்கை இடர்களிலிருந்தும் காப்பாற்றுவதே தீயணைப்புத் துறையின் குறிக்கோளாகும், பொது மக்களுக்கு இத்துறையின் பணி எந்நேரத்திலும் கிடைக்கிறது.

2. தீ விபத்தைத் தடுப்பதும், தீயை அணைப்பதும், இத்துறையின் தலையாய பணியாயினும், மக்களின் நலனுக்காக அது வேறு பல வகைகளிலும் செயலாற்றுகிறது. உதாரணமாகச் சந்தைகள், திருவிழாக்கள் நடைபெறும் பொழுது தீத்தடுப்புப் பணிகளை மேற்கொள்வதும், இடிந்த கட்டிடங்களில் ஏற்பட்ட இடிபாடுகளிலிருந்தும், கிணறுகள், வெள்ளப்., ஆகியவற்றிலும் மற்ற விபத்துகளிலும் சிக்கிக்கொண்ட மக்களையும், விலங்குகளையும் காப்பாற்றும் சீரிய பணியையும் புரிந்து வருகிறது. மேலும், பெரிய நகரங்களில் நோயுற்றவர்கள் மற்றும் காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல நோயாளி வண்டிகள் வைத்து வரப்படுகின்றன. கொள்ளை நோய்கள் தோன்றிப் பரவும் காலங்களில் சுகாதாரத் துறைக்கு இத்துறை உதவுகிறது. தேர்தலின் போதும், கலவரங்களின் போதும், பந்தோபஸ்து வேலைகளை கவனிக்கவும் உதவி புரிய தீயணைப்புத் துறைப் பணியாளர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். மனிதாபிமான வகையில் அமைந்த மேற்கண்ட பணிகளைத் தவிர, தமிழ்நாடு பொதுமக்கள் கூடும் இடங்கள் சட்டத்தின் கீழும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழும் சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் கீழும் படைக்கலச் சட்டத்தின் கீழும், அவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழும் மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் முதலியவற்றின் கீழும் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்படவிருக்கிற இடங்களை ஆய்வு செய்வதிலும் இத்துறை ஈடுபடுகிறது.



### 3. பணியாளர் எண்ணிக்கை :

1980ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாளில் தீயணைப்புப் படையில் பணிபுரிந்த பணியாளர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 4. தீயணைப்பு நிலையங்கள் :

நமது மாநிலத்தில் 1980ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் 107 தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வந்தன. இதில் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை ஏற்படுத்தப்பட்ட மூன்று சிறிய தீயணைப்பு நிலையங்களும் அடங்கும். பின்னர், மேலும் ஐந்து சிறிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் நாளது தேதிவரையில் மொத்தமுள்ள தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை 112 ஆகும். இவற்றில் சென்னை நகரில் 14 தீயணைப்பு நிலையங்களும் மற்றவை வெளி நகரங்களிலுமாக இயங்கி வருகின்றன. அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மேலும் ஐந்து தீயணைப்பு நிலையங்கள் வட சென்னையில் உள்ள தண்டையார்பேட்டை, வ.உ.சி. நகர் ஆகிய இடங்களிலும், சேலம்-தருமபுரி, வட ஆற்காடு கோட்டத்தில் ராணிப்பேட்டை, ஒசூர், (சிப்காட்) தொழிற்பேட்டைகளிலும், மற்றும் தென் ஆற்காடு, செங்கற்பட்டு கோட்டத்தில் உளுந்தூர்பேட்டையிலும் ஆக ஐந்து தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. தீயணைப்பு நிலையங்களுக்குத் தேவையான இடங்கள் ஒதுக்கப்பட்டு, கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டதும், இத்தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்படும். இவ்வைந்து நிலையங்களையும் கூடிய விரைவில் திறக்க எல்லா முயற்சிகளும் முழு மூச்சுடன் செய்யப்பட்டு வருகின்றன.

### 5. தீயணைப்பு அழைப்புகள்:

1979ஆம் ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் 9,538 அழைப்புகளைப் பெற்றுச் செயல்பட்டன. இவற்றில் 7,954 தீ விபத்து அழைப்புகளும், 1,467 அவசர மீட்பு அழைப்புகளும், 117 போலி அழைப்புகளும் ஆகும். 4,590 தீ விபத்துக்கள் நகர்ப்புறங்களிலும், 3,364 கிராமப்புறங்களிலும் ஏற்பட்டன. இவற்றில் 92 தீ விபத்துக்கள் உயிர் இழப்பு அல்லது ரூ. 50,000-க்கு மேற்பட்ட சொத்துக்களுக்கு சேதம் சம்பந்தப்பட்ட பெருந் தீ விபத்துக்களாகும். இம்மாநிலம் முழுவதும் தீயினால் அழிக்கப்பட்ட உடமைகளின் மதிப்பு ரூ. 339 இலட்சமாகும். அழிவின்றி தீயணைப்பு படை

யினரால் மீட்கப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ. 3,047 இலட்சமாகும். தீயணைப்புப் படைகள் வருமுன் தீ விபத்துக்களில் 123 பேர் உயிரிழந்தனர். காப்பாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 350 ஆகும்.

6. அவசர மீட்பு அழைப்புகள் :

1969ஆம் ஆண்டில் 1,467 அவசர மீட்பு அழைப்புகள் பெறப்பட்டன. தீயணைப்புப் படையினர் நாள் பூராவும் அயராமல் மக்கட்சேதத்தையும், பொருட் சேதத்தையும் தவிர்க்க அரும்பாடுபட்டனர். இப்பணி பொது மக்களாலும் பத்திரிகைகளாலும் போற்றப்பட்டது.

7. நோயாளி வண்டி அழைப்புகள்:

ஒவ்வொரு நகரத்தின் தேவைக்கேற்ப, ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திலும், தீயணைப்பு ஊர்திகளுடன், நோயாளி வண்டிகளும் உள்ளன. 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் நிலவரப்படி, இத்துறையில் மொத்தம் 66 நோயாளி வண்டிகள் உள்ளன. 1979 ஆம் ஆண்டில் 7,374 முறை நோயாளி வண்டிகளுக்கான அழைப்புகள் வரப்பெற்றன. அவற்றில் விபத்து மற்றும் இலவச அழைப்புகள் 286 ஆகும். வாடகைக் கட்டணத்தின் பேரில், நோயாளிகளைச் சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்ற அழைப்புகள் 7,088 ஆகும். அதற்காக வாடகைக் கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 1,87,921.20 ஆகும்.

8. தீத் தடுப்பு, இதர பாதுகாப்பு மற்றும் நீர் இறைத்தல்:

தீ விபத்து ஏற்படக்கூடிய கட்டுமானங்களில் தீ விபத்துக்கள் ஏற்படாமல் அவற்றைப் பாதுகாக்கும் ஏற்பாடாக தீயணைப்பு ஊர்திகள் மூலம் ஆயத்தப்பணி மற்றும் நீர் இறைக்கும் பணிகள் இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1979ஆம் ஆண்டில் 179 ஆயத்தப் பணிகள் மற்றும் நீர் இறைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மொத்தம் ரூ. 90,872.80 வாடகைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

9. விபத்துக்கால அவசரப்பணி வண்டி.

இத்துறையில் விபத்துக்கால அவசரப்பணி வண்டி ஒன்று மட்டும் உள்ளது. இது, சென்னை மாநகர் தெற்குக் கோட்டத்தில் உள்ளது. இவ்வண்டி, சாலை விபத்துக்களில் கவிழ்ந்த வண்டிகளைத் தூக்கி அகற்றவும், இடிந்த கட்டிடங்களில் மீட்பு வேலைகளின்பொழுது இடிபாடுகளை அகற்றவும். பயன்படுத்தப்படுகிறது.



10. தொழிற் பட்டறையும், நடமாடும் பழுது பார்க்கும் குழுக்களும்:

இத்துறையின் வாகனங்கள்—கருவிகளில் ஏற்படும் பெரிய
அளவிலான பழுதுகளைப் பார்ப்பதற்கு பட்டறை ஒன்று
சென்னையில் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.
ஒவ்வொரு கோட்டத் தலைமையிடங்களிலும், நடமாடும் பழுது
பார்க்கும் குழு ஒன்று உள்ளது. இது கோட்டங்களில் உள்ள
ஊர்திகளில் ஏற்படும் சாதாரண பழுதுகளை உடனுக்குடன்
செப்பனிடுகிறது. சென்னையிலுள்ள துறையின், இப்
பட்டறை, துறை ஊர்திகளுக்கு, ரூ. 1,57,940.25 மதிப்புள்ள
158 பழுதுபார்க்கும் வேலைகளை புரிந்துள்ளது. ரூ. 19,402.25
மதிப்புள்ள 57 பழுது பார்க்கும் வேலைகளை கோட்டத்தலை
மையிடங்களோடு இணைந்துள்ள நடமாடும் பழுது பார்க்கும்
குழுக்கள் செய்திருக்கின்றன.

11. பரிசு:

இவ்வாண்டில் சிறப்பாகப் பணியாற்றிய மூன்று தீயணைப்
புப்பணியாளர்களுக்கு "தீயணைப்பு சேவை பதக்கம்"
1979ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்டது.
மேலும் மூன்று தீயணைப்புப் பணியாளர்கள் அவரவர்களது
பணியில் தீரச் செயல் புரிந்ததற்காக "தீயணைப்பு சேவைப்
பதக்கமும்" பெற்றுள்ளனர். இது தவிர, 2 நிலையத்
தீயணைப்பு அலுவலர்கள், 1 முன்னணி தீயணைப்போர்
மற்றும் 1 தீயணைப்போர் ஆகியோர்களுக்கும் அவரவர்களது
நீண்டநாள் உழைப்பில் சிறப்புப் பணி புரிந்ததற்காக "தமிழ்
நாடு முதலமைச்சர் பதக்கம்" வழங்கப்பட்டது. மேற் சொன்ன
வற்றோடு, தீயணைப்பு, மீட்பு முதலிய பணிகளில் சிறந்த
பணி புரிந்ததற்காக 4,102 ரூபாய் மதிப்புள்ள ரொக்கப் பரிசு
365 அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

12. தீயணைப்புத்துறை பணியாளர் நல நிதி :

தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் "பணிபுரியும் அரசிதழ்
பதிவு பெறாத பணியாளர்களின் நன்மைக்காக 1962ஆம் ஆண்
டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேமநல
நிதி, நிதியுதவி, படிப்புதவி, நல உதவி, பொழுதுபோக்கு வசதி,
ஆகியவற்றை அளிக்கிறது. காச நோய், தொழு நோய்,
புற்று நோய் போன்ற நோய்களால் அவதிப்படுகின்ற இத்துறைப்
பணியாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் சத்துணவு
வழங்குவதற்காக அவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.
மற்றும், பணியாளர்களுடைய பிள்ளைகளின் உயர் கல்விச்
செலவை ஈடுகட்டுவதற்கும், பணியாளர்களில் இறந்துபோனவர்

களுடைய குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்கவும், அவர்களைச்
சார்ந்தவர்களுடைய ஈமச் சடங்குகளுக்கு ஆகும் செலவிற்கும்
நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும் இப்பணியாளர்களில்,
பணிக்காலத்தில் இந்த நிதியிலிருந்து எவ்வித நிதியுதவியும்
பெறாதவர்களுக்கு அவர்கள் ஓய்வுபெறும் பொழுது அடையாள
மான்யத் தொகை அளிக்கவும் இந்த நிதியிலிருந்து செலவிடப்
படுகிறது. இத்துறையில் பணிபுரியும் 3,272 பணியாளர்கள்
இதில் சேர்ந்துள்ளனர். 1979ஆம் ஆண்டில் சந்தாவாக
ரூ. 6,471.50 வசூலிக்கப்பட்டது. ரூ. 10.497.35 உதவித்
தொகையாக பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. 1979ஆம்
ஆண்டிற்கு அரசு கொடையாக ரூ. 10,000 ஒப்பளித்துள்ளது.

## 13. பயிற்சி :

தீயணைப்புத் துறைக்கென ஒரு மாநிலப் பயிற்சிப்பள்ளி
சென்னையில், 2 நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் மற்றும்
2 முன்னணி தீயணைப்போர்கள் உதவியுடன் ஒரு கோட்டத்
தீயணைப்பு அலுவலரின் கீழ் செயல்படுகிறது. இங்கு நேரடி
யாகச் சேர்க்கப்படுகின்ற அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும்
பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் மறு பயிற்சி
வகுப்பு வேறு பல வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. நடப்பு
ஆண்டில் மட்டும் 2 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.
மேற்படி பயிற்சியில் 96 தயணைப்போர்களுக்கு பயிற்சி அளிக்கப்
பட்டது. நேரடி தேர்ந்தெடுக்கப்பட்ட 30 நிலையத்
தீயணைப்பு அலுவலர்களுக்கும் 4 மாத பயிற்சி அளிக்கப்
பட்டது. மேலும் முன்னணி தீயணைப்போருக்கு அளிக்கப்
படும் 6 வார கால மறு பயிற்சி இரண்டு முறை நடத்தப்பட்டது.
இதில் மொத்தமாக 63 முன்னணி தீயணைப்போர் கலந்து கொண்
டனர்.

## 14. பொது :

தீயணைப்புத் துறையிடம் நவீன கருவிகள் இல்லாத
காரணத்தால் சென்னை மாநகரைச் சுற்றிலும் பல இடங்களில்
பரவி வரும் உயரமான பல மாடிக் கட்டிடங்களில் தீ விபத்துக்
கள் ஏற்பட்டால் அணைப்பதும், விபத்தில் சிக்கியவர்களை
மீட்பதும் ஒரு பிரச்சனையாக உள்ளது. எனவே, இதற்காக,
"ஸ்நார்கல்" என்னும் சிறப்புப் பொறியை சுமார் ரூ. 42 இலட்சம்
செலவில் வாங்க அரசு ஒப்பளித்துள்ளது. தனித்தன்மை
வாய்ந்த இந்த சிறப்பு தீயணைப்பு ஊர்தி இங்கிலாந்து நாட்டி
லிருந்து இறக்குமதி செய்யப்பட்டு 1980ஆம் ஆண்டு மார்ச்சு
திங்கள் 25ஆம் நாள் முதல் சென்னை மாநகரத்தில் செயல்
பட்டு வருகிறது. மேற்படி சிறப்புப் பொறியினால் பல மாடிக்
கட்டிடங்களில் ஏற்படும் எந்த விபத்துகளானாலும், பயன்
விளைவிக்கத்தக்க வகையிலும் திறமையுடனும் சமாளிக்கலாம்.
எண்ணூர் அனல் மின் நிலையத்திற்குள்ளும் அதைச் சுற்றிலும்



உள்ள இடங்களிலும் ஏற்படும் பலதரப்பட்ட தீ விபத்துக்களைச்
சமாளிக்க சிறப்பு அமைப்புகளைக் கொண்ட "கிராஷ் டெண்டர்"
எனப்படும் சிறப்புச் சாதனம் ரூ. 2.79 இலட்சம் செலவில்
பம்பாயில் கட்டுமானம் செய்யப்பட்டு எண்ணூர் தீயணைப்பு
நிலையத்தில் 1977 ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் முதல்
உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதே போன்ற
சாதனம் ஒன்றைத் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் அமைந்
துள்ள தீயணைப்பு நிலையத்திற்கு வாங்க அரசு அனுமதி
வழங்கியுள்ளது.

## இணைப்பு.

1980ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் அன்றைய
நிலவரப்படி உள்ள தீயணைப்புத் துறைப் பணியாளர்களின்
எண்ணிக்கை —

### அரசிதழ் பதிவு பெற்றவர்கள் :

| | |
|---|---|
| தீயணைப்புத் துறை இயக்குநர் .. .. | 1 |
| 1. தீயணைப்புத் துறை துணை இயக்குநர்கள் .. | 2 |
| 2. தீயணைப்புத்துறை துணை இயக்குநர்கள் .. | 9 |
| 3. கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் .. | |

### அரசிதழ் பதிவு பெறாதவர்கள் :

| | |
|---|---|
| உதவிக்கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் | 8 |
| 1. உதவிக்கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 1 |
| 2. உதவிக்கோட்ட தீயணைப்பு அலுவலர் (போக்குவரத்து) | |
| நிலைய தீயணைப்பு அலுவலர்கள் .. | 111 |
| 3. நிலைய தீயணைப்பு அலுவலர்கள் | 7 |
| 4. நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து) .. .. | 380 |
| 5. தலைமை தீயணைப்பாளர்கள் | |

| | | |
|---|---|---|
| 6. | ஒட்டுநர்—இயந்திரக்கம்மியர்கள் .. | 117 |
| 7. | பற்றவைப்பாளர் .. .. .. | 1 |
| 8. | தியணைப்பு—கம்மியர்கள் .. .. | 4 |
| 9. | தியணைப்பு—தச்சர் .. .. .. | 1 |
| 10. | தியணைப்பு—ஒட்டுநர்கள் .. .. | 717 |
| 11. | தியணைப்பாளர்கள் .. .. .. | 2,332 |
| 12. | தியணைப்போர் காவலர் .. .. | 8 |
| | மொத்தம் .. | 3,699 |



## இணைப்பு IV

(8-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**1980-81 ஆண்டில் பொதுப்பணித் துறைக் கட்டிடங்கள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின் கொள்கை சம்பந்த மான குறிப்பு:**

மானியக் கோரிக்கை 37.—கட்டிடங்கள் சம்பந்தப்பட்ட 37வது மானியக் கோரிக்கை, கட்டிடங்களுக்கான, மூலதனச் செலவு, பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் செலவினங்கள் முதலியவற்றுக்கு கோரப்படும் தொகை ரூ.397.15 இலட்சம் அடங்கியது ஆகும்.

மானியக் கோரிக்கை 38.—பொதுப் பணிகள், பணியாளர்கள் மற்றும் கருவிகள், இயந்திரத் தளவாடங்கள் சம்பந்தப்பட்ட 38-வது மானியக் கோரிக்கைகள், பணியாளர் அமைப்புக்கு உண்டான செலவினங்கள் முதலியவற்றிற்கு கோரப்படும் தொகை ரூ. 896.41 இலட்சம் அடங்கியது ஆகும்.

மானியக் கோரிக்கை 51.—பொதுப்பணிகள்-கட்டிடங்கள் மீதான மூலதனக் கணக்கு சம்பந்தப்பட்ட 51 வது மானியக் கோரிக்கையில், ஒவ்வொன்றும் ஒரு இலட்சம் மதிப்பீட்டிற்கு மேல் உள்ள புதிய வேலைகளின் செலவினங்களும், இதுபோன்ற ஒவ்வொன்றும் இவ்வரையறுக்குட்பட்டதாகவும், ஆனால் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்பீடு திட்டத்தின் பகுதிகளில் அடங்கும் வேலைகளின் செலவினங்களும், இக்கோரிக்கையில் இடம் பெறுகின்றன. இதன் கீழ் ரூ. 1,675·80 இலட்சம் மானியமாக கோரப்படுகின்றது.

4. மாநில அரசின் பல்வேறு துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப திட்டம் தீட்டி, வடிவமைத்து, கட்டிடங்கள் கட்டுவது கட்டிடப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். மாநில அரசின் கட்டிடங்களை பராமரிக்கும் பணிகளையும் இத்துறை கவனிக்கின்றது.

5. இவைகளுக்கு மேலாக, இத்துறை, கடல் அரிப்புத் தடுப்பு பணிகளுக்கு திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது. இதற்காக 1980-81-ஆம் ஆண்டில் ரூ. 100 லட்சங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. மேலும், புயல் வெள்ளத்திலிருந்து மக்களை பாது காப்பதற்காக தற்காப்பு இல்லங்கள், கட்டும் பணியும் கட்டிடப் பிரிவைச் சார்ந்ததாகும்.

6. மத்திய அரசுத் துறைகள், நகராட்சிகள், மாவட்ட
விற்பனைக் குழுக்கள், மற்றும் அரசு சார்ந்த ஏனைய நிறுவனங்
கள் ஆகியவற்றிற்கான சில கட்டிடப் பணிகள், முகமை முறையில்
(Agency basis) 1-4-1980லிருந்து 12 1/2 சதவீதம் சென்டேஜ்
சார்ஜ் வசூலித்துக் கொண்டு, பொதுப்பணித் துறை கட்டிடப்
பிரிவினரால் நிறைவேற்றப்படுகிறது.

7. அவையில் வைக்கப்பட்ட 1979-80-ம் ஆண்டு சேராயில்
இத்துறையினரால் முடிக்கப்பட்ட பணிகள், நடைபெற்றுக்
கொண்டிருக்கும் பணிகள் மேலும் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்
கொள்ள இருக்கும் பணிகள் முதலியன விவரமாகக் காணலாம்.
1979-80 அல்லது முன்னர் துவக்கப்பட்டு, 1979-80-ல் முடிக்கப்
பட்ட பணிகளின் மதிப்பீடு ரூ. 823.38 இலட்சங்கள், மேலும்,
ரூபாய் 1,355.15 இலட்சங்கள் மதிப்புடைய பணிகள் இந்த
ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒப்புதல் ஆணை
கள் அளிக்கப்பட்ட ரூபாய் 2,148.87 இலட்சங்கள், மதிப்பிட்ட
பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன. அவையின் முன்னர்
வைக்கப்பட்டுள்ள கையேடு, 1980-81ஆம் ஆண்டில் சேர்க்கப்
பட்டுள்ள பணிகள் பற்றிய விவரங்களையும் கொடுக்கின்றன.

8. இதுவரையில் பராமரிப்பதற்கான வரையறை கட்டிடங்
களின் மூலதனத்தின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை அடிப்படை
யாகக் கொண்டிருந்தது. பழமையான கட்டிடங்களின் மூலதன
அடக்க விலை குறைவானதால், கட்டிடங்களை பராமரிப்பதற்
காக அனுமதிக்கப்படும் சதவீதம் மிகச் சொற்பமாகிறது. ஆத
லால், பல கட்டிடங்களை குறைந்த அளவு தேவைகளுக்குக் கூட
பராமரிக்க முடிவதில்லை. பழமையான மற்றும் புதிய எல்லாக்
கட்டிடங்களையும் பயனுள்ளதாக பராமரிப்பதற்காக புதிய வரை
யறைகள் தற்போது பரிசீலனையில் உள்ளன. இந்த வரையறை
ஒவ்வொரு கட்டிடப் பரப்பளவை அடிப்படையாகக் கொண்டதாக
அமையும். கட்டிடங்களின் வயது, வகை ஆகியவைகளின்படி
ஒவ்வொரு யூனிட் கட்டிடத்தின் பரப்பளவிற்கு தகுந்தபடி
மாறுபட்ட மதிப்பீடு இப்புதிய முறையின் கீழ் வகுக்கப்படும்.
பராமரிப்புப் பணிகள் சில கொள்கைகள் அடிப்படையில்
நிறைவேற்றப்படும்.

9. தற்போதைய ஒப்பந்த முறைப்படி, ஒவ்வொரு ஒப்பந்த
புள்ளிக்காரரும், 2½ சதவீதம் பிணை வைப்புத் தொகையும்
(Earnest Money Deposit) மற்றொரு 2½ சதவீதம் ஈட்டுத்
தொகையாகவும் செலுத்த வேண்டும். மேலும், அதிகப்படி
யாக மற்றொரு 5 சதவீதம் கடைசி கணக்குகளை முடிக்கும்
போது கழிக்கப்படும். வங்கி பொறுப்புறுதித் திட்டம் அரசால்
ரத்து செய்யப்பட்டதால் பிணைவைப்புத் தொகையும் ஈட்டுத்
தொகையும் ஒப்பந்தப் புள்ளிக்காரரால், இப்பொழுது பண
மாகவே செலுத்தப்பட வேண்டும். 1970-80-ல் பணப்புழக்கம்
மிகவும் நெருக்கடியாகிவிட்டது. கட்டிடப் பொருள்களின் விலை



211/31 N80
N81.5.5.31

யும் கணிசமாக உயர்ந்து விட்டது. இதன் விளைவாக ஒப்பந்தப்
புள்ளிக்காரர்கள், அதிகத் தொகைகளை ரொக்கப் பணமாக
செலுத்தச் சிரமப் பட்டார்கள். முக்கியமான பணிகளின்
வளர்ச்சியை இந்த முறை பாதித்தது. தற்போது, அரசு
பிணை வைப்புத் தொகை மற்றும் ஈட்டுத் தொகையின் அளவினை
முறையே ஒரு சதவீதம் என குறைத்துள்ளது. இக் குறைப்பின்
மூலம் தகுதி வாய்ந்த ஒப்பந்தங்கள் வரக்கூடும் என நம்பப்படுவ
தால், கட்டிடத் திட்டங்கள் விரைவாக அமுலாக்கப்படலாம்.

10. வைப்புப் பணிகளுக்கு பொதுப் பணித் துறையால் வசூ
லிக்கப்படும் சென்டேஜ் சார்ஜை 15 1/2 சதவீதத்திலிருந்து 12 1/2
சதவீதம் ஆக 1-4-1980-லிருந்து அரசு குறைத்துள்ளது.

11. 10+2+3 பாடத் திட்டத்தை புகுத்தியதன் விளை
வாக இப்பிரிவு, மாபெரும் முறையில் மாநில பரிசோதனைக்
கூடங்கள், மற்றும் வகுப்பு அறை கட்டிடங்களை 407 இடங்களி
லும், மற்றும் மற்றொரு 70 பள்ளிக் கட்டிடங்களையும்
1980-81-ல் எடுத்துக் கொள்ள இருக்கிறது.

12. புதியதாக அமைக்கப்பட்டிருக்கும் பெரியார் மாவட்டத்
தலைமை இடமான ஈரோட்டில், ரூ. 327 இலட்சங்கள் மதிப்
பீட்டில் மாவட்ட அலுவலகங்களை துவக்க கட்டிடங்கள் கட்ட
ஏற்பாடாகியுள்ளது.

13. அரசு தற்போது ரூ. 296 இலட்சங்கள் மதிப்பீட்டில் நவீன
சிறைக் கட்டிடங்கள் மற்றும் வசதிகள் ஏற்படுத்துவதற்காக்
அனுமதி வழங்கியுள்ளது. இப்பணியையும் இப்பிரிவு ஏற்றுக்
கொள்ளும்.

14. சென்னை மெரினா கடற்கரையை அபிவிருத்தி செய்ய
வும், மேலும், அழகுபடுத்தவும், தலைமைச் செயலாளரை
தலைவராகக் கொண்டு, அரசால் நிறுவப்பட்ட ஒரு உயர்
நிலைக் குழுவால் சிபாரிசு செய்யப்படும் பல்வேறு திட்டங்களை
நிறைவேற்ற ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்
கண்ட குழுவால் சிபாரிசு செய்யப்பட்ட, கீழ்க்காணும பணி
களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

| | ரூ. |
|---|---|
| (1) பொதுக்கழிவறைகளைக் கட்டுதல், புதுப்பித்தல் | 6,09,000 |
| (2) குடிநீர் குழாய்கள் அமைத்தல் | 3,60,000 |
| (3) ஒளி விளக்குகள் ஏற்படுத்தல் | 2,20,800 |

15. வெளி மாவட்டங்களிலிருந்து அலுவல் சம்பந்தமாக
சென்னை வரும் அரசு [illegible] தங்குவதற்கு ஒரு ஓய்வு
விடுதி கட்டுவதற்காக ரூ. 1[illegible] இலட்சங்கள் 1980-81-ல்
ஒதுக்கப்பட்டுள்ளது.

123064